

63

# மலை நாட்டுத் திருப்பதிகள்



அருள்மிகு பதுமநாபன்


பேராசிரியர்
டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்




வேங்கடம் வெளியீடுகள்


AD-13 (PLOT. 3354)

அண்ணா நகர் – சென்னை-600 040




VENKATAM PUBLICATIONS
AD-13 (PLOT. 3354)
ANNA NAGAR - MADRAS-600 040

# மலைநாட்டுத் திருப்பதிகள்




பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்

# கோவிந்தா!

கண்ணிரண்டும் இமையாமல் செந்நிறத்து
மெல்லிதழ்ப்பூங் கமலத் தெய்வப்
பெண்ணிரண்டு விழிகளையும் நோக்கிடுவாய்
கோவிந்தா! பேணி னோர்க்கு
நண்ணிரண்டு பொற்பாதம் அளித்திடுவாய்
சராசரத்து நாதா! நாளும்
எண்ணிரண்டு கோடியினும் மிகப்பலவாம்
வீண்கவலை எளிய னேற்கே![1]

1. பா. க. தோ.பா. கோவிந்தன் பாட்டு-1

# மலைநாட்டுத் திருப்பதிகள்

(ஆசிரியர் 72 வது அகவை நினைவாக)

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'
**பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார்**
எம்.ஏ., பி.எஸ்சி., எல்.டி., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்-துறைத்தலைவர் (ஓய்வு)
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**
**184. பிராட்வே. சென்னை - 600108**

முதல் பதிப்பு - மார்ச்சு, 1971
இரண்டாம் பதிப்பு மே. 1988


© டாக்டர் S. இராமலிங்கம்
(ஆசிரியரின் மூத்த மகன்)
AD-13 (Plot No. 3354)
அண்ணாநகர், சென்னை-600 040
தொ.பே. 61 55 83

விலை : ரூ 18-00

MALAINAATTU -T- TIRUPPATIKAL

VENKATAM PUBLICATIONS
AD-13 (Plot 3354)
Anna Nagar Madras-600 040
Ph. 61 55 83

அச்சிட்டோர் : நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ்
137, ஜானி ஜான்கான் சாலை
சென்னை-600014
தொ.பே. 83 32 31





பிரதிவாதி பயங்கரம்

**அண்ணங்கராசாரிய சுவாமிகள்**

பிறந்தது : மார்ச்சு-1891
விக்ருதி-பங்குனிவிசாகம்

பரமபதித்தது :
26-1-1983

([illegible] நாட்டுத் திருப்பதிகள்)

காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

# அண்ணங்கராசாரிய சுவாமிகள்

அவர்களின்

**எண்பதாவது ஆண்டு நிறைவின் மகிழ்வாக**

**அன்புப் படையல்**

வடமொழிச் சுவையைத் தென்றமிழ்ப் பயனை
மாநிலம் வியப்புறப் பருகித்
திடமுறு ஞானக் கொண்டலாய் வளர்ந்து
சேதன ரெனும்பயிர் முளைக்கக்
கடலுல குவக்க மழைபொழி **அண்ணங்**
**காரவர்** திருவடி மலரில்
சுடர்மிகப் பெற்று வயங்குக என்றித்
தூயநூல் சமர்ப்பணம் புரிந்தேன்.

# கோவிந்தா!

எளியனேன் யான்எனலை எப்போது
போக்கிடுவாய், இறைவ னே!இவ்
வளியிலே பறவையிலே மரத்திலே
முகிலினிலே வரம்பில் வான
வெளியிலே, கடலிடையே மண்ணகத்தே
வீதியிலே வீட்டில் எல்லாம்
களியிலே, கோவிந்தா! நினைக்கண்டு
நின்னொடுநான் கலப்பது என்றோ?[2]

என்கண்ணை மறந்துன்இரு கண்களையே
என்னகத்தில் இசைத்துக் கொண்டு
நின்கண்ணால் புவியெல்லாம் நீஎனவே
நான் கண்டு நிறைவு கொண்டு
வன்கண்மை மறதியுடன் சோம்பர்முதல்
பாவமெலாம் மறந்து, நெஞ்சில்
புன்கண்போய் வாழ்ந்திடவே, கோவிந்தா!
எனக்கமுதம் புகட்டு வாயே.[3]

---

2. பா.க. தோ.பா. கோவிந்தன் பாட்டு-2
3. பா.க. தோ.பா. கோவிந்தன் பாட்டு—3

# அணிந்துரை

## (ஜஸ்டிஸ் எஸ். மகராஜன்)

மலைநாட்டுத் திருப்பதிகளுக்கு நம்மை அழைத்துக் கொண்டு போவதுபோல் பாசாங்கு செய்யும் இவ்வாசிரியர், உண்மையில் வைணவ சமய தத்துவங்கள், பக்தி நிலைகள், மரபுகள் — இவற்றையெல்லாம் நமக்குச் சுற்றிக் காட்டி விடுகின்றார்.

வீரசைவ சமயத்தைச் சேர்ந்தவர் ஆசிரியர், ஆனாலும் வைணவத்தைப்பற்றிப் பேசும்போதும் எம்பெருமானைச் சேவித்து அவனுடைய பரம கலியாண குணங்களை எடுத்து விரித்துரைக்கும் போதும், அதிசயிக்கத்தக்க ஈடுபாட்டோடும் விரிந்து பரந்த மனப்பாங்கோடும், தன்னையே வைணவத்தோடு இரண்டும் ஒன்றும் அறக் கரைத்துக் கொள்கின்றார். ஆசிரியருடைய ''நினைவும் சொல்லும் ஒருமைப் பட்டிருக்கையாலே'' இந்த அரிய சாதனை அவருக்குக் கை வந்திருக்கின்றது.

மெய்ப்பொருளோடு ஊடாடுவதற்கென்று ஒவ்வொரு சமயத்திலும் பல உத்திகளை வகுத்து வைத்திருக்கின்றார்கள். ஆனால், வைணவ ஞானிகள் வகுத்து வைத்திருக்கும் உத்திகள் தனிச்சிறப்புடையவை. மூர்த்திகளை வெறும் அடையாளப் பொருள்களாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மூர்த்தியும் இறைவன் எடுத்த அர்ச்சாவதாரம் என்று கொண்டு, மெய்ப்பொருளோடு உறவாடும் போது, பக்திக் கடல் மடை திறக்கின்றது. மெய்யுணர்வு பெருக்கெடுத்தோடுகின்றது.

அர்ச்சாவதாரத்தை அநுபவிக்கக் கொடுத்து வைக்காதவர்கள் வானவர்கள். ஆகவே, வான நாட்டைத் துறந்து மண்ணுலகத்தில் வந்து பிறக்க விரும்புகிறார்கள் அவர்கள், "இங்குள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க, அங்குள்ளார் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு" என்ற ஈட்டின் வாசகத்தை மேற்கோள் காட்டி இவ்வுண்மையை விளக்குகின்றார் ஆசிரியர்.

எம்பெருமானுக்கு விண்ணுலகச் சூழ்நிலையில் அவ்வளவு அழகு இருப்பதில்லையாம். மண்ணுலகச் சூழ்நிலையிலேயே அவனுடைய அழகு சோபிக்கிறதாம். ஏன்? வானவர் நாடு ஞானஒளி வீசும் நாடு, ஆகையால், அங்கிருக்கும் எம்பெருமான், பகல் விளக்குப்போல், ஒளி குன்றிக் காணப் படுகிறான். ஆனால், அஞ்ஞான இருள் சூழ்ந்த தம் மண்ணுலகத்திலோ, அவன் இருட்டறை விளக்குப்போல, திவ்ய ஒளி வீசி மிளிர்கின்றானாம். ஆகவே, பேரொளியை அநுபவிப்பதற்கு மண்ணுலக இருட்டும் தேவைப்படுகின்றது என்றே தோன்றுகின்றது. இல்லையேல், "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று அப்பர் அடிகள் சொல்லியிருப்பாரா!

புறத்தே நின்ற பேரொளியைக் கொண்டாடக் கொண்டாட, அது ஆழ்வார் அகத்திலும் குடியேறிவிடுகின்றது. குடியேறிய திருவடிகளிலுள்ள துளவம் ஆழ்வார் உள்ளத்தை நிறைத்து, ஆழ்வாருடைய மெய்யெலாம் கமழச் செய்கின்றது. இந்த நிலையில்,

> **"எந்நன்றி செய்தேனோ**
> **என்நெஞ்சில் திகழ்வதுவே"**

என்று வியந்து ஓலமிடுகின்றார் ஆழ்வார். இந்த வியப்புக்கு விளக்கம் கொடுக்கின்றது ஈடு. எப்படி? "சடாயுவைப் போல், பிராட்டி சென்ற திசையை எம்பெருமானுக்குக் காட்டி

விட்டு உயிர் துறந்தேனோ? அல்லது, அநுமனைப் போல் ''கண்டனன் கற்பினுக் கணியை'' என்ற முழக்கத்தோடு வந்து, பெருமானின் துயரத்தைத் தீர்த்தேனோ? அல்லது, வேறு என்ன உதவிதான் செய்தேனோ? அறியேன். ஆனால், அவன் என் நெஞ்சத்துள் புகுந்து அருள் செய்து விட்டான்'' என்று தான் செய்த நன்றியைப் பாராட்டுகின்றாராம் ஆழ்வார்.

இப்படியெல்லாம் இறைவனோடு ஊடாடித் திளைப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் அந்த வழியிலே நம்மை நடத்திச் செல்லுகிறது இந்நூல்.

ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் **டாக்டர் சுப்பு ரெட்டியார்.** அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக் குடியில் சந்தித்தபோது, ''எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.'' என்று அவரிடம் சொன்னேன். மீத மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது. வாழ்க ''மலைநாட்டுத் திருப்பதிகள்!''

விட்டு உயிர் துறந்தேனோ? அல்லது, அநுமனைப் போல் ''கண்டனன் கற்பினுக் கணியை'' என்ற முழக்கத்தோடு வந்து, பெருமானின் துயரத்தைத் தீர்த்தேனோ? அல்லது, வேறு என்ன உதவிதான் செய்தேனோ? அறியேன். ஆனால், அவன் என் நெஞ்சத்துள் புகுந்து அருள் செய்து விட்டான்'' என்று தான் செய்த நன்றியைப் பாராட்டுகின்றாராம் ஆழ்வார்.

இப்படியெல்லாம் இறைவனோடு ஊடாடித் திளைப்பதற்கு வழி செய்திருக்கின்றார்கள் நம் முன்னோர்கள் அந்த வழியிலே நம்மை நடத்திச் செல்லுகிறது இந்நூல்.

ஒன்றினோடு ஒன்றொவ்வாப் பல துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றவர் **டாக்டர் சுப்பு ரெட்டியார்.** அவருடைய விரிந்த படிப்பைக் கண்டு நான் அஞ்சிய காலம் ஒன்றுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவரைக் காரைக் குடியில் சந்தித்தபோது, ''எதற்காக நீங்கள் இவ்வளவு படிக்கின்றீர்கள்? கொஞ்சம் படிப்பைக் குறைத்துக் கொண்டால் நலமாயிருக்கும்.'' என்று அவரிடம் சொன்னேன். மித மிஞ்சிய படிப்பு கவனத்தைச் சிதறடித்து விடுமே என்ற அச்சத்தால் அவ்வாறு சொன்னேன். ஆனால், இந்நூலைப் படித்த பிறகு என்னுடைய அச்சம் மறைந்துவிட்டது. ஆசிரியரின் பிடிக்குள் அடங்காத படிப்பு, பக்தியென்ற சூரிய காந்தக் கல்லில் புகுந்து ஒருமையும் பயனும் பெற்று விட்டது. வாழ்க ''மலைநாட்டுத் திருப்பதிகள்!''

# நூல் முகம்

''செடியாய வல்வினைகள்
தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா!
நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும்
அரம்பையரும் கிடந்துஇயங்கும்
படியாய்க் கிடந்துஉன்
பவளவாய் காண்பேனே.'

—குலசேகராழ்வா

அனைத்தும் நடைபெறுவதற்கு ஆண்டவன் அருளே காரணம் என்பது நம் முன்னோர் கண்ட அநுபவம்; நம் அநுபவமும் அதுவே. கடந்த ஆறாண்டுகளாக நாலா யிரத்தை ஆய்ந்ததும், அதில் அநுபவத்தைப் பெற்றதும் அவன் அருளாலேயே என்பதை நன்கு உணர்கின்றேன். அதனையொட்டி ஆழ்வார்கள் அநுபவித்த 108 திருப்பதி களையும் யானும் அநுபவிக்க வேண்டும் என்ற அவர் என்னிடம் எழுந்ததும் அவன் அருளாலேதான். ''அவன் அருளாலே அவன் தாள் வணங்கி''[5] என்பது மணிவாசகர் கூறும் அநுபவம் அன்றோ?

1969-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் என் துணையாருடனும் என் மக்கள் இருவருடனும் மலைநாட்டுத் திவ்விய தேச யாத்திரை தொடங்கினேன். ஆழ்வார்களால், குறிப்பாக

---

4. பெரு.திரு 4 : 9
5. திருவா.சிவபு. அடி 18.

நம்மாழ்வாரால் மங்காசாசனம் செய்யப்பெற்ற எம் பெருமான்களைக் கண்ணாரக் கண்டு வாயார அவன் புகழ் பாடிச் சேவித்தோம். யான் பெற்ற அநுபவத்தைக் கட்டுரை களாக வடித்துத் தந்தால் பலருக்கும் பயன் படும் என்று சில நண்பர்கள் என்னைத் தூண்டினர். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"[6] என்பது திருமூலரின் திருவாக் கன்றோ?

"என்சொல்லால் யான்சொன்ன
இன்கவி என்பித்துத்
தன்சொல்லால் தான்தன்னைக்
கீர்த்தித்த மாயன்"[7]

என்று நம்மாழ்வார் குறிப்பிட்ட அந்த 'மாயனே' என்னை இயக்கி இக்கட்டுரைகளை வரையத் திருவருள் புரிந்தனன் என்பது என் நம்பிக்கை.

ஆழ்வார்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்றும் நான்கு பிரிவு களாக அமைந்துள்ளன. திருவண்பரிசாரம். திருவாட்டாறு, திருவனந்தபுரம் இம்மூன்றும் ஓரிடப் பிரிவு (1, 2, 3); திருவாறன்விளை, திருச்சிற்றாறு, திருக்கடித்தானம், திருவல்லவாழ், திருவண் வண்டூர், திருப்புலியூர் இந்த ஆறும் மற்றொரு பிரிவு (4, 5, 6, 7, 8, 9); திருக்காட்கரையும் திருமூழிக்களமும் வேறொரு பிரிவு (10, 11); திருவித்துவக் கோடும் திருநாவாயும் பிறிதொரு பிரிவு (12, 13). இந்த நான்கு பிரிவுகளிலும் மங்களாசாசனம் செய்தருளினவர் நம்மாழ்வார்; மூன்று பிரிவுகளில் பாடிச் சிறப்பித்தவர் திருமங்கையாழ்வார்; ஒரு பிரிவில் மட்டிலும் போற்றி யுரைத்தவர் குலசேகரப்பெருமாள்.

இந்தப் பதின்மூன்று கட்டுரைகளிலும் ஆழ்வார்களின் பக்தியுணர்ச்சியின் கொடுமுடிகளைக் காணலாம். சில

6. திருமந். 85.
7. திருவாய் 7.9:2

இடங்களில் சுட்டப்பெற்றுள்ள எடுத்துக் காட்டுகளால் பாசுரத்தின் சொல்வளத்தையும், உரையின் நயத்தினையும் உணரலாம். பக்தி இலக்கியத்தில் அகப்பொருள் துறைகள் அமைந்துள்ள சிறப்பைக் கண்டு சுவைக்கலாம். எல்லாக் கட்டுரைகளிலுமே 'ஆசாரிய ஹிருதயத்தின்' நாடி துடிப்பதனை அறியலாம். இக்கட்டுரைகளைப் படிப் போரிடையே வைணவ இலக்கியத்தின்பால் அவாவினை எழுப்பிவிட்டால் அதுவே என் சிறிய முயற்சிக்குக் கிடைக்கும் பரிசாகக் கருதி மகிழ்வேன்.

மேற்குறிப்பிட்ட திருக்கோயில்களில் இரண்டாவது பிரிவிலுள்ளவற்றைப் பார்ப்பதில் சிறிது சிரமத்தால் மயங்கினேன். அப்போது என் கெழுதகை நண்பர் திரு. **வீ. திருவேங்கட ரெட்டியார்** அவர்கள் பி.ஏ., பி.எல்., உரிமையாளர், ரிமாட்டி ஹால், கோட்டயம் எங்களை விருந்தினராக ஏற்றுக் கொண்டு கார் வசதியை நல்கினார். அதனால் இந்த ஆறு திவ்விய தேசங்களுக்கும் எளிதாகப் போய்வர முடிந்தது. இந்த வசதிகள் அளித்த நண்பர் அவர்கட்கு என் நன்றியை புலப்படுத்துகின்றேன்.

இந்நூலிலுள்ள 2, 11, 12 எண்ணுள்ள கட்டுரைகள் திருமலை—திருப்பதி தேவஸ்தானத்தார் வெளியிடும் **சப்தகிரி** என்ற திங்கள் இதழ்களில் வெளி வந்தவை. 10 எண்ணுள்ள கட்டுரை பொள்ளாச்சி வரதராஜப் பெருமாள் கோயில் குடமுழுக்குவிழா மலரில் வெளிவந்தது. 1 எண்ணுள்ள கட்டுரை பெங்களூர்—ஜயநகர் அரங்கமன்னார்—ஆண்டாள் ஆலயக் 'குடமுழுக்கு விழா' மலரில் வெளிவந்தது. இவற்றை வெளியிட்ட அந்தந்த இதழாசிரியர்கட்கு என் நன்றி.

இந்நூலை யான் எழுதி வெளியிடுவதற்கு இசைவு தந்த திருவேங்கடவன் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக் கும் (Syndicate), சிறப்பாகப் பல்கலைக் கழகத்தைத்

திறம்பட இயக்கி வரும் அதன் துணைவேந்தர் டாக்டர் டி ஜகந்நாத ரெட்டி அவர்கட்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

காலத்திற்கேற்ற நூல்களை, சிறப்பாக பக்தி நூல்களை வெளியிட்டுச் சிறந்த முறையில் தமிழ்ப் பணியாற்றி வருபவர்கள் எஸ் ஆர். சுப்பிரமணிய பிள்ளை பதிப்பகத்தார். என் அரிய நண்பர் திரு. தொ.மு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்களுடைய 'வேங்கடம் முதல் குமரி வரை' (4 பகுதிகள்) என்ற நூலை வெளியிட்டு தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தவர்கள். இந்த நூலையும் மனமுவந்து ஏற்று வெளியிட்டமைக்கு அவர்கட்கும்,அவர்களுடைய சென்னைக் கிளையைச் சிறந்த முறையில் செயற்படச் செய்து வரும் கந்தன் அடிமை திரு. எஸ்.பி. சண்முகம் பிள்ளை அவர்கட்கும் என் மனமுவந்த நன்றியறிதலைப் புலப்படுத்துகின்றேன்.

சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதி எஸ். மகராஜன் அவர்கள் என் நெடுநாளைய நண்பர்;ரஸிகமணி டி.கே.சி.யின் முதன்மையான சீடர்; ஆங்கிலம் படித்த அன்பர்களிடையே யும் தமிழ்ச் சுவையூட்டி அவர்களையும் தமிழன்பர்களையும் தமிழ்ச் சுவைஞர்களாக மாற்றிய பெருமை இவருக்குநிறைய உண்டு. இவருடைய பேச்சிலும் எழுத்திலும் இவருடைய உயிர் நாடி பேசும்; கவிதைகளின் நாடிநரம்புகளைச் சுண்டிப் பார்த்து நமக்கு அவற்றின் துடிப்புக்களைத் தெளிவாக எடுத்துக்காட்டும் அற்புத ஆற்றல் இயல்பாக அமைந்த மேதை இவர். இத்தனைக்கும் மேலாக 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'[7] என்ற வள்ளுவத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழும் உயர்குணச் செம்மல். இறையன்பிலும் தத்துவக் கருத்துகளிலும் திளைக்கும் இப்பெரியாரின் அணிந்துரை இந்நூலின் பெருமையை உயர்த்துகின்றது என்பது என் நம்பிக்கை. அணிந்துரை அருளிய அன்பருக்கு என் இதயம் நிறைந்த நன்றி என்றும் உரியது.

---

8. குறள்-996

வைணவ உலகில் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் **அண்ணங்க ராசாரிய சுவாமிகளை** அறியாதார் இல்லை. அவருடைய **திவ்வியார்த்த தீபிகை** (நாலாயிரத்தின் உரை) என்னுடைய பிஎச்.டி (Ph.D) ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டது. அவருடைய வேறு இரகஸ்ய கிரந்த உரைகளும் நன்கு பயன்பட்டன. அந்த நூல்களைப் பயிலுங்கால் அவருடைய எல்லையற்ற புலமையும் பக்தியும் எனக்குத் தெளிவாகப் புலப்பட்டன. என் மனங்கரைந்து அவருக்கு ஆட்பட்டேன். அதனைப் புலப்படுத்தும் வகையிலும், அவரது எண்பதாவது ஆண்டு நிறைவின் (சதாபிஷேகம்) மகிழ்வாகவும் இந்நூலை அவரது திருவடி மலர்களில் அன்புப் படையலாக்குகின்றேன். அன்னாரது ஆசியால் ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களிலும், ஆசாரியர்களுடைய உரைகளிலும் எனக்குத் தெளிவும் பக்தியும் மேலும் மேலும் பெருகும் என்பது என் திடமான நம்பிக்கை.

இந்நூலை எழுதி வெளியிடுவதற்கு என்னுள்ளே தோன்றாத் துணையாக நின்று என்னை இயக்கி வரும் திருவேங்கடமுடையானை மனம் மொழி மெய்களால் இறைஞ்சி வாழ்த்தி வணங்குகின்றேன்.

திருப்பதி,
மார்ச்சு 31, 1971

**ந. சுப்பு ரெட்டியார்**

## இரண்டாம் பதிப்பு

### பல்லவி

எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா! (ஓ-எத்தனை)

### சரணங்கள்

சித்தினை அசித்துடன் இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து வியனுல கமைத்தாய்
அத்தனை யுலகமும் வண்ணக் களஞ்சிய
மாகப் பலப்பலநல் அழகுகள் சமைத்தாய்
(ஓ-எத்தனை)

முக்தியென் றொருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையு முணரும் உணர்வமைத்தாய்
பக்தியென் றொருநிலை வகுத்தாய்—எங்கள்
பரமா! பரமா! பரமா! (ஓ-எத்தனை)

எம்பெருமான் ஏழுமலையானின் அளவற்ற கருணையால் இந்த நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவருகின்றது. இப்பதிப்பின் முன்பக்கத்து மேலட்டையில் திருவனந்தபுரம் அனந்தசயனத்து எம்பெருமான் சேவை சாதிக்கின்றான். நூலில் ஆங்காங்கு சில திருத்தங்கள் செய்துள்ளேன். பெரியார் எழுத்தில் இப்பதிப்பு வெளி வருகின்றது.

கண்ணன் திருவடி
எண்ணுக மனமே
திண்ணம் அழியா
வண்ணம் தருமே[10]

'வேங்கடம்'
AD—13 (பிளாட் 3354) ந. சுப்பு ரெட்டியார்
அண்ணா நகர்
சென்னை-600040
10-5-1988

---

9. பா.க. தோ.பா. இறைவா! இறைவா!
10. பா.க. தோ.பா. கண்ணன் திருவடி—1

# உள்ளுறை


அன்புப் படையல் v

அணிந்துரை vii

நூல்முகம் x

இரண்டால் பதிப்பு xv

1. திருவண்பரிசாரத்துத் திருவாழ்மார்பன் ... 1
2. திருவாட்டாற்று எம்பெருமான் ... 14
3. அனந்தபுரத்து அண்ணலார் ... 33
4. திருவாறன்விளைத் திருக்குறளப்பன் ... 52
5. திருச்செங்குன்றூர் அப்பன் ... 71
6. திருக்கடித்தானத்து உறை திருமால் ... 89
7. திருவல்லவாழ் உறையும் கோனார் ... 104
8. திருவண்வண்டூர் தேவாதி தேவன் ... 120
9. திருப்புலியூர் மாயப்பிரான் ... 138
10. திருகாட்கரை அப்பன் ... 159
11. திருமூழிக்களத்து விளக்கு ... 177
12. திருவித்துவக்கோட்டு அம்மான் ... 198
13. நாவாய் உறையும் நாரண நம்பி ... 215

பின்னிணைப்பு—1 231

பின்னிணைப்பு—2 232

பேராசிரியர் ரெட்டியாரின் நூல்கள் 236

## 1. திருவண்பரிசாரத்துத் திருவாழ் மார்பன்

உலகமெல்லாம் இறைவனுக்கு உடல் என்ற கொள்கை வைணவ சமயத்தில் மிகவும் முக்கியமானது. இறைவனையும் உலகத்தையும் தனித்தனியாகப் பிரித்தல் இயலாது.

"அடியோ மோடும் நின்னொடும்
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு"[1]

என்ற பெரியாழ்வாரின் திருவாக்கின்படி எம்பெருமான் ஆன்மாவாகவும் நாம் அவனுக்கு உடலாகவும் இருக்கும் இருப்பு எப்பொழுதும் உண்டென்று கூறுவர் வைணவப் பெருமக்கள். எனவே, உலகிற்குச் செய்யும் தொண்டு (கைங்கரியம்) உண்மையில் ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டேயாகும். நாம் ஒரு பெரியாரது உடம்புக்குப் பணி (கிடாம்பி ஆச்சான் இராமானுசருக்குச் செய்தது போன்றது) செய்தால் அந்தக் கைங்கரியம் அந்தப் பெரியாருக்குச் செய்த தொண்டாகவே கருதப்பெறுகின்றதன்றோ? அந்த உடம்பிற்குச் செய்யும் பணி அந்த உடம்பினையுடைய பெரியவருக்கு உகப்பினை விளைவிப்பதுடன் அவரது உடலுக்கும் நலம் தருகின்றது.

இப்படியே எம்பெருமானின் உடலாகிய உலகிற்குச் செய்யும் தொண்டும் உலகிற்கு நன்மை செய்வதுடன் அதனை உடலாக உடைய ஆண்டவனுக்கும் உகப்பாக

1. திருப்பல் 2.

அமையும் என்ற ஆழ்ந்த பொருளை உள்ளத்தில் கொண்டு தான்,

> "அன்பில் அன்றி ஆழியானை
> யாவர் காண வல்லரே"[2]

(ஆழியான் - சக்கரப் படையுடைய திருமால்)

என்று திருமழிசையாழ்வாரும் திருவாய் மலர்ந்தருளியுள்ளார் என்று கருத இடம் உண்டு. நம்மிடையே வாழ்ந்த காந்தியடிகள் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்த மேலான நெறியும் இதுவே. தாயுமான அடிகளும்,

> "அன்பர்பணி செய்யஎனை
> ஆளாக்கி விட்டுவிட்டால்
> இன்பநிலை தானேவந்(து)
> எய்தும் பராபரமே"[3]

(இன்பநிலை - சிவானந்த நிலை)

என்று இக் கருத்தினையே வலியுறுத்தியுள்ளார். நம்மாழ்வாரின் திருவாய்மொழியிலும் இக்கருத்து பல இடங்களில் வற்புறுத்தப்பெற்றுள்ளது. இதனையே "உரிய தொண்டர் ஆக்கும், உலகம் உண்டார்க்கே"[4] என்றும் "அவர் அடிமைத் திறத்து ஆழியாரே"[5] என்றும் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டுள்ளார் இந்த ஆழ்வார்.

இந்த எண்ணங்கள் நம் மனத்திடையே குமிழியிட்ட வண்ணம் 'திருவண் பரிசாரம்' என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படுகின்றோம். இந்தத் திருப்பதி திருநெல்வேலி - நாகர் கோயில் நெடுஞ்சாலையில், நாகர்கோவிலிலிருந்து சுமார்

2. திருச். விருத். 76.
3. தா.பா.—பராபரக் கண்ணி-155.
4. திருவாய் 6.9 : 11
5. ஷை 7.3 : 11

இரண்டு கல் தொலைவில், உள்ளது; நெடுஞ்சாலையில் ஒரு வாய்க்கால் பாலத்தருகில் இறங்கி முக்கால் மைல் நடந்து சென்றால் ஊரை அடையலாம். நாகர்கோவிலில் தங்கிப் பேருந்துமூலம் இவ்வூருக்கு வருவதே சிறந்தது. நாகர் கோவிலிலிருந்து திருவண்பரிசாரத்திற்கே நகர் - பேருந்து வசதி உண்டு. காலையில் நாம் தங்குமிடத்திலிருந்து (உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள் நாகர்கோவிலில் நிறைய உள்ளன.) நன்னீராடித் தூய ஆடை உடுத்திக் கொண்டு பேருந்து மூலம் திருவண்பரிசாரத்திற்குப் புறப்படுகின்றோம். அரைமணி நேரத்திற்குள் திருக்கோயிலை அடைகின்றோம். மலைநாட்டுக் கோயிலின் 'களை' இங்குத் தென்படுகின்றது. தூய்மை, அமைதி, ஒழுங்கு முதலிய பண்புகளை இங்குக் காணலாம். மலைநாட்டு வளமும் இயற்கைச் சூழலும் இங்குத் தலைகாட்டத் தொடங்கிவிடுகின்றது. திருக் கோயிலுக்கு எதிரிலேயே 'ஸ்ரீ காரியம்' அலுவலகம் உள்ளது. அதன் அருகிலேயே திருக்குளமும் உள்ளது. மலைநாடு நீர் வளம் மிக்க நாடு அல்லவா? எனவே, நீருக்கும் பஞ்சமில்லை; பளிங்கு போன்ற தூய்மையான நீர் நிறைந்த குளம் அது. மாற்று ஆடைகள் கொண்டு வந்திருந்தால் குளத்தில் ஆனந்தமாக நீராடவும் செய்யலாம்.

திருவண்பரிசாரம் நம்மாழ்வாரின் திருத் தாயார் **'உடைய நங்கையார்'** பிறந்த ஊராகும். இந்த ஊர் எம்பெருமானும் அந்த அம்மையாருக்குக் காட்சி தந்ததாகப் புராண வரலாறு கூறுகின்றது. திருக்குருகூரில் திருப்புளி யாழ்வாரின் திருவடியில் அமர்ந்து இவ்வுலக ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுத் திருவாய்மொழி முதலிய திவ்வியப் பிரபந்தங்களை அருளிய நம்மாழ்வார் இத்திருப்பதி எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும் என்று பாரித்து நிற்கின்றார். இந்த எம்பெருமானின் திருக் குணத்தை **'ஆசாரிய ஹிருதயம்'**

"சிரம மனம் சூழும் ஸௌகுமார்ய
பிரகாசம் ஆய்ச் சேரியிலே"[6]

(சௌகுமார்யம் - மிருதுத் தன்மை; ஆய்ச் சேரி - ஆழ்வாரின் திருத் தாயார் திருவவதரித்த ஊர்; ஆய் - தாய்) என்று குறிப்பிடும். எம்பெருமானுடைய சிரமத்தை நினைத்த ஆழ்வாருடைய மனமானது மயங்கும் என்பதை 'சிரம மனம் சூழும்' என்ற அடைமொழி குறிப்பிடுகின்றது.

"கொடியார் மாடக் கோளூர்
அகத்தும், புளிங்குடியும்
மடியாது இன்னே நீதுயில்
மேவி மகிழ்ந்தது தான்
அடியார் அல்லல் தவிர்த்த
அசைவோ? அன்றேல்,இப்
படிதான் நீண்டு தாவிய
அசைவோ? பணியாயே"?[7]

(கொடிஆர் - கொடிகள் நிறைந்த; கோளூர் - திருக் கோளூர்; புளிங்குடி - திருப்புளிங்குடி; இவை இரண்டும் பாண்டி நாட்டுத் திருப்பதிகள்; மடியாது - இடம் வலமாக மாறாமல்; மேவி -விரும்பி; படி - பூமி; அசைவு - சிரமம்; பணியாய் - கூறியருள்க.)

என்ற திருவாய்மொழிப் பாசுரத்தில் இவ்வாழ்வாரின் மயங்கிய மனநிலையைக் காண்கின்றோம். "திருக் கோளூரிலும், திருப்புளிங்குடியிலும் ஆடாமல் அசையாமல், இடம் வலமாகக்கூட மாறாமல் திருக்கண்வளர்வதற்குக் காரணம் என்ன? நின் திருவடிகளில் சரணம் புகுந்த அடியார் களின் பொருட்டுப் பல அவதாரங்கள் எடுத்து அவர்களின்

6. ஆசா. ஹிரு. - சூத்திரம்-173.
7. திருவாய் 8.3 : 5. இவ்விடத்தில் "நடந்த கால்கள் நொந்தவோ?" (திருச். விருத். 61) என்ற பாசுரம் நினைக்கத் தக்கது.

துன்பத்தைப் போக்கியதாலேற்பட்ட சிரமமோ? அல்லது அன்றே பிறந்து அன்றே வளர்ந்து இப் பூமியைத் தாவி அளந்த சிரமமா? கூறியருள வேண்டும்'' என்று வேண்டு கின்றார் ஆழ்வார். மாடங்களுக்குக் கொடி கட்டி இருப்பதும் ஆழ்வாருக்கு அச்சத்தை விளைவிக்கின்றதென்று நம் பிள்ளை திருவுள்ளம் பற்றி, ''சத்துருக்கள் கிடந்தவிடமறிந்து அபிசரிக்கும்படி (தீங்கிழைக்கும்படி) கொடி கட்டிக் கொண்டு கிடக்க வேண்டுமோ? கொடிக்குப் பயப்படவல்லார் இவரைப் போலில்லை; கம்ஸ பயத்தாலே ஒளிந்து வளர்ந்தாப்போலே இருக்கலாகாதா?'' என்று அருளிச் செய்திருப்பதன் அழகு இன்சுவை மிக்கது.

எம்பெருமான் பரமபதத்தில் இருக்கும் நிலையை எண்ணிப் பார்க்கின்றார் ஆழ்வார். பிறரைத் துதிக்கவும் வணங்கவும் வேண்டாத நித்திய சூரிகளின் பரிவுக்கு இலக்காக இருப்பவன் எம்பெருமான்; அவர்கள் எம்பெருமானை எப்பொழுதும் காத்துக் கொண்டு இருப்பர். இந்நிலையில் எம்பெருமான் திருவாழி திருச்சங்கு முதலிய எல்லா ஆயுதங் களையும் தரித்துக் காட்சி கொடுத்தால், அவர்களும் எம்பெருமானுடைய சிரமத்திற்கு அஞ்சி ''வாழ்க பல்லாண்டு'' என்று மங்களாசாசனம் செய்வர். அஞ்சுவதற்கு நிலமில்லாத திருநாட்டிலேயே எம்பெருமானின் நிலை இப்படியானால், இந்நிலத்தில் சொல்ல வேண்டுமோ என்பது ஆழ்வாரின் நினைப்பு. சீவான்மாக்களின் தாபத்திரயம்[8] முதலிய துக்கங்களைப் போக்குவதற்காக எம்பெருமான் அந்த அழகிய வடிவுடன் இந்தச் சம்சார நிலத்தில் வந்து உலவுகின்றானே என்று வயிறு பிடிக்கின்றார் ஆழ்வார்.

8. தாபத்திரயம் - மூவகைத் துன்பங்கள்; தன்னைப் பற்றி வருவன, பிற உயிர்களைப்பற்றி வருவன தெய்வத்தைப்பற்றி வருவன என்பவையாகும்.

"பணியா அமரர் பணிவும்,
பண்பும், தாமேயாம்
அணியார் ஆழியும் சங்கமும்
ஏந்தும் அவர்காண்மின்;
தணியா வெம்நோய் உலகில்
தவிர்ப்பான், திருநீல
மணியார் மேனியோடு என்மனம்
சூழ வருவாரே"[9]

(பணியா - வணங்காத; அமரர் - நித்திய சூரிகள்; வெம்நோய் - தாபத்திரயம் முதலியவை; அணிஆர் - அழகிய; நீலமணிமேனி - நீலமணி போன்ற வடிவம்.)

மிக்க மிருதுத் தன்மையுடைய அழகிய திருமேனியுடன் எம்பெருமான் திவ்விய ஆயுதங்களைச் சுமந்துகொண்டு இந்த நிலவுலகில் வருவதைக் காணும் ஆழ்வாருடைய மனம் துன்பம் அடைந்து மயங்குகின்றது.

இந்நிலவுலகத்தில் எம்பெருமானின் நிலையையும் எண்ணிப் பார்க்கின்றார் ஆழ்வார். எம்பெருமான் ஒருவரையும் ஆளாக வைத்துக் கொள்ளவில்லை; தாமே திருவாழியையும் திருச்சங்கையும் சுமக்கின்றார். திருவாழியும் திருச்சங்கும் பகைவர்கட்கே ஆயுதங்களாக இருப்பவை; பகவதநுபவத்தில் ஆழங்கால்பட்டவர்கட்கு அவை ஆபரணங் களாகவே இருப்பவை. ஒருக்கால் திருவாழியும் திருச்சங்கும் எம்பெருமானுக்கு நிரூபகங்கள் (முக்கியமான அடையாளங் கள்) என்று வைத்துக் கொண்டாலும், வில்லையும் வாளையும் சுமப்பதற்கு இளைய பெருமாளைப்போல் ஒருவர் இல்லையே என்று ஏங்குகிறார் ஆழ்வார்.

9. திருவாய். 8.3 : 6

"ஆளும் ஆளார்; ஆழியும்
சங்கும் சுமப்பார்தாம்;
வாளும் வில்லும் கொண்டுபின்
செல்வார் மற்றில்லை"[10]

என்பது அவர் திருவாக்கு. மடாதிபதிகள் தம்முடைய முக்கோலையும் ஒரு சீடர் கையிலே கொடுத்துத் தாம் கைவீசிக் கொண்டு போகா நிற்க, அழகே வடிவமாகவும் மிருதுத் தன்மையே இயல்பாகவும் கொண்ட எம்பெருமான் இவ்வாயுதங்களைச் சுமக்க ஆள் வைத்துக் கொள்ள வேண்டாவோ என்பது ஆழ்வாரின் நினைப்பு. இங்கே நம் பிள்ளை ஈடு இன் சுவை மிக்கது; "இரண்டு உலகங்களிலும் பரிக்கைக்கு ஆள் இல்லை; தனியே ஒருவரை ஆளவேண்டும் என்று இருக்கிறார். நித்திய சூரிகள் பகவானுடைய அநுபவத்திலேயே நோக்குள்ளவர்கள்; சம்சாரிகள் ஐம்புல இன்பங்களில் நோக்குள்ளவர்கள். (ஆழியும் சங்கும் சுமப்பார் தாம்) ஆபரணமான திவ்விய ஆயுதங்கள் அவனுடைய மிருதுத்தன்மையாலே மலை எடுத்தாற் போலே சுமையாய்த் தோற்றுகிறது இவர்க்கு" என்ற ஈட்டுப் பகுதியின் இன்சுவை காண்க.

பெருமான் நடக்கும்போது மாறி மாறியிடும் திருவடிகளிலும் வீசுகின்ற திருத்தோள்களிலும் சொட்டும் அழகு சொல்லுந் தரமன்று.

"மையோமரக தமோ? மறி
கடலோ?மழை முகிலோ?
ஐயோ!இவன் வடிவென்பதோர்
அழியாஅழ குடையான்"[11]

என்று கம்பநாடன் அவன் அழகை வருணிக்கின்றானல்லவா? மேகம் தனியே நடப்பது போலவும், ஆண் யானை கம்பீர

---

10. திருவாய். 8.3:3
11. கம்பரா - அயோத். - கங்கைப். 1

மாக நடப்பது போலவும் அவன் நடை இருப்பதாக அன்றோ கவிஞன் பேசுகின்றான்? எனவே, அந்த அழகு சொட்டும் திருவடிகட்கும் திருத்தோள்கட்கும் மங்களாசாசனம் செய்வாரில்லையே என்று கவல்கின்றார் ஆழ்வார்.

''தாளும் தோளும் கைகளை
ஆரத் தொழக்காணேன்;
நாளும் நாளும் நாடுவன்
அடியேன் ஞாலத்தே''[12]

(தாள் - திருவடி; கைகளைஆர - கைகளார; 'வயிறார உண்ண' என்பாரைப் போல; நாளும் நாளும் - நாள் தோறும்; ஞாலம் - பூமி.)

என்ற பாசுர அடிகளில் ஆழ்வார் மனங்கவல்வதைக் காணலாம். 'தொழக்காணேன்' என்றதில் இன்னார் தொழ என்பது வெளிப்படையாகக் குறிப்பிடப்பெறாமையால், 'பிறர்தொழக் காணேன்', 'நான் தொழும்படி காணேன்' என்று இரண்டு வகையாகவும் பொருள் கொள்ளலாம். ஈண்டு ஆறாயிரப்படி அருளிச் செயலில் ''தான் எழுந்தருளும்போது அவன் திருவடிகளையும் திருத்தோள்களையும் என்னுடைய கைகளின் விடாய் தீரும்படி தொழக் காணப் பெறு கின்றிலேன்'' என்று காணப்பெறுவதால், ஆழ்வார் தாம் தொழப் பெறாமைக்கு வருந்தி அருளிச் செய்வதாகக் கொள்ளலாம். மற்றொரு பொருளும் பொருந்தும். இப் பாசுரத்தின் முதல் மூன்றடிகளாலும் பரிபவர் இல்லாமைக்கு வருந்தி, ஈற்றடியினால் தம்முடைய பரிவின் மிகுதியைக் காட்டுகின்றார் ஆழ்வார். இங்கே, ''பரமபதத்திலேயிருந்து

12. திருவாய். 8.3:3

அஸ்தாநே பயசங்கை பண்ணுகிறேனோ?[13] பிரம்மாஸ்திரப் பிரயோகம் பண்ணுவார், நாகபாசத்தையிட்டுக் கட்டுவார்; அழைத்து வைத்து மல்லரையிட்டு வஞ்சிக்கத்தேடுவார்; பொய்யாசனம் இடுவார் ஆகிய இவர்கள் இருக்கின்ற தேசத்தில் வாழா நின்றால் நான் அஞ்சாதே செய்வது ஏன்?''[14] என்ற இன்சுவை மிக்க ஈட்டின் பகுதி எண்ணி எண்ணி அநுபவிக்கத் தக்கது.

இங்ஙனம் திருக்குருகூரில் திருப்புளியாழ்வார் திருவடியிலே இருந்து கொண்டு திருவண்பரிசாரத்து எம்பெருமானுக்கு அடிமைபூண நினைக்கின்றார் ஆழ்வார். இந்நிலையில் திருநகரித் திருவீதியில் எத்தனையோ மக்கள் தம் சொந்தக் காரியத்தை முன்னிட்டுப் போவாரும் வருவாருமாக இருப்பதைக் காண்கின்றார். ஆயினும், அவர்கள் திருவண்பரிசாரம் சேவிக்கப் போகின்றனர், சேவித்தபின் அங்கிருந்து மீள்கின்றனர் என்பதே ஆழ்வாரின் நினைப்பு.

''வருவார் செல்வார் வண்பரி
சாரத்து இருந்தஎன்
திருவாழ் மார்வற்கு என்திறம்
சொல்லார்; செய்வதுஎன்?
உருவார் சக்கரம் சங்குசுமந்(து)
இங்கு உம்மோடு
ஒருபாடு உழல்வான் ஓர்அடி
யானும் உளன்என்றே''[15]

(திருவாழ்மார்வர் - சீநிவாசன்; என்திறம் - என் தன்மை; பாடு - பக்கம்: உழல்வான் - திரிகின்றவன்.)

---

13. அஸ்தாநே பயசங்கை பண்ணுதல் - அஞ்ச வேண்டிய இடம் அல்லாத இடத்திலும் அச்சத்தாலே என்ன வருகின்றதோ என ஐயங் கொள்ளுதல்.
14. திருவாய். 8.3:3 ('ஈடு' காண்க.)
15. ஷை 8.3:7

என்பது பாசுரம். இதில் 'பெரிய பிராட்டியார் வாழும் இடம்' எனப் பொருள்படும் 'ஸ்ரீநிவாசன்' என்ற வடமொழிப் பெயர் 'திருவாழ் மார்பன்' என்ற அழகிய தமிழ்ப் பெயராக மாறிக் கிடப்பதைக் கண்டு மகிழ்கின்றோம். "ஸ்வகார் யார்த்தமாகப் போகிறாரும் வருகிறாரும் திருப்பரிசாரத் தேறப் போகிறாராகவும் வருகிறாராகவும் நிச்சயித்து" என்பது ஆறாயிரப்படி, இனி ஈடு: ஸ்வகார்யத்தாலே த்வரித்துப் (வேகப்பட்டுப்) போவாரைத் தம் தசையை (நிலையை) அறிவிக்கப் போகிறார்கள் என்றும், அங்கு நின்றும் வருவாரைத் தம்மையழைக்க வருகிறார்கள் என்றும் இருப்பர்". ஆயினும், இவர் நினைத்திருந்தபடி ஒருவரும் தம் மருகே வரக் காண்கின்றிலர். "எம்பெருமானுக்குப் பரிவார் ஒருவரும் இல்லாதிருக்கின்ற இந்த நிலவுலகில் சங்கு சக்கரங் களைச் சுமந்து கொண்டு உம்முடன் ஒரு பக்கத்தில் கூடவே திரியும் அடியான் ஒருவன் திருநகரியில் திருப்புளியடியில் உளன்" என்று அவர்கள் திருவண்பரிசாரத்து எம்பெரு மானிடம் தெரிவிக்க வேண்டும் என்பது ஆழ்வாரின் விருப்பம். எவரும் தம்மிடம் வராததனால் 'இனி என் செய்வது?' என்று ஏங்குகின்றார். "எல்லாம் வாசுதேவன்" என்று சொல்லக்கூடிய மகாத்மா கிடைப்பது அருமை என்று எண்ணிக் கொண்டிருக்கும் எம்பெருமானிடம் 'அருமையன்று' திருப்புளியடியிலே உளர்' என்று சொல்ல வேண்டும் என்பது ஆழ்வாரின் பேரவா.

இங்ஙனம் ஏங்கிக் கிடக்கும் ஆழ்வார் எம்பெருமானையே கேட்கத் துணிந்து விடுகின்றார்.

"என்றே என்உன் ஏரார்
கோலத் திருந்துஅடிக்கீழ்

நின்றே ஆட்செய்ய நீகொண்(டு)
அருள நினைப்பதுதான்?''[16]

(என்றே - எப்பொழுதோ?; ஏர் ஆர் - அழகு விஞ்சின; நின்றே ஆள்செய்ய - நிலை நின்று அடிமை செய்ய; கொண்டு அருள - அங்கீகரிக்க.)

என்ற பாசுரப் பகுதியில் இங்ஙனம் கேட்பதைக் காண்கின்றோம். தானாக அடிமை செய்யப் புகுவது குறிக்கோள் அன்று; 'ஏவமற்று அமரர் ஆள்செய்வார்' என்றபடி எம்பெருமான் ஏவ, தான் பணி கொள்வ தன்றோ சீரியது என்று எண்ணுகின்றார். அங்ஙனம் அவன் திருவுள்ளம் பற்றியிருக்கும் நாள் எதுவோ என்று வினவுகின்றார்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் கிளர்ந்தெழுந்த வண்ணம் எம்பெருமானைச் சேவிக்கும் நோக்கத்தில் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். வீற்றிருக்கும் திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலங் கொண்டு **கமலவல்லி நாச்சியாருடன்** சேவை சாதிக்கும் எம்பெருமான் **திருவாழ் மார்பனைக்** கண்ணாரக் கண்டு வணங்குகின்றோம்.

''வீற்றிருந்து ஏழ்உலகும் தனிக்கோல்
செல்ல வீவுஇல்சீர்
ஆற்றல்மிக்(கு) ஆளும் அம்மானை
வெம்மா பிளந்தான்தன்னை
போற்றி என்றே கைகள்ஆரத்
தொழுது சொல்மாலைகள்
ஏற்ற நோற்றேற்கு இனிஎன்
னகுறை எழுமையுமே?''[17]

(வீவுஇல் சீர் - முடிவில்லாத கல்யாண குணங்கள்; ஆற்றல் - வலிமை (இங்கு 'சாந்தி' என்னும் பொருளது); வெம் மா - கொடிய 'கேசி' என்னும் குதிரை.)

---

16. திருவாய். 8.3:8
17. ஷை 4.5:1

என்ற திருவாய்மொழியைப் பாடிப் பரவுகின்றோம். இதே நினைவுடன் திருக்கோயிலை வலம் வருகின்றோம்.

'திருவண்பரிசாரம்' என்ற பெயர் 'திருப்பரிசாரம் என்று திரிந்து இப்போது 'திருப்பதி சாரம்' என்றே மருவி வழங்கி வருகின்றது. திருவண்பரிசாரத்து எம்பெருமானைத் தொழுதால் திருப்பதி எம்பெருமானைச் சேவிக்கும் பலன் உண்டு என்ற நம்பிக்கையும் இப்பகுதி மக்களிடம் வேரூன்றிக் கிடக்கின்றது. இந்த நம்பிக்கையால் 'திருவண் பரிசாரம்' என்ற திவ்விய தேசத்தின் பெயர் 'திருப்பதி சாரம்' என்றே அவர்களிடம் நிலைத்து விட்டது. திருப்பதி ஏழுமலையானை நாம் அறிவோம். அலர்மேல் மங்கைத் தாயாரையும் தனியாக ஒதுக்கி வைத்து விட்டு இரவும் பகலும் ஓயாமல் நின்ற கோலத்துடன் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கட்குப் 'பேட்டி' அளித்து வரும் பெருமானல்லவா அவன்? அங்ஙனம் நின்ற களைப்புத் தீரத் 'திருப்பதி சாரத்தில்' இருந்த திருக்கோலத்திலிருந்து கொண்டு சேவை சாதிக்கின்றான் போலும் என்று நமக்கு எண்ணத் தோன்றுகின்றது.

இந்தத் திருக்கோயிலில் நம்மாழ்வாருக்குத் தனிச் சந்நிதி உண்டு. தாயைப் பெற்ற பாட்டியார் ஊரில் இந்தச் சலுகை கூடவா இல்லாமல் போகும்? இதைத் தவிர, அண்மையில் அடவியில் உள்ள 'சடாயுபுரம்' என்ற கோயிலுக்குச் சொந்த மான நடராசர் சிலையும் வேறு பொருள்களும் பாதுகாப்பிற் காக இக்கோயிலில் இடம் பெற்றுள்ளன. அந்த ஆடலரசனுக்கும் ஒரு 'கும்பிடு' போட்டு விட்டுக் கோயிலை விட்டு வெளி வருகின்றோம். மலைநாட்டுத் திருப்பதிகளுள் திருமதில் சுவர்களிலும், உள்சுற்றுச் சுவர்களிலும் திருமண் காப்பிட்டதை இந்தத் திருப்பதியில் மட்டிலுமே காண் கின்றோம். வடகலை சம்பிரதாயத்தில் இதனைக் 'காண்கின்

றோம். இத்திருப்பதியில் தீர்த்தம் வழங்கும் வழக்கமும் உண்டு; திருத்துழாயும் சந்தனமும வழங்குகின்றனர்.

இந்த எம்பெருமானை நம்மாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார்.[18] திருவாய்மொழியில் ஒரே ஒரு மங்களாசாசனப் பாடலைத்தான் காண்கின்றோம். ஆயினும் இப் பாசுரத்தைச் சேர்ந்த பதிகம் முழுவதும் இத் திருப்பதி எம் பெருமானை மங்களாசாசனம் செய்ததே என்பது ஆசாரிய ஹிருதய ஆசிரியர் **அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின்** கருத்தாகும். இப்பதிகம் முழுவதையும் எம்பெருமான் சந்நிதியிலே பாடிப் பரவி எம்பெருமானிடம் விடை பெறுகின்றோம்.

இவ்விடத்தில் திவ்விய கவி **பிள்ளைப் பெருமாள் அய்யங் காரின்,**

> ''அடியும் குளிர்ந்தாள்
> அறிவும் குலைந்தாள்,
> முடிகின்றாள்; மூச்சு அடங்கு
> முன்னே, கடிதுஓடி
> பெண்பரிசு, ஆர், அங்குப்
> பிறப்பித்து மீளுவார்
> வண்பரிசா ரம்சிறந்த
> மாற்கு''[19]

என்ற நாயக-நாயகி பாவனையிலுள்ள பாடல் நம் நினைவுக்கு வருகின்றது. ஆம்; உண்மைதான். இத்திருப்பதி எம் பெருமானின் திவ்வியமங்கள விக்கிரகத்தின் அழகில் ஈடுபட்டு விட்டால், திருக்கோயிலை விட்டுத் திரும்ப மனம் வருவதில்லை. அதுவும், நாம் நாயகி நிலையை அடைந்து விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை. இந்நிலை நமக்கு அவ்வளவு எளிதாக வரக்கூடுமா என்ன? எம்பெருமானை மனமாரச் சேவித்த மன நிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

---

18. திருவாய் 8:3 : 7
19. நூற். திருப். அந்தாதி-60.

## 2. திருவாட்டாற்று எம்பெருமான்

வைணவ சமயத் தத்துவப்படி இறைவனுக்கு உருவம் உண்டு. அது 'திவ்வியமங்கள விக்கிரகம்' என்று வழங்கப் பெறும். இந்த வடிவம் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் என்று ஐந்து வகையோடு கூடியிருப்பதாகப் பேசப்பெறும். இவற்றுள் பரத்துவம் என்பது, எம்பெருமான் வைகுந்தத்தில் இருக்கும் நிலையாகும். பெரிய பிராட்டியார், பூமிப் பிராட்டியார் நீளாதேவி சமேதராக அயர்வறும் அமரர்கள் என்று வழங்கப்பெறுகின்ற அனந்தன், கருடன், சேனை முதலியார் (விஷ்வக்சேனர்) முதலிய நித்திய சூரிகளுக்கும், சம்சாரத்தினின்றும் விடுபட்டவர்களான முக்தர்கட்கும் அநுபவித்தற்கு உரியவனாய் நித்திய விபூதியில்[1] (பரமபதத்தில்) எழுந்தருளியிருக்கும் இருப்பேயாகும் இது. இங்குக் காலத்தால் உண்டாகும் பரிணாமத்திற்கு இடம் இல்லை. வியூகமாவது, லீலாவிபூதியின் (இந்த உலகத்தின்) படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை நடத்துவதற்காகவும், புபூட்சுக்களான சம்சாரிகட்கு வேண்டியவற்றைத் தந்து வேண்டாதவற்றைப் போக்கி அவர்களைக் காத்தற்காகவும், முமுட்சுகளாய்[2] உபாசிக்குமவர்கட்குச் சம்சாரத்தைப் போக்கித் தன்னை வந்தடைவதற்குக் காரணமான அநுக்கிரகத்தைச்

1. விபூதி-நியமிக்கப்படும் பொருள்.
2. முமுட்சுகள் - மோட்சத்தில் விருப்பமுள்ளவர்கள்.

செய்வதற்காகவும் சங்கர்ஷணன், பிரத்யும்னன், அநிருத்தன் என்ற வடிவங்கொண்டு நிற்கும் நிலையாகும். விபவம் என்பது, தன்னை அடைந்தார்களைக் காப்பதற்காகவும், அவர்களின் விரோதிகளைப் போக்குவதற்காகவும், வைதிக தர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும் அவ்வப் பொழுது இறைவன் மேற்கொள்ளும் அவதாரங்களாகும்.[3] அந்தர்யாமித்துவமானது, எம்பெருமான் சேதனர்கட்குத் தோன்றாத் துணையாக அவர்கட்குள்ளே புக்கிருந்து அவர்களது இதய கமலத்தில் கட்டை விரலளவாக எழுந்தருளியிருக்கும் இருப்பாகும். அர்ச்சாவதாரமாவது, தனக்கென ஒருருவமும் ஒரு பேரும் இல்லாமல், சேதனர்கட்கு விருப்பமான பொன், வெள்ளி, தாமிரம் சிலை முதலான பொருளில் அவர்கள் விரும்பும் வடிவங்கலையும் பெயர்களையும் ஏற்றுத் திவ்விய தேசங்களிலும், அடியார்களுடைய மாளிகையிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் நிலையாகும்.[4]

இந்த ஐந்து நிலைகளில் எழுந்தருளியிருக்கும் இருப்புக்களுள் அர்ச்சாவதாரத்தில் ஏனைய நிலைகளில் அநுபவிக்கத் தக்கனவான குணங்கள் யாவும் நிறைந்திருக்கும் என்பது வைணவர்களின் நம்பிக்கை.[5] இதுபற்றியே ஆழ்வார்கள் அனைவருமே இந்த அர்ச்சாவதாரத்தில் மிகவும் ஈடுபட்டு 108 திருப்பதிகளிலும் எழுந்தருளியிருக்கும் ''உள்ளுந்தோறும் தித்திக்கும்''[6] எம்பெருமான்களைப் பற்றித் ''தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகத் தித்திக்கும்''[7] நாலாயிரம் பாசு

3. பகவத் கீதை 4 : 8.
4. இவற்றின் விவரங்களைத் **தத்துவத்திரயம்** - ஈசுவர பிரகரணம் சூத்திரம் (42-61)களில் காண்க.
5. ஆசாரிய ஹிருதயம் - சூத்திரம் - 158.
6. திருவாய் - 8 : 6 : 3.
7. ஷெ-4. 3 : 10; ஒப்பிடுக 8. 8 : 4; 10. 7 : 2.

ரங்களை அருளியுள்ளனர். இவை யாவும் தொண்டர்கள் அமுதாகக் கொண்டு உண்ணும் சொல்மாலைகளாகத்[8] திகழ்கின்றன.

'திருவாட்டாறு' என்ற திவ்விய தேசம் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. நாகர்கோவிலிலிருந்து பதினாறு கல் தொலைவிலுள்ளது இவ்வூர். நாகர்கோவிலிலிருந்து அடிக்கடி பேருந்து வசதி உண்டு. தொண்ணூறு காசு தந்து பேருந்தில் ஏறி இவ்வூரை நோக்கிச் செல்லுகின்றோம். பேருந்தில் செல்லும்பொழுது இருபுறமுள்ள சோலைகள், தோட்டங்கள் நெல் வயல்கள், ஆறுகள், அவற்றினின்றும் கால்களாகப் பிரிந்து சென்று நிலங்களை வளமாக்கும் கால்வாய்கள் இவற்றைக் கண்டு அநுபவித்த வண்ணம் இவ்வூரை அடைகின்றோம். பேருந்தினின்றும் இறங்கிக் கிட்டத்தட்ட இரண்டு ஃபர்லாங்கு தூரம் நடந்து திருக்கோயிலை நண்ணுகின்றோம். ஆறும் அதன் கால்வாய்களுமாக ஊரையும் கோயிலையும் சூழ்ந்திருப்பதால் "திருவட்டாறு - திருவாட்டாறு" என்ற பெயர் ஏற்பட்டிருக்குமோ என்ற ஊகத்தில் இறங்குகின்றோம்.

திருக்கோயில் மிக உயரமான இடத்தில் அமைந்துள்ளது. கோயில் சிறியதே. ஆயினும், அது பெரிய மதிற்சுவர்களால் சூழப்பெற்ற பெரும் பரப்பான இடத்தில் அமைந்துள்ளது. வெயில், மழை என்று பாராமல் எல்லாக் காலங்களிலும் கோயிலை வலம் வரவேண்டும் என்று விழையும் பக்தர்கட்கு வசதியாக இருப்பதற்கு மதிலுக்கு உட்புறமாகக் கோயிலைச் சுற்றிலும் கல் பரப்பப்பெற்ற நடைபாதை அமைக்கப்பெற்று அப்பாதையின் மீதும் கூடாரம் போன்ற கொட்டகை வேயப்பெற்றுள்ளது. பாதை மிகவும் அகலமானது. எம்பெருமான்

8. திருவாய் 6, 4 : 9.

வாகனங்களில் அல்லது பல்லக்கில் அல்லது 'தோளுக்கினியான் மீது' உலாப் போவதற்குப் போதுமான அளவு அமைக்கப்பெற்றுள்ளது. நடைபாதையின் இருபுறங்களில் ஆயிரக்கணக்கான பித்தளை விளக்குகள் அமைக்கப் பெற்றுள்ளன. நடைபாதையின் கூரையிலும் பல்வேறு வடிவமான வண்ண விளக்குகள் தொங்குகின்றன. திருவிழாக் காலங்களில் இவ் விளக்குகள் யாவும் எரியவிடப்பெற்றுக் கண்கவர் காட்சியாக இருப்பதற்காகவே இவை நிரந்தரமாக நிறுவப்பெற்றுள்ளன. திருவனந்தபுரம் அரசர்களின் கட்டளைக்குக் கீழ் உள்ள கோயில்கள் இப்படித்தான் மிகக் கவனத்துடன் நடைமுறையிலிருந்து வரும் என்பதற்கு இத்திருக் கோவில் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக இருப்பதாகக் கொள்ளலாம். தாம் வழிபடும் கடவுளர்களையும் ''இராஜ தர்பார்'' நிலையில், உலாப் போகும் முனையில், காண விழைந்த அம்மன்னர்களின் பேருள்ளத்தையும் நாம் எண்ணிப் போற்றுகின்றோம்.

'திருவாட்டாறு' என்ற திருப்பதியை நம்மாழ்வாரே நமக்கு நன்றாக அறிமுகம் செய்து வைக்கின்றார்.

> ''திகழ்கின்ற திருமார்பில்
> திருமங்கை தன்னோடும்
> திகழ்கின்ற திருமாலார்
> சேர்விடம்தண் வாட்டாறு''[9]

(திகழ்கின்ற - விளங்குகின்ற; திருமங்கை - பெரிய பிராட்டியார்; திருமாலார் - இலக்குமிநாதன்.)

என்பதாக. அலர்மேல் மங்கை உறைமார்பன் வாழும் இடம் திருவாட்டாறு என்பது ஆழ்வாருடைய குறிப்பு. சாதாரணமாக உலக வழக்கில் எல்லோரும் 'திருவாளர்' (சீமான்) என்று சொல்லப்பெறுகின்றனரே, அப்படி அன்று இங்கு,

9. திருவாய் 10.6 : 9

திருமங்கை தன்னோடு திகழ்கையினாலே, அஃதாவது (தன் மார்பில்) திருவுடன் (இலக்குமியுடன்) விளங்குகின்றவனாதலின் உண்மையிலேயே 'திருவாட்டாற்றான்' 'திருவாளர்' என்ற அடைமொழிக்குப் பாத்திரனாகின்றான். இந்தத் 'திருவாளர் திருவாட்டாற்றான்' மீது நம்மாழ்வார் மட்டிலும் ஒரு பதிகம்[10] பாடியுள்ளார்; வேறு ஆழ்வார்கள் திருவாட்டாற்றானை மங்களாசாசனம் செய்யவில்லை. எம்பெருமானைப் பெற வேண்டுமென்று ஆழ்வாருக்கு விடாய் அதிகமா? அல்லது ஆழ்வாரைப் பெறவேண்டும் என்று எம்பெருமானுக்கு விடாய் அதிகமா? என்று வைணவ பக்தர்களிடையே ஆராய்ச்சி நடைபெறுவதுண்டு. இதற்கு ஆழ்வாரே விடை அருளுகின்றார்,

''வாரிக்கொண்டு உன்னை
விழுங்குவன் காணில்என்று
ஆர்வுற்ற என்னையொழிய
என்னில் முன்னம்
பாரித்துத் தான்என்னை
முற்றப் பருகினான்''[11]

(ஆர்வுற்ற - ஆசைப்பட்ட; பாரித்து - மிகவும் விரும்பி.)

என்ற பாசுரத்தின் மூலமாக. இதனால் எம்பெருமான் ஆழ்வார்மீது கொண்ட விடாயே பெரிது என்பது தெளிவாகின்றது.

திருவாட்டாற்றான்மீதுள்ள திருவாய்மொழி மிகமிக அற்புதமானது; பன்முறை படித்துப் படித்து மனம் கரைய வேண்டிய திருவாய்மொழி இது. சீவான்மா வேட்டையில் சதா ஈடுபட்டுள்ள எம்பெருமான் திருவாட்டாற்றில் வந்து

10. திருவாய் 10. 6.
11. ஷை 8.6 : 10.

பாடிவீடு அமைத்துக் கொண்டு தங்குகின்றான். ஆழ்வாரைத் திருநாட்டில் கொண்டு போய் அநுபவிக்க வேண்டும் என்று பாரித்து நிற்கின்றான்.

''மண்ணுலகில் வளம்மிக்க
வாட்டாற்றான் வந்துஇன்று
விண்ணுலகம் தருவானாய்
விரைகின்றான், விதிவகையே:''[12]

என்ற ஆழ்வாருடைய பாசுரத்தாலேயே இதனை அறியலாம் இதனை உளங்கொண்டுதான் ஈட்டின் ஆசிரியராகிய **நம்பிள்ளை** இப்பதிகத்தின் அவதாரிகை (முன்னுரை) தொடங்கும்பொழுதே 'பொய்ந்நின்ற ஞாலம்' (திருவிருத்தம்-1) தொடங்கி இவ்வளவும் வரை ஈசுவரனை ஆழ்வார் பின்தொடர்ந்தபடி சொல்லிற்று; இது தொடங்கி ஆழ்வாரை சர்வேசுவரன் பின் தொடருகிறபடி சொல்லுகிறது''[13] என்று கூறியுள்ளார். அஃதாவது, இதுகாறும் ஆழ்வார் எம்பெருமானிடம் குறையிரந்து நின்றார்; இனி முனியே நான்முகனே' (திருவாய்மொழி 10. 10.) என்னும் பதிகத்தளவில் எம்பெருமான் ஆழ்வாரிடம் குறையிரந்து நிற்கின்றபடியைப் பேசத் தொடங்குகிறது என்பதாம். இது கருதியே திவ்வியதேசங்கள்தோறும் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களின் குணங்களைக் குறிப்பிடுங்கால் '**ஆசாரிய ஹிருதயம்**' திருவாட்டாற்று எம்பெருமானிடம் 'அடியார்கட்கு மோட்சத்தைக் கொடுக்கும் அளவில் அவர்கள் விதித்தபடி செய்வானாய் அவர்கட்குப் பரதந்திரப்பட்டிருக்கும் தன்மை எல்லை கடந்து வெள்ளமிட்டோடும்''[14] என்று கூறுகின்றது.

---

12. திருவாய். 10. 6: 3
13. ஷை. 10. 6 (ஈடு: உரை அவதாரிகை காண்க).
14. ஆசா. ஹிரு. 184.

இவ்விடத்தில் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராச்சாரிய சுவாமிகள் கூறுவதும் உளங்கொண்டு மகிழத்தக்கது. அவர் கூறுவது: "ஆழ்வாரைப் பரமபதம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று விரையும் எம்பெருமான் 'ஆழ்வீர்! வாரீர், வாரீர்' என்று வேண்டுகின்றமை தெரிகின்றது. தவிரவும், அவருடைய உடல் விரைவில் மறையப் போகின்றது என்பதை அறிந்தவனாகையால், தன்னுடைய பணியின் விரைவையும் மறந்து ஆழ்வாருடைய திருமேனி அநுபவத்தில் அதிக ஆர்வங்கொள்ளுகின்றான். முன்பு ஆய்ச்சியரோடு குரவை கோத்தபோது பல உருவங்கள் கொண்டு அநுபவித்தது போலவும், நரகனைத் தொலைத்துக் கவர்ந்த பதினாயிரம் தேவிமார்களைத் துவாரகைக்குக் கொண்டு சென்று அங்குப் பதினாயிரம் உருவங்களை மேற்கொண்டு அநுபவித்ததைப்போலவும், பல உருவங்களை மேற்கொண்டு ஆழ்வாருடைய அவயவங்கள் தோறும் அநுபவிக்க விழைந்து அதற்கு இசைவு தருமாறு வேண்டுகின்றான். இதனை ஆழ்வார் மிக்க சிரமத்துடன் விடுவித்துக் கொள்ள வேண்டியதாயிற்று."[15] ஆயினும் எம்பெருமான் ஆழ்வாரைத் தொடர்வதில் சிறிதும் குறைவு ஏற்படவில்லை.

"பராத் பரனாயிருக்கும் எம்பெருமான் இப்படி நம்பக்கலில் பரதந்திரனாய்த் தாழ நிற்கின்றானே! இஃது என்ன அதிசயம்!" என்று அப்பெருமானின் சீலகுணத்தை அநுபவிக்கத் தொடங்கினார் ஆழ்வார். அங்ஙனம் அநுபவிக்குங்கால் கைவல்யாநுபவம் போன்ற தனியநுபவம் ஆழ்வாருக்குச் சுவை தரவில்லை. எனவே, நாட்டு மக்களோடு சேர்ந்து அநுபவிக்கலாம் என்று அவர்கள்பால் கண்வைத்தார். அவர்களோ "உண்டியே உடையே உகந்தோடுவாராய்"[16]

15. திருவாய். 10. 6. (திவ்யார்த்த தீபிகை - உரை அவதாரிகை காண்க.)

16. பெரு. திரு. 3 : 4

உலகியலில் ஐம்புல இன்பங்களில் மண்டிக் கிடந்தனர். அவர்களை நீக்கிப் பரம ரசிகனான எம்பெருமானுடன் தான் கூடி இக்குணத்தை அநுபவிக்கலாமே என்று அவன்மீதும் கண் செலுத்தினார். அவனோ ஆழ்வாரைக் கொண்டு போவதிலேயே கண்ணும் கருத்துமாக விரைந்து கொண்டிருப்பவனாதலால் இவருடைய அனுபவத்திற்குத் துணை புரிவதாகத் தோன்றவில்லை. எனவே, ''யானும் என் நெஞ்சும் இசைந்தொழிந்தோம்''[17] என்று சொல்லியவாறு எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமான தானும் தம்மோடு இன்பதுன்பங்கட்கு உட்பட்டிருக்கின்ற நெஞ்சுடன் அநுபவிக்கின்றார். 'நெஞ்சே! அவனுடைய மேன்மையை நீ அறிவாய்; அங்ஙனம் மேன்மையுடையவன் நம்பக்கல் இப்போது தாழ நிற்கும் நிலையையும் காண்கின்றாய். நாம் பெற்ற பேற்றின் கனம் இருந்தவாறு என்னே!' என்று சொல்லிச் சொல்லி உள்குழைந்து இனியராகின்றார். வாட்டாற்று எம்பெருமான் மீதுள்ள திருவாய்மொழி ஆழ்வாரின் இந்த அநுபவ நிலையையே பேசுகின்றது. இந்த அநுபவ உணர்ச்சியுடன் நாம் அந்தத் திருப்பதி எம்பெருமானைச் சேவிக்கின்றோம்.

**'ஆதிகேசவப் பெருமாள்'** என்பது இத்திருப்பதி எம்பெருமானின் திருநாமம்; தாயாரின் பெயர் **'மரகத வல்லி'**. மேற்கு நோக்கிய திருமுக மண்டலத்துடன் ஆதிசேடன்மீது கிடந்த திருக்கோலத்துடன் நமக்குச் சேவை சாதிக்கின்றான் எம்பெருமான். திருவனந்த புரத்திலிருப்பது போலவே, இங்கும் மூன்று சந்நிதிகள் உள்ளன. மூன்று சந்நிதிகளின் அளவுக்கு நீளப் பள்ளி கொண்டுள்ளான் எம்பெருமான். இடப்புறச் சந்நிதி வழியாகத் திருமுகமண்டலக் காட்சி

17. பெரிய. திருவந். 26.

தருகின்றான். நடுவிலுள்ள சந்நிதி வழியாக அவனுடைய திருவுந்திக் கமலத்தைக் கண்டு களிக்கின்றோம். வலப்புறச் சந்நிதி வழியாகத் திருக்கழல் இணைகள் நம் கண்கட்கு விருந்தாக அமைகின்றன. ''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''[18] என்ற பாண்பெருமாளின் அநுபவத்தைப் பெறுகின்றோம். இத்திருக்கோவிலில் கருவறை, அர்த்த மண்டபம் இவ்விரண்டின் தளங்களும் ஒரே கல்லினாலானவை. ஆகவே, அர்த்தமண்டபத்திலிருந்த வண்ணம் பிரசாதங்களைப் பெற்றால் கருவறையின் தூய்மை கெட்டுவிடும் என்று கருதி, அங்கு அவை வழங்கப் பெறுவதில்லை. அர்த்தமண்டபத்திலிருந்து இறங்கித் தரையிலிருந்த நிலையில் சந்தனம் திருத்துழாய் முதலிய பிரசாதங்களைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நியதி இன்றும் வழக்கத்திலிருந்து வருகின்றது.

எம்பெருமானைச் சேவிக்கும் பொழுது நம்மாழ்வாரின் உணர்வு நம்மையும் பற்றுகின்றது. நாமும் நம் நெஞ்சுடன் பேசுகின்றோம்.

> "அருள்பெறுவார் அடியார்தம்
> அடியனேற்கு ஆழியான்
> அருள்தருவான் அமைகின்றான்;
> அதுநமது விதிவகையே''[19]

(அடியார்தம் அடியனேன் - நம்மாழ்வார்; ஆழியான் - சக்கரப் படையேந்திய திருமால்; நமது விதிவகையே - நாம் விதித்த கட்டளையின் படியேயாம்.)

என்பதாக. எம்பெருமான் திருவாழியாழ்வான் முதலிய நித்திய சூரிகளிடம் காட்டும் அருளையெல்லாம் தன்னொருவன் பக்கல் மடைதிறந்து விட்டிருக்கின்றான்

18. அமலனா. - 10.
19. திருவாய். 10. 6: 1

என்பது நம்மாழ்வாரின் குறிப்பு. தாம் எம்பெருமானைப் பற்றியிருப்பதனால் அவர் பக்கல் பாயும் எம்பெருமானது திருவருள் தன்வரையிலும் வெள்ளம் கோத்ததாகக் கருது கின்றார் ஆழ்வார். மேலும், நம்மாழ்வாரைப் பின்பற்றி நாமும் நமது பிறவியை யொழிக்கவேண்டும் என்ற எண்ணத் துடன்,

''இருள்தருமா ஞாலத்துள்
இனிப்பிறவி யான்வேண்டேன்;
மருள்ஒழிநீ மடநெஞ்சே!
வாட்டாற்றான் அடிவணங்கே''[20]

(இருள் - அறிவின்மை; ஞாலம் - உலகம்; மருள் - அறிவின்மை; மடநெஞ்சு - அறியாமை பொருந்திய மனம்.)

தம்மை விண்ணாட்டிற்குக் கொண்டு போகவே எம் பெருமான் காத்திருக்கின்றானாதலின் 'அவன் வழியே செல்லப் பார்' என்று தன் நெஞ்சிற்குக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். உகந்தருளின நிலங்களிலேயே அவன் வந்து நிற்பது தம்மைக் கொண்டு போவதற்காகவே என்பது அவர் கருத்து.

ஆழ்வார் தாம் இறைவனிடம் வேண்டியதற்கு மேற்படவே பெற்றவற்றை நெஞ்சிற்கும் குறிப்பிடுகின்றார். பொய்ந்நின்ற ஞானம், பொல்லா ஒழுக்கு, அழுக்குடம்பு ஆகிய விரோதிகள் கழிய வேண்டும் என்ற அளவே அவனை வேண்டியது. அவனோ திருவருளின் மடைதிறந்து விட்டு எத்தனையோ பேறுகளை அளித்துள்ளான். அவற்றை,

''வாட்டாற்றான் அடிவணங்கி
மாஞாலம் பிறப்புஅறுப்பான்
கேட்டாயே மடநெஞ்சே!
கேசவன் எம்பெருமானைப்

20. திருவாய். 10.6: 1

பாட்டாய பலபாடிப்
பழவினைகள் பற்றுஅறுத்து
நாட்டாரோடு இயல்புஒழிந்து
நாரணனை நண்ணினமே''[21]

(ஞாலம் - பூமி; இயல்பு - தொடர்பு, சம்பந்தம்; ஒழிந்து-தவிர்த்து; நண்ணினம் - கிட்டப்பெற்றோம்.)

என்ற பாசுரத்தில் விளக்குகின்றார் ஆழ்வார். **'கேசவன் எம்பெருமான்'** என்று இந்தத் திருப்பதி எம்பெருமானின் திருநாமமும் இப்பாசுரத்தில் குறிப்பிடப்பெறுகின்றது. எம்பெருமானின் திருவருளால் தாம் பெற்றவை யாவை? எம்பெருமான் 'கேசவன்' தன் குழலழகைக் காட்டித் தன்னை ஆட்கொண்டான். பழவினைகளின் பற்று அறுந்துபோக, "பாலேய் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும் ஆயிரம் பாடலைத்''[22] தன்னைக் கருவியாகக் கொண்டு பாடுவித்துக் கொண்டான். இதனை ஆழ்வாரே அடுத்து வரும் பாசுரத்தில்,

''என்நெஞ்சத்து உள்இருந்து
இருந்தமிழ்நூல் இவைமொழிந்து''[23]

என்று கூறுவதையும் காண்கின்றோம். மேலும், இவ்வுலகத்தாரோடு தொடர்பு அறும்படி செய்தான் எம்பெருமான். அதற்குமேல் நாராயணனை எல்லாவித உறவுமாகப் பெறுவதற்கு வாய்ப்பும் ஏற்பட்டது. எம்பெருமானின் திருநாமங்களை வாய்விட்டுச் சொன்னதனால் இப்பேறு கிட்டியது.

''நண்ணினம் நாராயணனை
நாமங்கள் பலசொல்லி''[24]

என்று இதனை முன்னுள்ள பாசுரத்தில் குறிப்பிட்டுள்ளார் ஆழ்வார். அன்றியும், திருவாட்டாற்று எம்பெரு

21. திருவாய். 10. 6:2. 23. ஷை. 10. 6: 4
22. ஷை. 1. 5: 11. 24. ஷை.10. 6: 3

மான் இவருக்கு வீட்டுலகம் தருவதற்கு விரைகின்றான். இதனை,

> மண்ணுலகில் வளம்மிக்க
> வாட்டாற்றான் வந்துஇன்று
> விண்ணுலகம் தருவானாய்
> விரைகின்றான்''[25]

என்று ஆழ்வாரே சொல்லுகின்றார். பரமபதத்தில் எம்பெருமானுடைய திருக்குணங்கள் பகல் விளக்குப் போல் ஒளியற்றும் ஒளிகுன்றியும் காணப்பெறும். இந்த உலகில் அக்குணங்கள் இருட்டறையில் விளக்குபோல் ஒளிர்வதால் வளம் மண்ணுலகில் மிக்கதாயிற்று. 'விண்ணுலகம் தருவானாய்' என்பதற்கு நம்பிள்ளை அருளிச் செய்வது சுவைமிக்கது. அவர் கூறுவது: ''அங்கே ஒரு குடியிருப்பு மாத்திரம் கொடுத்து விடுவானாயிருக்கின்றிலன். 'வானவர் நாடு' (திருவாய் 3. 9: 9) 'ஆள்மின்கள் வானகம்' (திருவாய் 10. 9: 6) என்ற பொதுவினை அறுத்து நமக்கே தருவானாக விரையா நின்றான்''[26] என்பது. இதுகாறும் திருவாய்மொழியைத் தலைக்கட்டுகைக்காக இவ்வுலகில் அவரை இருக்கச் செய்தான். அச்செயல் முற்றுப்பெறும் நிலையிலிருப்பதால் இப்போது விரைகின்றான். தன் விருப்பப்படி ஆழ்வாரைக் கொண்டு போகச் சிறிதும் அவனுக்கு 'ருசி'[27] இல்லை. 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று ஆழ்வார் விதிக்க, அதன்படி நடந்து கொண்டதால்தான் தனக்கு மன நிறைவு ஏற்படும் என்று அவன் கருதியிருப்பதனால் அந்த நியமனம் பெறுவதற்காக விரைகின்றான் என்பது குறிப்பு.

---

25. திருவாய் 10. 6 : 3
26. ஷை 10. 6 : 3 (பாசுரத்தின் ஈடு காண்க)
27. ருசி-செயல்களை அறிந்தே செய்வதற்குக் காரணமாயுள்ள சுவை.

அடுத்து, ஆழ்வார் அர்ச்சிராதி மார்க்கத்தில்[28] விண்ணாடு புகப்பெறும் நேரம் நெருங்கிவிட்டதென்பதை மிகக் களிப்புடன் கூறுகின்றார்:

"வான் ஏற வழிதந்த
வாட்டாற்றான் பணிவகையே
நான்ஏறப் பெறுகின்றேன்
நரகத்தை நகுநெஞ்சே".[29]

[வான்—விண்ணுலகம்]

வானேற வழியை எம்பெருமான் தர இருக்கின்றானேயல்லது தந்துவிடவில்லை; தருவது உறுதி என்பதை வலியுறுத்தத் 'தந்த' என்று இறந்த காலத்தில் கூறியுள்ளமை கருத்ததக்கது. "சரணம் ஆகும் தன தாள் அடைந்தார்க்கு எல்லாம், மரணம் ஆனால் வைகுந்தம் கொடுக்கும் பிரான்"[30] அன்றோ எம்பெருமான்? இதை மனத்தில் கொண்டே 'வாட்டாற்றான் பணிவகையே' என்று குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது. மேலும், தம் திருவுள்ளத்தை நோக்கி, "நெஞ்சமே, நெடு நாளாக நன்மை இவ்வுலகக் குடிமக்கள் ஆக்கி எளிவரவு படுத்தின இவ்வுலக வாழ்க்கையைப் புரிந்து பார்த்துச் சிரிப்பாயாக; பரமபதம் கிட்டிவிட்டது என்று கடுகக் கால் வாங்கிப் போகாமல் உலக பாசத்தை அடியறுத்து விட்ட தாகச் சொல்லி நகுவாயாக" என்கின்றார் ஆழ்வார். இவ்விடத்தில் திருவரங்கத்தில் வாழ்ந்து வந்த பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் என்ற அடியாரின் வாழ்க்கையிறுதியில் நடைபெற்றதாக ஈடு'[31] குறிப்பிடும் நிகழ்ச்சியொன்று சிந்திக்கத்தக்கது. அரையர் கிரந்தி

28. தே. பி. 27இல். விவரம் காண்க.
29. திருவாய். 10.6 : 5
30. ஷை 9.10 : 5
31. ஷை 10.5 : 5 (பாசுரத்தின் 'ஈடு' காண்க.)

நோயால் மிகவும் துன்புற்றார். அரங்கநாதன் அவருக்குப் பரமபதம் கொடுக்கத் திருவுள்ளம் பற்றித் திருமாலை, திருப்பரிவட்டம் முதலான வரிசைகளை விட்டருளினார். அவற்றைக் கண்ட அரையர் 'நான் ஏறப்பெறுகின்றேன், நரகத்தை நகுநெஞ்சே' என்று இவ்வடியைச் சொல்லிக் கிரந்தியைப் (கட்டியைப்) பார்த்து நக்காராம்.

இந்நிலையில் தாம் பெற்ற பேறுகளை' விரல்விட்டு எண்ணத் தொடங்குகின்றார் ஆழ்வார் :

''தலைமேல தாள்இணைகள்
தாமரைக்கண் என்அம்மான்
நிலைபேரான் என்நெஞ்சத்து
எப்பொழுதும்''[32]

(மேல - மேல் உள்ளன; தாள் இணைகள் - இரண்டு திருவடிகள்.)

என்பது அவரது திருவாக்கு. ஆழ்வாரைக் கரையேற்று வதற்கு எம்பெருமான் பெரிய திருவடியாம் 'செழும் பறவை தான் ஏறி' வந்தான். அங்ஙனம் வந்தவன் தன் திருவடிகள் இரண்டையும் ஆழ்வாருடைய தலைமீது வைத்தருளு கின்றான் : ''செவ்வரி ஓடி நீண்ட அப்பெரியவாய்''[33] அழகிய திருக்கண்களால் அவரைக் குளிர நோக்குகின்றான்; நிலை பெயராமல் அவருடைய இதயத்தில் நிரந்தரமான குடியிருப்பும் கொள்ளுகின்றான். ஒரே காலத்தில் இம்மூன்று செயல்களையும் எங்ஙனம் செய்தனனோ என்று ஐயுறுவார்க்கு ''சௌபரி (என்ற ஒரு முனிவர்) ஐம்பது வடிவு கொண்டாப்போலே எம்பெருமான் ஆழ்வாரை அநுபவித்தற்குப் பல வடிவுகள் கொள்ள நின்றான்'' என்ற ஈட்டின் விளக்கம் தெளிவு பிறப்பிக்கும்.

---

32. திருவாய். 10.6:6
33. அமலனாதி-8,

அடுத்த பாசுரத்தில் எம்பெருமான் தன் மனத்தில் குடியேறியதை வலியுறுத்தி அதனைச் சான்று காட்டியும் நிறுவுகின்றார் ஆழ்வார்.

"குரைகழல்கள் குறுகினம்;நம்
கோவிந்தன் குடிகொண்டான்;
* * * * *
வாட்டாற்றான் மலரடிமேல்
விரைகுழுவு நறுந்துளவம்
மெய்ந்நின்று கமழுமே"[34]

[குரைகழல்கள் - ஒலிக்கின்ற வீரக்கழல்கள்; குறுகினம்-கிட்டப்பெற்றோம்; விரை - மணம்; குழுவு - திரண்டு)

எம்பெருமானுடைய திருவடிகள் கிட்டப்பெற்றதனால் அவன் ஆழ்வாருடைய உள்ளத்தையே நிரந்தரக் குடியிருப்பாக்கிக் கொண்டான். "உள் புகுந்து நீங்கான் அடியேனது உள்ளத்து அகம்"[35] என்று சொன்னவரன்றோ இவர்? அங்ஙனம் குடியேறினவன் தனியாகக் குடியேறவில்லை. பெரியாழ்வாரின் உள்ளத்தில்,

"அரவத்து அமளியினோடும்
அழகிய பாற்கடலோடும்
அரவிந்தப் பாவையும்தானும்
அகம்படி வந்துபுகுந்து"[36]

[அரவம்-பாம்பு; அமளி-படுக்கை; அரவிந்தப் பாவை-தாமரை மலரின்மீது இருப்பவள்; இலக்குமி]

குடியேறியதைப் போலவே, இவர் உள்ளத்திலும் திருவாய்ப்பாடியிலுள்ள ஐந்து இலட்சம் குடிகளோடும் ஆநிரைகளோடும் குடியேறினனாம். எம்பெருமான்மீது சாத்தப் பெற்றிருந்த நறுமணம் திரண்டு கமழ்கின்ற திருத்துழாய் தன் உடம்பில் நிலை நின்று நாறுவதே இதற்குச் சான்றாகும்

34. திருவாய். 10.6:7.
35. பெரிய திருவந். 68.
36. பெரியாழ். திரு. 5.2 : 10

என்கின்றார் ஆழ்வார். ''இத்தகைய திருவருளுக்குப் பாத்திரமாவதற்கு என்ன நன்மை செய்தேனோ? அறியக்கூடவில்லையே'' என்ன மயங்குகின்றார்.

> ''எந்நன்றி செய்தேனோ
> என்நெஞ்சில் திகழ்வதுவே?''[37]

[நன்றி - நன்மை; திகழ்வது - விளங்குவது]

என்பது ஆழ்வாருடைய திருவாக்கு, இங்கு ஈடு; ''பெரிய வுடையாரைப் (சடாயு) போலே தடையோடே முடித்தேனோ? (சிறிய) திருவடியைப் போலே (அநுமான்) 'கண்டேன் சீதையை!' என்று வந்தேனோ? அன்றியே தன்னுடைய ஆணையைப் பின்பற்றினவன் ஆம்படி விதித்த கருமங்களைச் செய்து போந்தேனோ? என்ன நன்மை செய்தேனாக என் நெஞ்சில் புகுந்த பின்பு பெறாப்பேறு பெற்றாப்போலே விளங்கா நின்றான்''[38]. இவ்வுரை ஆழ்வாரின் மயக்கத்தை நன்கு விளக்குகின்றதன்றோ?

''பெரியார்க்கு ஆட்பட்டக்கால் பெறாத பயன் பெறலாகும்'' என்ற ஒரு பழமொழி உண்டு. அதனைத் திருவாட்டாற்று எம்பெருமான் தம் விஷயத்தில் உண்மையாக்கி விட்டான் என்று களிப்படைகின்றார் ஆழ்வார். ''எய்தா நின்கழல் யான் எய்த ஞானக்கை தா''[39] என்றும், ''எனக்கே ஆட்செய் எக்காலத்தும்''[40] என்ன வேண்டும் என்றும், ''முகப்பே வேண்டிப் பணி கொள்வாய்''[41] என்றும் ஆழ்வார் வேண்டிக் கொண்டபடியே எம்பெருமான் ஆழ்வாரின் பிறப்பினை வேருடன் அறுத்து நித்தியமாகச் செய்யப்படுகின்ற தொண்டினையும் அவருக்கு நல்கினான். இவை இரண்டும் அவனருளால் பெற்ற பெறுதற்கரிய பேறுகளாகும்.

37. திருவாய். 10. 6: 8.
38. ஷை. 10. 6: 8 (பாசுரத்தின் 'ஈடு காண்க.)
39. ஷை. 2. 9: 2.
40. ஷை. 2. 9: 3.
41. ஷை. 8. 5: 7.

"பிரியாது ஆட்செய்என்று
பிறப்பறுத்துஆள் அறக்கொண்டான்
அரியாகி இரணியனை
ஆகம்கீண்டான் அன்று
பெரியார்க்கு ஆட்பட்டக்கால்
பெறாதபயன் பெறுமாறு
வரிவாள்வாய் அரவணைமேல்
வாட்டாற்றான் காட்டினனே"[42]

[ஆகம் - மார்பு; வரிவாள்வாய் - வரிகளையுடைய ஒளி பொருந்திய வாயினையுடைய; அரவுஅணை - பாம்புப் படுக்கை.]

என்பது பாசுரம். அரியுருக் கொண்டு இரணியனின் மார்பைப் பிளந்ததும் தமக்கு எம்பெருமான் செய்த உதவியாகவே கருதுகின்றார் ஆழ்வார். தாம் அநுபவிப்பதற்காகவே அவதாரங்கள் அமைந்தன என்பது இதன் கருத்தாகும். ஆகம் கீண்டு உதவியது 'அன்று'; ஆட்கொண்டது 'இன்று' என்பது பெற வைத்தது. ஆகவே 'அன்றும் இன்றும், தமக்கே செய்ததாகத் தேறித் தெளிகின்றார் ஆழ்வார்.

தன் திருவடிகளைக் காட்டிக் கடுநரகத்தில் (இவ்வுலக வாழ்க்கையில்) மீண்டும் புகாமல் தடுத்து வாட்டாற்று எம்பெருமான்மீது பாடப்பெற்ற பலனைச் சொல்லு, கின்றார் ஆழ்வார்.

"பாட்டாய தமிழ்மாலை
ஆயிரத்துள் இப்பத்தும்
கேட்டுஆரார் வானவர்கள்
செவிக்கினிய செஞ்சொல்லே"[43]
(வானவர் - நித்திய சூரிகள்)

என்பது பயனைத் தலைக்கட்டும் பாசுரப்பகுதி. திருமாலையைப் பாடித் தலைக்கட்டிய தொண்டரடிப் பொடியாழ்வார் முடிவில் தன்கவிதையை "இளையபுன்

42. திருவாய் 10.6: 10
43. டிை. 10. 6: 11.

கவி''[44] என்றார்: இவரோ அங்ஙனம் பேசாமல் 'செவிக்கினிய செஞ்சொல்' என்கின்றார். இப்பாசுரங்கள் இவரையே உளுக்கி விடுகின்றன. ''என் நாவில் இன்கவி''[45] என்று சொல்லியவரன்றோ இவர்? நிலவுலகிலிருந்து செல்லும் முக்தர்களை நோக்கி நித்தியசூரிகள் 'நிலவுலகில் சிறப்பான செய்தி உண்டா?' என்று வினவ, அவர்கள் 'திருக்குருகூரில் அவதரித்த ஆழ்வார் என்பார் ஒருவர் தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல் மாலைகள் தொடுத்தார்; அவற்றைக் கற்ற பெருமையாலே இங்கு வந்தோம்; இதுவே சிறப்பான செய்தி' என்பார்கள். அவர்கள் யாதாவது ஒரு திருவாய் மொழியைப் பாடுமாறு கேட்க இவர்கள் வாட்டாற்று எம்பெருமான் மீதுள்ள திருவாய்மொழியைப் பாடுவார்கள். கேட்டவர்கள் 'இன்னும் சொல்க, இன்னும் சொல்க என்பார்களேயன்றி, கேட்ட அளவில் மனநிறைவு கொள்ளார் கள். இங்ஙனம் கேட்டபோதே இனிமை பயப்பதற்கு ''நினை வும் சொல்லும் ஒருமைப்பட்டிருக்கையாலே'' என்பது 'ஈடு' குறிக்கும் காரணமாகும். ''சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவபிரானையே''[46] என்று கூறிய வரன்றோ ஆழ்வார்?

இந்தத் திவ்விய தேசத்தின் திருக்குணத்தை **ஆசாரிய ஹிருதயம்,**

'மோட்ச ஸ்தானத்தில் பிரணத பாரதந்த்ர்யம் வளம் மிக்க நதியிலே கரைபுரளும்'[47]

[மோட்சஸ்தானம் - மோட்சம் கொடுப்பதில்; பிரணதர்- அடியார்கள்; வளம் மிக்க நதி - வாட்டாறு]

என்று பேசும் அடியார்க்கு அந்தமிழ்ப் பேரின்ப வீடு அருளும் போது, அவர்கட்கு வசப்பட்டுக் கொடுக்கும் பாரதந்திரிய குணம் விளங்கும் என்பது இச்சூத்திரத்தின் கருத்தாகும்.

---

44. திருமாலை. 45.
45. திருவாய். 3. 9: 1.
46. ஷை. 6. 5: 11.

ஆழ்வார் அருளிய திருவாய்மொழியைப் பாடி அநுபவித்த நிலையில் திருக்கோயில் பிரசாதத்தைப் பெற்று நம் இருப்பிடம் திரும்புகின்றோம். திவ்விய தேச யாத்திரையில் பல இடங்களில் அதிகமாக நடக்கவேண்டி வரும்; கால நிலைகளாலும் உடல்நிலைக் கோளாறுகளாலும் நடப்பது சில சமயம் பெருந்துன்பமாகத் தோன்றவே செய்யும். என்றாலும் அயோத்தி அண்ணல் நடந்ததைவிட நாம் அதிகமாக நடந்துவிடவில்லை என்று நினைக்கவும் தோன்றும். இந்நிலையில்,

''மாலை முடிநீத்து
　மலர்ப்பொன் அடிநோவப்
பாலை·வனம்புகுந்தாய்
　பண்டுஎன்று சாலவும்நான்
கேட்டால் துயிலேன்காண்
　கேசவனே! பாம்புஅணைமேல்
வாட்டாற்றுக் கண்துயில்கொள்
　வாய்''[48]

என்ற திவ்விய கவியின் பாடல் நினைவிற்கு வருகின்றது. அதனைச் சிந்தித்த நிலையில் நம் நடைத்துன்பம் நீங்க மகிழ்ச்சியுடன் நம் இருப்பிடத்தை நண்ணி இளைப்பாறுகின்றோம்.

47. ஆசா. ஹிரு. 184
48. நாற். திரு. அந்தாதி 68

## 3. அனந்தபுரத்து அண்ணலார்

அண்மையில் திருமணம் செய்து கொண்ட நங்கை யொருத்திக்குத் தான் பிறந்த இல்லத்தை விட்டுத் தன் கணவன் இல்லத்தை அடையும் நாள் நெருங்கி வருகின்றது. சில நாட்கள் முன்பிருந்தே அவள் தன்னுடன் நெருங்கிப் பழகிய நண்பர்களின் வீடுகள்தோறும் சென்று விடைபெறுங் காட்சியை இன்றும் நாம் காண்கின்றோம். அங்ஙனமே நம்மாழ்வாரும் தான் பரமபதம் செல்லும் நாள் அண்மையி லுள்ளது என்பதையுணர்ந்து பல திவ்விய தேசங்களில் புகுந்து ஆங்காங்குள்ள எம்பெருமான்களிடம் விடைபெறு கின்றார். திருமோகூர் எம்பெருமானைச் சரணம் அடைந்து[1] விடைபெற்ற ஆழ்வார் அனந்தபுரம் செல்லத் திருவுள்ளங் கொண்டு புறப்படுகின்றார். அந்த அனந்தபுரம் செல்லு கின்றோம் இன்று நாம், நாகர்கோவிலிலிருந்து பேருந்தில் புறப்படுகின்றோம். திருநாட்டிற்குச் செல்லும் ஆன்மா கதிரவனிடமுள்ள ஒரு துவாரத்தில் நுழைந்து செல்வதைப் போலவே மலை நாட்டிற்குச் செல்லும் நாமும் மலை நாட்டின் நுழைவாயில் போன்றிருக்கும் நாகர்கோவிலைக் கடந்து செல்லுகின்றோம்.

பேருந்து திருவனந்தபுரத்தை நோக்கிச் செல்லுங்கால் எம்மருங்கும் அடர்ந்த தோப்புக்கள், ஓங்கி உயர்ந்த மலைக் குன்றுகள், பாங்குடன் திகழும் மணல் மேடுகள் பூங் கொத்துகள் குலாவும் குளிர் சோலைகள், குறுக்கும் நெடுக்கு மாக வலைப்பின்னல் போன்றுள்ள பாய்ந்து செல்லும் சிற்றாறுகள், கால்வாய்கள் இவற்றைக் காண்கிறோம்.

1. திருவாய் 10. 1.

"ஓங்கு மரன் ஓங்கிமலை
ஓங்கிமணல் ஓங்கிப்
பூங்குலை குலாவுகுளிர்
சோலைபுடை விம்மித்
தூங்குதிரை யாறுதவழ்
சூழலது ஓர்குன்று"[2]

[ஓங்குமரன் - உயர்ந்தமரம்; ஓங்கி - உயரப் பெற்ற; பூங்குலை - பூங்கொத்துக்கள்; குலாவும் - விளங்குகின்ற; புடை விம்மி - பக்கங்களில் விளங்கப்பெற்ற; தூங்குதிரை - மிக்க அலைகள்; சூழல் - சுற்றிடம்]

என்று கம்பன் காட்டும் சூழ்நிலை நமது நினைவிற்கு வருகின்றது. அகத்திய முனிவர் ஆசியுடன் வில்லும் வாளும் அம்பும் பெற்றுப் பஞ்சவடியை நோக்கி வரும் இராமன் பஞ்சவடி அமைந்துள்ள சூழ்நிலையைக் காட்டுவது இது. நாகர் கோவிலிலிருந்து சுமார் ஐம்பது கல் தொலைவிலுள்ள திருவனந்தபுரம் வரையிலும் இதே சூழ்நிலைதான். சில இடங்களில் பகலவன் கதிர்களும் உள்புகா நிலை. இக்காட்சிகளைக் கண்டுகளித்த வண்ணம் திருவனந்தபுரத்தை அடைகின்றோம்.

திருவனந்தபுரமும் ஓர் அழகிய சோலை சூழ்ந்த இடத்தில்தான் அமைந்துள்ளது. "குருத்து சேர் செருந்தி புன்னை, மன்று அலர் பொழில் அனந்தபுரநகர்"[3] "பெரிய நீர் வேலை சூழ்ந்து, வாசமே கமழும் சோலை வயல் அணி அனந்தபுரம்"[4], "செறி பொழில் அனந்தபுரம்"[5] என்று நம்மாழ்வார் இத்திருப்பதியைச் சிறப்பிக்கின்றார். கிட்டத் தட்ட இதே நிலையினை இன்றும் காணலாம். அத்திருப்பதி

2. கம்பரா - ஆரணி - அகத்திய - 57.
3. திருவாய் 10. 2 : 2
4. ஷை 10.2 : 4.
5. ஷை 10. 2 : 5, 8.

"எழில் அணி அனந்தபுரமாகவே"[6] "மடைத்தலை வாளை பாயும் வயலணி அனந்தபுரமாகவே"[7] காட்சி அளிப்பதை நேரில் செல்வோர் கண்டு களிக்கலாம். இந்த அழகிய திருப்பதியை நம்மாழ்வார் மட்டிலுமே மங்களாசாசனம் செய்துள்ளார்.[8]

அந்த மங்களாசாசனப் பாசுரங்களை மனத்தில் சிந்தித்த வண்ணம் திருவனந்தபுரத்தை அடைகின்றோம். உண்மையிலேயே நம்மாழ்வார் கூறுகிறபடியே "குன்று நேர் மாடங்களையுடைய" அந்தத் திருப்பதியைக் காண்கின்றோம். நவீன நாகரிகத்தை யொட்டிப் பெரிய பெரிய மரங்களையெல்லாம் வெட்டி அவ்விடங்களில் பெரிய கட்டடங்களை எழுப்பினாலும் திருவனந்தபுரத்தைப் பொறுத்த மட்டிலும் தோப்புகளுக்கும் சோலைகட்கும் குறைவில்லை. இயற்கைச் சூழ்நிலையும் செயற்கைச் சூழ்நிலையும் ஒன்றையொன்று அணி செய்து கொண்டுள்ள காட்சியை எம்மருங்கும் கண்டு களிக்கின்றோம்.

பேருந்து ஊரினுள் நுழையும்போது முதற்பாசுரம் நம் நினைவிற்கு வருகின்றது.

'கெடும்இடர் ஆயஎல்லாம்
கேசவா! என்ன; நாளும்
கொடுவினை செய்யும்கூற்றின்
தமர்களும் குறுககில்லார்;
விடம்உடை அரவில்பள்ளி
விரும்பினான் சுரும்பு அலற்றும்
தடம்உடை வயல்அனந்த
புரநகர் புகுதும்இன்றே"[10]

6. திருவாய் 10 2 :8
7. ஷை 10.2 : 7
8. ஷை 10.2.
10. ஷை 10.2 : 1

[இடர் - துன்பம்; நாளும் - நிரந்தரமாக; கூற்றின் தமர் - யமபடர்கள்; குறுக - அணுக; அரவு - பாம்பு; சுரும்பு - வண்டுகள்; அலற்றும் - ஆரவாரிக்கும்; தடம் - குளம்].

பாசுரத்தை வாய்விட்டுச் சொல்லிக்கொண்டே நகரினுள் நுழைகின்றோம். ஆதிசேடன்மீது திருக்கண் வளரும் எம் பெருமான்—அனந்த சயனன்—விரும்பி எழுந்தருளியிருக்கும் நகர் அனந்தபுரம். 'கேசவா' என்ற மூன்றெழுத்துகளைச் சொன்ன அளவிலே இடர் என்று பேர்பெற்றவை எல்லாம் கெடும். "போய பிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் தூசு ஆகும்"[11] என்று ஆண்டாள் கூறியவாறு, பிராரப்த கருமங்களும் (நுகர்வினை) சஞ்சித கருமங்களும், (பழவினை) நெருப்பிலிட்ட பஞ்சுபோல் நசித்துப் போய் விடும். "அவன் ஒரு விரோதியைப் போக்கினபடியைச் சொல்ல விரோதி என்று பேர் பெற்றவை எல்லாம் நசிக்கும்"[12] என்பது ஈடு. கேசவ நாமத்தை வாய்விட்டுச் சொல்வதே கேசவனை அர்ச்சித்ததாகும் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

இந்த உலகில் தீச்செயலை மேற்கொள்ள நினைப்பவர் சிறிதும் தாமதியாது உடனே செய்து முடிப்பதும், நற்செயலை மேற்கொள்ள நினைப்பவர் 'பார்ப்போம், பார்ப்போம்' என்று காலத்தை நீட்டிக் கொண்டே போவதும் இயல்பாக இருப்பதை இன்றும் நாம் காணலாம். அனந்தபுரம் போக வேண்டும் என்ற நினைப்புத் தோன்றிய அன்றே போக வேண்டும் என்பது ஆழ்வாருடைய விருப்பம். ஆகவே தான், "புகுதும் இன்றே" என்று கூறினார். இதையே மேலும் "இன்று போய்ப் புகுதிராகில்"[13] என்று அடுத்த பாசுரத்திலும் வற்புறுத்தி விரைவு படுத்துகின்றார். அப்படி உடனே

11. திருப்பாவை 15.
12. திருவாய் 10. 2 : 1 ('ஈடு' காண்க.)
13. ஷை 10.2:2

புறப்பட்டுவிட்டால் ஏழேழ் பிறப்பிலும் எந்த விதமான பொல்லாங்கும் நேரிடாது என்பது அவர் நினைப்பு.

"நம்மன்போலே வீழ்த்தமுக்கும்
நாட்டிலுள்ள பாவம் எல்லாம்
சும்மெனாதே கைவிட்டோடித்
தூறுகள் பாய்ந்தனவே"[14]

[நம்மன் போல் - பூதப் பிசாசங்கள் போல்; வீழ்த்து - கீழே தள்ளி; சும்மெனாது - மூச்சுவிடவும் மாட்டாமல்; தூறுகள் - புதர்கள்.]

என்று பெரியாழ்வார் குறிப்பிடுவதுபோல் தாமாகவே அகன்று விடும்.

"இன்றுபோய்ப் புகுதிராகில்
எழுவையும் ஏதம் சாரா".[15]

[ஏதம் - பொல்லாங்கு]

என்பது ஆழ்வாருடைய திருவாக்கு. இப்பிறப்பில் மட்டு மல்ல, இன்னும் வருகின்ற ஏழ்பிறப்பில் நேரிடும் துன்பங் களும், கடந்த ஏழ் பிறப்பில் செய்த தீவினைகளும் அகன்று போய்விடும். மேலும் இக்கருத்தையே ஆழ்வார்;

"சிக்கெனப் புகுதிராகில்
தீருநோய் வினைகள்எல்லாம்
திண்ணம்நாம் அறியச்சொன்னோம்"[16]

[சிக்கென - விரைவாக; திண்ணம் - உறுதி]

என்று உறுதிப்படுத்திப் பேசுவர். துக்கங்களும் துக்கத்திற்கும் காரணமானவைகளும் அழியும்; இதை அநுபவத்தில் கண்ட ஆழ்வார் இந்த இயல்பினை அறியாத ஏனையோருக்கும் நெஞ்சில் படும்படி உரைக்கின்றார்.

---

14. பெரியாழ் திரு. 5. 4 : 3
15. திருவாய் 10. 2 : 2
16. ஷை 10. 2 : 3

அடுத்து, இத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானை அடையாளம் காட்டி அவனது திருநாமத்தை உச்சரிப்பதால் உண்டாகும் பலனைப் பேசுகின்றார். அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் கருடனை வாகனமாகக் கொண்டவன்; அவனது கொடியும் கருடனேயாகும். இதனை "ஊரும்புள்; கொடியும் அஃதே"[17] என்கின்றார். தவிர, அவன் பிரளயத்தில் இவ்வுலகினைத் தன் வயிற்றில் அடக்கிக் காப்பாற்றியவன். இந்த எம்பெருமானோ,

"ஓரா யிரமாய்
உலகுஏழ் அளிக்கும்
பேராயிரம் கொண்டது
ஓர்பீடு உடையன்"[18]

என்றவாறு எண்ணற்ற திருப்பெயர்களை யுடையவன். 'ஆயிரம்' என்பது கணித எண்ணிக்கை யன்று; எண்ணற்றவை என்பதே பொருள். எல்லா ஆழ்வார்களுமே 'பேராயிரமுடையபெம்மான்' என்று குறிப்பிட்டுள்ளனர். கம்ப நாடனும் "ஆயிரம் பெயருடைய அமலன்"[19] என்று சுட்டியுரைத்துள்ளான். இந்தப் பெயர்களுள் ஏதேனும் வாய்க்கு வந்த ஒரு திருநாமத்தைப் பேசுமாறு பணிக்கின்றார் ஆழ்வார்.

"பேரும்ஓர் ஆயிரத்துள்
ஒன்றுநீர் பேசுமினே."[20]

என்பது அவருடைய திருவாக்கு. அந்தப் பெயரையும்கூசாமல் பேச வேண்டுமாம். "பேசுமின் கூசமின்றி"[21] என்று பின்னும் வற்புறுத்துகின்றார். அதனால் ஏற்படும் பலனையும்,

17. திருவாய் 10. 2 : 3
18. ,, 9. 3 : 1
19. கம்பரா. அயோத். சித்திர. 1
20. திருவாய் 10. 2 : 3
21. ஷை 10. 2: 4

''மாயன்நாமம்
ஒன்றுவோர் ஆயிரமாம்;
உள்ளுவார்க்கு உம்பர்ஊரே''[22]
(உள்ளுவார் - நினைப்பார்; உம்பர்ஊர் - பரமபதம்)

என்று குறிப்பிடுகின்றார். ஒரு திருநாமத்தை உரைத்தாலும் அஃது ஆயிரமாகிச் செயல் புரியும் பெருமையுடையது. அதை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்தால்[23] திருவனந்த புரமே பரமபதமாகிவிடும். வைகுந்தத்தில் நித்திய சூரிகள் திருவோலக்கம் கொடுக்க அவர்கள் நடுவே இருக்கக் கூடிய எம்பெருமான் தாழ்ந்தார்க்கு முகம் கொடுக்கைக்காக வன்றோ இந்நகரை விரும்பி எழுந்தருளியிருப்பது? அவன் திருப்பெயரைச் சிந்திப்பார் பரமபத்தை அடைவது உறுதி. அல்லது 'இராமன் இருக்கும் இடமே அயோத்தி' என்றாற் போல, அவன் விரும்பியுறையும் இடமே பரமபதம் அன்றோ? அவன் உறைவதனால்தானே பரமபதத்தையும் நாம் விரும்புவது? இதனை வற்புறுத்துவார்போல்,

''செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம்
அணுகுவார் அமரர்ஆவார்''[24]
(அணுகுவார் - கிட்டுபவர்; அமரர் - நித்திய சூரிகள்)

என்று மேலும் பன்னியுரைக்கின்றார். 'திண்ணம் நாம் அறியச் சொன்னோம்' என்று அதே பாசுரத்தில் தம் அநுபவ மாகவும் பேசுகின்றார் ஆழ்வார்.

வைணவ சமயத்தின் முடிந்த முடிவான குறிக்கோள் எம்பெருமானுக்கு அடிமை செய்வதேயாகும்; அஃதாவது, ஏதோ ஒரு விதத்தில் அவனுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும். இதனையே எல்லா ஆழ்வார்களும் வற்புறுத்தி

22. திருவாய்10. 2: 2
23. திருப்பாவை - 5
24. திருவாய். 10. 2; 5

யுள்ளனர். முக்தி அடைந்த பிறகு பரமபதத்தில் எம் பெருமானுக்குச் செய்யும் கைங்கரியத்தை அர்ச்சாவதத்தில் செய்யும் வாய்ப்பாகப் பெறுவதைக் கிடைத்தற்கரிய பேறாகக் கருதுவர் வைணவப் பெரியார்கள். திருவனந்தபுரத்து அண்ணலாருக்கு இத்தகைய கைங்கரியத்தைப் புரிய வேண்டும் என்று நம்மாழ்வார் பேரவாக் கொள்ளுகின்றார். திருவனந்தபுரம் நறுமணம் கமழும் சோலையினுள் அமைந் துள்ளது. அந்த நறுமணம் புறம்பு போகாதபடி மதில் இட்டாற்போன்று கடலால் சூழப்பட்டுள்ளது'அதனால் நறு மணம் வெளிச் செல்லாது விஞ்சி நிற்கின்றது. இப்படிப்பட்ட சோலைகளையுடைய வயல்கள் நகரை அணிசெய்கின்றன.

''பெரியநீர் வேலைசூழ்ந்து
வாசமே கமழும் சோலை
வயலணி அனந்தபுரம்''[25]

(வேலை - கடல்)

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. அடியார்களைக் காக்கும் பொருட்டு எம்பெருமான் பரமபதத்தைத் துறந்து இந்நகரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு எழுந்தருளியுள்ளான்; இந்நகரில் 'நேசஞ் செய்து உறைகின்றான்'. அவனுக்கு முறை தவறாது—அஃதாவது எம் பெருமான் சேஷி; இவ்வுயிர்கள் அனைத்தும் அவனுக்குச் சேஷம் என்ற நியதி தவறாமல்— மலர் முதலியவற்றை அவன் திருவடிகளில் பரிமாறிக் கைங்கரியம் செய்பவர்கள் உண்மையிலேயே புண்ணியம் செய்தவர்கள் ஆவர். இதனை,

''நெறிமையால் மலர்கள் தூவி
பூசனை செய்கின்றார்கள்
புண்ணியம் செய்தவாறே''[26]

(பூசனை - ஆராதனை.)

என்று கூறுவர் ஆழ்வார்.

---

25. திருவாய் 10.2.4
26. ,, 10.2; 4.

கைங்கரியம் என்ன என்பதை அடுத்து விளக்குகின்றார் ஆழ்வார். பக்தியுடன் தூய நீரையும் நறு மலர்களையும் கொண்டு அருச்சித்து எம்பெருமானுடைய திருப்பெயரை நினைத்தல் வேண்டும். அதனால் பெறும் பலன்தான் என்ன? அது சாதரண பலன் அன்று. இந்தக் கொடிய உலகில் பிறந்த பிறப்பிற்கே முற்றுப்புள்ளி வைத்துவிடும்.

"புண்ணியம் செய்துநல்ல
புனலொடு மலர்கள்தூவி
எண்ணுமின் எந்தைநாமம்
இப்பிறப்(பு) அறுக்கும்; அப்பால்"[27]

(புண்ணியம் - பக்தி; புனல் - நீர்; பிறப்பு - சம்சாரம்)

என்பது இக்கருத்தை விளக்கும் ஆழ்வாருடைய பாசுரப் பகுதி. 'எந்தை நாமம் எண்ணுமின்' என்பதற்கு ஈடு; "இடறினவன் 'அம்மே' என்னுமாறுபோல திருநாமம் சொல்லுவதற்கு ஒரு தகுதியைக் தேடிக்கொள்ள வேண்டா. நஞ்சீயர் பட்டரைத் 'திருநாமம் சொல்லும்போது பக்தி யுடையவனாய்க் கொண்டு சொல்ல வேண்டுமோ?' என்று கேட்க, அதற்கு அவர், 'கங்கையிலே முழுகப் போமவனுக்கு' வேறு ஓர் உவர்க்குழியிலே முழுகிப்போக வேண்டுமோ? மேல் உண்டான நன்மையைத் தருகிற இது தகுதியையும் தரமாட்டாதோ? என்று அருளிச் செய்தாராம். திருநாமம் சொல்லுகைக்கு ருசியே[28] ஆயிற்று வேண்டுவது; அவர்களே அதிகாரிகள்". இப்பகுதி நன்கு சுவைக்கத் தக்கது.

இந்தக் கைங்கரியத்தையே மேலும் இரண்டு பாசுரங்களில் வற்புறுத்துகின்றார். தூபம், நறுமணம் மிக்க மலர்கள்,

27. திருவாய் 10. 2: 5
28. ருசி-பாவச் செயல்களையோ, புண்ணியச் செயல் களையோ அறிந்தே செய்வதற்குக் காரணமாயுள்ள சுவை.

இவற்றைத் தேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நம்மையெல்லாம் தூண்டுகின்றார் ஆழ்வார்.

"தூமம்நல் விரைமலர்கள்
துவள்அற ஆய்ந்துகொண்டு
வாமனன் அடிக்கென்றுஏத்த
மாய்ந்துஅறும் வினைகள்தாமே"[29]

(தூமம் - தூபம்; விரை - மணம்; துவள் - குற்றம்)
என்றும்,

"சாந்தொடு விளக்கம்தூபம்
தாமரை மலர்கள் நல்ல
ஆய்ந்துகொண்டு ஏத்தவல்லார்
அந்தமில் புகழினாரே"[30]

(சாந்து - சந்தனம்; ஆய்ந்து - தேர்ந்து; ஏத்துதல் - துதித்தல்)
என்றும் அவர் கூறுவதைக் காண்மின். இங்ஙனம் அந்த எம்பெருமானைத் துதித்தவுடனே நம்முடைய வினைகள் யாவும் தொலைந்து போகும்; அழிவில்லாத புகழும் நம்மை வந்தடையும். நாமும் "விண்ணுளாரிலும் சீரியர்"[31] ஆவோம்.

மேற் சொன்னவாறு மலர்கள் முதலியவற்றுடன் எம் பெருமானுக்கு அடிமை செய்ய வேண்டும் என்பதில்லை. எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலின் திருவாசலைக் கோலமிடும் கைங்கரியத்தை மேற்கொண்டாலும் போதும் என்கின்றார் ஆழ்வார்.

"கடைத்தலை சீயக்கப்பெற்றால்
கடுவினை களையலாம்"[32]

(கடைத்தலை - திருமுன்றில்; சீய்த்தல் - மெழுகிக் கோலமிடல்.)

---

29. திருவாய் 10. 2: 9. 30. ஷை 10. 2: 10.
31. திருவிருத். 79 32. திருவாய் 10.2:7

என்று கூறுவது காண்க. எம்பெருமானுக்கு ஏதோ ஒரு வகையில் எந்த விதமான அடிமைத் தொழில் புரியினும் கொடிய பாவங்கள் யாவும் மாய்ந்தொழிந்து போகும் என்பது ஆழ்வாருடைய கருத்து.

"பண்டைநா ளாலே நின்திரு வருளும்
பங்கயத் தாள்திரு வருளும்
கொண்டு,நின் கோயில் சீய்த்துப் பல்படிகால்
குடிகுடி வழிவந்தாட் செய்யும்
தொண்டர்"[33]

(பங்கயத்தாள் - பெரிய பிராட்டியார்; குடிகுடி வழி - அநாதி காலமாக; ஆள் செய்தல் - அடிமை செய்தல்.)
என்ற பாசுரப் பகுதியும் ஈண்டு சிந்திக்கத் தக்கது.

திருவனந்தபுரம் என்ற திவ்விய தேசம் சாதாரண மானதன்று. அது 'அயர்வறும் அமரர்களும்' வந்து அடிமை செய்யும் இடமாதலின் திருநாட்டைக் காட்டிலும் ஏற்றம் பெற்றதாகும். அமரர்களின் தலைவரான சேனை முதலியார் வந்து வழிபடுதலால் அவருடன் நித்திய சூரிகளும் வந்து அந்தரங்கமான பணி விடை செய்கின்றனர். ஆகவே 'நாமும் அங்கு சென்று கைங்கரிய பரர்களாக வேண்டும்' என்று நம்மையெல்லாம் தூண்டுகின்றார் ஆழ்வார்.

"அமரராய்த் திரிகின்றார்கட்(கு)
ஆதிசேர் அனந்தபுரத்து
அமரர்கோன் அர்ச்சிக்கின்று; அங்(கு)
அகப்பணி செய்வர்விண்ணோர்
நமர்களோ! சொல்லக்கேண்மின்;
நாமும்போய் நணுகவேண்டும்"[34]

(அமரர் - தேவர்; அமரர்கோன் - நித்திய சூரிகளின் தலைவர் சேனை முதலியார்; அர்ச்சிக்கின்று - அருச்சிக்

33. திருவாய் 9.2:1.
34. ,, 10.2:6.

கின்றார் (மலைநாட்டு வழக்கு); அகப்பணி - அந்தரங்கத் தொண்டு; விண்ணோர் - நித்தியசூரிகள்; நமர் - நம்முடையவர்; நணுக - அடைய, சேர.)

என்று கூறும் அவரது திருவாக்கைக் காண்க. நித்திய சூரிகளும், நான்முகன் முதலிய தேவர்களும், நம்போலியரும் வழிபடுவதற்கென்றே அந்த எம்பெருமான் மூன்று திருவாயில்களை அமைத்துக் கொண்டு சேவை சாதிக்கின்றான். முக்தர்கள் திருமுகத்திற்கு நேராகவுள்ள வாயிலின் முன் நின்றும், அரன் அயன் முதலிய தேவர்கள் திருநாபிக்கு நேராகவுள்ள வாயிலின் முன் நின்றும், நம்போலியர் கிடைத்தற்கரிய திருவடிக்கு நேரேயுள்ள வாயிலின் முன் நின்றும் வழிபடல் வேண்டும். இன்றும் அத்தகைய அமைப்பினைக் கருவறையில் காணலாம்.

இந்தத் திவ்வியதேசத்தின் திருக்குணத்தை,

'ஸ்ஸைன்ய புத்ர சிஷ்ய ஸாத்யசித்த பூசிர அர்ச்சனத்துக்கு, முகநாபி பாதங்களைத் துவாரத்ரயத்தாலே காட்டும் ஸாம்யம் அநந்த சயனத்திலே. வியக்தம்'35

[துவாரத்ரயம் - மூன்று திருவாசல்கள்; புத்ரன் - பிரமன் சிஷ்யர் - ஆழ்வாருடைய சிஷ்யர்கள்; பூசுரர் - நிலத்தேவர்; வியக்தம் - தெளிவு]

என்று கூறும் ஆசாரியஹிருதயம். இத்திருக்குணம் 'சாம்யம்' என்பதாகும். சாம்யம் - வேறுபாடு கருதாது ஒரே தன்மையாகப் பார்க்கும் குணம். இச்சூத்திரத்தில் திருமுகம்,

---

35. ஆசா. ஹிரு-சூத்திரம் 183. துவாரத்திரயம்-மூன்று திருவாயில்கள்.

36. திருவாய். 10.2:6, 8. (இதன் விளக்கத்தை 'ஆசா ஹிரு.. பகுதி 3. 4' (பக் 439) காண்க. (சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு - 1965.)

திருநாபி, திருவடி என்னும் இவற்றை மூன்று திருவாசல்களாலே சேவிக்க வேண்டும் என்பது தெளிவுபடுத்தப் பெற்றுள்ளது.

திருவனந்தபுரத்தில் அரவணையின்மீது பள்ளி கொண்டுள்ள எம்பெருமானைக் காணப்புறப்படுமாறு நம்மையெல்லாம் 'சேரவாரும் செகத்தீரே' என்பது போன்ற குரல் கொடுத்து அழைகின்றார் ஆழ்வார்.

> ''படமுடை அரவில்பள்ளி
> பயின்றவன் பாதம்காண
> நடமினோ நமர்கள் உள்ளீர்!
> நாம்உமக்(கு) அறியச்சொன்னோம்''[37]

[அரவு - பாம்பு; காண - சேவிக்க; நடமின் - நடவுங்கள்]

என்பது ஆழ்வாரின் குரல். இப்பாசுரப்பகுதியைப் பற்றி ஒரு வரலாறு உண்டு. மணக்கால் நம்பி ஆளவந்தாருக்கு எல்லாச் சாத்திரங்களையும் உபதேசித்து, யோக ரகசியத்தை மட்டிலும் குருகைக் காவலப்பரிடம் பெறுமாறு பணித்தனர். ஆளவந்தார் பின்னர் அவர்பாற் சென்று கேட்டுக்கொள்வதாக எண்ணியிருந்தார். பின்னர் ஒருநாள் அவர் குருகைக் காவலப்பரை அண்மிக் கேட்டதற்கு அவரும் தமது நிரியாண காலத்தில் சொல்லுவதாக எழுதித் தந்து அந்த நாளையும் குறிப்பிட்டிருந்தனர். இஃதிங்ஙனம் இருக்கத் திருவரங்கத்தில் திருவாய்மொழி - திருமொழித் திருநாள் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. திருவரங்கப் பெருமாளரையர் ஆனந்தமாகத் திருவாய்மொழியை ஓதிக் கொண்டிருந்தார். குழுவில் இருந்த ஆளவந்தாரின் திருமுகத்தை நோக்கிக் கொண்டே மேற்கண்ட பாசுரத்தை அநுசந்தித்தார். ஆளவந்தாரும் இது திருவரங்கநாதன் திருவருள் என்று எண்ணி அப்பொழுதே அளவற்ற அடியார் குழுவுடன் திருவனந்தபுரம் சென்று அனந்தபதுமநாபனைச் சேவித்து

37. திருவாய் 10.2 : 8.

அப்பதியில் எழுந்தருளியிருந்தார். இந்நிலையில் குருகைக் காவலப்பர் எழுதித் தந்த திருக்குறிப்பைப் பார்க்க அந்நாளே அவர் குறிப்பிட்ட நாளாக இருந்தது. ''ஐயோ, நாம் எங்கும் நினைத்தவுடன் சென்று சேரும் ஆற்றலுடைய பெரிய திரு வடியும் அல்லோம்; சிறிய திருவடியும் அல்லோம். இவ்விடத் தினின்றும் குருகைக் காவலப்பர் எழுந்தருளியிருக்கும் இடத்தை எங்ஙனம் அடைவது?'' என்று வருந்தினராம்.

இக்கருத்துகள் எல்லாம் திருவனந்தபுரத்தை அடையும் நம் மனத்தில் குமிழியிட்டுக் கொண்டிருக்க நாம் செல்லும் பேருந்தும் நிலையத்தை அடைகின்றது. திருவனந்தபுரத்தில் இருப்பூர்தி நிலையமும் பேருந்து நிலையமும் எதிரெதிராக மிக அருகிலுள்ளன. அந்தப் பக்கத்திலேயே உணவு விடுதி களும் தங்கும் விடுதிகளும் உள்ளன. நல்ல விடுதியில் தங்க இடம் அமர்த்திக்கொண்டு அங்குத் தங்குகின்றோம். அங்கிருந்து திருக்கோயில் அரை மைல் தொலைவில் உள்ளது. நடந்தே சென்று வரலாம். அதிகாலையில் நன்னீராடித் தூய ஆடையை உடுத்திக் கொண்டு திருக்கோயிலை நோக்கி நடக்கின்றோம். நம்மாழ்வார் பாசுரங்கள் யாவும் நம்மனத்தே எழுந்தவண்ணம் உள்ளன.

திருக்கோயில் திருவாட்டாற்றுத் திருக்கோயில் போலவே சற்று உயரமான இடத்தில் அமைந்துள்ளது. பல படிகள் ஏறியே கோயிலினுள் நுழைதல் வேண்டும். கோயிலுக்கருகில் சந்நிதித் தெருவின் ஒரு புறமாக அமைந்துள்ள திருக் குளத்தில் கைகால்களைத் தூய்மை செய்து கொண்டு திருக் கோயிலுனுள் நுழைகின்றோம். கோயின் நாற்புறமும் கனமான கோட்டைச் சுவர்கள் சூழ்ந்துள்ளன. திருக் கோயிலுக் கருகிலேயே திருவாங்கூர் அரசரின் அரண்மனை யும் உள்ளது. அவர் அரண்மனையிலிருந்து திருக்கோயிலுக்கு வந்து போவதற்குத் தனிச் சுரங்க வழி உண்டு. அதையும் காண்கின்றோம்.

கோபுரத்திலும், மண்டபங்களிலும், தூண்களிலும் பல்வேறு சிற்பங்களைக் காணலாம். இவை யாவும் தென்னிந்தியச் சிற்பங்களே. நுழைவாயிலிலுள்ள இராஜ கோபுரம் சற்றேறக் குறைய 100 அடி உயரம் உள்ளது; ஏழு நிலைகளைக் கொண்டது. கம்பீரமாக நின்று தொலை விலுள்ளவர்களையும் ஈர்க்குந்தன்மையது. கேரள நாட்டி லேயே இத்திருப்பதியின் திருக்கோயிலில் மட்டிலுமே தமிழகச் சிற்பங்களைக் காணலாம். இக்கோபுரத்தின் அடிக்கல் நாட்டு விழா கி. பி. 1566இல் நடைபெற்றது; கோபுரத் திருப்பணி நிறைவுபெற்றது கி. பி. 1604இல். கோயிலினுள் காணப்பெறும் பொன் வேய்ந்த கொடிமரம் கி.பி. 1565இல் நிறுவப்பெற்றதாக அறியக் கிடக்கின்றது. திருவாட்டாற்றுக் கோயிலுள்ளது போலவே கோயிலைச் சுற்றிய பிராகாரத்தில் திருச்சுற்றில் ஆயிரக்கணக்கான பித்தளை விளக்குகள் பொருத்தப் பெற்றுள்ளன. திருவிழாக் காலங்களில் இவை ஏற்றப்பெற்று விழாவிற்குப் பொலிவினை யும் கவர்ச்சியினையும் நல்கும்.

கோயில் உள்சுற்றில் (உட்பிராகாரம்) கண்ணன் (கிருட்டிணன்), ஐயப்பன், நரசிம்மன், சிவபெருமான், ஆனை முகன், இலக்குவனுடன் சேர்ந்த சீதாராமன் இவர்கட்குத் தனித்தனி சந்நிதிகள் உள்ளன. இந்த மூர்த்திகளையெல்லாம் வணங்கிக் கொண்டு திருக்கோயிலை வலம் வருகின்றோம். குலசேகர மண்டபம் என்றும், ஆயிரக்கால் மண்டபம் என்றும் வழங்கப்பெறும் மண்டபத்தில் கண்ணைக் கவரும் கருங்கல் சிற்பங்களைக் காணலாம். இவை யாவும் 18-வது நூற் றாண்டில் நிறுவப்பெற்றவையாகும். பலிபீட மண்டபத் திலும் இந்து சமயத்தினர் வழிபடும் பல்வேறு கடவுளர்களின் அழகிய சிலைகள் அணி செய்கின்றன. கண்ணன் சந்நிதிக்கு முன்னருள்ள நவக்கிரக மண்டபத்தின் நெற்றிக் கண்ணில்

(தலைக்கு மேலுள்ள கூரையில்) ஒன்பது கோள்களும் பொறிக்கப்பெற்றுள்ளன.

இவற்றையெல்லாம் கண்டு களித்த வண்ணம் வலம் வருங்கால் ஆசாரியர் காலத்து நிகழ்ச்சியொன்று நம் நினைவிற்கு வருகின்றது. ஒரு சமயம் பிள்ளை திருநறையூர் அரையரும் பட்டரும் இங்ஙனம் கண்டுகளித்த வண்ணம் வலம் வந்து கொண்டிருந்தனர். வேறு பக்தர்கள் எதனையும் கவனியாது மிக விரைவாக வலம் வந்து கொண்டிருந்தனர். இந்த இருவர் மட்டிலும் திருமாளிகைகளையும், திருக் கோபுரங்களையும, பிறவற்றையும் 'பருகுவன்ன அருகா நோக்க மொடு' பார்த்துக்கொண்டு வந்ததைக்கண்ட நஞ்சீயர் ''அல்லாதார்கட்கும் இவர்கட்கும் செயல் ஒத்திருக்கச் செய்தே இவர்களான வாசி இருந்தபடி என்? என்று இருந்தேன்'' என்று அருளிச் செய்துள்ளார்.[38] இந்நிகழ்ச்சி நினைவுடன் கருவறையை அடைகின்றோம்.

கருவறையின் முன்புறமுள்ள அர்த்த மண்டபத்தின் அடித்தளக் கருங்கல் 20 அடி சதுரத்தைக் கொண்டது; கல்லின் கனம் இரண்டரை அடி. இது கி. பி. 1731இல் நிறுவப்பெற்றது. இந்த மண்டபம் 'ஒற்றைக்கல் மண்டபம்' என்றே வழங்கப்பெறுகின்றது. திருவாட்டாற்று திருக்கோயிலும் இத்தகைய அடித்தளக் கல்லையுடைய மண்டபத்தைக் கண்டோம். கிட்டத்தட்ட இரண்டு கோயில்களும் ஒரே மாதிரி அமைப்பினைக் கொண்டனவாயினும் சிற்பங்கள் முதலியவற்றை நோக்கத் திருவாட்டாற்றுக் கோயில் பழமையுடைய தெனத் தோன்றுகின்றது. அங்குப் பெரும்பாலும் கேரள நாட்டுப்பாணி மீதூர்ந்து நிற்கின்றது.

---

38. திருவாய் 10. 2 : 2 (ஈட்டின் தமிழாக்கம் காண்க).

திருவனந்தபுரத் திருக்கோயிலில் தமிழ்ப் பண்பாடும் கலந்து மிளிர்கின்றது. ஒற்றைக்கல் மண்டபத்திலிருந்துகொண்டு மூன்று திருவாயில்கள் மூலமாகவும் தெற்கு நோக்கிச் சாய்ந்த திருவபிடேகமும் வடக்கு நோக்கி நீட்டிய திருவடிகளையும் கொண்டு கிழக்கு நோக்கிய நிலையில் அனந்தன்மீது பள்ளி கொண்டுள்ள அனந்தபதுமநாபனைக் கண்ணாரக் கண்டு சேவிக்கின்றோம். அனந்தபுரத்து அண்ணலாரின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றோம். பாதாதிகேசமாக அனந்தபுரநகர் ஆதியை[39]ச் சேவித்த நாம் திருவரங்கத்து அமுதினைச் சேவித்த திருப்பாணாழ்வாரின் அநுபவ நிலையைப் பெறுகின்றோம். ''என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே''.[40]

இந்த அநுபவத்துடன் திரும்பும் நாம் திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரத்தையும் நினைவு கூர்கின்றோம்.

> ''கோள்ஆர் பொறி ஐந்தும்
> குன்றி, உடலம்பழுத்து,
> மாளாமுன் நெஞ்சே!
> வணங்குதியால்—கேளார்
> சினந்தபுரம் சுட்டான்,
> திசைமுகத்தான் போற்றும்
> அனந்தபுரம் சேர்ந்தான்
> அடி''[41]

[கேளார் சினந்தபுரம் சுட்டான்—சிவன்; திசைமுகத்தான்—நான்முகன்.]

39. திருவாய் 10.2 : 11
40. அமலனா. 10.
41. நூற். திருஅந்தாதி. 59.

என்ற பாசுரத்தைப் பாடி அநுபவிக்கின்றோம். நல்ல வேளை யாக நடையுடன் இருக்கும் நாம் "அவனருளாலே அவன் தாள் வணங்கும்"[42] பேறு பெற்றமைக்கு அந்த எம்பெரு மானின் திருவருட்பெருக்கினை நினைந்து போற்றுகின்றோம்.

திருவாங்கூர்ப் பகுதியை அரசாண்ட மார்த்தாண்ட வர்மன் என்ற கேரள அரசர் கி. பி. 1749இல் தன்னுடைய நாடு முழுவதையும் அனந்தபதுமநாபனுக்கு அன்புப் படைய லாக்கித் தான் "பதுமநாபதாசன்" என்ற பெயருடன் அந் நாட்டினைப் புரந்த செய்தியை அறிந்து உடல் புளகாங்கிதம் கொள்ளுகின்றோம். அன்றிலிருந்து திருவாங்கூர்ப் பகுதி மக்கள் அரண்மனையில் வாழும் அரச குடும்பத்துடன் அன்புத் தொடர்பும் பக்தித் தொடர்பும் கொண்டுள்ளனர். இந்த அரசர் இத்திருக்கோயிலுக்குப் பல திருப்பணிகளை மேற் கொண்டதையும் அறிகின்றோம். "அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்ற முதுமொழிக் கிணங்க இன்றும் கேரள நாட்டிலுள்ள திருக்கோயில்கள் மிக்க பக்தியுடன் பரிபாலிக்கப் பெற்று வருவதைக் காண்கின்றோம்.

இத் திருக்கோயிலில் ஆண்டில் இரண்டு முக்கிய விழாக்கள் நடைபெறுகின்றன. ஒன்று மீனத் திருநாள்; மார்ச்சு - ஏப்ரலில் நடைபெறுவது. மற்றொன்று, துலாத் திருநாள்; அக்டோபர் - நவம்பரில் நடைபெறுவது. திரு விழாக்களின் இறுதி நாளன்று எம்பெருமான் பதுமநாபனை ஊர்வலமாக 'சங்கு முகம்' என்ற கடற்கரைக்குக் கொண்டு செல்கின்றனர். பதுமநாபன் அங்குக் கடல் நீராடித் திருவோலக்கம் கொண்டு எண்ணற்ற மக்களுக்குச் சேவை சாதிக்கின்றார். இங்ஙனம் எம்பெருமான் ஊர்வலமாகச் செல்வதை 'ஆராட்டு' என்று அப்பகுதி மக்கள் வழங்கி வருகின்றனர். இவ்விழா ஆயிரக்கணக்கான மக்களை

---

42. திருவ - சிவபுரா. அடி - 18

ஈர்க்கின்றது. இவற்றைத்தவிர, மார்த்தாண்ட மன்னரால் தொடங்கப்பெற்ற ''பத்ரதீபம்'' என்ற திருவிழா இன்றும் ஆண்டிற்கு இருமுறை—ஒன்று மிதுனத்திலும் (ஜூன்—ஜூலை) மற்றொன்று தனுவிலும் (டிசம்பர்—சனவரி)—நடைபெற்று வருகின்றது. ஆண்டிற்கொருமுறை ''முரஜபம்'' என்ற சமய வழிபாடும் தவறாது நடைபெற்று வருகின்றது. கோயில் நடைமுறையை இன்றும் அரச குடும்பத்தினரே கண் காணித்து வருகின்றனர்.

இந்தத் திவ்விய தேச யாத்திரையில் இன்னோரன்ன குறிப்புகளையெல்லாம் அறிந்து மன நிறைவுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

## 4. திருவாறன்விளைத் திருக்குறளப்பன்

வைணவ தத்துவப்படி வைகுந்த நாதனாகிய நாராயணனே முழுமுதற் கடவுள். அவனே எல்லா உலகங்களையும் படைத்தவன். ஒரு காலத்தில் பிரளயத்தில் அழியாமல் காப்பவனும், சில சமயம் தன் திருவயிற்றில் வைத்துப் புரப்பவனும் அவனே. அவனே எல்லாம். இத்தகைய பெருமானை அடைய நம்மாழ்வார் துடித்து நிற்கின்றார்.

''எங்குவந்து உறுகோ? என்னை ஆள் வானே!
ஏழுல கங்களும் நீயே;
அங்குஅவர்க்கு அமைத்த தெய்வமும் நீயே;
அவற்றுஅவை கருமமும் நீயே;
பொங்கிய புறம்பால் பொருள்உள வேனும்;
அவையுமோ நீ; இன்னே ஆனால்,
மங்கிய அருவாம் நேர்ப்பமும் நீயே;
வான்புலம் இறந்ததும் நீயே.''[1]

[உறுகோ - அடைவேன்; கருமம்-காரியம்; இன்னே - இப்படியே; மங்கிய அருவாம் நேர்ப்பம் - புலனுக்குப் புலப் படாது சூக்கும நிலையிலுள்ள பொருள்கள்.]

என்பது பாசுரம். ''என்னை ஆள்கின்றவனே! ஏழுலகங்களும் நீ இட்ட வழக்கு; அந்த உலகங்களிலே அவ்வவர்கட்குச் சமைத்து வைத்த தெய்வங்களும் நீ இட்ட வழக்கு; அந்த அந்தத் தெய்வங்களுக்குச் செய்யப்படுகின்ற ஆராதன உருவமான செயல்களும் நீ இட்ட வழக்கு; ஒன்றற்கு ஒன்று

1. திருவாய். 8. 1 : 6.

விரிந்ததாய் அண்டத்துக்குப் புறம்பாய் அதற்குக் காரணமாக வுள்ள மகத்து முதலான தத்துவங்களும் நீ இட்ட வழக்கு; காரண நிலையில் சுருங்கிக் கிடக்கின்ற சித்து, அசித்துகளும் நீ இட்ட வழக்கு; பரமாகாசத்தில் இருக்கின்ற, புலன்கட்குப் பொருளாகாத முக்தர்களும் நீ இட்ட வழக்கு; இங்ஙனம் எல்லாமாய் நிற்கும் உன்னை அடியேன் எங்ஙனம் வந்து கிட்டுவேன்?" என்கின்றார் ஆழ்வார். மேருமலையில் நிற்கும் ஒருவனை ஒரு நொண்டி எங்ஙனம் கிட்டமுடியும்? சென்று கிட்டுகைக்கு உறுப்பான சாத்திரங்களில் விதிக்கப் பெற்ற சாதனங்களைப் பின்பற்றத் தமக்கு ஆற்றலில்லாமையை இதனால் குறிப்பிடுகின்றார் ஆழ்வார்.

ஆழ்வாருக்கு ஏற்பட்ட பாரிப்பு நமக்கும் சிறிது உண்டா கின்றது. அந்தப் பரமபதநாதனை அர்ச்சையில் கண்டு மகிழலாம் என்று எண்ணுகின்றோம். வாத்சல்யம், சௌலப் பியம், சௌசீல்யம் முதலிய எல்லாக் குணங்களும் முற்றும் பெற்றுத் திகழும் 'அர்ச்சை வாழ்க!' என்று வாழ்த்து கின்றோம். அர்ச்சை வடிவில் தான் எம்பெருமான் நூற்றெட்டுத் திருப்பதிகளில் எழுந்தருளியுள்ளான் என்பதை யும், நம்போலியருக்குச் சேவை சாதித்து உய்விப்பதற்காகவே அங்ஙனம் கோயில் கொண்டுள்ளான் என்பதையும் நாம் அறிவோம். இங்ஙனம் திருவாறன்விளை என்ற திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சேவிப்பதற்கு இன்று சித்தமாகின்றோம்.

திருவாறன்விளை என்ற திவ்வியதேசம் மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று; கேரள மாநிலத்தில் எர்ணாகுளம் - கொல்லம் தென்னிந்திய இருப்புப்பாதையில் உள்ள செங்கன்னூர் நிலையத்தில் இறங்கி ஏழுமைல் பேருந்தில் சென்று இவ்வூரை அடைதல் வேண்டும். செங்கன்னூர் மிகச் சிறிய ஊர்; வசதிகளுடன் தங்கவேண்டும் என்று விரும்பு

கின்றவர்கட்கு அவ்வூர் சரிப்படாது. ஆகவே, அப்பகுதி யிலுள்ள ஆறு திருப்பதிகளையும் சென்று சேவிக்க வேண்டும் என்று விரும்புவோர் அதே இரும்புப் பாதையி லுள்ள கோட்டயம் என்ற ஊரில் இறங்க வேண்டும். கோட்டயம் பெரிய ஊர்; எல்லா வசதிகளும் அங்குக் கிடைக்கும். நல்ல உணவு விடுதிகளும் தங்கும் விடுதிகளும் அங்கு உள்ளன. மலை நாட்டுப் பகுதியாதலால் ஊரின் அமைப்பு மேடும் பள்ளமுமாக இருக்கும். இதனால் குதிரை வண்டிகளும் சைகிள் ரிக்‌ஷாக்களும் அங்கு இல்லை. ஸ்கூட்டர் களும் வாடகைக் கார்களுமே அங்குக் கிடைக்கும். இத்தகைய வசதிகளைக் கொண்ட கோட்டயத்தில் இறங்கி நம் பொருளாதாரப்படி வசதிகள் அடங்கிய விடுதியில் தங்கி இளைப்பாறுகின்றோம்.

இத்தகைய 'திருப்பதிச் செலவில்' அவசரம் கூடாது. நிதானமாகப் பார்த்து வருதல்வேண்டும். சொந்த வாகன வசதி இருந்தால் இந்த ஆறு திருப்பதிகட்கும் ஒரே நாளில் சென்று சேவித்துத் திரும்பிவிடலாம். அத்தகைய வசதி வாய்ப்பு இல்லாதவர்கள் காலையில் ஒரு திருப்பதியும் மாலையில் ஒரு திருப்பதியும் சென்று சேவித்தல் நன்று. பெரும்பாலும் மலை நாட்டுத் திருப்பதிகளிலுள்ள திருக்கோயில்கள் யாவும் முற்பகல் ($7\frac{1}{2}$—12) மணி வரையிலும் மாலை ($5\frac{1}{2}$—8) மணி வரை யிலுமே திறந்து வைக்கப்பெற்றிருக்கும். பேருந்து வசதி களிருப்பினும் அவை புறப்படும் நேரம், அவை திரும்பும் நேரம், ஆங்காங்குக் கிடைக்கும் உணவு வசதிகள் இவற்றைப் பொறுத்தே நம் செலவு நிறைவு பெறுதல் வேண்டும். சொந்த வாகன வசதியில்லாதவர்கள்—கேரள நாட்டிற்குப் புதியவர் கள்—பல்வேறு சங்கடங்களை அநுபவிக்கத் தயாராக இருத்தல் வேண்டும். உடலில் வலுவும், எதையும் சகித்து நிற்கும் ஆற்றலும் உள்ளவர்கட்கு 'கேரளத் திருத்தலப்

பயணம்' ஆநந்தமாகவே இருக்கும். இயற்கைக் காட்சிகளும் தட்பவெப்ப நிலையும் மனத்திற்குக் களிப்பாக இருக்கும்; சோர்வின்றி யாத்திரையை இனிதாக முடிக்கலாம்.

அதிகாலையில் நன்னீராடித் தூய ஆடையை உடுத்திக் கொண்டு கோட்டயம் இருப்பூர்தி நிலையத்தை அடைகின்றோம். இருப்பூர்தி ஏறி இருமருங்கும் வனப்புக் கொழிக்கும் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்துக் கொண்டே செல்லுகின்றோம். சற்றேறக்குறைய காலை ஏழு மணிக்கு வண்டி செங்கன்னூர் நிலையத்தை வந்தடைகின்றது. ஒரு சிற்றுண்டிச் சாலையில் காலை உணவினை முடித்துக்கொண்டு ஒரு பேருந்தின் மூலம் கிழக்கே ஏழு கல் தொலைவிலுள்ள,

> "அகலிடம் முற்றவும், ஈரடியே
> ஆகும்பரிசு நிமிர்ந்த திருக்குறளப்பன்
> அமர்ந்து உறையும்"[2]

[ஈர் அடி - இரண்டு அடி ; ஆகும் பரிசு - ஆகும்படி; நிமிர்ந்த - வளர்ந்த ; அமர்ந்து - பொருந்தி]

திருவாறன் விளை என்ற ஊரை அடைகின்றோம். பேருந்தில் வரும்போது இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை. எங்கும் ஒரே சோலைமயம். தோப்புகளும் துரவுகளும், வாவிகளும் சிற்றாறுகளும் எம்மருங்கும் சூழ்ந்துள்ளமையைக் கண்டுகளிக்கின்றோம். நம்மாழ்வாரும், "அணிபொழில் சூழ் திருவாறன் விளை",[3] "நீடு பொழில் திருவாறன் விளை"[4] 'கரும்பும் பெரும் செந்நெலும் வயல் சூழ் திருவாறன்

2. திருவாய் 7 . 10 : 2
3 ஷை 7 . 10 : 1
4. ஷை 7 . 10 : 3

விருந்தே ஆற்றிற்குச் சென்றுவரப் படிக்கட்டுக்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இப் படிக்கட்டுகளின் அருகிலேயே கோயிலுக்கு வெளியே ஒரு விசாலமான இடப்பரப்பில் அர்ச்சகரின் இல்லமும் அமைந்துள்ளது. எப்பெருமானுக்குப் பூசனை முதலிய கைங்கரியம் செய்யத் தமக்கு முறை வருங்கால் அர்ச்சகர் மாணியாய் (பிரம்மச்சரியம் காத்து) வாழ வேண்டும் என்ற நியதியிருந்துவருவதாகக் கூறுகின்றனர். நாமும் ஆற்றிலிறங்கிக் கை கால்கள் சுத்தி செய்துகொண்டு திருக்கோயிலுக்குள் நுழையச் சித்தமாகின்றோம். அர்ச்சகரும் ஆற்றில் குளித்து ஈர ஆடையுடன் திருக்கோயிலில் எம்பெருமானுக்குப் பணி புரிகின்றார்.

இத் திருகோயில் எம்பெருமானை நம்மாழ்வார் மட்டிலுமே ஒரு திருவாய் மொழியில் மங்களா சாசனம் செய்துள்ளார்.[12] வேறு ஆழ்வார்கட்கு இங்கு வருவதற்கு வாய்ப்பு இல்லை. எண்பத்தாறு திவ்விய தேசங்கள் யாத்திரை சென்று வந்த திருமங்கை மன்னனும் இங்கு வரவில்லை போலும். நம்மாழ்வாரின் பாசுரங்கள் ஒவ்வொன்றாக நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன.

''இன்பம் பயக்க, எழில்மலர்
  மாதரும் தானும் இவ் ஏழுலகை,
இன்பம் பயக்க இனிதுடன்
  வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள்பிரான்,
அன்புற்று அமர்ந்துஉறை கின்ற
  அணிபொழில் சூழ்திரு வாறன்விளை,
அன்புற்று அமர்ந்து வலஞ்செய்து
  கைதொழும் நாள்களும் ஆகும்கொலோ![13]

[எழில் மலர் மாதர் - இலக்குமி; பிரான் - உபகாரன்.]

12. திருவாய் 7. 10.
13. ஷை 7. 10 : 1.

"அல்லி மலர் - மகள் போக மயக்குக்களாகியும் நிற்கும் அம்மான்"[14] என்றவாறு திருவாய்மொழியைச் செவி மடுப்பதற்காக என்றே பெரிய பிராட்டியுடன் எம்பெருமான் ஆனந்தமயனாகத் திருவாறன்விளையில் எழுந்தருளியுள்ளான். 'இன்பம் பயக்க...இவ்வேழுலகை' என்பதற்கு ஈடு; 'தாய் தந்தையர் இருவரும் சேர இருந்து பரியப்புக்கால், குழந்தைகட்கு ஒரு குறையும் பிறவாது அன்றோ? ஆக, இருவருமான சேர்த்தியாலே தங்களுக்கு ஆனந்தம் உண்டாக அச்சேர்த்தியைக் காண்கையாலே உலகத்திற்கு ஆனந்தம் உண்டாக, அதனைக் கண்டு, குழந்தை பால்குடிக்கக் கண்டு உகக்கும் தாயைப்போலே இவர்கட்கு உண்டான பிரீதியைக் கண்டு அதனாலே தாங்கள் இனியராய் இருப்பாராயிற்று"[15] என்பது. 'திருவாய் மொழி கேட்கைக்குத் பாங்காயிருப்பதொரு தேசம் பெற்றோம்' என்று பெறாப்பேறு பெற்றாப் போலே விரும்பி எழுந்தருளியிருக்கும் தேசம் என்பது தோன்ற 'இனிதுடன் வீற்றிருந்தாள்கின்ற' என்கின்றார். பூம் பொழில்கள் சூழ்ந்த அத்தகைய திருவாறன் விளையை வலம் வருதல் முதலானவற்றைச் செய்து வழிபடும் நாள் எந்நாளோ என்று பாரிக்கின்றார் ஆழ்வார். இப்பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றியே அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் இத்திருப்பதியில் விளங்கும் குணத்தை 'ஆனந்த வளர்ச்சி' என்று குறிப்பிட்டார்.

"ப்ரணவசித்தம் பரத்வ விமுகம் ஆக்கும்
ஆநந்த விருத்தி, நீணகரிலே"[16]

என்பது சூத்திரம். விருத்தி - வளர்ச்சி நீள்நகர் - திருவாறன் விளை. பிரணவம் - அன்பு. விமுகம் ஆக்குதல் - வேறு

14. திருவாய் 3. 10 : 8.
15. ஷை 7. 10 : 1. ('ஈட்டின் தமிழாக்கம்' காண்க.)
16. ஆசா. ஹிரு - 171.

படுத்துதல். இத் திருப்பதியின்மீது ஆழ்வாருக்குள்ள அன்பு பரத்துவத்தையும் விரும்பாதபடி செய்துவிடும் என்பதாகும்.

கோயிலைச்சுற்றி வலம் வருதல் என்பது பண்டிருந்தே வழங்கி வரும் வழக்கமாகும். தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களிலும் வழிபாடு செய்யும் மக்களிடையே இந்த வழக்கம் இருந்து வருவதை இன்றும் காணலாம். திருவரங்கம், இராமேச்வரம், சிதம்பரம் போன்ற பெரிய திருக்கோயில்களில் பல திருச்சுற்றுகள் உள்ளன. இத்தகைய கோயில்களில் உள் சுற்றுகள் முற்றிலுமே கல் பரப்பப்பெற்றிருக்கின்றன. பெரும்பாலும் வெளிச்சுற்றுகளில் (மதுரை மீனாட்சி கோயில் போன்ற ஒரு சில கோயில்களைத் தவிர) இத்தகைய ஏற்பாடுகள் இருப்பதில்லை. கேரள மாநிலத்திலுள்ள பெரும்பாலான கோயில்களில் (திருவனந்தபுரம் போன்ற ஒரு சில கோயில்களைத் தவிர) ஒரே பிராகாரமே உள்ளது. அந்தப் பிராகாரத்தில் கோயிலைச் சுற்றி வலம் வருவதற்கென்றே கல் பரப்பப்பெற்ற நடை பாதைகள் உள்ளன. மேலும், கோயிலை வலம் வரும் வழக்கம் கேரளத்தில் எல்லா மக்களிடம் தவறாது இருந்து வருவதைக் காணலாம். கோயிலை வலம் வருதலில் பேரார்வம் கொண்ட ஆழ்வார்,

"மாகந்த நீர்கொண்டு தூவி
வலஞ்செய்து கைதொழக் கூடுங்கொலோ?[17]
[மாகந்தம்-சிறந்த பரிமளம்]

என்றும்,

"செழும்பொழில் சூழ்திரு வாறன்விளை
ஒன்றி வலம்செய்ய ஒன்றுமோ?[18]
[ஒன்றி-கிட்டி; ஒன்றுமோ-கூடுமோ]

என்றும்,

17. திருவாய். 7. 10 : 2 18. ஷை. 7. 10 : 8.

"பொழில்திரு வாறன் விளையதனை,
மேவி வலஞ்செய்து கைதொழக்
கூடுங்கொல்?"[19]

[மேவி-பொருந்தி]

என்றும் இப்பழக்கத்தை மீண்டும் மீண்டும் வற்புறுத்துவதைக் கண்டு மகிழ்க. இங்ஙனம் நாடோறும் வழிபாடு செய்யும் வாய்ப்பு கிடைக்குமோ என்று துடித்து நிற்கின்றார் ஆழ்வார்.

"நீடு பொழில்திரு வாறன்
விளைதொழ வாய்க்குங்கொல் நிச்சலுமே"[20]

[நிச்சலும் - எப்பொழுதும்]

என்ற பாசுரப் பகுதியில் இத்துடிப்பினைக் காணலாம். இந்தத் திவ்விய தேசத்திற்கு யாத்திரையாக எழுந்தருளும் பக்தர்கள் மேற்கூறிய ஆழ்வாருடைய பாரிப்புக்கு இணங்க நறுமணங் கமழும் சந்தனச் சேற்றைத் திருமதிலிலே தூவி வழிபாடு செய்யும் வழக்கத்தை இன்றும் காணலாம்.

திருவாறன்விளை போகவேண்டும் என்ற ஆழ்வாருடைய பேரவா அடுத்த பாசுரத்தில் தெளிவாகப் புலனாகின்றது.

"கூடுங்கொல் வைகலும் கோவிந்த
னைமது சூதனைக் கோளரியை,
ஆடும் பறவை மிசைக்கண்டு
கைதொழுது அன்றி அவனஉறையும்
பாடும் பெரும்புகழ் நான்மறை
வேள்வி ஐந்து ஆறுஅங்கம் பன்னினர்வாழ,

19. திருவாய். 7. 10 : 9
20. ,, 7. 10 : 3.

நீடு பொழில்திரு வாறன்
விளைதொழ வாய்க்குங்கொல் நிச்சலுமே''[21]

[கூடுதல் - நிறைவேறப்பெறுதல்; வைகலும் - நாடோறும்; ஆடும்பறவை - கருடன்; நீடு - பெரிய; வாய்க்குங்கொல் - கிட்டுமோ; நிச்சலும் - எப்போதும்]

நம்மாழ்வார் எந்தத் திருக்கோயிலையும் நேரில் சென்று சேவிக்கவில்லையென்றும், திருப்புளியாழ்வாரின் திருவடியிலிருந்து கொண்டே எல்லாத் திருப்பதி எம்பெருமான்களையும் பாட்டால் பரவினார் என்றும் ஒரு கொள்கை நிலவி வருகின்றது. இதனை முன்னரும் குறிப்பிட்டுள்ளோம். இப்பாசுரத்தில் 'ஆடும் பறவை மிசைக் கண்டு' என்பதற்கு நம்பிள்ளை அருளியிருக்கும் சிறப்புப் பொருள் இன்சுவை மிக்கது : ''திருவாறன்விளையைக் குறிக்கோளாகக் கொண்டு எம்பெருமானைக் காண வேண்டும் என்று நாம் (ஆழ்வார் அவ்விடந் தேடிச் சென்றால், அவன் (எம்பெருமான்) திருநகரியைக் (நம்மாழ்வாரின் இருப்பிடம்) குறிக்கோளாகக் கொண்டு இங்கே நம்மைக் காண வேண்டும் என்று ஆடும் பறவைமிசை ஏறி வருவனே; அன்னவனை நடுவழியிலே கண்டு'' என்பதாக. ஆழ்வார் எம்பெருமான்மீது கொண்டுள்ள பேரவாவைவிட எம்பெருமான் ஆழ்வார்மீது பன்மடங்கு பேராவாக் கொண்டிருந்தான் அன்றோ? 'ஆடு' என்பதற்கு வெற்றி என்று பொருள் கொள்ளலாம். எம்பெருமானின் வெற்றிச் செயல்களிலெல்லாம் பங்குகொண்டவனன்றோ பெரிய திருவடி? அன்றியும், 'சர்வேசுரவரனின் வாகனம் என்கின்ற உவகை மிகுதியினால் கட்குடியர் போன்று களித்து ஆடா நின்றுள்ள திருவடி தோளிலே கண்டு' என்ற பொருள் இன்னும் சிறக்கும். பாசுரத்தின்

21. திருவாய். 7. 10 : 3.

இறுதியில் 'வாய்க்குங்கொல் நிச்சலும்' என்றிருந்தும் தொடக்கத்தில் 'கூடுங்கொல் வைகலும்' என்றிருப்பது ஆழ்வாரின் ஆதராதிசயத்தையும் (அதிகமான பரிவையும்) விரைவு மிகுதியையும் காட்டுகின்றது.

"எய்தா நின்கழல் யான்எய்த, ஞானக்
கைதா; காலக் கழிவுசெய் யேலே"[22]

என்று வேண்டினவரன்றோ?

இருந்த இடத்திலிருந்து கொண்டே எம்பெருமானை மனத்திலே நினைக்கும்படியான பேற்றினை ஆழ்வார் அவாவி நிற்கின்றார் என்பது அடுத்த பாசுரத்தாலும் அறியக் கிடக்கின்றது.

"வாய்க்குங் கொல் நிச்சலும் எப்பொழு
தும்மனத்து ஈங்கு நினைக்கப்பெற
* * *
வாய்க்கும் மணிநிறக் கண்ண
ரான்றன் மலரடிப் போதுகளே"[23]

[நிச்சலும் - எப்பொழுதும்; எப்பொழுதும் - இடையீடின்றி; மலரடிப் போதுகள் - திருவடித் தாமரைகள்.]

திருவாறன்விளை சென்று அநுபவிக்கும் பேறு இல்லையாயினும், ஆழ்வாருக்குக் கவலையில்லை. திருப்புளியாழ்வாரிடமிருந்து கொண்டாகிலும் அவன் திருவடிகளை நிரந்தரமாக இடைவிடாது சிந்தனை செய்யும் பேறு வாய்க்குமோ என்று துடிக்கின்றார் ஆழ்வார். 'நிச்சலும்' என்று சொல்லி 'எப்பொழுதும்' என்று மீட்டும் சொல்லியதன் கருத்தினை விளக்கும் ஈடு காண்மின்: "நித்யாக்நி ஹோத்ரம் போலே ஒரு கால விசேஷத்திலாய்ப் போக வொண்ணாது; எல்லா அவஸ்தைகளிலும் உண்டாக வேண்டும்" என்று. ஒருவர்

22. திருவாய் 2. 9 : 2. 23 ஷ 7. 10 : 4.

நாள்தோறும் அக்நிஹோத்திரம் பண்ணுகிறார் என்றால், இரவும் பகலும் அதுவே செயலாக இருக்கிறார் என்பது இல்லை. ஒருநாளைக்குச் சிறிது நேரம் அதனை மேற்கொண்டாலும் அங்ஙனம் மேற்கொள்பவருக்கு 'நித்திய அக்நிஹோத்ரி' என்ற பெயர் வந்து விடுமல்லவா? அங்ஙனம் ஆகாமல் எம்பெருமானை அநவரதமும் நினைக்கப் பெறவேண்டும் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம்.

இவ்விடத்தில் மனிதனிடம் இயல்பாக அமைந்துள்ள பண்பு நினைவுகூர்தற்பாலது. பள்ளிச் சிறுவன் ஒருவன் பள்ளி ஆண்டுவிழாவின் பொழுது நடைபெற இருக்கும் நாடகத்தில் பங்கு பெறவேண்டும் என்பது ஏற்பாடு. அதற்காக அவனுக்கு நாள்தோறும் பயிற்சி தரப்பெறுகின்றது. நாடக உரைகளை மனப்பாடம் செய்தல், நடித்தல், நாடக உடையின்றியும் உடையுடனும் நடித்தல் என்றெல்லாம் பல படிகளில் பயிற்சி பெற்று வருகின்றான் சிறுவன். பள்ளி ஆண்டு விழாவில் நடிப்பதால் பெறுகின்ற அநுபவத்தைக் காட்டிலும், நடிக்கப் போகின்ற மனோரதத்தால் (விருப்பம்) அவன் பெறற்கரிய பேரின்பம் பெற்று வருகின்றான். இதனை நாம் அன்றாட வாழ்வில் காணலாம். இத்தகை மனோரதம் வளர்ந்தவர்கட்கும் ஏற்படுவதுண்டு. இதனை ஈட்டின் ஆசிரியர் நம்பிள்ளை ஜிதந்தா[24] சுலோகம் ஒன்றினைக்

**24. ஜிதந்தே தோத்திரம்** - இதனை எழுதியவர் பெயர் தெரியவில்லை. இது ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பெற்ற சுலோகங்களின் தொகுப்பு. பாஞ்சாரத்திர விதிப்படி நாள் தோறும் செய்ய வேண்டிய கிரியைகள் ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் முதல் ஐந்து பகுதிகளிலுள்ள சுலோகங்கள் முறையே இந்தக் கிரியைகள் நடைபெறும்கால் ஓதப்பெற வேண்டியவை. ஆறாவதில்

கொண்டு சுவைபட விளக்குகின்றார்: ''நாட்டார் மனோரதம் என்றும், அநுபவம் என்றும் இரண்டாகவிறே சொல்லிப் போருவது? எனக்கு இதெல்லாம் வேண்டா; இம்மனோரத மாத்ரத்தாலே கிருதகிருத்யன் நான். சரீர சம்பந்தம் அற்றுப் பரமபதத்திலேபோய் ஏற்றமாக அநுபவிக்குமதிற் காட்டில் நான் பேறாக நினைத்திருப்பது இத்தையே'' என்பதாக.

இந்த இடத்தில் இளையாற்றுக்குடி நம்பி என்ற பரம பக்தருடைய வாழ்க்கைக் குறிப்பும் அருளிச் செய்யப் பெற்றுள்ளது: 'நம்பி திருநாட்கள் தோறும் கோயிலுக்கு வந்து பெருமாளைச் சேவித்துப் போவாராம். போனால் மறித்துத் திருநாள் வருந்தனையும் அதனையே பொழுது போக்காக நினைத்துக் கொண்டு இருப்பாராம். ஒருநாள் திருநாளின் வைபவத்தை நினைத்திரா நிற்கச் செய்தே 'அமுது செய்கைக்குப் போது வைகிற்று' என்றார்களாக, 'ஆகில் வருகிற திருநாள் அணித்தாகிறது' என்றாராம். அவர் நூறு வயதும் புகுகையாலே வலிமை குன்றித் திருமுளைத் திருநாளில் பெருமாள் புறப்பட்டருளுகைக்கு உதவ வந்து புகுரப் பெற்றிலர்; பெருமாளும் 'தேடியருளிக் காணாமல் 'நம் இளையாற்றுக் குடியான் வந்திலன்;

---

உள்ள சுலோகங்களை ஒவ்வொரு காலப் பகுதியுடன் சேர்த்துக் கொள்ளலாம். நாரதர் சுவேதத் தீபம் என்ற இடத்தில் நாராயணனைக் காணச் சென்றபொழுது அங்குள்ள இருடிகள் 'ஜிதந்தே புண்டரீகாட்சா' என்று தொடங்கும் மந்திரங்களை ஓதிக் கொண்டிருந்ததைத் தான் கேட்டதாக 'நாராயணீயம்' என்ற வியாசபாரதம்-சாந்தி பருவப் பகுதியில் கூறியுள்ளார். இந்த மந்திரங்கள் இப் பொழுது கிடைக்கப்பெறும் 'ஜிதந்தே' என்னும் தோத்திர நூலின் தொடக்கத்தில் அமைக்கப் பெற்றுள்ளது. ஆகவே, இந்த நூல் 'ஜிதந்தே' என்ற பெயரினைப் பெறுகின்றது.

நங்கண்ணாலம் அல்லவோ' என்று திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறாந் திருநாளிலே சேவித்திருக்கச் செய்தே 'நாம் உனக்குச் செய்யவேண்டுவது என்?' என்று கேட்டள, 'தேவரீர் தந்தருளின சரீரத்தைக் கொண்டுபோரக்காரியங் கொண்டேன்; இனிப்போக்குவரத்துக்குத் தகுதி இல்லாதபடி போர இளைத்தது' என்ன, 'வாராய் மெய்யே இளைத் தாயாகில் இங்ஙனே இரு' என்று அருளிச் செய்தார்; பெருமாள் நடுவில் திருவாசலுக்கு அவ்வருகே எழுந்தருளுங் காட்டில் அவர் திருநாட்டுக்கு எழுந்தருளினார்''.[25] நம்பியின் மனோரதம் ஓயாது எண்ணி மகிழத்தக்கது.

அடுத்து திருவாறன்விளையின் புகழைப் பாடுவதால் ஏற்படும் பலன் சொல்லப்பெறுகின்றது.

''நீடு மதிள்திரு வாறன்விளை
உலக மலிபுகழ் பாடநம்மேல்
வினைஒன்றும் நில்லா கெடுமே''[26]

(மலி- நிறைந்த; வினை-கருமங்கள்.)

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். ''பாபம் போகைக்காகத் தனித்து ஒரு முயற்சி செய்ய வேண்டா; பால் குடிக்க நோய் தீருமாறு போலே நம்முடைய பாபங்கள் தாமே நசித்துப்போம்'' என்ற இன்சுவைமிக்க ஈட்டின் உரை இதனைப் பின்னும் நன்கு விளக்குகின்றது. புகழ்பாடுதல் பால் குடிப்பது போன்ற எளிமையான செயலாகும் என்றவாறு. இதனை ஆழ்வார் அடுத்த பாசுரத்திலும்,

25. திருவாய். 7. 10 :4. ('ஈட்டின் தமிழாக்கம்' காண்க.)
26 ஷை 7. 10: 5.

"ஒன்றும்நில் லாகெடும் முற்றவும்
தீவினை யுள்ளித் தொழுமின் தொண்டீர்"[27]
[உள்ளி-நினைத்து.]

என்று பின்னும் வற்புறுத்துவதைக் காண்க. மேலும்,

"செழும் பொழில் சூழ்திரு வாறன்விளை
ஒன்றி வலஞ்செய, ஒன்றுமோ?
தீவினை உள்ளத்தின் சார்வல்லவே"[28]

[ஒன்றி-பொருந்தி, ஒன்றுமோ-கூடுமோ; சார்வு அல்ல-பொருத்த முடையன அல்ல.]

என்று கூறுகின்றார். திருவாறன்விளை என்ற திவ்விய தேசத்தினுள் புகுந்த அளவிலேயே நம்முடைய எல்லாத் துக்கங்களும தொலையும் என்கின்றார் ஆழ்வார்.

இவ்விடத்தில் ஆனையின் நெஞ்சிடர் தீர்த்த எம் பெருமானின் செயலை நினைவுகூர்கின்றார் ஆழ்வார். அந்த எம்பெருமானே திருவாறன்விளையில் நம்போலியரின் துயரையும் தீர்ப்பதற்காகவே சந்நிதிபண்ணிக் கொண்டுள்ளார் என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

"அன்றி மற்(று) ஒன்றுஇலம் நின்சரணே!' என்று
அகல்இரும் பொய்கையின்வாய்
நின்றுதன் நீள்கழல் ஏத்திய ஆனையின்
நெஞ்சுஇடர் தீர்த்தபிரான்
சென்றுஅங்கு இனிது உறைகின்ற
செழும்பொழில் சூழ்திரு வாறன்விளை"[29]

[சரண்-புகல்; அகல் இரும்-மிகப் பெரிய; பொய்கை - தடாகம்; இடர்-துன்பம்.]

27. திருவாய் 7. 10: 6.
28. ஷெ 7. 10: 8.
29. ஷெ 7. 10: 8.

மன்ற பாசுரப் பகுதி இதனை உணர்த்துகின்றது. ஆனைக்கு இடராவது உயிர் தொலைகின்றதே என்கின்ற இடர் அன்று; மிகவும் சிரமப்பட்டுப் பறித்த மலரை இறைவன் திருவடிகளில் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டதே என்று உண்டான இடர். அந்த மலரைப் பெறுவதற்காகவே பரமபத நாதன் அலை குலைய நிலை குலையப் பதறி ஓடி வந்தான் என்பது ஆசாரியர்கள் தரும் விளக்கம். கரையில் அர்ச்சை வடிவில் இருக்கும் எம்பெருமான் மலரைப் பெறுவதற்கு நகர்ந்துவர முடியாதல்லவா? இன்னொரு விளக்கமும் உண்டு: 'நம் அடியாக எம்பெருமானுக்கு என்ன அவத்யம் (குறைவு, குற்றம், மாசு) விளைகின்றதோ என்று தோன்றிய இடராகவும் கொள்ளலாம். அஃதாவது, பரம பக்தனான யானை அரசனைக் காத்தருளாத எம்பெருமான் இரட்சகன் எனத் தகுதியுடையவன் அல்லன் என்று உலகோர் சிந்தாந்தம் செய்துவிடப் போகிறார்களே என்று யானை இடர்ப்பட்டதாகவும் கொள்ளலாம்.

அந்த யானை அரசனைப் போலவே நம்மாழ்வாரும் திருவாறன்விளை எம்பெருமானைச் சரணம் அடைகின்றார்.

> ''வாணனை ஆயிரம் தோள்துணித்
> தான்சரண் அன்றிமற் றொன்றிலமே''[30]
>
> [வாணன்-பாணாசுரன் என்ற அசுரன்.]

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறிகின்றோம். ''மறந்தும் புறந்தொழா மாந்தரின்'' தலைவராகிய ஆழ்வார் திருவாறன்விளை என்ற திருப்பதியே தனக்கு ப்ராப்யம் (அடைய வேண்டிய இடம்) என்றும், அங்கு உறையும் எம்பெருமானே அதற்கு உபாயபூதன் (கருவி

30. திருவாய். 7. 10: 7.

யானவன்) என்றும் தம்முடைய கொள்கையை வெளியிடு கின்றார். இத்திருப்பதியின் சுவையை அறியாதார்க்கு மட்டிலுமே பரமபதம் ப்ராப்யம் (அடைய வேண்டும் என்ற விருப்பம்) ஆகும். இதன் சுவையறிந்தவர்கட்கு பரமபதம் ஒரு பொருளாகத் தோன்றாது எம்பெருமான் இதனைப் ப்ராப்ய பூமியாக (அடைய வேண்டிய இடமாகக்) கொண்ட பிறகு இதில் ஐயப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்பது ஆழ்வாரது சித்தாந்தம். மேற்கூறிய ஆழ்வாரது கொள்கை,

''தீர்த்தனுக்கு அற்றபின் மற்(று) ஓர்
 சரண்இல்லை என்று எண்ணித் தீர்த்தனுக்கே
தீர்த்த மனத்தனன் ஆகிச்
 செழுங்குருகூர்ச் சடகோபன்''[31]

[தீர்த்தன்-தூயோன்; அற்றபின்-அடிமை என்று அறுதி யிட்டபின்; சரண்-உபாயம்; தீர்த்தன் இறைவன்; தீர்த்த-அறுதியிட்ட.]

என்ற பாசுரப் பகுதியாலும் இது வலியுறுகின்றது. இதுவே இன்னொரு பாசுரத்தாலும் தெளிவு பெறுகின்றது.

''தீவினை உள்ளத்தின் சார்வல்ல
 ஆகித் தெளிவிசும்பு ஏறலுற்றால்
நாவின் உள்ளும் உள்ளத்து உள்ளும்
 அமைந்த தொழிலினுள்ளும் நவின்று
யாவரும் வந்து வணங்கும்
 பொழில்திரு வாறன் விளையதனை
மேவி வலஞ்செய்து கைதொழக்
 கூடுங்கொல்-என்னும்என் சிந்தனையே''[32]

31. திருவாய் 7. 10 : 7.
32. ஷை 7. 10 : 9.

[உள்ளம்-ஆன்மா; சார்வல்லவாகி - தீண்டாதனவாகி; தெளிவிசும்பு-பரமபதம்; உள்ளம்-மனம்; மேவி-பொருந்தி.]

தீயவினைகள் ஆன்மாவைத் தீண்டாதனவாகி நீங்கத் தாம் பரமபதத்தை அடையலுற்றாலும், தம்முடைய திருவுள்ளம் அதனைப் பொருட்படுத்தாது திருவாறன்விளையினைப் பொருந்தி வாழவேண்டும் என்று நினைக்கின்றது என்று ஆழ்வார் அத்திருப்பதியின்மீது தமக்குள்ள அதிகமான பரிவினை வெளியிடுவதைக் காண்க.

அடுத்து, தாம் நினைவில் தம் கொண்டிருப்பவை அனைத்தையும் அறியவல்லவரான எம்பெருமான் அறிவான் என்கின்றார் ஆழ்வார். தாம் திருவாறன்விளை தீர்த்தனுக்கு அடிமை என்று அறுதியிட்ட பின்புதான் மனமானது வேறு ஒன்றினை நினையாது என்பதை அவன் அறிவான் என்பதை வெளியிடுகின்றார். சிந்தையினால் நினைக்கப்படுவதான வஞ்சனைகள் அவன் அறியாதன ஒன்றுமில்லையன்றோ?

சிந்தைமற்று ஒன்றின் திறத்ததுஅல்
    லாத்தன்மை தேவபி ரான்அறியும்
சிந்தையினால் செய்வ தானறி
    யாதன மாயங்கள் ஒன்றுமில்லை"[33]

[சிந்தை-மனம்; மற்று ஒன்று-பரமபதம்; தேவபிரான் - எம்பெருமான்; மாயங்கள்-வஞ்சனைகள்].

ஈண்டு பரமபதம் என்ற பெயர் சொல்லுதலும்கூடத் தமக்கு விருப்பமின்மையின் 'மற்று ஒன்று' என்கின்றார்.

இந்த எண்ணங்களுடன் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். **திருக்குறளப்பன்** என்பது இத் திருப்பதி எம்பெருமானின் திருநாமம்; தாயாரின் பெயர் **பத்மாசன**

33. திருவாய். 7. 10: 10.

**நாச்சியார்** (தாமரையாள்). நின்ற திருக்கோலத்தில் வடக்கே திருமுகமண்டலம் கொண்டு எழுந்தருளியிருக்கும் இந்த எம்பெருமானைச் சேவிக்கின்றோம்; அன்னையாரையும் வணங்குகின்றோம். அவன் சந்நிதியிலேயே திருவாறன் விளைத் திருப்பதிகத்தை நெஞ்சுருக ஓதி மகிழ்கின்றோம். இந்நிலையில்,

"சென்று புனல்மூழ்கிச்
செய்தவங்கள் செய்தாலும்,
வென்று புலன்அடக்கி
விட்டாலும், இன்தமிழால்
மாறன் விளைத்த
மறைஓதார்க்(கு) இல்லையே
ஆறன் விளைத்திருமால்
அன்பு"[34]

[புனல் - நீர்; மாறன் - நம்மாழ்வார்: மறை - திருவாய்மொழி;]

என்று திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரம் நினைவிற்குவர, அதனையும் ஓதுகின்றோம். பக்தி உணர்வு நிரம்பிய நிலையில் எம்பெருமானுடைய பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

---

34. நூற். திருப். அந்தாதி. 70.

## 5. திருச்செங்குன்றூர் அப்பன்

பரமபத நாதனாகிய நாராயணன் ஒவ்வொருவர் உள்ளத்திலும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு அவரவருடைய செயல்கட்கும் ஏவுபவனாயிருக்கின்றான் என்பது வைணவ சமயக் கோட்பாடு.[1] இக்கருத்தினை எல்லா ஆழ்வார்களுமே தத்தம் பாசுரங்களில் குறிப்பிட்டுள்ளனர். மேலும், இந்நிலையில் எம்பெருமான் நாம் நல்வினை காரணமாகச் சுவர்க்கத்தை அடைதல், தீவினை காரணமாக நரகில் புகுதல், நல்வினை தீவினை ஆகிய இரண்டன் காரணமாகக் கருப்பத்தை அடைதல் முதலிய எல்லா நிலைகளிலும் நமக்குத் துணையாய் இருப்பான் என்றும், அழகே குடி கொண்டுள்ள மங்களமான திருமேனியுடன், நமக்குத் தியான ருசி பிறக்கும்போது தியானத்திற்கு உரியவனாதற்காகவும், நம்மைக் காப்பதற்காகவும், நமது இதய கமலத்தில் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனாய்ப் பெரிய பிராட்டியாருடன் கட்டை விரலளவாய் எழுந்தருளியிருப்பான் என்றும் வைணவ நூல்கள் பகர்கின்றன.[2]

அந்தர்யாமித்துவத்தைத் திருமழிசையாழ்வார் மிக அழகாகக் குறிப்பிடுகின்றார்;

"நின்றதுஎந்தை ஊரகத்து,
இருந்ததுஎந்தை பாடகத்து
அன்றுவெஃக ணைக்கிடந்த(து)
என்னிலாத முன்னெலாம்,

1. தத்துவத் திரயம்-ஈசுவர பிரகரணம் 57.
2. ஷை 58.

அன்று நான்பி றந்திலேன்பி
றந்ததன்பின்ம றந்திலேன்,
நின்றதும் இருந்த ததும்கி
டந்ததும்என் நெஞ்சுளே''[3]

[பிறந்திலேன் - ஞானப்பிறப்பு பெறவில்லை]

ஊரகம், பாடகம் என்பன காஞ்சியில் உலகளந்த பெருமாள் கோயிலின் வெளிப் பிராகாரத்திலுள்ள சந்நிதிகள்; வெஃகணை என்பது, திருவெஃகா; காஞ்சியிலுள்ள சொன்ன வண்ணம் செய்த பெருமாள் சந்நிதி. நம்போலியர்களிடம் கைங்கரியக் கடனைப் பெறுவதற்காகவே ஊரகத்தில் நின்று பார்க்கின்றதாகவும், பாடகத்தில் வீற்றிருந்து பார்க்கின்ற தாகவும், திருவெஃகாவில் சாய்ந்து பார்க்கின்றதாகவும் கருதுகின்றார் ஆழ்வார். தாம் ஞானப்பிறப்பை அடைவதற்கு முன்பெல்லாம் இங்ஙனம் செயல் புரிந்த எம்பெருமான், அதனை அடைந்த பிறகு இச்செயல்களைத் தம் இதயக்கமலத்தில் மேற்கொள்வதாகக் கருதுகின்றார் அவர். விஷ்ணுவை என்றும் இடையறாது தம்மனத்தில் நிலை நிறுத்துதலால் 'விஷ்ணு சித்தர்' என்ற திருநாமத்துடன் விளங்கும் பெரியாழ்வார்,

''அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரான்''

3. திருச்சந். விரு. 64.
4. பெரியாழ். திரு. 5. 2. 10.

[அரவத்துஅமளி - பாம்புப் படுக்கை; அரவிந்தப் பாவை - தாமரையில் வாழும் பெரிய பிராட்டியார்; அகம் - உடல்; பரவை - திருப்பாற்கடல்; திரை - அலை.]

என்று உளம் மகிழ்ந்து கூறுவர். "உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்"[5] என்றும், "பனிக்கடலில் பள்ளி கோளைப் பழகவிட்டு ஓடிவந்து என், மனக் கடலில் வாழ வல்ல மாயமணாள நம்பீ"[6] என்றும் பேசுகின்றவரன்றோ இவர்?

ஆழ்வார்களுள் நாயகமாய் விளங்கும் நம்மாழ்வாரும் அந்தர்யாமித்துவத்தைப் பல இடங்களில் பறைசாற்றுவார். ஓரிடத்தில் எம்பெருமான் தம் சிந்தையுள் இருப்பதை இவ்வாறு பேசுகின்றார்; அர்ச்சை வடிவிலுள்ள எம் பெருமான் தம் இதயகமலத்தில் வீற்றிருப்பதாகப் பகர் கின்றார். பாசுரம் இது:

"திருச்செங்குன் றூரில் திருச்சிற்றா றதனுள்
கண்டஅத் திருவடி என்றும்,
திருச்செய்ய கமலக் கண்ணும்செவ் வாயும்
செவ்வடி யும்செய்ய கையும்,
திருச்செய்ய கமல வுந்தியும் செய்ய
கமலைமார் பும்செய்ய வுடையும்
திருச்செய்ய முடியும் ஆரமும் படையும்
திகழஎன் சிந்தையு ளானே"[7]

[திருவடி - எம்பெருமான்; என்றும் - இடைவிடாது; கமலம் - தாமரை; செய்ய - சிவந்த; உந்தி - கொப்பூழ்; கமலை- பெரிய பிராட்டியார்; உடை - பீதக ஆடை; ஆரம் - மாலை; படை - ஆயுதங்கள்.]

---

5. பெரியாழ். திரு. 5. 4. 5.
6. ஷெ. 5. 4. 9: பள்ளிகோள் - பள்ளி கொள்ளுதலை; பழகவிட்டு - பழகியதாக விட்டு.
7. திருவாய். 8. 4:7.

இதில் கட்டைவிரல் பருமன் அளவு தன் இதய கமலத்தில் வீற்றிருக்கும் வடிவழகை வாயாரப் பேசுகின்றார் ஆழ்வார். திருச்சிற்றாற்று எம்பெருமான் செந்தாமரை போன்ற 'கரிய வாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரி ஓடி நீண்ட அப்பெரியவாய'[8] திருக்கண்களையுடையவன்; அத் திருக்கண் நோக்கினால் பிறந்த உறவை நிலை நிறுத்திக்கொள்ளும் புன்முறுவல் பொலிந்த திருப்பவளத்தையுடையவன்; அந்தப் புன்முறுவலுக்குத் தோற்றவர்கள் வீழ்ந்து வணங்கத் தக்க திருவடிகளையுடையவன்; அப்படி அணைக்கப்பெற்றவர் கட்கு நாடோறும் அநுபவிக்கத் தக்கதாய் அழகுக்கு எல்லையாய், 'முனிமாப் பிரம முதல் வித்தாய்'த் திகழும் திருநாபியையுடையவன்; சேதனர்கட்குப் பற்றாசாக இருக்கும் பெரிய பிராட்டியாருக்கு இருப்பிடமாகவுள்ள திருமார்பையுடையவன்; இத்தகைய எம்பெருமான் திருமேனிக்கு ஏற்ற பீதக ஆடையைத் தரித்துக்கொண்டு அடியார்களின் அச்சம் தீரும்படி காப்புக்குக் குறிப்பாக இருந்து வரும் திருஅபிடேகமும் திவ்விய ஆயுதங்களும் விளங்க என்றும் இடைவிடாது தன் சிந்தையில் இருப்பதாகக் கூறுகின்றார் ஆழ்வார். இவரே பிறிதோரிடத்தில் தம் உள்ளத்தில் எம்பெருமானின் நிரந்தரக் குடியிருப்பை,

''கல்லும் கனைகடலும்
வைகுந்த வானாடும்
புல்லென்(று) ஒழிந்தனகொல்?
ஏ பாவம்—வெல்ல
நெடியான் நிறங்கரியான்
உள்புகுந்து நீங்கான்
அடியேன துள்ளத்
தகம்''[9]

8. அமலனா. 8.
9. பெரிய திருவந். 56.

[கல் - திருவேங்கடமலை; கனைகடல் - ஒலிக்கின்ற பாற் கடல்; வான்நாடு - வானுலகம்; புல்லென்று - அற்பமாய்; வெல்ல - மிக; நெடியான் - உயர்ந்தவன்; உள்ளம் - நெஞ்சம்]

என்று பேசினவரன்றோ?

திருச்செங்குன்றூரைப்பற்றி முன்னரே அறிந்துள்ளோம். திருவாறன்விளைத் திருப்பதி எம்பெருமானை முற்பகலில் சேவித்துப் பகலுணவிற்குச் திருச்செங்குன்றூரை அடைகின்றோம். உணவு விடுதியில் உணவு கொண்டு அங்கேயே இளைப்பாறுகின்றோம்.

மாலை ஐந்து மணி வரையில் காலம் செல்லவேண்டுமே; கேரளத்தில் திருக்கோயில்கள் மாலை ஐந்து மணிவரையில் திருக்காப்பிடப்பெற்றிருக்கும் என்பதை நாம் அறிவோம். அந்தச் சிற்றூரில் தங்கி இளைப்பாற வசதி குறைவாக உள்ளதால் இருப்பூர்தி நிலையத்திலேயே வந்து நேரத்தைக் கழிக்கின்றோம். அந்நிலையமும் இயற்கைச் சூழலில் அமைந் திருப்பதால் இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புற்ற வண்ணம் பொழுது நன்கு கழிகின்றது. ஒழிந்த நேரத்தில் ஆழ்வார்கள் பாசுரங்களைப் படித்து அநுபவித்த வண்ணம் இருக்கின்றோம். மாலை நாலரை மணிக்குக் கைகால்களைச் சுத்தி செய்து கொண்டு திருக்கோயிலுக்குப் போகச் சித்தமா கின்றோம். இயற்கை அன்னையின் எழிலில் ஈடுபட்டவண்ணம் கோயிலை நோக்கி நடைகட்டுகின்றோம்.

கோயிலை நோக்கி வருங்கால் ஊருக்குள் புகுந்தே வருகின்றோம். ஊர் செழிப்பான ஊரே. "தென்திசைக்கு அணிகொள் திருச்செங்குன்றூர்"[10] என்று ஆழ்வார் சிறப்பித்துள்ளதையும் நினைவுகூர்கின்றோம். அந்தக்

10. திருவாய். 8, 4:3.

காலத்தில் 'மனக்கொள்சீர் மூவாயிரவர்''[11] அந்த ஊரில் வாழ்ந்திருத்தல் வேண்டும் என்றும் எண்ணுகின்றோம். அவர்கள் செய்யும் வேள்வியில் எழும் நறும்புகை விசும் பொளியையும் மறைந்திருக்கவேண்டும். இக்கருத்தினைச் சுட்டும்,

"நல்லநான் மறையோர் வேள்வியுள் மடுத்த
நறும்புகை விசும்பொளி மறைக்கும்''[12]
[வேள்வி-யாகம்; மடுத்த-உண்டான.]

என்ற பாசுரப் பகுதியையும் நினைவுகூர்கின்றோம். அக் காலத்தில் அவ்வூரில் வைணவர்கள் ஏராளமாக இருந்தனர் என்ற குறிப்பையும் பாசுரத்தின் மூலம் அறிகின்றோம்.

''கொடைப்பெரும் புகழார் இனையர்தன் ஆனார்
கூரிய விச்சையோடு ஒழுக்கம்
நடைப்பலி இயற்கைத் திருச்செங் குன்றூர்''[13]

[இனையர்-இன்னார் என்று பிரசித்தமானவர்கள்; தன் ஆனார்-எம்பெருமானோடொத்த ஞான சக்திகளையுடைய வர்கள்; விச்சை-வித்தை (ஞானம்); ஒழுக்கம்-அநுட்டானம்; நடைபலி - நாள்தோறு வழங்கும் திருவாராதனம்; இயற்கை-இயல்பாகவுடையது]

என்பது இதனைக் குறிப்பிடும் பாசுரப் பகுதியாகும். ஊரிலுள்ள மாடகூடங்களைப் பார்த்து மகிழ்ந்த வண்ணம் கோயிலுள்ள திசையை நோக்கிப் புறப்படுகின்றோம்.

திருக்கோயில் ஊருக்குச் சற்றேறக்குறைய இரண்டு ஃபர்லாங்கு தொலைவில் ஓர் ஆற்றங்கரையில் அமைக்கப் பெற்றுள்ளது. நடைபாதையின் இருமருங்கும் உள்ள

11. திருவாய் 8. 4: 6.
12. ஷை 8. 4: 5.
13. ஷை 8. 4: 9.

சோலைகளின் இயற்கை எழில்களைத் துய்த்த வண்ணம் ஆற்றங்கரையை நோக்கி நடக்கின்றோம். சிறிது தூரத்தில்

"செறிகுலை வாழை கமுகுதெங் கணிசூழ்
திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு"[14]

[செறி-நெருங்கிய; கமுகு-பாக்கு.]

நம் கண்ணுக்குத் தென்படுகின்றது. சிறிது தொலைவில்.

"செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
திருச் செங்குன் றூர்த்திருச் சிற்றாறு"[15]

என்று ஆழ்வார் குறிப்பிடும் திருச்சிற்றாற்றையும் காண்கின்றோம். அவற்றை நெருங்குவதற்கு முன்னரே சாலையோரத்தில் சற்று உயரமான இடத்தில் அகன்றதோர் இடப் பரப்பிலுள்ள திருக்கோயில் நம் கண்ணுக்குத் தட்டுப்படுகின்றது. முன்வாயில் நாற்புற மதிற்சுவர்கள் கட்டப் பெறாத நிலையில்-இடிந்து பாழடைந்த நிலையில் - காணப் பெறுகின்றது.[16] முன்வாயிலைக் கடந்து கோயிலை நண்ணுகின்றோம். திருக்கோயிலைக் குறுகும்போதே நம்மாழ்வாரின் பாசுரங்கள் நம் மனத்தில் குமிழியிடத் தொடங்குகின்றன. இத்திருப்பதி எம்பெருமான்மீது நம்மாழ்வார் மட்டிலும் ஒரு திருவாய்மொழி அருளியுள்ளார்.

கண்ணன் பிறந்த பொழுதிலிருந்தே அவனைக் கொல்லக் கம்சன் பல்வேறு உபாயங்களை மேற்கொள்ளுகின்றான். வில்விழவு ஒன்று ஏற்படுத்தி அதனைக் காரணமாகக் கொண்டு அக்ரூரனை அனுப்பிக் கண்ணனைத் திருவாய்ப் பாடியினின்றும் மதுரைக்கு வரவழைக்கின்றான். கண்ணனும் பலராமனும் மதுரையை நோக்கி வருகின்றனர்.

14. திருவாய் 8. 4: 4.
15. ஷை 8. 4: 2.
16. இப்பொழுது திருப்பணிமுடிந்து கோவில் நன்னிலையில் உள்ளது. (1986)

வழியில் கண்ணனைக் கொல்லுவதற்கென்றே குவலயாபீடம் என்ற யானை மதுவூட்டி நிறுத்தப்பெற்றிருக்கின்றது. முதலில் கண்ணனால் அந்த யானையின் உயிர் செகுக்கப் பெறுகின்றது. மலையின்மீதுள்ள இரண்டு கொடுமுடி களைத் தகர்ப்பதுபோல் கண்ணன் அந்த யானையின் கொம்புகளைப் பிடுங்கி யானையைக் கொன்று அதன்மீது இவர்ந்திருக்கும் பாகனையும் யமபுரத்திற்கு அனுப்பு கின்றான். அரண்மனை வாயிலைக் குறுகும்பொழுது சாணூரன், முஷ்டிகன் என்ற இரண்டு மல்லர்கள் சிறுவர் களை எதிர்க்கின்றனர். கண்ணன் அந்த இரண்டு மல்லர் களையும் தொலைத்தொழிக்கின்றான்.

அத்தாணி மண்டபத்தினுள்ளே நுழைந்த வுடன் கம்சனைச் சூழ்ந்து போர்க்கோலத்துடனிருந்த அரசர்களைப் புறமுதுகிட்டோடச் செய்து அரியாசனத்திருந்த கம்சனின் உயிரையும் போக்குகின்றான். இத்தனைச் செயல்களையும் ஒரு சேர முடித்த கண்ணன் திருச்செங்குன்றூர்த் திருச் சிற்றாற்றில் அர்ச்சை வடிவமாக எழுந்தருளியுள்ளான். அந்தத் திருப்பதியே தமக்குப் புகலிடமாகும் என்று திரு வுள்ளமாகின்றார் ஆழ்வார்.

''வார்கடா அருவி யானைமா மலையின்
மருப்பினைக் குவடுஇறுத்து உருட்டி
ஊர்கொள்திண் பாகன் உயிர்செகுத்து அரங்கின்
மல்லரைக் கொன்றுசூழ் பரண்மேல்
போர்கடா அரசர் புறக்கிட மாடம்
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த
சீர்கொள்சிற் றாயன் திருச்செங்குன் றூரில்
திருச்சிற்றாறு எங்கள்செல் சார்வே',[17]

17. திருவாய். 8. 4: 1.

[வார்க்கடா-ஒழுகுகின்ற மதம்; மருப்பு-கொம்பு; குவடு-சிகரம்; ஊர்கொள்-நடத்தவல்ல; செகுத்து-முடித்து; போர் கடா-போரைச் செலுத்துகின்ற; சிற்றாயன்- பாலகிருட்டிணன்; சார்வு-புகலிடம்]

என்பது ஆழ்வாரின் பாசுரம். யானையைக் கொன்ற பாலகிருட்டிணனின் தீரச் செயலை நினைந்து,

''கும்பமிகு மதயானை மருப்பு ஒசித்து, கஞ்சன்
குஞ்சிபிடித்து அடித்தபிரான்?''[18]

என்று பெருமிதங்கொண்டு பேசுவர் திருமங்கை மன்னர், நம்மாழ்வாரின் பாசுரத்தை நினைந்தே **ஆசாரிய ஹிருதயம்** இந்தத் திவ்விய தேசத்தில் சூரம், வீரம் முதலிய குணங்கள் விளங்கும் என்கின்றார்.

''மகாமதிகள் அச்சம்கெட்டு அமரும்
சௌர்யாதிகள், சிற்றாற்றிலே கொழிக்கும்''[19]

என்பது சூத்திரம். மகாமதிகள்—விதூரன் போன்றவர்கள், சௌர்யம்—சூரனது தன்மை. குவலயாபீடம், சாணூரன், முஷ்டிகன் கம்சன் முதலானவர்களைக் கொன்று வெளிப் படுத்திய சூரத்தனம் முதலானவைகள் இந்தத் திவ்விய தேசத்தில் ஆற்றுக்குள்ளிருக்கும் மணி, முத்து முதலான வைகள் கரையிலே கொழித்துத் தோற்றுமாறு போலே பிரகாசிக்கும் என்பது கருத்து.

அடுத்த பாசுரத்தில் எம்பெருமானின் தன்மையையும் பெருமையையும் பேசுகின்றார் ஆழ்வார்.

---

18. பெரிய திரு 3. 10: 3
19. ஆசா. ரிஹிரு. 174.

''எங்கள்செல் சார்வு யாமுடை அமுதம்
இமையவர் அப்பன்என் அப்பன்
பொங்குமூ உலகும் படைத்தளித் தழிக்கும்
பொருந்துமூ உருவன்எம் அருவன்''[20]

[இமையவர் அப்பன்-தேவாதி தேவன்; உருவன் உருவத்தையுடையவன்; அருவன்-அந்தராத்மாவாக இருப்பவன்.]

'எங்கள்' என்றும் 'யாமுடை' என்றும் பன்மையாகச் சொல்வதனால் ஆழ்வார் சம்பந்தம் பெற்ற நம்போலியரையும் அவர் உளப்படுத்திக் கூறுகின்றார் என்று கருதலாம். 'கேசவன் தமர்க்குப் பின்பு தனியரல்லரே' என்பது ஈடு[21]. 'குன்றம் எடுத்த பிரான் அடியாரோடும், ஒன்றிநின்ற சடகோபன்[22] என்று தம்மைக் குறிப்பிட்டவரன்றோ? 'இமையவர் அப்பன்' என்று சொல்லிய உடனே 'என்அப்பன்' என்று கூறுவதனால் நித்திய சூரிகளை அடிமைகொண்டாற் போல் தம்மையும் அடிமை கொண்டவன் என்று உரிமை கொண்டாடுகின்றார் ஆழ்வார். குறைவற்றார்க்கும் ஸத்தா ஹேதுவாய் குறைவுக் கெல்லையான எனக்கும் ஸத்தா ஹேது வானவன்''[23] என்பது ஈடு. நான்முகனுக்கு அந்தர் யாமியாக இருந்து படைப்புத் தொழிலை, நடத்தியும், தானான தன்மையில் காத்தலைப் புரிந்தும், உருத்திரனுக்கு அந்தர்யாமியாக இருந்து அழித்தல் தொழிலை மேற் கொண்டும் இருக்கும் எம்பெருமான் தனது அச்சத்தைப்

20. திருவாய் 8. 4: 2,

21. கேசன்வதமர்' (திருவாய் 2.7) என்ற பன்னிரு திருநாமப் பாட்டினை நினைவு கொண்டு.

22 திருவாய் 7. 4: 11.

.23 ஸத்தா-சத்தை; இருப்பு - உளதாம் தன்மை.

அச்சத்தைப் போக்கித் தனக்குத் தாரகனாகவும் இருக்கின்றான் என்பது ஆழ்வாரது நம்பிக்கை. படைப்பு முதலான முத்தொழில்களையும் நடைபெறச் செய்பவன் என்ற கருத்து இன்னொரு பாசுரத்திலும் வற்புறுத்தப்பெறுகின்றது.

> "படைப்பொடு கெடுப்புக் காப்பவன் பிரம
> பரம்பரன் சிவபிரான் அவனே
> இடைப்புக்குஓர் உருவும் ஒழிவில்லை அவனே
> புகழ்வில்லை யாவையும் தானே"[23]

[கெடுப்பு-அழித்தல்; பரம்பரன்-உயர்வுக்கும் அப்பாற்பட்டவன்; இடைப்புக்கும்-படைப்புக்கும் கெடுப்புக்கும் இடையில் புகுந்து; ஓர்உருவும் ஒழிவில்லை-எல்லாப் பொருள்களிலும் அந்தர்யாமியாக இருப்பவன்; புகழ்வு- புனைந்துரை]

ஆக்கல், அழித்தல், அளித்தல் இவையெல்லாம் தான் இட்ட வழக்காக இருப்பவன்; எல்லாப் பொருள்களையும் உடலாகக் கொண்டு தான் ஆன்மாவாக இருப்பவன். சேதநம் அசேதநம் என்ற வேறுபாடு இன்றி எல்லாம் அவனுக்கு உரிமையாகும். இவை யாவும் புனைந்துரையன்று, உண்மையே என்கிறார் ஆழ்வார்.

திருச்சிற்றாற்று எம்பெருமானது பெருமைகளை இன்னும் பலவாறாகப் பேசி இனியராகின்றார் குருகூர் வள்ளல்.

> "பெரியமூ உலகும்
> நிறையப்பேர் உருவமாய் நிமிர்ந்த
> குறியமான் எம்மான் குரைக் கடல் கடைந்த
> கோலமா ணிக்கம்என் அம்மான்"[24]

23. திருவாய் 8. 4: 9.
24. ஷை 8. 4: 4.

[பேர்உருவம்-பெரிய வடிவம்; குறியமாண்-வாமன பிரமசாரி; குரைகடல்-ஒலிக்கின்றகடல்; கோலமாணிக்கம்-அழகிய இரத்தினம்.]

என்ற பாசுரப் பகுதியில் மாபலியின் வலியை அடக்கிய செயலும் கடல் கடைந்த செயலும் குறிப்பிடப் பெறு கின்றன. மூவுலகின் பெருமைக்குத் தக்கவாறு எம்பெருமான் தன் உருவத்திலும் பெருமை கொண்டான் போலும். திருவுருத்தைப் பெரிதாக வளரச் செய்தது மூவுலகங்களையும் அளந்து கைப்பற்றிக் கொள்வதற்காக அன்று; நடைபெற முடியாததையும் நடைபெறும்படி செய்ய வல்லவனாக (அகடி தகடநா சமர்த்தன்)[25] எம்பெருமான் தன் சிறிய உருவத்தாலும் மூவுலகையும் வெல்ல வல்லவன். ஆயினும் இங்ஙனம் வளர்ந்த காரணத்தை நம்பிள்ளை, "தொடங்கிய காரியம் வென்ற மகிழ்ச்சி மிகுதியாலே ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே வளர்ந்த படி"[26] என்று அருளிச் செய்திருப்பது இன்சுவை மிக்கது. இந்த உலகில் ஒருவனுக்குத் தன் விருப்பம் நிறை வேறப்பெற்றால் உடல் பூரிப்பதை நாம் காண்கின்றோ மன்றோ? அப்படியே இங்கும் எம்பெருமான் பக்கலில் பல்லைக் காட்டிப் பரிதாபம் தோன்ற நின்ற இந்திரனுக்குத் தான் துணை செய்யப் புகுந்து அது நிறைவேறப் பெறுகை யாலே உடல் பூரித்ததாயிற்று. 'குறியமாண் எம்மான்' என்பதில் "கொண்ட கோலக் குறளுருவாய்ச் சென்று"[27] என்று ஆண்டாள் ஈடுபடும்படி அழகே வடிவெடுத்ததாகக் கொண்ட வாமன வடிவத்தையும் இரவலனாய் நின்ற நிலையையும் காட்டித் தம்மை அடிமைப்படுத்திக்

25. அ+கடித+கடநா — நடைபெறாததையும் நடை பெறும்படிசெய்யவல்ல
26. ப்ரீதி - மகிழ்ச்சி; ப்ரகர்ஷம் - அதிகம்.
27. நாச். திரு. 4 : 9

கொண்டவன் என்னும் கருத்து இதில் நிழலிடுவது கண்டு மகிழத்தக்கது. அன்றியும், பெருவிலையதான இரத்தினம் போல் இருக்கின்ற வடிவத்தைக் கொண்டல்லவா கடலைக் கடைந்தான் எம்பெருமான்? இங்ஙனம் தன் ஆற்றலையும் அழகையும் காட்டித் தன்னை அடிமை கொண்டான் என்ற குறிப்பு 'குரை கடல் கடைந்த கோலமாணிக்கம் என் அம்மான்' என்ற தொடரில் இருப்பதைக் கண்டு மகிழலாம்.

திருச்சிற்றாற்று எம்பெருமான் ஆழ்வாருக்கு அச்சமற்ற புகலிடம் தருபவனாவான்; அவருக்கு உயிர் போன்றவன்; நித்திய சூரிகட்குத் தந்தையாகவும் தாயாகவும் இருப்பவன்; விரிந்த திருப்பாற் கடலிலே அறிதுயில் கொண்டுள்ள அப் பெருமானின் தன்மை அவனாலேயே அறிதற்கரியது.

"எனக்குநல் அரணை எனதுஆர் உயிரை
 இமையவர் தந்தைதாய் தன்னைத்
தனக்கும்தன் தன்மை அறிவுஅரி யானைத்
 தடங்கடற் பள்ளி அம்மானை"[28]

[அரண்-புகலிடம்; இமையவர்-நித்திய சூரிகள்; கடல்-திருப்பாற்கடல்.]

என்பது பாசுரப் பகுதி. இத்தகைய பெருமானைத் திருச்செங் குன்றூர்த் திருச்சிற்றாற்றில் கண்டதாகக் கூறுகின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் 'அயர்வறும் அமரர்கள் அதிபதியாய்'[29] இருக்கும் எம்பெருமான் ஆழ்வாருக்கு நாதனாக இருப்பவன். அவனது பரத்துவத்தையும் செளலப்பியத்தையும் ஒப்பிட்டு வியந்து பேசுகின்றார் ஆழ்வார். இந்த மாநிலம் பிரளயத்தில்

28. திருவாய் 8.4 : 6
29. ஷை 1.1 : 1

சிக்கி மறைந்து போகாதிருக்குமாறு பாதுகாத்த பெருமான் அவன். அந்த வல்லமையைக்காட்டி ஆழ்வாரின் அநாதியான வலிய தீவினைகள் யாவும் 'தீயினுள் தூசு'[30] போன்று ஒரு நொடிப் பொழுதில் மாளும்படி செய்து அவரை அடிமை கொண்ட பெருந்தகை. இதனை,

"என் அமர் பெருமான் இமையவர் பெருமான்
இருநிலம் இடந்தஎம் பெருமான்
முன்னைவல் வினைகள் முழுதுடன் மாள
என்னைஆள் கின்றஎம் பெருமான்"[31]

[இமையவர்-நித்திய சூரிகள்; இருநிலம்-பெரிய பூமி; இடந்த-பெயர்த்து எடுத்த; மாள-அழியும்படி: ஆள்கின்ற-அடிமை கொள்ளுகின்ற.]

என்ற பாசுரப்பகுதியால் அறியலாம். ஈண்டு இருநிலம் இடந்த செய்தியைக் குறிப்பிடும்,

"சிலம்பின்இடைச் சிறுபரல்போல், பெரியமேரு
திருக்குளம்பில் கணகணப்ப, திருஆ காரம்
குலுங்க,நில மடந்தைதனை இடந்து புல்கிக்
கோட்டிடைவைத் தருளியஎங் கோமான்"[32]

[சிலம்பின் இடை - கால்தண்டையின் நடுவிலிட்ட; பரல்-பருக்கைக் கல்; கணகணப்ப - கணகணவென்று ஒலிக்க; திரு ஆகாரம் - பிராட்டி இருக்கும் இருப்பு; நிலமடந்தை - பூமிப் பிராட்டியார்; இடந்து - கோட்டால் குத்தி; புல்கி - தழுவி; கோமான் - பெருமான்.]

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரப் பகுதி நினைந்து சுவைத்து மகிழத் தக்கதாகும்.

30. திருப்பாவை 5.
31. திருவாய் 8 : 4 : 3.
32. பெரி திரு. 4.4 : 8.

மேலும், இச்சிற்றாற்றங்கரையான் தேவர்கட்கும் புகலிடமாக இருப்பவன்; மிடுக்கான அசுரர்கட்குக் கூற்றை யொப்பவன்

"புகர்கொள் வானவர்கள் புகலிடம் தன்னை
அசுரர்வன் கையர்வெம் கூற்றை"[33]

[புகர் - ஒளி; கூற்று - யமன்]

என்பது பாசுரப்பகுதி. இத்தகைய பெருமை வாய்ந்த எம்பெருமானைத் தவிர தனக்கு வேறு துணை இல்லை என்கின்றார் ஆழ்வார்.

"செங்கயல் உகளும் தேம்பணை புடைசூழ்
திருச்செங்குன் றூர்த்திருச் சிற்றாறு
அங்குஅமர் கின்றஆதியான் அல்லால்
யாவர்மற்று என்அமர் துணையே"[34]

[கயல் - ஒருவகை மீன்; உகளும் - துள்ளுகின்ற; தேம்பணை - தேன் நிறைந்த மருத நிலம்; புடை - பக்கம்; ஆதியான் - காரணப் பொருளானவன்.]

என்பது ஆழ்வார் திருவாக்கு.

மேலும் இதனை "மெய்ம்மையே நின்ற எம்பெருமான் அடியிணை அல்லது ஓர் அரணே...பிறிது இல்லை"[35] என்று வற்புறுத்துகின்றார். அவனுடைய இரண்டு திருவடிகளே யன்றித் தனக்கு வேறு பாதுகாவல் இல்லை என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை.

மற்ற திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள் அனைவரும் திருச்சிற்றாற்றங்கரை எம்

33. திருவாய் 8.4 : 8.
34. ஷை 8 4 : 2.
35. ஷை 8.4 : 4.

பெருமானைக் காட்டிலும் வேறுபட்டவர்கள் அல்லர் என்ற உண்மைப் பொருளைத் தாம் நன்கு அறிந்திருப்பினும், தம் உயிர் அப்பெருமானையன்றி வேறு ஒருவனைப் பொருந்தி விரும்பமாட்டாது என்கின்றார்.

“அல்லதுஓர் அரணும் அவனில்வேறு இல்லை;
அதுபொருள் ஆகிலும், அவனை
அல்லதுஎன் ஆவி அமர்ந்துஅணை கில்லாது”[36]

[அல்லது - அவனைத்தவிர; அரண் - இரட்சகன்; பொருள் - உண்மைப் பொருள்: அமர்ந்து - பொருந்தி; அணைகில்லாது - விரும்பமாட்டாது.]

என்பதனால் இதனை அறியலாம். சிறிய திருவடி இராமனைத் தவிரப் பரமபதநாதனையும் வேண்டேன் என்று சொல்லவில்லையா? அதுபோலவே இவரும் கொள்ளுகின்றார். இதற்கு அவரவர் மனமே பிரமாணம் ஆகும். இங்ஙனம் அந்த எம்பெருமானைக் கிட்டப் பெற்று இனியராகின்றார் ஆழ்வார்.

“அமர்ந்த நாதனை அவரவர் ஆகி
அவர்க்குஅருள் அருளும்அம் மானை
அமர்ந்ததண் பழனம் திருச்செங்குன் றூரில்
..........................................
அமர்ந்தமா யோனை, முக்கண்அம் மானை,
நான்முக னைஅமர்ந்தேனே”[37]

[அமர்ந்த -பொருந்திய; நாதனை-தலைவனை; பழனம் - வயல்; அமர்ந்த - எழுந்தருளியுள்ள; முக்கண் அம்மான் - சிவன்; நான்முகன் - பிரமன்; அமர்ந்தேன் - பொருந்தப் பெற்றேன்.

---

36. திருவாய் 8.4 : 5.
37. ஷை 8. 4 : 10

"முக்கண் அம்மானை, நான்முகனை" என்றது 'சிவபிரானுக்கும் நான்முகனுக்கும் அந்தர்யாமியாக இருக்கும் எம்பெருமானை' என்பது குறிப்பு.

இந்த எண்ணங்கள் யாவும் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். இத்திருப்பதி எம்பெருமானின் திருநாமம் **இமையவர் அப்பன்** என்பது; தாயார் **செங்கமலவல்லி**. இவர்கள் இருவரையும் மனமாரச் சேவிக்கின்றோம். கிழக்கே திருமுகமண்டலங் கொண்டு நின்ற திருக்கோலத்தில் இவர்கள் சேவை சாதிக்கின்றனர். அவர்கள் சந்நிதியிலேயே திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாற்றுத் திருவாய்மொழிப் பதிகத்தைப் பக்தியுடன் ஓதிப் பரவசம் அடைகின்றோம்.

"தேனைநன் பாலைக் கன்னலை அமுதைத்
திருந்துஉல குண்டஅம் மானை,
வானநான் முகனை மலர்ந்ததண் கொப்பூழ்
மலர்மிசைப் படைத்தமா யோனை"[38]

[கன்னல் - கருப்பஞ்சாறு; கொப்பூழ் - நாபி]

என்று நம்மாழ்வார் அப்பெருமானை அநுபவித்தது போன்றே நாமும் அநுபவிக்கின்றோம்.

"இப்பத்தும், வானின்மீது ஏற்றி அருள் செய்துமுடிக்கும்
பிறவிமா யக்கூத் தினையே"[39]

என்று ஆழ்வார் பணித்தவண்ணம் நம்மைப் பரமபதத்தில் ஏறவிட்டு இறைபணியாகின்ற கைங்கரியத்தைப் பெறச் செய்து பிறப்பாகிய நாடகத்தையும் முடித்து விடும் என்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். 'முந்துறப் பரமபதத்தைக்

38. திருவாய். 8.4 : 11
39. ஷை 8.4 : 11

கொடுத்துப் பின்பு சம்சாரமாகிய நாடகத்தை அறுக்கும், என்று சொல்லுவதை 'முன்னர் சம்சாரத்தை அறுத்துப் பின்னர்த் திருநாட்டில் கொண்டு செலுத்தும்' என்று சொல்லி யிருக்கவேண்டும். முறைமாற்றிச் சொன்னதன் சுவையை நம்பிள்ளை வெளியிடுவதைக் காண்மின்: 'நாடு அராஜக மானால் முன்னம் ராஜபுத்திரன் தலையிலே முடியை வைத்துப் பின்னை விலங்கு வெட்டிவிடுமாப்போலே' என்று, மன்னன் மகன் ஏதோ குற்றம் புரிந்ததற்காகச் சிறை யிலடைக்கப்பெற்று விலங்கிடப் பெற்றிருந்தான்; திடீரென்று மன்னன் இறந்தான்; சிறையிலிருந்த அரசகுமாரன்மீது முடி கவிக்க வேண்டியதாயிற்று. அந்நிலையில் ஒரு நொடிப் பொழுதும் நாடு அரசனற்ற நிலையில் இருக்கக்கூடாதென்று முன்னர் அவன் தலையில் கிரீடத்தை வைத்துப் பின்னர் சிறை வீடு செய்வார்களாம். அது போல என்க. இந்த உணர்ச்சிப் பெருக்கில் திளைத்த நிலையில்,

''வரவேண்டும் கண்டாய்,
 மதிகலங்கி விக்குள்
பொரவே உயிர்மாயும்
 போழ்து - பரமேட்டி!
செங்குன்றூர் மாலே!
 சிறைப்பறவை மேல்கனகப்
பைங்குன்றுஊர் கார்போல்
 பறந்து''[40]

[ஊர் - ஊர்ந்துவரும்; கார் - மேகம்]

என்ற திவ்விய கவியின் வாக்கை நினைவு கூர்கின்றோம். நாமும் அப்பெருமானுக்கு அதே வேண்டுகோளை விடுக் கின்றோம். பக்திப்பெருக்கோடும் நிலையில் பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்தை அடையச் சித்தமாகின்றோம்.

40. நூற் திருஅந். 64.

## 6. திருக்கடித்தானத்து உறை திருமால்

வைணவ தத்துவப்படி இறைவன் எழுந்தருளியிருக்கும் நிலைகள் பரத்துவம், வியூகம். விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து என்பதை நாம் அறிவோம். இறைவன் எந்த நிலையில் இருப்பினும் தன் ஆற்றல் முதலியவற்றில் குறைவுபடான் என்பதனையும் அறிவோம். இதனால்தான் ஆழ்வார்கள் பாசுரங்களில் இந்நிலைகளில் ஒன்றோ பலவோ கலந்து வருவதைக் காணலாம். எடுத்துக்காட்டாக,

''வேங்க டத்துஅரி யைப்பரி கீறியை
வெண்ணெய் உண்டுஉர லினிடை யாப்புண்ட
திங்க ரும்பினை, தேனைநன் பாலினை
அன்றி என்மனம் சிந்தைசெய் யாதே''[1]

என்று திருமங்கையாழ்வார் கூறுவதைக் காண்க. 'வேங்கடத்து அரி' என்ற தொடர் திருவேங்கடமுடையானைக் குறிக்கின்றது. இஃது அர்ச்சாவதார நிலை. 'பரிகீறியை' என்பது குதிரை வடிவாய் வந்த கேசி என்ற அசுரனைக் கொன்ற எம்பெருமான்; இது விபவதார நிலை. 'உரலிடை யாப்புண்ட தீங்கரும்பு' என்பது யசோதையால் உரலிடைக் கட்டுண்ட பாலகிருட்டிணனைக் குறிப்பது; இதுவும் விபவ நிலையே. எனவே, இப்பாசுரப் பகுதியில் அர்ச்சாவதார நிலையும் விபவாதார நிலையும் கலந்து வந்துள்ளமை அறியக்கிடக்கின்றது.

---

1. பெரி திரு. 7.3 : 6

"பாற்கடலும் வேங்கடமும்
பாம்பும் பனிவிசும்பும்,
நூற்கடலும் நுண் நூல
தாமேரைமேல், - பாற்பட்(டு)
இருந்தார் மனமும்
இடமாகக் கொண்டான்
குருந்துஒசித்த கோபால
கன்"[2]
[பனிவிசும்பு—பரமபதம்]

என்ற பேயாழ்வார் பாசுரத்தில் பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்ற ஐந்து நிலைகளும் ஒருங்கே வந்துள்ளமை அறியப்பெறும். குருந்த மரத்தை முறித்தெறிந்த கண்ணன் என்பது விபவாவதார நிலையைக் குறிக்கின்றது. இவனே திருப்பாற்கடலிலும் (வியூகம்), திருவேங்கடத்திலும் (அர்ச்சை), பரமபதத்திலும் (பரத்துவம்), யோகியர் மனத்திலும் (அந்தர்யாமித்துவம்) எழுந்தருளியிருப்பதாகக் கூறப்பெறுவதால் எல்லா நிலைகளிலும் இருப்பவன் எம்பெருமான் என்பது பெறப்படும்.

இந்த எண்ணங்கள் நம் மனதில் எழுந்தவண்ணம் திருக்கடித்தானம் என்ற திவ்விய தேசத்திற்குப் புறப்படச் சித்தமாகின்றோம். கோட்டயத்தில் அதிகாலையில் நீராடித் தூய ஆடையை உடுத்திக் கொண்டு இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம். வண்டி காலை சுமார் ஏழரை மணிக்குப் புறப்படுகின்றது. அதில் ஏறி அரைமணி நேரத்தில் செங்கணாச்சேரி என்ற ஊரை அடைகின்றோம், அங்கு இறங்கிப் பேருந்து மூலம் திருக்கடித்தானத்தை அடையலாம். செங்கணாச்சேரியிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது திருக்கடித்தானம் என்னும் திருப்பதி. ஆகவே

2. மூன் திருவந் - 32.

நடந்தே அந்த ஊரை அடையலாம். கோடை காலமாக இருப்பினும் தோப்பும் துரவுமாக உள்ள இடமானதால் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்த வண்ணம் நடந்து செல்வது சிறப்பு. சுமார் ஒன்றரை மணி நேரத்தில் நடந்தே "பூத்த பொழில் தண் திருக்கடித்தானத்தை"[3] அடைகின்றோம். நறுமலர்கள் நிறைந்த சோலைகளும் குளிர்ச்சியைத் தரும் தோப்புக்களும் சூழ்ந்த ஊரானதால் நடந்த களைப்புத் தோன்றுவதில்லை. இப்பகுதியைக் குறிக்கும் போது ஆழ்வாரும் "சோலைத் திருக்கடித்தானம்"[4] என்றே குறிப்பிடுகின்றார். ஆழ்வார் காலத்தில் இந்தத் திருப்பதியில் வேதியர்கள் கூட்டம் மிக்கிருந்தது. அவர்கள் சதா நான்கு மறைகளையும் நிலைநின்று முழங்கும்படி செய்து வருவர். இதனை நினைவில் கொண்டே ஆழ்வாரும்,

"நற்புகழ் வேதியர் நான்மறை நின்று அதிர்
கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே"[5]

[வேதியர் - பிராமணர்; மறை - வேதம்; நின்று அதிர் - நிலைநின்று முழங்கும்.]

என்று கூறியுள்ளதாகக் கருதலாம். மரங்கள் செறிந்து குளிர்ச்சியை உண்டாக்குவதால் தேவர்கள் நாட்டிலுள்ள கற்பகச் சோலையை நினைவுகூரும்படி செய்கின்றது; திருக்கடித்தானத்துச் சோலையைக் கற்பகச் சோலையுடன் ஒப்ப நோக்கும்படியும் தூண்டுகின்றது. 'மணத்தையுடைய இடம்' எனப் பொருள்படும் 'திருக்கடித்தானம்' என்ற பெயர் இவ்வூருக்கு மிகவும் பொருந்தும் என்று நினைக்கவும் தோன்றுகின்றது. இத் திருப்பதி எம்பெருமானை

3. திருவாய். 8.6 : 6.
4. ஷை 8.6 : 11.
5. ஷை 8.6 : 10.

நம்மாழ்வார் மட்டிலுமே ஒரு பதிகத்தால் மங்காளாசாசனம் செய்துள்ளார்.[6]

இத் திருப்பதியை நெருங்க நெருங்க நம்மாழ்வாரின் பாசுரங்கள் ஒவ்வொன்றாக நம் சிந்தையில் குமிழியிடத் தொடங்குகின்றன. அவர் பெற்ற அநுபவத்தையே நாமும் பெற முயல்கின்றோம். எம்பெருமான் இரவு பகலென்று பாராமல் தன்னையே நினைத்து வாழுமாறு ஆழ்வாருக்குத் திருவருளைச் சுரந்தான்; அந்தப் பேரருளை எண்ணி எண்ணி இனியராகின்றார் ஆழ்வார்.

"எல்லியும் காலையும் தன்னை நினைந்துஎழ
நல்ல அருள்கள் நமக்கேதந்து அருள்செய்வான்"[7]

[எல்லி - இரவு; அருள் - கிருபை.]

என்பது அவரது திருவாக்கு 'நமக்கே தந்து அருள் செய்வான்' என்பதால் எம்பெருமான் வேறொருவருக்கும் இவ்வருள் பாலிக்கவில்லை என்பது ஆழ்வாரின் நினைப்பு. தாம் பெற்ற பேற்றினை நித்திய சூரிகளும் பெறவில்லை என்பதாக எண்ணுகின்றார் ஆழ்வார்.

அடுத்து, அந்த அருள் எங்ஙனம் பாலிக்கப்பெற்றது என்பதைச் சொல்லப் புகுகின்றார் ஆழ்வார். அதனை,

"திருக்கடித் தானமும் என்னுடைச் சிந்தையும்
ஒருக்கடுத் துள்ளே உறையும் பிரான்கண்டீர்"[8]

[ஒருங்கஅடுத்து - ஒருக்கடுத்து; ஒன்றாக நினைத்து என்றபடி: உறையும் - வதியும்.]

---

6. திருவாய். 8.6.
7. ஷை 8.6:1.
8. ஷை 8.6:2.

என்ற பாசுரத்தால் அருள்கின்றார். திருக்கடித்தானம் என்ற திருப்பதியையும் தன்னுடைய சிந்தையையும் ஒன்றாக நினைப்பதைப்பற்றி, "அங்குத்தை வாஸம் சாதனம்; இங்குத்தை வாசம் ஸாத்யம்"[9] என்று ஸ்ரீவசன பூஷணம் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது. அதாவது, திவ்விய தேசங்களைவிட ஞானியரின் திருமேனியில் எம்பெருமான் கொண்டுள்ள மதிப்பு அளவற்றது; அவன் திவ்விய தேசங்களில் எழுந்தருளியிருப்பது சேதநரை அகப்படுத்திக் கொள்ளுகைக்காகவேயாதலால், அங்கு வசிப்பது சாதனம்; இச்சேதநன் திருந்தி இவனுடைய இதயத்தினுள்தான் வசிக்கப்பெற்றது அத்திவ்விய தேசவாசமாகின்ற கிருஷியின் (வேளாண்மை) பயனாகையால் ஞானியரிடத்தின் வாசமே எம்பெருமானுக்குச் சிறந்த பயனாகும். இதனையே இந்த ஆழ்வார் பிறிதோரிடத்தில்,

"இமையோர் வணங்க
மலைமேல்தான்நின்று என்மனத்துள் இருந்தான்"[10]

[மலை - திருமலை; இமையோர் - நித்திய சூரிகள்.]

என்று குறிப்பிட்டுள்ளமை காண்க. பெரியாழ்வாரும்,

"பனிக்கடலில் பள்ளிக்கோளைப்
பழகவிட்டு ஓடிவந்து,என்
மனக்கடலில் வாழவல்ல
மாய மணாள நம்பீ"[11]

[பனிக்கடல்-குளிர்ந்த திருப்பாற்கடல்; பள்ளிக்கோளை - பள்ளிகொள்ளுதலை; பழகவிட்டு-பழகியதாகவிட்டு (மறந்துவிட்டு).]

9. ஸ்ரீவச. பூஷ-இரண்டாம் பிரகரணம்-171
அங்குத்தை-அந்த இடத்தில்; சாதனம்-கருவி; சாத்தியம் - சாதனத்தால் பெறுவது; பேறு.
10. திருவாய். 10. 4 : 4.
11. பெரியாழ். திரு. 5. 4:9.

என்று திருவாய் மலர்ந்துள்ளமை ஈண்டு நினைவுகூரத் தக்கது. ஆழ்வார்கள் போன்றவர்களின் உள்ளத்தில் எம்பெருமானுக்கு வாசம் கிடைத்துவிட்டால் திருப்பாற் கடல், பரமபதம் முதலான இடங்களிலும் அவனுக்கு விருப்பம் குறைந்துவிடுமாம். இது,

"கல்லும் கனைகடலும்
வைகுந்த வானாடும்
புல்லென்று ஒழிந்தனகொல்?
ஏபாவம்,—வெல்ல
நெடியான் நிறங்கரியான்
உள்புகுந்து நீங்கான்,
அடியேனது உள்ளத்து
அகம்"[12]

[கல் - திருவேங்கடமலை; கனைகடல் - ஒலிக்கின்ற பாற் கடல்; வான் நாடு - வானுலகம்; புல் என்று - அற்பமாய்; வெல்ல - மிக; நெடியான் - உயர்ந்தவன்; உள்ளம்-நெஞ்சம்.]

என்ற பாசுரத்தால் விளக்கமாகும். இங்ஙனம் ஞானியர் இதயமே எம்பெருமானுக்கு உகப்பான இடமாகில் பரமபதம் போன்ற இடங்களை அவன் கைவிடவேண்டுமல்லவா? அப்படி விட்டுவிட்டதாகவும் தெரியவில்லையே; இதற்குக் காரணம் என்ன? என்ற வினா எழுகின்றது. ஞானியர் திவ்விய தேசங்களில் சிறப்பான பற்று வைத்திருப்பதனால் அவர்களுக்குகந்த இடம் தமக்கும் விருப்பமானதே என்கின்ற எண்ணத்தினாலும், இங்கு தாம் வசித்ததனாலன்றோ தமக்கு ஞானியரின் இதயத்தில் வசிக்கும் பேறு கிடைத்தது என்ற நன்றியுணர்ச்சியினாலும் எம்பெருமானுக்கு திவ்விய தேசமும் விருப்பமான இடமாகின்றது. இதனைத் திருமங்கையாழ்வார்,

12. பெரி. திரு-68.

''கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார்''[13]

[மெய்யம் - திருமெய்யம்; கச்சி - காஞ்சி; பேர் - திருப்பேர் நகர்; மல்லை - திருக்கடல் மல்லை: மண்டினார் - மிகவும் விரும்பினார்.]

என்று குறிப்பிடுவர். ஆகவே, திருக்கடித்தானப் பகுதியையும் ஆழ்வாரது உள்ளத்தையும் எம்பெருமான் ஒக்க நினைத்துப் பரிமாறுவதாக அருளிச் செய்யப்பெற்றது.

இக்கருத்து இன்னொரு பாசுரத்தில் இன்னும் தெளிவாக உள்ளது. திருக்கடித்தானத்தைக் கோயிலாகக் கொண்ட எம்பெருமான் தனது நெஞ்ச நாட்டையும் குடியிருப்பாகக் கொண்டு விட்டான் என்கின்றார் ஆழ்வார்.

''மாயப் பிரான்என வல்வினை மாய்ந்துஅற,
நேயத்தி னால்நெஞ்சம் நாடு குடிகொண்டான்,
தேசத்(து) அமரர் திருக்கடித் தானத்தை,
வாசப் பொழில்மன்னு கோயில்கொண் டானே''[14]

[நேயம் - அன்பு; தேசம்-தேஜஸ் (ஒளி); அமரர் - நித்திய சூரிகள்; மன்னு - கூடின.]

சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு என்றாற்போல் 'நெஞ்சநாடு' என்று ஒரு நாட்டைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இங்கு ஈடு: ''ஸம்ச்லேஷ விச்லேஷங்களாலே ஒரு த்ரிபாத் விபூதியாக்கினானாயிற்று இவர் திருவுள்ளத்தை''.[15]

13. திருக்குறுந்-19.
14. திருவாய். 8. 6:4.
15. த்ரிபாத் விபூதி - பரமபதம்; எம்பெருமானுடைய செல்வத்தை நான்கு கூறுகளாக்கி மூன்று கூறுகள் பரமபதம் என்றும், ஒரு கூறு இவ்வுலகம் என்றும் கூறுவர்.

கலவியினாலும் பிரிவினாலும் ஒரு பரமபதத்தைப் போலே ஆக்கினானாயிற்று இவர் திருவுள்ளத்தை என்பது இதன் கருத்து. இதை மேலும் விளக்குவோம்; நித்திய சூரிகள் திருக்கடித்தானத்தில் வந்து தேசு உற்றனர். அங்கு மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த கோயில் கொண்டமையைக் கண்டபோது இவன் இந்த நாட்டை விடான் என்று தோன்றிற்று. அங்கு நின்று ஆழ்வாரின் நெஞ்சைப் பரிசுத்தமாக்கி அங்குக் குடிகொண்டான். அமரர்கள் நிற்க அங்கு இடம்வேண்டுமல்லவா? அவன் திருவுள்ளத்தினால் இவர் நெஞ்சமும் பெரிய நாடு போலாயிற்று; அது நித்திய விபூதி என்ற நாடாகவும் கொள்ளப்படும். நித்திய விபூதியை விட்டு வந்த பிரிவும் இவர் நெஞ்சக் கலவியில் அவனது அருளால் இவரது நெஞ்சினையே பரமபதம் போலாக்கி விட்டது. "காணவாராய் என்று கண்ணும் வாயும் துவர்ந்துப்பட்ட"[16] இவரது விடாய் எல்லாம் தொலையும் படி இவரது நெஞ்சத்தில் நிரந்தரமாகக் குடியேறினான் எம்பெருமான். தாம் உகந்த இடம் என்று திருக்கடித் தானத்தையும் துறந்தான் அல்லன்; அங்கும் கோயில் கொண்டிரா நின்றான் என்கின்றார். எம்பெருமான் அன்பு கூர்ந்து தம் நெஞ்சகத்தில் குடியேறியதனால் இவருடைய வல்வினைகள் யாவும் ஒழிந்து போயின என்று அகம்மகிழ்ந்து இனியராகின்றார் ஆழ்வார். இதனால் "கொடியேன் இடர் முற்றவும் மாய்த்த பிரான்"[17] என்று பின்னரும் எம்பெருமானை நினைந்து போற்றுகின்றார். அந்தத் திருப்பதியைத் துதித்த அளவிலேயே துக்கங்கள் யாவும் தொலைந்து போகும் என்று நமக்கும் வலியுறுத்துகின்றார். "திருக்கடித்தானத்தை ஏத்த நில்லா குறிக் கொண்மின் இடரே" என்பது அவரது திருவாக்கு.

16. திருவாய். 8. 5 : 2.
17. ஷை. 8. 6. 6.

ஆழ்வாரது நெஞ்ச நாட்டில் எம்பெருமான் தனியாக வந்து குடியேறவில்லை. திருக்கடித்தானம் என்ற திவ்விய தேசத்துடன் தன் நெஞ்சத்தில் புகுந்துவிட்டான் என்று மேலும் விளக்குகின்றார்.

''கோயில்கொண் டான்தன் திருக்கடித் தானத்தை
கோயில்கொண் டான்அத னோடும்என் நெஞ்சகம்
கோயில்கொள் தெய்வம்எல் லாம்தொழ, வைகுந்தம்
கோயில்கொண் டகுடக் கூத்தவம் மானே''[18]

[தெய்வம் - நித்திய சூரிகள்.]

திருக்கடித்தானத்தைக் கோயிலாகக் கொண்ட எம்பெருமான் ஆழ்வாரின் நெஞ்சகத்தில் புக விரும்பினான். அப்போது அந்த இடத்தை விட்டுத் தான் மாத்திரமே புக நினைத்தான். அப்படியாகில் செருப்பு வைத்துத் திருவடி தொழுவாரைப் போலே ஆக ஒண்ணாது[19] என்று தோன்றிற்றாம். ஆகவே அத்திருப்பதியுடன் வந்து புகுந்தனனாம்.

''அரவத்து அமளியி னோடும்
அழகிய பாற்கட லோடும்,
அரவிந்தப் பாவையும் தானும்
அகம்படி வந்து புகுந்து,
பரவைத் திரைபல மோதப்
பள்ளிகொள் கின்ற பிரானை''[20]

18. திருவாய். 8. 6 : 5.

19. திருக்கோயிலுக்குச் சென்ற ஓர் அன்பர் நடையனைக் கோபுர வாயிலில் விட்டுவிட்டு உள்ளே பெருமானைச் சேவிக்கச் சென்றாராம். அங்கும் அவருக்கு நடையன் மீதே நினைவு குடிகொண்டிருந்ததனால் 'தீர்த்தம் சாதிக்க' என்று சொல்வதற்குப் பதிலாகச் 'செருப்பு சாதிக்க' என்றாராம்.

[அரவம் - பாம்பு; அமளி - படுக்கை; அரவிந்தப்பாவை - பெரிய பிராட்டியார்; அகம்படி - உடலாகிற இடம்; பரவை - திருப்பாற்கடல்; திரை - அலை.]

என்று பெரியாழ்வார் குறிப்பிடுவதுபோல இங்குத் திருக்கடித்தானத்தோடு மட்டிலும் வந்தான் அல்லன். 'தெய்வம் எல்லாந் தொழ வைகுந்தம் கோயில் கொண்ட' என்பதனால், நித்திய சூரிகளுடன் வைகுந்தத்தையும் கூட்டிக் கொண்டு வந்தான் என்பதைக் குறிப்பிடுகின்றார். 'குடக்கூத்த அம்மான்' என்பதனால் அவதாரத் திருவிளையாடல்கட்குக் கருவியாயுள்ளவற்றையும் கையிலே கொண்டுவந்தான் என்பதையும் காட்டுகின்றார். வைகுந்தத்து வைபவங்களோடும் கிருஷ்ணாவதார வைபவங்களோடும் தம் நெஞ்சத்தில் குடியேறினான் என்று பெருமிதத்துடன் குறிப்பிடுகின்றார் ஆழ்வார்.

அடுத்து, திருக்கடித்தானம் என்ற திருப்பதியை ஏத்த வேண்டும் என்ற இன்றியமையாமை கூட இல்லை; அத்தலத்தை நெஞ்சாலே நினைத்தாலும் போதும் என்று கூறுகின்றார் ஆழ்வார்.

''கொண்மின் இடர்கெட உள்ளத்துக் கோவிந்தன்
மண்விண் முழுதும் அளந்தவொண் தாமரை,
மன்னவர் தாம்தொழ வானவர் தாம்வந்து,
நண்ணு திருக்கடித் தான நகரே''[21]

[தாமரை - தாமரை போன்ற திருவடி (உவமஆகு பெயர்); இடர் - துக்கம்.]

என்பது பாசுரம். இடக்கை வலக்கை அறியாத பூமியில் உள்ளார் தொழுவதற்காக அவர்கட்கு முகங் கொடுத்து

20. பெரியாழ். திரு. 2 : 10.
21. திருவாய். 8. 6 : 7.

நிற்கும் எம்பெருமானின் நேர்மையைக் காண அவாக் கொண்டு நித்திய சூரிகளும் வந்து கிட்டுகின்ற திருப்பதி யாகும் இது. ''பரமபதம் நித்திய சூரிகளுக்கே இருக்குமாப் போலே, உகந்தருளினதேசம் சம்சாரிகளுக்கே யாக இருக்கை'' என்பது ஈடு. ''இங்கு உள்ளார் அங்குப் போவது மேன்மையை அநுபவிக்க; அங்குள்ளோர் இங்கு வருவது சீல குணாநுபவம் பண்ணுகைக்கு'' என்ற ஈட்டின் குறிப்பையும் கண்டு தெளிக. 'கோவிந்தன்' என்ற பெயர் மிகவும் எளியன் என்ற பொருளில் வந்துள்ளமையை உணர்க.

பரமபதம், திருப்பாற்கடல் போன்ற மேலுலகத்திலுள்ள தலங்களும் இந்நிலவுலகிலுள்ள தலங்களும் கடலில் உள்ளவையும் எம்பெருமானுக்கு மிகச் சிறந்த இருப்பிடங்களேயாகும். ஆயினும் அவற்றின்மீது அவன் (ஆதரம்) அன்பு உடையவன் அல்லன்; தன் நெஞ்சையும் அந்நெஞ்சில் வதிவதற்குச் சாதனமாக இருந்த திருக்கடித்தானம் என்ற திருப்பதியையும் தனக்குத் தாயபாகமாகக் கிடைத்த இடமாக விரும்பியிரா நின்றான் என்கின்றார்.

''தான நகர்கள் தலைசிறந்து எங்குஎங்கும்,
வான்இந் நிலம்கடல் முற்றும்எம் மாயற்கே
ஆன விடத்தும்என் நெஞ்சும் திருக்கடித்
தான நகரும், தனதாயப் பதியே''[22]

[தானநகர் - வதியும் நகரங்கள்; தாயப்பதி - முறையாக வந்த ஊர்.]

என்பது பாசுரம். வழிவழி வரும் சொத்தாகையால் அதனை அவசியம் அநுபவிக்க வேண்டும் என்பது குறிப்பு. எல்லாத் திருப்பதிகளும் அவனுக்கு முறையாக வந்தவையாயினும்,

22. திருவாய் 8.6 : 8

தன்னை அவன் பெறுவதற்கு உறுப்பான நிலம் திருக்கடித் தானமேயாதலின், அதன்மீது மிக்க காதலன் ஆனான் என்கின்றார்.

"தாயப் பதிகள் தலைசிறந்து எங்குஎங்கும்,
மாயத்தி னால்மன்னி வீற்றிருந் தான்உறை,
தேசத்(து) அமரர் திருக்கடித் தானத்துள்,
ஆயர்க்(கு) அதிபதி அற்புதன் தானே"[23]

[மாயத்தினால் - இச்சையினால்; மன்னி - பொருந்தி தேசத்து அமரர் - ஒளியுடன் கூடிய நித்திய சூரிகள்; ஆயர் - இடையர்; அதிபதி - தலைவன்.]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு.

எம்பெருமான் எண்ணற்ற கல்யாண குணங்கட்கு இருப்பிடமானவன் என்பதை நாம அறிவோம். மேற் குறிப் பிட்ட ஒரு சில பாசுரங்களை அடிப்படையாகக் கொண்டு **'ஆசாரிய ஹிருதயம்'** என்னும் நூல் இத்தலத்து எம்பெரு மானிடம் 'செய்ந்நன்றி அறிதல்' என்னும் குணம் சிறந்து விளங்கும் என்று குறிப்பிடுகின்றது.

"ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும் ஸாதநம்
ஒருக்கடுக்கும் கிருதஜ்ஞதா கந்தம்,
தாயப் பதியிலே"[24]

என்பது சூத்திரம். 'தாயப்பதி' என்றது, திருக்கடித் தானத்தை. 'திருக்கடித்தான நகரும் தன தாயப்பதியே'[25] என்ற பாசுரப் பகுதியைத் திருவுள்ளம் பற்றி இங்ஙனம் கூறப் பெற்றது. 'கிருதஜ்ஞதா கந்தம்' என்றது 'செய்ந்நன்றி யறிதலாகிய மணம்.' கடித்தானம் என்பதற்கு மணத்தை

23. திருவாய். 8.6 : 9
24. ஆசா ஹிரு- 175
25 திருவாய் 8.6 : 8

யுடைய இடம் என்பது பொருள். இந்தக் குணம் 'ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும் ஸாதநம் ஒருக்கடுக்கும்' என்ற தொடரால் விளக்கப் பெறுகின்றது. 'ஸாத்ய ஹ்ருதிஸ்தனாயும்-ஆழ்வாருடைய மனத்தில் வசித்தலாகிய பலன் கிடைத்திருக்கச் செய்தேயும். ஸாத்யம்-பலன்; பேறு. ஸாதநம்-கருவி; ஆழ்வாருடைய மனத்தில் மன்னி வசிப்பதற்குச் சாதனமாக இருந்த திவ்விய தேசம். ஒருக்கடுத்தல்-மனத்தில் வசிப்பதைப் போலவே திவ்விய தேசத்திலும் ஆசை கொண்டு வசித்தல். ஒருங்க அடுத்தல்-ஒருக்கடுத்தல். ஆழ்வார் திருவுள்ளத்தில் வசித்தலாகின்ற பலனைப் பெறுவதற்காகவே எம்பெருமான் திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலாகிற சாதனத்தை மேற் கொண்டான். அங்ஙனமே பெற்றான்; ஆனால் திருக்கடித்தானத்தில் எழுந்தருளியிருத்தலில் விருப்பம் குறைந்திலன். "திருக்கடித்தானமும் என்னுடைச் சிந்தையும் ஒருக்கடுத்துள்ளே உறையும் பிரான் கண்டீர்"[26] என்கின்றார் ஆழ்வார். சாத்யத்தைப்பெற்ற பின்பும் சாதனப் பொருளில் விருப்பம் வைப்பது மிகச் சிறந்த செய்ந்நன்றியறிதல் அன்றோ? ஆகவே, இத் திருப்பதியில் இறைவனின் 'கிருதஜ்ஞதை' என்ற குணம் விளங்கலாயிற்று.

அடுத்து, தம்மைப் பெறுமளவும் எம்பெருமான் திருக்கடித்தானத்தில் நின்றருளினான் என்றும், தம்மைப் பெற்றுக் கலந்து பரிமாறின பிறகு நிற்பதும் இருப்பதும் தன் நெஞ்சிலே ஆயிற்று என்றும் கூறுகின்றார் ஆழ்வார்.

"அற்புதன் நாரா யணன்அரி வாமனன்,
நிற்பதும் மேவி யிருப்பதுஎன் நெஞ்சகம்
நற்புகழ் வேதியர் நான்மற நின்றுஅதிர்,
கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே"[27]

---

26. திருவாய் 8.6 : 2
27. ஷை 8.6 : 10

[மேவி - பொருந்தி; அதிர்தல் - முழங்குதல்.]

என்பது பாசுரம். 'நாராயணன்' என்பதால் 'தன் உடைமையை விட்டுக் கொடாத அன்பையுடையவன் (வத்சலன்)' என்பதும், 'அரி' என்பதால் 'அடியார்களின் விரோதிகளை அழிக்கின்ற ஆற்றலையுடையவன்' என்பதும், 'வாமனன்' என்பதால் 'தன்னைச்சிறுக விட்டு அடியார்களுடைய விருப்பங்கள் அனைத்தையும் முடிக்குமவன்' என்பதும், 'அற்புதன்' என்பதால், 'மேற்கூடிய படிகளாலே ஆச்சரியத்தை யுடையவன்' என்பதும் பெறப்படுகின்றன. இவ்விடத்தில் திருமழிசையாழ்வாரின்

> "நின்றது எந்தை ஊரகத்து
> இருந்ததுஎந்தை பாடகத்து,
> அன்றுவெஃக ணைக்கிடந்தது
> என்னிலாத முன்னெலாம்"[28]

என்ற பாசுர பகுதியும்,

> "நிற்பதும்ஓர் வெற்பகத்தில்
> இருப்பும்விண்கி டப்பதும்
> நற்பெருந்தி ரைக்கடலுள்
> நானிலாத முன்னெலாம்"[29]

என்ற பாசுரப் பகுதியும் சிந்தித்தல் தகும்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் அலைபாயத் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுக மண்டலம் கொண்டு கற்பகவல்லித் தாயாருடன் சேவை சாதிக்கும் அற்புத நாராயணனைக் கண்டு வணங்குகின்றோம். அவன் சந்நிதியிலேயே

---

28. திருச்சந் விரு 64.
29. ஷை 65.

"பாலோடமுதன்ன ஆயிரத்தில் இப்பத்து"[30] முழுவதை யும் அநுசந்தித்து அகங்கரைகின்றோம். "மேலை வைகுந் தத்து இருத்தும் வியந்தே"[31] என்ற பெருமித உணர்ச்சி நம்மிடையே எழுதலை அறிகின்றோம். மேலும், 'பாலோ டமுதன்ன' என்பதற்கு ஆளவந்தார் அருளிய பொருளைச் சிந்தித்து மகிழ்கின்றோம். 'பால்' என்பது சோலைத் திருக் கடித்தானத்து உறை திருமாலைக் குறிக்கின்றது என்பதும், 'அமுது' என்பது 'சடகோபன் சொல்' என்ற வாசகத்தைக் குறிக்கின்றது என்பதும் அவர் கூறிய கருத்தாகும். இந்த வாச்சிய வாசகங்களின் சேர்த்தியை[32] வியந்தவண்ணம்,

"காண விரும்பும் என்கண்;
கையும் தொழவிரும்பும்;
பூண விரும்பும் என் தன்
தன்தலைதான்—வாணன்
திருக்குஅடித்தான் நத்தான்
திகிரியான் தண்டான்
திருக்கடித்தா னத்தானைச்
சென்று"[33]

[புன்தலை - அற்புதமான சிரசு; திருக்கு—மாறுபாடு; அகங்கார மமகாரங்கள்.]

என்ற திவ்விய கவி பிள்ளைப்பெருமாள் அய்யங்காரின் பாடலையும் நினைவுகூர்ந்து அப்பாடலையும் ஓதுகின்றோம். பத்தி உணர்ச்சி பொங்கி வழிகின்ற நிலையில் திருக்கோயில் பிரசாதங்களைந் பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்பச் சித்தமாகின்றோம்.

30. திருவாய் 8 6 : 11
31. ஷை 8.6 : 11
32. வாச்சியம் - சொற்களின் பொருள்; வாசகம் - சொற்கள்.
33. நூற். திருப். அந்தாதி 70

# 7. திருவல்லவாழ் உறையும் கோனார்

நமது சமய நூல்கள் அன்பைப் 'பக்தி' எனவும், காதலைப் 'பிரேமம்' எனவும் பிரித்துப் பேசுகின்றன' பக்தியைக் காட்டிலும் பிரேமமே சிறந்தது. இப் பிரேமம் என்னும் காதலின் இலக்கணத்தை வெளியிட எழுந்த இலக்கணங்களும் இலக்கியங்களும் பலப்பல. இத்துணை உயரியதும், தூயதுமான காதல் இவ்வுலக மக்களிடையே நிகழ்தல் அரிதாகும் என்றும், தெய்வத் தன்மை வாய்ந்த 'நம்மாழ்வார்', திருமங்கையாழ்வார், இராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற சீரியோரிடையேதான் இஃது அரும்பா நிற்கும் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

பரம்பொருளுக்கு ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டுள்ளன என்று வைணவ தத்துவம் கூறுகின்றது. அவற்றுள் 'நாயக - நாயகி பாவனை'யும் (தலைவன் - தலைவி உறவு) ஒன்றாகும். இந்த உறவே ஏனையவற்றுள் சிறந்தது; உயிராயது. இந்த முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும் சீவான்மாவைத் தலைவி யாகவும் வைத்து விளக்கும் பாடல்களைத் தேவாரத்திலும் நாலாயிரத்திலும் காணலாம். புருடோத்தமனாகிய எம் பெருமானது பேராண்மைக்கு முன்னர் உலகிலுள்ள ஆன் மாக்கள் யாவும் பெண் தன்மையை அடைந்து நிற்கும். எனவே, ஆழ்வார்கள், குறிப்பாக நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும், பெண் தன்மையை எய்திப் பல திருக்கோயில்

மூர்த்திகளை அநுபவித்ததை அவரவர்களுடைய பாசுரங்களில் காணலாம்.

தண்டகாரண்ய முனிவர்கள் இராமபிரானது பேரழகில் ஈடுபட்டுப் பெண்மையை விரும்பி மற்றொரு பிறப்பில் ஆயர் மங்கையர்களாகிக் கண்ணனைக் கூடினர் என்ற வழக்கு ஒன்றுண்டு. ஆனால் ஆழ்வார்கள் அப்படியின்றி அப்போதே பெண்மை நிலையை அடைந்து எம்பெருமானாகிய புருடோத்தமனை அநுபவிக்கக் காதலிக்கின்றனர். நம்மாழ்வார் போன்றவர்களிடத்தில் சில சமயம் ஞானம் தலைதூக்கி நிற்கும்; சில சமயம் பிரேமம் மீதூர்ந்து நிற்கும். இந்த இரண்டு நிலைகளி லிருக்கும்பொழுதும் அவர்கள் பாசுரங்கள் அருளியுள்ளனர். இதனை,

''ஞானத்தில் தம்பேச்சு;
பிரேமத்தில் பெண்பேச்சு''[1]

என்று ஆசாரிய ஹிருதயம் குறிப்பிடும். அஃதாவது, ஞான நிலையிலிருக்கும்பொழுது தாமான தன்மையிலே நின்று பேசுவர்; பிரேம நிலையில் பெண்தன்மையை அடைந்து பெண் பேச்சாகப் பேசுவர். அப்போது ஆழ்வாருக்குப் 'பராங்குசர்' என்ற ஆண்மைப் பெயர் நீங்கி 'பராங்குச நாயகி' என்ற பெண்மைப் பெயர் வழங்கப் பெற்று வரும்.

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையில் இருந்து எம்பெருமானை அநுபவிக்கும்பொழுது அவர்கள் தாய், தோழி, தலைவி என்ற இம்மூவருள் ஒருவரின் தன்மையைத் தாம் அடைந்து கூற்றுகள் நிகழ்த்துவர். இதன் காரணமாகப் பாசுரங்களும், தாய் சொல்வதுபோல வடிவெடுத்துத் 'தாய்ப் பாசுரம்' என்றும், தோழி சொல்வதுபோல உருக்கொண்டு 'தோழிப் பாசுரம்' என்றும், தலைவி பேசுவதுபோல் வடிவங்

1. ஆசாஹிரு—118

கொண்டு 'மகள் பாசுரம்' என்றும் பெயர்களைப் பெறும். இங்ஙனம் மூன்று வகையாகக் கூற்றுகள் நிகழ்ந்து பாசுரங்கள் வெளி வந்தாலும் பாசுரம் பேசுகின்றவர்கள் ஆழ்வார்களே யாவர். ஓர் ஆறானது பல வாய்க்கால்களாகப் பெருகி னாலும் அவற்றுக்கு முக்கியமான பெயர் ஒன்றேயாக இருக்கும் என்பதை நாம் அறிவோம். அங்ஙனமே, ஆழ்வார் களது சொல் மாலைகள் மூன்று நிலைமைகளாக வழிந்து புறப்பட்டாலும், அவை ஆழ்வார்களது பாசுரங்களாகவே தலைக்கட்டி நிற்கும். இங்ஙனம் மூன்று நிலைகளாக வடிவெடுக்கும் பாசுரங்கட்கும் ஆசாரிய ஹிருதயம் தத்துவம் குறிப்பிடுகின்றது.[2] அதனை அந்நூல் நோக்கி அறியலாம்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் குமிழியிட்ட வண்ணம் திருவல்லவாழ் என்ற திருப்பதிக்குப் புறப்படத் தயாரா கின்றோம். கோட்டயத்தில் அதிகாலையில் - நீராடித் தூய ஆடையை உடுத்திக் கொண்டு இருப்பூர்தி நிலையத்திற்கு வருகின்றோம். வண்டி காலை சுமார் ஏழரை மணிக்குப் புறப்படுகின்றது. அதில் ஏறி முக்கால் மணி நேரத்திற்குள் திருவல்லவாழ் என்ற நிலையத்தை அடைகின்றோம். நிலையத்திலிருந்து திருக்கோயிலுக்கு நடந்தே செல்லு கின்றோம். இயற்கைச் சூழல் நிறைந்த ஊராதலால் பாதை யின் இருமருங்கும் காணப்பெறும் இயற்கைக் காட்சிகளைத் துய்த்தவண்ணம் திருக்கோயிலை நோக்கி வருகின்றோம். இத்திருக்கோயில் எம்பெருமானை நம்மாழ்வார் ஒரு திருவாய் மொழியாலும்,[3] திருமங்கையாழ்வார் ஒரு திருமொழி யாலும்[4] மங்களாசாசனம் செய்துள்ளனர். இந்த இரு

2. ஆசா ஹிரு— 133
3. திருவாய் 6.9
4. பெரி. திரு 9.7

ஆழ்வார்களின் உள்ளத்தையும் கவர்ந்த எம்பெருமான், நம் நல்வினைப் பயனால் நம் உள்ளத்தையும் அருள் சுரந்து கவர்ந்ததனால் அவனைச் சேவிக்க வேண்டும் என்ற அவா உந்த விரைவாக நடந்து வருகின்றோம்.

நடைபாதையின் இருமருங்கும் அடர்ந்து வளர்ந்துள்ள சோலைகளும் தோப்புகளும், வயல்களும் வாவிகளும், பூம்பொழில்களும் நம் கண்ணையும் கருத்தையும் கவர் கின்றன. இவை நம்மாழ்வார் கருத்தையும் கவர்ந்ததனால் அக்கவர்ச்சி அவர் திருவாய்மொழி முழுவதும் ஊடுருவி இருப்பதைக் காண்கின்றோம். அத்திருவாய்மொழி மகள் பாசுரமாக வடிவங் கொண்டுள்ளது. திருவல்லவாழ் செல்லுதலைத் தடுக்கும் தோழியர்க்குத் தலைவி கூறுவது போல் நடைபெறுகின்றது இத்திருப்பதி எம்பெருமான் மீதுள்ள திருவாய்மொழி. திருமங்கையாழ்வாரோ தாமான தன்மையில் நின்று பேசுகின்றார். தம்முடைய நிலையை உள்நோக்கி ஆய்ந்து சம்சாரபந்தம் (இவ்வுலகத் தொடர்பு) இன்னும் கழியவில்லை என்பதையும், இழவுக்கு அடியான உடல் உறவு இன்னமும் தொடர்ச்சியறாது இருப்பதையும் கண்டு மனம் கவல்கின்றார் திருமங்கையாழ்வார். திருவல்லவாழ் திருப்பதியை வாயாலே சொல்லுவதாக நெஞ்சு மருவப்பெற்றால் நன்று என்று தோன்றிற்று. தோன்றவே, அதனை நெஞ்சுக்கு உரைப்பதாக நடைபெறு கின்றது இவரது திருமொழி.

கோயிலை நோக்கி நடந்து செல்லும்போதே முதலில் திருமங்கையாழ்வாரின் பாசுரங்கள் நம் சிந்தையில் குமிழி யிடத் தொடங்குகின்றன.

''தந்தைதாய் மக்களே சுற்றமென்று
உற்றவர் பற்றி நின்ற
பந்தமார் வாழ்க்கை நொந்துநீ
பழியெனக் கருதி னாயேல்,

அந்தமாய் ஆதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆய னாய,
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே''[5]

[உற்றவர் - உறவுமுறையார்: பந்தம் - தளை; நொந்து - வருந்தி; வல்லையாய் - வல்லமையுடையாய்; மருவு - பொருந்து.]

என்ற பாசுரத்தை நினைக்கின்றோம். 'சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன் மக்களும், மேலாத் தாய் தந்தையும் அவரே இனியாவாரே'[6] என்றவாறு எல்லா உறவு முறைகளும் திருமகள் கொழுநனே என்று கொண்டிருப்பதே முறை. அங்ஙனம் கொள்ளாது, "அன்னை அத்தன் என் புத்திரர் பூமி வாசவர் குழலாள் என்று மயங்கி'' இன்னமும் பொய்யான பந்துக்களிடத்தில் பற்று வைத்து இவ்வுலக வாழ்வு போதும் போதும் என்று வெறுத்துத் திருவல்லவாழ் பதியை வாயால் சொல்லுவதற்காகிலும் இசையுமாறு நெஞ்சினை வேண்டுகின்றார் ஆழ்வார்.

இவ்வுலக வாழ்விற்குத் தொடக்கத் தளையாயிருப்பது மகளிரைத் தொடர்பாகவுள்ள சிற்றின்பம். அதனை முதலில் களையவேண்டும் என்று மூன்று பாசுரங்களில் நினைவூட்டுகின்றார். "மின்னல் கொடியையும் வஞ்சிக் கொம்பையும் தோற்கும்படி செய்யவல்ல நுண்ணிய இடையையுடையவர்கள் மகளிர்; அன்னநடை பயிலும் மெல்லியலார் அவர்கள்.[7] மேலும், ஆடவர்களைச் செயற்கை யழகினால் மயக்குவதற்குப் பலவகை அணிகளைப் பூண்டு பல்வேறு ஆடை

5. பெரி. திரு 9.7; 1; 1.9 : 1 பாசுரத்தையும் காண்க.
6. திருவாய். 5.1 : 8
7. பெரி. திரு 9.7 : 2

வுகைகளை அணிந்தவர்கள்; பொய்யுரைகளை மெய்போல் பேசும் திறனுடையவர்கள்.[8] ஆண்களைத் தம் வசப்படுத்திக் கொள்வதற்காகத் தேனொழுகப் பேசும் இனிய சொற்களை யுடையவர்கள்.[9] ஆகவே, நீ உய்யும் வழியைத் தேடுவா யானால், 'வல்லவாழ் சொல்லுமா வல்லையாய் மருவு நெஞ்சே!'—என்று நெஞ்சிற்குப் பணிக்கின்றார்.

அடுத்து, செல்வ நிலையாமையைப் பேசுகின்றார் ஆழ்வார். "நெஞ்சமே, இவ்வுலகத்துச் செல்வம் நிலை நிற்பதன்று; உயர்ந்த வெண்கொற்றக் குடையின்கீழ் மன்னர் மன்னர்களாய் வீற்றிருந்து யானைகள் சூழ வாழ்ந்தவர்களும் மாண்டனர் என்பதை நீ கண்டு, அல்லது கேட்டு அறிந் திருப்பாய் அன்றோ? ஆதலின் இவ்வுலகச் செல்வம் துயரை விளைவிப்பதன்றி மகிழ்ச்சி தருவதன்று என்பதை நீ எண்ணினாயாகில் திருவல்லவாழ் திருப்பதியில் பொருந்தப் பார்ப்பாயாக"[10] என்கின்றார். இன்னும், இந்த உடலின் கீழ்மையையும் நீ அறிவாய் அன்றோ? 'தீண்டா வழும்பும் செந்நீரும் சீயும் நரம்பும் செறிதசையும், வேண்டா நாற்ற மிகும் உடல்'[11] என்பதன்றோ இவ்வுடலின் நிலை? இத்தகையதான உடலில் ஐம்பொறிகளாகிய வன்குறும்பர் புகுந்து நின்று தமக்கு வேண்டியவற்றைக் காட்டும்படி தொல்லை தருவதற்கு அஞ்சியாகினாலும் திருவல்லவாழ் சென்று பொருந்துவாயாக"[12] என்று தெருட்டுகின்றார். "இந்த உலகத்திலுள்ள நோய்கள் யாவற்றின் இருப்பிடம் இவ்வுடல். இந்த உடலைப் 'பொய்' என்று உணராமல் 'மெய்'

8. பெரி திரு 9. 7: 3
9 ஷை 9.7 : 4
10. ஷை 9.7 : 5
11. திருவரங்—கலம்—17
12. பெரி திரு 9.7 : 6

என்ற சொல்லாலும் வழங்கிவருகின்றனர்! மேலும், இவ்வுடலைத் தவிர 'ஆன்மா' என்பதொன்றில்லை என்றும் பிதற்றுகின்றனர் சில பேயர்கள். இந்த வீணுரைகளின்மீது கருத்தைச் செலுத்தாது திருவல்லவாழ் சென்று உய்க' என்று நெஞ்சினுக்கு அறிவுறுத்துகின்றார். மேலும், ஐந்து பூதங்களாலும் ஆன இவ்வுடல் புகலிடம் அன்று; ஆன்மாவை கொண்டே நாம் கடைத்தேற வேண்டும் என்று கருதினாயாகில் திருவல்லவாழ் செல்வாயாக''[13] என்கின்றார்.

இந்த எண்ணங்கள் நம் மனத்தில் எழுந்த வண்ணம் நடந்து செல்லுங்கால் இயற்கைக் காட்சிகள் நம் கண்களையும் கருத்தினையும் கவர்கின்றன. அவை மண்டிக் கிடக்கும் திருவல்லவாழ் என்ற திருப்பதிக்கே வந்துவிடுகின்றோம். பராங்குச நாயகியின் வாக்கும் நம் நினைவிற்கு வருகின்றது.

''மானேய் நோக்கு நல்லீர்!
    வைகலும்வினை யேன்மெலிய
வானார் வண்கமுகும்
    மதுமல்லிகை யும்கமழும்
தேனார் சோலைகள்சூழ்
    திருவல்ல வாழ்உறையும்
கோனாரை, அடியேன்
    அடிகூடுவ(து) என்றுகொலோ?''[14]

[மான்ஏய் - மான் போன்ற; வைகலும் - நாள்தோறும்; மெலிய - இளைக்கும்படி; மது - தேன்; தேன்ஆர் - தேன் நிரம்பிய.]

---

13. பெரி. திரு 9.7 : 7
14. திருவாய் 5.9 ; 1

என்பது அவர் வாக்கு. ஆகாயம் வரையிலும் உயர்ந் திருக்கும் வளப்பமுடைய பாக்கு மரங்களும், தேன் பொருந்திய மல்லிகையும், வாசனை வீசுகின்ற சோலைகளும் சூழ்ந்திருக்கும் இடம் திருவல்லவாழ் என்ற திருப்பதி. தான் மெலிவதற்காகவே கழுகுகள் வானத்தைக் கண்செறி இட்டாற்போல் (கபளீகரித்தல் போல்) இருக்கின்றன என்பது பராங்குச நாயகியின் நினைப்பு. தான் இருக்கின்ற இடம் 'மரங்கள் யாவும் உலர்ந்து விட்டன' என்னும்படி யாகவும், அவன் (எம்பெருமான்) இருக்கும் இடம் 'காலம் அல்லாத காலத்திலும் மரங்கள் பலனைக் கொடுக்கக் கூடியனவாகவும் இருக்கும்' என்றும் எண்ணுகின்றாள். இருவராய்க் கொண்டு பரிமாற வேண்டும் தேசத்தில் தனியே நிற்கின்றான் காண் என்பது போன்ற 'தேனார் சோலைகள் சூழ் திருவல்லவாழ் உறையும் கோனாரை' என்று குறிப் பிடுகின்றாள்.

மேற்குறிப்பிட்ட பொருளைச் சிந்தித்த நிலையில் "கோனாரை அடியேன் அடிகூடுவது என்று கொலோ?" என்ற அடிக்கு ஈட்டின் ஆசிரியர் நம்பிள்ளை கூறும் மெய்ப் பொருள் நம் சிந்தையில் எழுகின்றது. "நாராயண சப்தத் திலும் பிரணவத்திலும் போலே 'கோனாரை அடியேன்' என்கின்றாள். அவனைச் சொல்லும்போது தம்மை யிட்டல்லது சொல்லப்போகாது; தம்மைச் சொல்லும் போதும் அவனையிட்டல்லது சொல்லப் போகாது. 'கோனாரை' என்ற இடம் நாராயண சப்தார்த்தம்; 'அடி யேன்' என்ற இடம், பிரணவார்த்தம். பிரணவம், ஜீவப் பிரதானம்; நாராயண பதம் ஈசுவரப் பிரதானம். 'அடி கூடுவது என்று கொலோ?' என்ற இடம் நான்காம் வேற்றுமையின் பொருள் (சதுர்த்தி). 'என்று கொலோ'

என்று பிரார்த்தனையோடு தலைக்கட்டுகின்றதன்றோ?''[15])

அடுத்து ஒவ்வொரு பாசுரத்திலும் கூறப்பெற்றுள்ள இயற்கைச் சூழலை நினைவுகொள்ளுகின்றோம். இயற்கை என்பதுவும் ஈசுவரனின் படைப்பே யன்றோ? இதனாலன்றோ நம்மாழ்வார் பிறிதோரிடத்தில் ''திருவேங்கட மாமலை, ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே''[16] ''மதி தவழ் குடுமி மாலிருஞ் சோலைப், பதியது ஏத்தி எழுவது பயனே''[17] என்றும் கூறியுள்ளனவற்றை எண்ணிப் பார்க்கின்றோம். "இவர் (நம்மாழ்வார்) இவ்வாற்றாமையோடு இருந்து சோலையைக் கவிபாடுகிறது, உள்ளே நிற்கின்ற எம்பெருமானைப் போன்று இவையும் இனிய பொருளாக இருக்கையால் அன்றோ? மனத்தினை உள்முகமாக்கி அநுபவிக்க மாட்டாதார்க்கு, தன்னை அவர்கள் கண்களுக்கு இலக்காக்கிக் கொண்டு உபாயவஸ்து நிற்கிறாப் போலே காணும் இவையும்? யாவர்க்கும் தொழு குலமான சர்வேசுவரனுடைய உபாய பாவனையில் நிலை போலே, நித்திய பிராப்பியனாகக் (அடையத் தக்கவனாகக்) கொண்டு அங்கே இருக்கிறவன், அடியார்கள் உகந்தது ஒரு பொருளைத் திருமேனியாகக் கொண்டு முகங் கொடுத்துக் கொண்டு நிற்பது போலே, அங்குள்ளாரும் இங்கே போந்து தாவரங்

15. ஈட்டின் தமிழாக்கம்-திருவாய் 5. 9: 1. 'ஈடு' காண்க' பிரணவம் சேதனனுடைய சேஷத்துவத்தையும் (சேதநன்) பரமான்மாவுக்கே அடிமையாக இருக்கும் தன்மை) நாராயணபதம் ஈசுவரனுடைய தன்னேரில்லாத் தன்மையையும், நான்காம் வேற்றுமையின் பொருள் சேதநன் ஈசுவரனுக்கு எல்லாத் தொண்டுகளையும் புரிய விரும்ப வேண்டும் என்பதையும் குறிக்கின்றன. (இவற்றின் விவரங் களை 'முமுட்சுப்படி' போன்ற நூல்களை நோக்கி அறிக.)

16. திருவாய் 3. 3 : 8.

17. ஷ்ை 2 10: 2.

களாயும் ஜங்கமங்களாயும் விலங்குகளாயும் அவனை வீட மாட்டாதே நிற்கிறபடி. நித்தியரும் முக்தரும் சம்சாரிகளில் ருசியுடையாரும் உகந்தருளின நிலங்களைப் பற்றியன்றோ கிடப்பது?[18] என்ற ஈட்டுப்பகுதி ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

எனவே, ஆழ்வார் இத் திவ்விய தேசத்தைக் குறிப்பிடுங் கால்,

''பொன்திகழ் புன்னைமகிழ்
புதுமாதவி மீதணவித்
தென்றல் மணங்கமழும்
திருவல்ல வாழ்நகர்''[19]

[மகிழ் -வகுளம்; மாதவி-குருக்கத்தி; அணவி-பொருந்தி, படிந்து.]

என்கின்றார். பொன்னைப்போன்று ஒளிவிடுகின்றது புன்னை; மகிழம் பூவும் அங்ஙனமே உள்ளது; அப்போது அலர்ந்த குருக்கத்தி மலரும் அங்கு உள்ளது. இவற்றின்மீது தென்றல் வந்து அணைந்து பரிமளத்தைக் கொண்டு போந்து மணம் வீசி நிற்கின்றது. 'ஆழ இழியில் பூவில் வெக்கை தட்டும்' என்று கருதி தென்றல் அப்பூக்களின் மேலெழத் தீண்டி அங்குள்ளவற்றையெல்லாம் கொண்டு போந்து மணம் வீசுகின்றது என்பதை 'மீது அணவி' என்ற சொற்றொடர் குறிப்பிடுகின்றது. 'பொன் திகழ் புன்னை மகிழ்' என்பதனால் கண் என்ற பொறிக்குக் கவர்ச்சிகரமாக இருப் பதையும், 'தென்றல் மணம்கமழும்' என்பதனால் உடலுக்கும் நாசிக்கும் அங்ஙனம் இருப்பதையும் அறிகின்றோம். இவ் விடத்தில் இன் சுவை மிக்க ஈட்டின் பகுதி எண்ணி எண்ணி மகிழத்தக்கது. ''கலம்பகன்''[20] அல்லது சூடப் பொறாத

18. திருவாய்-ஈட்டின் தமிழாக்கம் 5. 9: 1 (காண்க)
19. ஷை 5 . 9 : 2
20. கலம்பகன் - பலமலர்களால் தொடுக்கப்பட்டது.

சுகுமாரரைப் போலே காணும் தென்றலின் சுபாவம் என்பாள் 'பொன்திகழ் புன்னைமகிழ் புது மாதவி மீதணவித் தென்றல் மணம் கமழும்' என்கிறாள். இதனால், பூவில் பரிமளத்தைத் தேடுவாரைப்போலே காணும் இது பரிமளத்தில் கலம்பகன்[21] தேடுகிறபடி என்பதைத் தெரிவித்தபடி. செருக்கராயிருக்கும் இராஜ புத்திரர்கள் முலைசரிந்தாரைப் 'போகத்திற்குத் தகுதியுள்ளவரல்லர்' என்று கழிக்குமாறு போன்று, கழிய அலர்ந்தவற்றைப் பாராமல் போகுகிறது என்பாள், 'புதுமாதவி மீதணவி' என்கின்றாள்''.[22] அன்றியும், வண்டின் இசைரூபமான மிடற்றோசை இளந் தென்றலுடன் கலந்து எம்பிரான் வாழும் சூழ்நிலையையே இனிதாக்குகின்றது. மரங்கள் கவடுகளாய்ப் பணைத்து அவன் வாழும் இடத்தையே சுற்றி மூடிக்கொண்டிருப்பது அச்சூழ்நிலையைப் பின்னும் அழகாக்குகின்றது. இதனை,

''பாண்குரல் வண்டினோடு
பசுந்தென்றலும் ஆகிஎங்கும்
சேண்சினை யோங்குமரச்
செழுங்கானல் திருவல்லவாழ்'[23]

[பாண்குரல் - பண் என்பது பாண் என வந்தது. பாண் - இசை; பசுந்தென்றல் - இளந்தென்றல்; சேண் - மிகவும்; சினை - கிளை; செழுங்கானல் - வளப்பம் பொருந்திய கடற் கரைச் சோலை.]

என்ற பாசுரப்பகுதி தெரிவிக்கின்றது. வண்டுகளின் ரீங்காரத்தைப்பற்றி இன்னொரு பாசுரத்தாலும் அறி கின்றோம். அவை குளிர் சோலைகளில் மண்டிக் கிடக்கும்

21. பரிமளத்தில் கலம்பகன்- பலவிதமான் பரிமளத்தின் கூட்டம்.

22. ஈட்டின் தமிழாக்கம் - திருவாய் 5. 9 : 2

23. திருவாய் 5. 9 : 6

மலர்களிலுள்ள மதுவினைப் பருகி 'இது வேணுகானமோ? அல்லது வீணையினின்றெழுந்த இசையோ?' என்று ஐயுறுமாறு இசை பாடிக் களிக்கின்றன.

''குழல்என்ன யாழும்என்னக்
குளிர்சோலையுள் தேன்அருந்தி
மழலைவரிவண்டுகள்
இசைபாடும் திருவல்லவாழ்''[24]

[குழல் - புல்லாங்குழல்; யாழ் - இசைக் கருவி; மழலை- இளமை; வரி - கீற்று; வண்டுகளின் உடலில் காணப்படுவது].

என்ற பாசுரப் பகுதியால் இதனை அறியலாம். இவ்விடத்தில் ஈடு : ''செருக்கருமாய் சுகுமாரமாயிருப்பார் 'மரம்' என்று சந்தனத்தைக் கழித்துப் புழுகு நெய்யை ஏறிட்டுக் கொண்டு திரியுமாறு போலே, இவையும் இயலைவிட்டு இசையையே பாடுகின்றன வாகலின் 'இசை பாடும், என்கிறது'' என்பது.

திருவல்லவாழ் என்ற ஊர் சிரமம் நீங்கும்படியான சோலைகள் சூழ்ந்த ஊர். அந்த ஊரிலுள்ள மாட கூடங்களின் மீது பசுமை மாறாத இலைகளையுடைத்தான கமுகமரங்கள் கவிந்து நிற்கின்றன. அங்ஙனமே பலாமரங்களும், தென்னை மரங்களும், வாழைகளும் அம்மாடங்கட்கு நிழல் செய்வன போல அவற்றின்மீது அணவி நிற்கின்றன. இதனை,

''பச்சிலை நீள்கமுகும்
பலவும்தெங்கும் வாழைகளும்
மச்சணி மாடங்கள் மீ(து)
அணவும்தண் திருவல்லவாழ்''[25]

[கமுகு - பாக்குமரம்; பலவு - பலாமரம்; தெங்கு - தென்னைமரம்; மச்சு - மேல்தளம்; அணவும் - பொருந்தும்].

என்ற பாசுரப் பகுதியால் அறியலாம்.

24. திருவாய் 5.9 : 9
25. ஷை 5.9 : 4

மேலும், அந்தத் திவ்விய தேசத்தைச் சுற்றிலும் கடல் போன்ற பல பெரிய தடாகங்கள் சூழ்ந்துள்ளன. அவற்றில் வளர்ந்து கிடக்கும் தாமரைப் பூக்கள் மாதர்களின் அழகிய முகங்களை ஒத்துள்ளன; அப்பொய்கைகளில் மண்டிக் கிடக்கும் செங்கழுநீர்ப் பூக்கள் அவர்களின் கண்களைப் போல் விளங்குகின்றன.

''ஓதநெ டுந்தடத்துள்
உயர்தாமரை செங்கழுநீர்,
மாதர்கள் வாண்முகமும்
கண்ணும்ஏந்தும் திருவல்லவாழ்''[26]

[ஓதம் - கடல்; தடம் - பொய்கை; வாள்முகம் - ஒளி பொருந்திய முகம்].

என்ற பாசுரப் பகுதியைச் காண்மின். இந்த மலர்கள் அங்கு உறையும் ஞாலம் உண்ட நம்பிரானின் திருவடிகளில் சாத்தப்பெறுபவை. அவற்றையாகிலும் சேவிக்கப் பெறுவோமோ என்று தனது பேரவாவினைத் தெரிவிக்கின்றாள் பராங்குச நாயகி. ''பாதங்கள் மேலணி பூந்தொழக்கூடுங் கொல்?'' என்று கூறுவதைக் காண்மின்.

தடாகங்கள் ஊரினைச் சூழ்ந்துள்ளன என்பதை மேலே கண்டோம். அங்ஙனமே கரும்பும் செந்நெலும் நிறைந்த வயல்கள் தடாகங்களைச் சூழ்ந்திருக்கின்றன.

''ஆடுறு தீங்கரும்பும்
விளைசெந்நெலும் ஆகிஎங்கும்
மாடுறு பூந்தடஞ்சேர்
வயல்சூழ்தண் திருவல்லவாழ்''[27]

[ஆடுறு - ஆலையிலிட்டு ஆடுதற்குரிய; தீம்கரும்பு இனிமையான கரும்பு; மாடுஉறு - பக்கங்களில் நெருங்கிய]

26. திருவாய் 5. 9 : 7
27. ஷை 5. 9 : 8

என்பது பாசுரப் பகுதி. "கரும்புகள் எப்போதும் ஆடு கையிலே உற்றிருக்கை, செந்நெலும் எப்போதும் அறுக்கைக்குப் பக்குவமாய் விளைந்து கிடக்கை என்றது, அங்குள்ளவை முழுவதும் பக்குவமாய்க் காணும் இருப்பது" என்ற ஈட்டின் பகுதி சிந்திக்கத் தக்கது. இதனால் பெறப்படுவது யாதெனில் "நாம் அங்குச் சேர்தலே தாமதம், அவன் நம்மை அநுபவிப் பான்" என்பது பராங்குச நாயகியின் நினைப்பு.

நம்மாழ்வார் வாழ்ந்த காலத்தில் எண்ணற்ற அந்த ணர்கள் திருவல்லவாழில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பாடுகின்ற சிறந்த வேதங்களின் ஒலி கடலில் அலைகள் முழங்குவனபோல் முழங்குகின்றன. உயர்ந்து எழும் ஓமப் புகையோ எங்கும் சூழ்ந்து கமழ்கின்றன.[28] கடல் ஒலிக்குக் காலத்தாலே இடையீடு உண்டு. வேதங்கள் முழங்குவதற்கு ஓய்வே இல்லை. யாகத்தினின்றும் கிளம்பும் ஓமப்புகை ஆகாயத்தளவன்றியே உயர்ந்த சுவர்க்க லோகத்தையும் மறைக்கும். "நல்ல அந்தணர் வேள்விப் புகை, மைந்நலம் கொண்டுயர் விண்மறைக்கும் தண் திருவல்லவாழ்"[29] என் பதனால் இதனை அறியலாம். இத்தகைய திருப்பதியில் கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைக் காணும் அவாவுடன் துடித்து நிற்கின்றாள் பராங்குசநாயகி.

"கன்னலங் கட்டி தன்னைக்
கனியைஇன் அமுதந்தன்னை
என்னலம் கொள்சுடரை
என்றுகொல் கண்கள் காண்பதுவே"[30]

[கன்னல்-கரும்பு, சருக்கரை]

என்ற பாசுரப் பகுதியால் இத்துடிப்பினை அறியலாம்.

28. திருவாய் 5. 9: 3
29. ஷை 5. 9: 5
30. ஷை 5. 9: 5

இந்த எண்ண அலைகள் நம் சிந்தையில் எழுந்த வண்ணம் திருவல்லவாழிலுள்ள திருக்கோயிலை அடைகின்றோம். திருக்கோயில் விசாலமான இடப்பரப்பில் அமைந்துள்ளது. பக்தி கிளர்ந்தெழுந்த நிலையில் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்குத்திசை நோக்கித் திருமுக மண்டலங் கொண்டு எழுந்தருளியிருக்கும் **கோலப்பிரானையும், செல்வத்திருக் கொழுந்து நாச்சியாரையும்** சேவிக்கின்றோம். திருமங்கையாழ்வார் பாசுரங்களையும் சந்நிதியிலேயே அன்புருகப் பாடி என்பு கரையப்பெறுகின்றோம். ''நாமங்களாயிரமுடைய நம் பெருமான்'' மீதுள்ள பாசுரங்களை ஓதியதும், இப்பூத உடல் இந்த லீலா விபூதியிலிருந்தாலும், இந்த பகவத நுபவத்தின் காரணமாகச் 'சீரியரானோம்' என்ற உணர்வுடன் செம்மாந்து நிற்கின்றோம்.

இந்நிலையில் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்களின் பாசுரம் நினைவுக்குவர, அதனையும் ஓதி உளங்கரைகின்றோம்.

''உகந்தார்க்கு எஞ்ஞான்றும்
உளன் ஆய், உகவாது
இகந்தார்க்கு எஞ்ஞான்றும்
இலன்ஆய், திகழ்ந்திட்டு,
அருஅல்ல, வாழ்உருவம்
அல்ல,என நின்றான்
திருவல்ல வாழ்உறையும் தே''[31]

[உகந்தார்-விரும்பினவர்; இகழ்ந்தார்-விரும்பாதவர்; அரு-உருவம் அல்லாதது; வாழ் உருவம் அல்ல-அர்ச்சையாக; தே-தேவன்.]

31. நூற் திருப். அந்தாதி, 66.

என்ற பாசுரத்தை இனிக்க இனிக்க ஓதி உளம் மகிழ்கின்றோம். இங்ஙனம் மகிழ்கின்ற நிலையில் ஆசாரிய ஹிருதயத்தின்,

"மெலிவிலும் சேமம் கொள்விக்கும்
கிருபை, தென்னகரிலே நித்யம்"[32]

[தென்னகர்-திருவல்லவாழ்; சேமம்-காவல்]

என்ற சூத்திரம் நினைவுக்கு வர அதனையும் சிந்தனை செய்கின்றோம். எல்லை யில்லாத இனிமையை யுடைய ஆராவமுதை (எம்பெருமானை) விரைவிலே கிட்டி அநுபவிக்கப் பெறாமையாலே, நாள்தோறும் மெலியுமளவிலும், காப்பாற்றுபவன் அவனே என்று துணிவு கொண்டிருக்கும்படி செய்யும் என்றும் உள்ள அவனது திருவருளானது திருவல்லவாழ் என்னும் திருப்பதியில் நித்தியமாக இருக்கும் என்பதனை நினைவு கொள்ளுகின்றோம். இந்நிலையில் பக்தியநுபவம் கரைபுரண்டோடத் திருக்கோயில் பிரசாதங்களைப் பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்பச் சித்தமாகின்றோம்.

32. ஆசா ஹிரு 165,

## 8. திருவண்வண்டூர் தேவாதிதேவன்

வேதாந்தங்களில் குறிப்பிடப்பெறும் பக்தி ஆழ்வார்களிடம் காதல் முறையில் பரிணமித்து நிற்கும். இவர்கள் எம்பெருமான்மீது கொள்ளும் காமம் 'பகவத் விஷயகாமம்' என்று வழங்கப்பெறும். இங்ஙனம் மாதவன்மீது இவர்கள் கொள்ளும்காமம் மங்கையர்மீது கொள்ளும் காமத்தினின்றும் வேறுபட்டது. ஆயினும் சிற்றின்ப அநுபவமாகிய காதலுக்குக் கூறப்பெறும் அகப்பொருள் துறைகள் யாவும் இந்த பகவத் விஷய காமத்திற்கும் கூறப்பெறும். சிற்றின்ப அநுபவத்திற்குக் கொங்கை முதலியன சாதனமாயிருப்பது போல, பகவத் விஷயாநுபவத்திற்குப் பரபக்தி, பரஞானம் பரமபக்தி இவை இன்றியமையாதனவாக இருப்பதால் அவையே கொங்கை முதலான சொற்களால் இவ்வாழ்வார்களின் அருளிச் செயல்களில் கூறப்பெறுகின்றன என்று ஆன்றோர் கொள்வர்.

காதல் சுவையின் சம்பந்தம் சிறிதுமின்றியே பக்திச் சுவையின் அடிப்படையாகவே பாசுரங்கள் அருளிச் செய்தல் கூடும். அங்ஙனமிருக்ககாதல் சுவையையும் கலந்து பாசுரங்கள் அருளிச் செய்யப்பெற்றிருப்பதற்குக் காரணம் என்ன? உடல் நலத்திற்குக் காரணமாகிய வேப்பிலை யுருண்டையை உட்கொள்ள வேண்டியவர்கட்கு வெல்லத்தை வெளியிற் பூசிக் கொடுத்து உண்பிப்பது போலவும், கொயினா மாத்திரைகட்குச் சர்க்கரைப் பாகு பூசி இனிப்புப் சுவையை

உண்டாக்கித் தின்பிப்பது போலவும் சிற்றின்பம் கூறும் வகையால் பேரின்பத்தை நிலை நாட்டுகின்றனர் என்று பெரியோர்கள் கூறுவர். இது கடையாய காமத்தினையுடை வர்கட்குக் காட்டப் பெறும் உக்தி முறையாக இறையனார் களவியலிலும் கூறப்பெற்றுள்ளமை ஈண்டு சிந்திக்கத்தக்கது.[1]

இங்ஙனம் ஆழ்வார்கள் பெண்மை நிலையிலிருந்து எம் பெருமானை அநுபவிக்கும் பொழுது அவர்களது பாசுரங்கள் தாய்ப் பாசுரமாகவும், தோழிப் பாசுரமாகவும், தலைவி பாசுரமாகவும் வடிவு கொள்ளும் என்பதை நாலாயிரத்தைப் படிப்போர் அறிவர். இப்படி மூவகையாகப் பாசுரங்கள் பரிணமித்துச் செல்வதற்குரிய உட்கருத்தினை ஆன்றோர்கள் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளனர். அவர்கள் இந்த மூன்று நிலைகலையும் மூன்று பிரஜ்ஞாவஸ்தைகள்[2] என்று குறிப் பிடுவர்.

முதல் அவஸ்தையைப் பற்றிச் சிந்திக்கின்றோம். 'ஓம் நம: நாராயணாய' என்பது மூன்று வைணவ இரகஸ்யங் களுள் (மறைகளுள்) முதலாவது; தலையாயது. இதில் மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் 'ஓம்' என்னும் சொல்லின் பொருளையே ஏனைய இரண்டு சொற்களும் விரிவு படுத்துகின்றன. இந்த இரு சொற்களின் பொருளையே 'துவயம்' என்னும் இரண்டாவது மறை விரிக் கின்றது. இத்துவயத்தின் பொருளையே 'சரமசுலோகம்' என்ற மூன்றாவது மந்திரம் மேலும் விரிக்கின்றது. திரு மந்திரத்திலுள்ள மூன்று சொற்களிலும் 'பிரணவம்' அறிவுடைய ஆன்மாவின் அடிமைத் தன்மையையும் (சேஷத்துவத்தையும்), நமஸ்ஸு பாரதந்திரியத்தையும்

1. இறை-நூற்பா 2 (உரை காண்க)
2. ஆசாரிய. ஹிரு 133 பிரஜ்ஞாவஸ்தை-மூன்று காலத் தையும் அறியும் அறிவின் நிலை அவஸ்தை-நிலை.

ந+ம; என்று இரண்டாகப் பிரிக்கலாம். 'ம' என்பது வடமொழியில் 'எனக்கு உரியவன், என்றும், 'ந' என்பது அல்லன் என்றும் பொருள்படுகின்றன. அஃதாவது. 'எனக்கு நான் உரியவன் அல்லன்' என்ற பொருள் கிடைக்கின்றது. இதனால் 'நான் பிறனுக்கு (ஈசுவரனுக்கு) உரியவன்' என்பது பெறப்படுகின்றது. இம் முறையில் இச்சொல் ஈசுவர பாரதந்திரியத்தைத் தெரிவிக்கின்றது. இன்னும் விளக்கிக் கூறினால், இச்சொல் ஞானத்தினால் ஏற்படும் சுதந்திரத் தன்மையை ஒழிக்கின்றது. அதன் காரணமாய் ஏற்படும் 'தன்னைத் தானே காத்துக் கொள்ள முடியும், என்னும் எண்ணத்தையும் நீக்குகின்றது. இனி, 'இவனைக் காத்து இரட்சிப்பவன் ஈசுவரனே ஆகின்றான்' என்ற துணிவு பிறக்கின்றது; அஃதாவது ஈசுவரனே உபாயம் என்ற பொருள் கிடைக்கின்றது. இந்த மன நிலைதான் 'தாய்' என்று குறிக்கப்பெறுகின்றது.

மூன்றாவது அவஸ்தைமேலும் நம் எண்ணம் அலைபாய்கின்றது. பெற்றோர் அல்லது உறவினர் கூட்டாமையிலேயே தலைவனுடன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து தலைவனுடைய ஒப்புயர்வற்ற வனப்பு முதலியவற்றில் ஈடுபட்டு இருப்பவள் மகள்; குடியின் கட்டுப்பாட்டையும் பாராமல் 'அவனைக் கிட்டியல்லது நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்' என்றும் பதற்றத்தையுடையவள் இவள்; காலக் கழிவினை இவளால் பொறுக்க முடிவதில்லை. திருமந்திரத்தில் பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் எல்லோருக்கும் சேஷியாய் (தலைவனாய்) அறுதியிடப் பெற்றவன் எம்பெருமான்; எல்லோருக்கும் புகலிடமானவன் அவனே. பிரணவத்தாலும் நமஸ்ஸாலும் இவை உணரப்பட்ட பின்பு 'நாராயண' என்ற சொல்லினால் கூறப்பெற்றுள்ள எம்பெருமானுடைய சொரூபம், உருவம், குணம், விபூதி முதலியவற்றின் சேர்க்கையாலுள்ள பெருமையை நினைந்து மகிழ்ந்

திருப்பவள் இவள். எம்பெருமான் சாத்தியாபாயமாக இருந்தால் தான் செய்யும் சாதனங்கள் முடிவுற்ற பிறகே சாத்தியமாகிற பேறு கிடைக்கக் கூடும் என்று பொறுத்திருக் கலாம். ஆனால் அவன் சித்தோபாயமாக இருப்பவன். ஆதலால் அவனைத் தாமதித்து அநுபவிப்பதற்குக் காரணம் இல்லை; 'அவனே உபாயம்' என்ற கோட்பாட்டையும் மீறித் தான் நினைத்த பேற்றினை உடனே பெறவேண்டும் என்று பதற்றத்தை யுடையவளாக இருக்கின்றாள். இந்த மன நிலைதான் 'மகள்' (தலைவி) என்று குறிப்பிடப்பெறு கின்றது.

இந்த மூன்று நிலைகளும் (அவஸ்தைகளும்) நம்மாழ் வாருக்கு எல்லாக் காலங்களிலும் இருந்தன. இதனால் தான் 'ஞானாவஸ்தைகள்' (ஞான நிலைகள்) என்று கூறாமல் 'பிரஜ்ஞாவஸ்தைகள்' (உணர்வு நிலைகள்) என்று குறிப்பிடப் பெற்றுள்ளது என்பதையும் நினைந்து பார்க்கின்றோம். திருவெட்டெழுத்தின் மூன்று சொற்களாலும் குறிப்பிடப் பெறும் பொருளைப்பற்றிய ஞானம் ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் எப்பொழுதும் நிலைத்தே இருக்கும் என்பதை உணர்த்தவே இவ்வாறு குறிப்பிடப் பெற்றது என்பதையும் சிந்திக்கின்றோம்.

இந்த எண்ணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் குமிழியிட்ட வண்ணம் திருவல்லவாழிலிருந்த வண்ணம் திருவண் வண்டூருக்குப் பேருந்து மூலம் புறப்படுகின்றோம். பேருந்தில் சென்றாலும் அது செல்லும் வழியெல்லாம் இயற்கைக் காட்சிகளுக்குக் குறைவில்லை. சாலையின் இருபுறமும் தோட்டங்களும் வயல்களும் கண்கவர்விருந்தாக அமை கின்றன. அவற்றைக் கண்டுகளித்த வண்ணம் எம்பெரு மானுடைய அசித்தும் அவனுடைய சித்திற்கு ஆனந்தத்தை அளிக்கும் தத்துவத்தை எண்ணி எண்ணி வியப்புக் கடலில் ஆழ்ந்த வண்ணம் திருவண் வண்டூரை அடைகின்றோம்.

நேராகத் திருக்கோயிலுக்கே வந்து விடுகின்றோம். மாலை நான்கு மணிக்கே வந்து விட்டோமாதலால் திருக்கோயில் திருக்காப்பிடப் பெற்றிருக்கின்றது. ஆகவே அருகில் புதிதாக கட்டப் பெற்றிருக்கும் மண்டபத்தில் தங்கு கின்றோம். திருவண்வண்டூர் எம்பெருமான்மீது நம்மாழ்வார் மட்டிலுமே மங்களா சாசனம் செய்துள்ள பதிகத்தைச் சிந்திக்கின்றோம். இது தூது விடும் பதிகமாக உள்ளது. இதற்கு முன்னுள்ள பதிகத்தில் "உன்னை என்று கொல் சேர்வதுவே"[3] "உன்னை என்று தலைப் பெய்வனே"[4] "உன்னை என்று கொல் கூடுவதே"[5] என்றெல்லாம் கதறி எம்பெருமான் பக்கவிலே கடுகச் சேர வேண்டும் என்று பாரித் திருக்கும் ஆழ்வார் எம்பெருமான் திருவண்வண்டூரில் சந்நிதிபண்ணிக்கொண்டுத் தனக்குச் சேவை சாதிக்கச் சித்த மாக இருப்பதை நோக்குகின்றார். அங்குச் சென்று சேர முடியாத நிலைமையில் தன் நிலையை அந்த எம்பெரு மானுக்குத் தெரிவிக்குமாறு சில பறவைகளைத் தூது விட்டதை நினைந்து பார்க்கின்றோம்.

இங்கு ஆழ்வார் தாமான தன்மையை விட்டுப் பாராங்குச நாயகி நிலையை அடைந்து தூது விடுகின்றார். குருகினங்கள், கரு நாரை, புள்ளினங்கள், அன்னங்கள், பூங்குயில்கள், கிளி, பூவை, வண்டினங்கள் இவற்றைத் தூது போகும்படி வேண்டுகின்றார். இங்ஙனம் பறவைகளைத் தூது விடுவதற்கு உட்பொருள் உண்டு. ஆசாரியஹ்ருதயம்,

> "சேர்ப்பாரைப் பட்சிகளாக்கி, ஜ்ஞாந
> கர்மங்களைச் சிறகு என்று, குரு ஸப்ரம
> சாரி புத்ர சிஷ்ய ஸ்தாநே பேசும்"[6]

---

3. திருவாய் 5. 10 : 1
4. ஷை 5. 10 : 2
5. ஷை 5. 10 : 9
6. ஆசா.ஹ்ரு - 150

[ஸப்ரமசாரி - ஒரு சாலை மாணக்கர்; ஸ்தாநே - இடத்தில்]

என்று குறிப்பிடுகிறது. ''விண்ணோர் பிரானார், மாசுஇல் மலர் அடிக்கீழ் எம்மைச் சேர்விக்கும் வண்டுகளே''[7] என்று ஆழ்வாரே அருளிச் செய்துள்ளமையால், பகவத் விஷயத்தில் கொண்டு சேர்க்குமவர்கள் பறவைகளாகக் கொள்ளப்படுவர். இரண்டு சிறகுகளைக் கொண்டு பறவைகட்கு எங்ஙனம் விசும்பில் பறந்து செல்லுதல் இயலுகின்றதோ அங்ஙனம் ஞானம், ஒழுக்கம் (அநுட்டானம்) என்னும் இரண்டாலும் இறைவன் அடையப்படுகின்றான் என்பது ஆன்றோர் கொள்கை. எனவே, ஞானத்தையும் ஒழுக்கத்தையும் சிறகுகளாகக் கொள்ளல் வேண்டும். ஆசாரியர்களும், ஒருசாலை மாணாக்கர்களும், புத்திரர்களும் இறைவனை அடையும் பேற்றுக்குத் துணையாக இருப்பார்கள் என்பது அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரின் கருத்து. இந்தப் பறவைகளிலும் அன்னம், வண்டு. முதலியவையாகச் சொல்லப்பெறுபவர்கள் இன்னார் இன்னார் போன்றவர்கள் என்றும் அருளிச் செய்யப்பெற்றுள்ளது.[8] ஆழ்வாரின் பாசுரங்கள் ஒவ்வொன்றாக நம் சிந்தையில் எழத் தொடங்குகின்றன.

ஆழ்வார் நாயகி முதலில் குருகினங்களைப் பார்த்துப் பேசுகின்றாள்; திருவண்வண்டூர் எம்பெருமானிடம் சென்று தன்னுடைய காதன்மையைத் தெரிவிக்குமாறு இரக்கின்றாள்.

''வைகல்பூங் கழிவாய் வந்து
மேயும் குருகினங்காள்!
செய்கொள் செந்நெல் உயர்திரு
வண்வண் டூர்உறையும்,

7. திருவிருத். 55
8. ஆசா. ஹிரு 151, 152, 153, 154, 155, காண்க.

கைகொள் சக்கரத் தென்கனி
வாய்ப்பெரு மானைக்கண்டு
கைகள் கூப்பிச் சொல்லீர்
வினையாட்டியேன் காதன்மையே''[9]

[வைகல் - நாள்தோறும்; பூங்கழி - உப்பங் கழி; குருகு - கொக்கு; செய் - வயல்; வினையாட்டியேன் - பாவத்தைப் பண்ணின என்னுடைய; காதன்மை - காதல் தன்மை.]

என்பது பாசுரம். உணவின் பொருட்டு வந்து வந்து மேயும் குருகினங்களை நோக்கி ''நீங்கள் திருவண்வண்டூர் சென்றால் அங்கும் உங்கட்குத் தேவையான ஏராளமான உணவு கிடைக்கும்'' என்பதை 'செய் கொள் செந்நெலுயர்' என்ற சொற்றொடரால் குறிப்பிடுகின்றாள். எம்பெருமானைத் தெரிந்து கொள்ள இரண்டு அடையாளங்கள் கூறுகின்றாள். இதற்கு முன்னுள்ள திருவாய் மொழியில் ''பிறந்தவாறும்''[10] என்று கண்ணன் அவதாரத்தை எண்ணி மோகங் கொண்டவளாதலால் அந்த அவதாரத்தில் கையும் திருவாழியுமாகப் பிறந்தமை தன் உள்ளத்தில் ஊறியிருப்பதனால் அவ்வடையாளத்தைக் 'கைகொள் சக்கரத்து' என்று குறிப்பிடுவது முதல் அடையாளம். அடுத்து ''வளர்ந்த வாறும்''[11] என்று ஆயர்பாடியில் வளர்ந்தபடியைக் கருத்தில் இருத்தினவளாதலால், கண்ணன் அவ் வாயர்பாடியிலுள்ள பெண்டிர்க்கு அணுக்கனாய் இருந்து கொவ்வைக் கனிவாய் கொடுத்துக் கூழைமை செய்த படிகள் யாவும் அவளது திருவுள்ளத்தில் நிழலிட்டுத் தோற்றுகின்றன. எனவே, 'கனிவாய்ப் பெருமான்' என்று குறிப்பிடுவது இரண்டாவது அடையாளம். அப்பெருமான் தன்னிடம் வந்தபோது தன்னுடைய சௌசீல்யம் தோற்ற இருந்தான் என்றும், பிரிந்து சென்ற

9. திருவாய் 6.1 : 1
10. ஷை 5.10 : 1
11. ஷை 5.10 : 1

பிறகு பரத்துவம் பாராட்டி நிற்கின்றான் என்றும், குறிப்பிட்டு ஆகவே அவனைக் காணுங்கால் 'கைகள் கூப்பிச் சொல்லீர்' என்று விண்ணப்பிக்குமாறு வேண்டுகின்றாள். "இன்னாள் உம்மை ஆசைப்பட்டிருக்கின்றாள்" என்று தெரிவித்தால் போதும் என்பது அவள் திருவுள்ளம். இங்கே இன்சுவை மிக்க "வன்னெஞ்சர் காதல் போலன்றிறே மென்னெஞ்சர் காதல்; மெல்லியலார் காதல் அளவல்லாத என் காதல் சொல்லீர்; சொல்லுவார் தாழ்வே"[12] என்ற ஈட்டின் பகுதி சுவைத்து இன்புறத்தக்கது.

அடுத்து, ஆழ்வார்நாயகியின் கவனம் உப்பங்கழிகளில் மேய்ந்து திரியும் கரு நாரை ஒன்றின்மீது செல்லுகின்றது. அதனை நோக்கி இவ்வாறு பேசுகிறாள்:

"காதல் மென்பெடை யோடுடன்
　　மேயும் கருநாராய்!
வேத வேள்வி யொலிமு ழங்
　　கும்தண் டிருவண்வண்டூர்
நாதன் ஞாலமெல் லாமுண்ட
　　நம்பெருமானைக் கண்டு
பாதம் கைதொழுது பணியீர்
　　அடியேன் திறமே"[13]

[பெடை - பெண் நாரை; கரு - என்றது, புணர்ச்சியால் உண்டாகும் அழகினை; திறம் - தன்மை.]

துணைவியுடன் திரிவதால் நாரை புகருடன் விளங்குகின்றது. "கூடத்திரிகையாலே நாரை திரை நீங்கி வடிவு புகர்த்தபடி; பிரியாதார்க்கு உடம்பு வெளுக்காதாகாதே; தான் உடம்பு வெளுத்துக் கிடக்கிறாளிறே" என்ற ஈட்டின் பகுதி கருதத் தக்கது. வேதவேள்வியொலி முழக்கத்தில் மனம் ஈடுபட்டுக்

12. திருவாய் 6.1 : 1 (ஈடு காண்க.)
13. ஷை 6.1 : 2

கால் தாழ்ந்து தன்னை மறந்தொழிந்ததாகப் பராங்குச நாயகி கருதுகின்றாள். அவனருகிற் சென்று அவனுடைய திருவடிகளைத் தொழுது விண்ணப்பித்தால் போதும் என்று குறிப்பிடுகின்றாள். பக்தர்கட்கு ஆபத்து வருவதற்கு முன்னரே அவர்களைப் பாதுகாக்கும் இயல்பையுடையவ னாதலால் "ஞாலமெல்லாம் உண்ட" என்ற தொடரால் அவனது நீர்மையை எடுத்துக் காட்டுகின்றாள். இங்கு "அவன் திறம் போலன்று; என் இடையாட்டத்தைச் சொல்லுங்கோள். சொல்லில் ஒரு மகாபாரதத்திற்குப் போருமாகாதே" என்ற இன்சுவை மிக்க ஈட்டின் பகுதி சுவைத்து மகிழத் தக்கது.

எங்கும் பறவைகள் கூட்டமாக உலாவுவது வழக்கம். அவை உப்பங்கழியில் தம் இரைக்காக உழன்று கொண் டுள்ளன. அவை தாம் ஈடுபட்டிருக்கும் எம்பெருமானைத் தான் தேடிக் கொண்டிருக்கின்றன என்று கருதி அவன் திருவண்வண்டூரில் உறைகின்றதாகக் குறிப்பிடுகின்றாள். அவ்வூரின் செல்வ வளம் அவனை அங்கே கால்தாழப் பண்ணி விட்டதாக அவள் நினைப்பு.[14] சில இளமையான அன்னங் களையும் காண்கின்றாள் ஆழ்வார்நாயகி. அவற்றை நோக்கி, "உடலம் நைந்து ஒருத்தி உருகும் என்று உணர்த்துமினே"[15] என்கின்றாள். "இன்ன காட்டிலே மான்பேடை ஏவுடனே[16] கிடந்து உழவா நின்றது என்று சொல்ல வேண்டாவன்றே"[17] என்ற ஈட்டின் பகுதி ஈண்டு நினைந்து இன்புறத் தக்கது. "ஒருத்தி உடலம் நைந்து உருகும்" என்றாலே போதும்; அதற்குமேல் சொல்ல வேண்டியதில்லை என்பது ஆழ்வார் நாயகியின் நினைப்பு.

14. திருவாய் 6.1 : 3
15. ஷெ 6.1 : 4
16. ஏவுடனே-அம்போடு
17. திருவாய் 1.4 : 3.

இந்த அன்னங்கள் உணர்த்தலின் அருமையையும் ஊடலின் அருமையையும் உணர்ந்து ஒரு கலத்தில் ஒக்க உண்டு திரிவாரைப்போல் ஆண் பெண் சேர்ந்தே மேய்கின்றன என்பதையும் அறிகின்றாள். அவற்றுள் இன்னொரு கூட்டத்தைக் கண்டு,

''புணர்த்த பூந்தண் துழாய்முடி
நம்பெரு மானைக்கண்டு
புணர்த்த கையினராய் அடியே
னுக்கும் போற்றுமினே''[18]

[புணர்த்த - தொடுக்கப்பெற்ற; புணர்த்த கையினர் - கூப்பிய கையினர்: அடியேனுக்கு - அடியேனுக்காகவும்.]

என்று வேண்டுகின்றாள். அப்பெருமான் பக்தர்களைக் காப்பாற்றுவதற்கென்றே தனிமாலையிட்டிருக்கின்றான் என்பதைக் காட்டவேண்டியே 'புணர்த்த பூத்தண் துழாய்முடி எம்பெருமான்' என்று குறிப்பிடுகின்றாள். ஆகவே, அவரை அந்த அன்னங்கள் கூசாமல் சென்று காணலாம் என்பது குறிப்பு. திவ்விய தேசப்பயணம் செல்லு கிறவர்களை நோக்கி அந்தப்பேறு பெறாதவர்கள். அவர்கள் சென்று எம்பெருமானைச் சேவிக்கும்போது தங்களுக்காகவும் சேவிக்குமாறு வேண்டுவது போல, ஆழ்வார் நாயகியும் அன்னங்களிடம் அதே பாவனையில் ''அடியேனுக்கும் போற்றுமினே'' என்று குறிப்பிடுகின்றாள்.

சில குயில்கள் அவள் கண்வட்டத்தில் காணப் பெறு கின்றன. அவற்றை நோக்கி,

''ஆற்றல் ஆழி யங்கை
அமரர்பெரு மானைக்கண்டு
மாற்றம் கொண்டருளீர் மையல்
தீர்வதொரு வண்ணமே''[19]

---

18. திருவாய் 6.1 : 5
19. ஷை 6.1 :6.

[ஆற்றல் - சக்திவாய்ந்த; மாற்றம்-பதில்; மையல் -மயக்கம்; ஒரு வண்ணம் - ஒரு தன்மை.]

என்று வேண்டுகின்றாள். தன் நிலையை எம்பெருமானுக்கு அறிவித்து அவனிடமிருந்து ஏதேனும் ஒரு மறுமாற்றம் கொண்டு வந்து தனக்குரைத்துத் தனது மயக்கத்தைத் தீர்க்க வேண்டுமென்பது அவளது வேண்டுகோள். மாற்றம் எப்படியிருப்பினும் சரி; நல்லதாகவும் இருக்கட்டும், அல்லது அல்லதாகவும் இருக்கட்டும். ''பாவி நீ என்று ஒன்று சொல்லாய் பாவியேன் காண வந்தே''[20] என்ற முறையிலிருப்பினும் போதும் என்பது அவள் நினைப்பு.

இங்ஙனம் பேசிக் கொண்டிருக்கும்போதே கிளி ஒன்று அவளிருப்பிடம் வருகின்றது. அதனை நோக்கி,

''ஒருவண்ணம் சென்றுபுக்(கு) எனக்கொன்(று)
உரைஒண் கிளியே!''[21]

(ஒருவண்ணம்- ஒருவிதமாக; ஒன்று - ஒரு சொல்; ஒண் - அழகிய.]

என்று வேண்டுகின்றாள். இதற்கு இரண்டு பொருள் கூறுவர் ஆன்றோர். ''இத்தலையில் தனிமை நினையாதே போய் நிற்கையாலே, போர முதலிகளால் இருப்பர்; மேன்மேலெனப் பிரம்புகள் விழும். அதனைப் பொறுத்துப் போய் புகுங்கோள்'' என்று அருளிச் செய்வர் பட்டர். 'அன்றிக்கே வழி நெஞ்சை யபகரிக்கும் போக்யதையை யுடைத்து; அதிலே கால்தாழாதே வருந்தி ஒரு படி சென்று புகுங்கோள்' என்பது பட்டருக்கு முன்புள்ளார் கூறுவது. ஈட்டில் கண்டுள்ள இந்த இரண்டு பொருள்களின் கருத்து வருமாறு: எம்பெருமான் சௌசீல்யமே வடிவெடுத்தவனாயினும், சில

20. திருவாய் 4.7 : 3.
21. ஷெ 6.1 : 7.

சமயும் பரத்துவம் பாராட்டி நிற்பதும் உண்டு. அதற்கேற்ப அவனை நெருங்கவொண்ணாதபடி முதலிகள் பிரம்பும் கையுமாக நின்று 'கெடுபிடி' செய்யவும் கூடும். அப்படி நேர்ந்தாலும் அதனை ஒருவாறு சகித்துக் கொண்டு உள்ளே புகவேண்டும் என்பது முதற்பொருள். 'செக்கர் வேலைத் திருவண் வண்டூர்' மலைநாட்டுத் திருப்பதி. ஆகவே, வழியெல்லாம் நெஞ்சினைக் கொள்ளை கொள்ளும் பூவியல் பொழிலும் தடாகங்களும் ஆறுகளும் நிறைந்திருக்கும். அவற்றில் கண் செலுத்தினால் அவற்றை அநுபவிக்க வேண்டுமென்று மனம் சென்று பாயுமேயன்றி எம்பெருமானிடம் சென்று சேரமுடியாது. எனவே, வழியில் கண் செலுத்தாமல் ஒருவாறு வழியினைக் கடக்க வேண்டும் என்பது இரண்டாவது பொருள். எம்பெருமானுடைய அடையாளத்தையும்,

> "கருவண்ணம் செய்யவாய் செய்யகண்
> செய்யகை செய்யகால்
> செருஒண் சக்கரம் சங்குஅடை
> யாளம் திருந்தக்கண்டே".[22]

[கருவண்ணம்-கரிய நிறம்; செய்ய-சிவந்த; செரு-போர் இங்கே மாறுபாடு; திருந்தக்கண்டு - நன்கு பார்த்து]

என்று குறிப்பிடுகின்றாள். ஆள்மாறாட்டம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டுமல்லவா?

அடுத்து, ஆழ்வார்நாயகி தன் கண் வட்டத்தில் அகப்பட்ட நாகணவாய்ப் புள்ளொன்றைக் கண்டு,

> "திருந்தக் கண்டுஎனக்கு ஒன்றுரை
> யாய்ஒண் சிறுபூவாய்?"[23]

---

22. திருவாய் 6. 1: 7
23. ஷை, 6.1 : 8.

[திருந்தக் கண்டு - நன்றாகச் சேவித்து; ஒண் - அழகிய (கண்டு கொண்டிருக்க வேண்டும் அழகு); பூவை - நாகணவாய்ப் புள்.]

என்று விண்ணப்பிக்கின்றாள். திருவண்வண்டூர் பாம்பணையப்பனுடைய திருமேனியின் அழகினை நன்றாகக் கண்டு மீண்டு வந்து தனக்கு உரைக்க வேண்டு மென்பது அவளது வேண்டுகோள். ஒரு பொருளை இரண்டு விதமாகக் காணலாம்; தன் மனத்திற்கு மாத்திரம் தெரிந்தால் போதும் என்று காண்கை ஒன்று; பிறர்க்கும், விரிவாகக் கூறும் படியாகக் காண்கை மற்றொன்று. பின்னதையே வேண்டுகின்றாள் பராங்குச நாயகி. அந்த எம்பெருமானை அடையாளம் கூறுவாள்போல்,

''பெருந்தண் தாமரைக் கண்பெரு
நீண்முடி நாற்றடந்தோள்
கருந்திண் மாமுகில் போல்திரு
மேனி அடிகளையே''[24]

[தண் - குளிர்ந்த; நீள்முடி - நீண்ட திருமுடி; நால் - நான்கு; தடதோள் - விசாலமான தோள்; முகில் - மேகம்; அடிகள் - எம்பெருமான்.]

என்று குறிப்பிடுகின்றாள்.

இந்நிலையில் வேறு சில அன்னப் பறவைகள் அவளருகே வருகின்றன. அவற்றை நோக்கிப் பேசுவதான பாசுரம் இது;

''அடிகள் கைதொழுது அலர்மேல்
அசையும் அன்னங்காள்!
விடிவை சங்கொலிக் கும்திரு
வண்வண்டூர்உறையும்

24. திருவாய் 6. 1: 8.

கடிய மாயன்தனைக் கண்ணனை
நெடுமாலைக் கண்டு
கொடிய வல்வினை யேன்திறம்
கூறுமின் வேறுகொண்டே."[25]

[அடிகள் - திருவடிகள்; அலர் - தாமரைப் பூ; விடிவு - விடியல்; திறம் - நிலை; வேறு கொண்டு - தனிமையில்.]

திருவண்வண்டூர்ப் பெருமானிடம் சென்று அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு தனிமையில் தன் செய்தி கூற வேண்டும் என்பது ஆழ்வார்நாயகியின் வேண்டுகோள். காலைப்பிடித்துக் கொண்டால் அவன் மறுக்க முடியாத நிலையில் மாட்டிக்கொள்வான் என்பது அவள் நினைப்பு. அந்த எம்பெருமானோ அடியார்களின் பகைவர்களை அழியச் செய்வதில் கண் பாராத ஆச்சரியச் செயல் புரிபவனாதலால் 'கடிய மாயன்' என்கின்றாள். அடியார்கட்குக் கையாளாக நின்று தன்னையே கொடுக்கக் கூடியவனாதலால் 'கண்ணன்' என்று குறிப்பிடுகின்றாள். இத்தனைச் செயல்களைப் புரிந்தாலும் 'அந்தோ ஒன்றும் செய்யப் பெற்றிலோம்' என்று குறைபடும்படியான வியாமோகம் உடையனாதலால் 'நெடுமால்' என்று கூறுகின்றாள்.

இந்நிலையில் சில வண்டினங்கள் பறந்து வருகின்றன. அவற்றைத் தனிமையில் அழைத்துப் பேசுகின்றாள். பாசுரம் இது:

"வேறுகொண் டும்மை யான்இரந்
தேன்வெறி வண்டினங்காள்!
தேறுநீர்ப் பம்பை வடபா
லைத்திரு வண்வண்டூர்
மாறில் போரரக் கன்மதிள்
நீறுஎழச் செற்றுகந்த

25. திருவாய் 6, 1: 9.

ஏறுசே வகனார்க்கு என்னை
யும்உளள் என்மின்களே''[26]

[வேறுகொண்டு - தனிமையில்; வெறி - வாசனை தேறுநீர் - தெளிவானநீர்: அரக்கன் - இங்கு, இராவணன்; நீறு - தூசிகள்; சேவகன் - வீரன்.]

தம் தலைவர் பெண் பிறந்தார் காரியங்களை யெல்லாம் செய்து தலைக்கட்டி விட்டதாக இருப்பார் என்று நினைத்திருக்கலாம். அங்ஙனம் நடைபெற இல்லை என்றும், காக்கப்பெறவேண்டிய கூட்டத்தில் தானும் ஒருத்தி இருப்பதாகச் சொல்லுமாறும் இரக்கின்றாள். தனிமையாக அழைத்துச் சொன்னதற்கு ஈடு: ''திக்குகள் தோறும் முதலிகளைப் போகவிடா நிற்கச் செய்தே திருவடி கையிலே திருவாழி மோதிரம் கொடுத்து விட்டாப் போலே காணும்'' என்பது. மற்றைய பறவைகளைவிட வண்டுகள் காரியம் செய்து முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவை என்பதை அறுதியிடு கின்றாள். இவ்விடத்தில் இராமன் சிறிய திருவடியிடம் தனிமையில் அழைத்துப் பேசி திருவாழியைக் கொடுத்ததாகக் குறிப்பிடும்,

''ஆண்டுகடந் தப்புறத்தும் எப்புறத்தும்
ஒருதிங்கள் அவதி யாகத்
தேண்டிஇவண் வந்தடைதிர் விடைகோடிர்
கடிதென்னச் செப்பும் வேலை
நீண்டவனும் மாருதியை நிறையருளால்
முகநோக்கி நீதி வல்லோய்!
காண்டிஎனிற் குறிகேட்டி எனவேறு
கொண்டிருந்து கழறலுற்றான்''[27]

[தேண்டி - தேடி; அடைதிர் - சேருங்கள்; செப்பும் வேலை - சொன்னபோது; காண்டி எனில் - காண்பாயானால்;

25. திருவாய் 6. 1: 9
26. ஷை 6, 1: 10.
27. கம்பரா. கிட்கிந் நாடவிட்ட 32

குறி - அடையாளம்; வேறுகொண்டிருந்து - தனியிடத்தில் இருந்து; கழறல் - கூறுதல்.]

''இனையவா றுரைசெயா
　　இனிதின்ஏ குதிஎனா
வனையுமா மணிநன்மோ
　　திரமளித்[்]தறிஞ! நின்
வினையெலா முடிகெனா
　　விடைகொடுத் துதவலும்
புனையும்வார் கழலினான்
　　அருளொடும் போயினான்''[28]

[இனையவாறு - இவ்விதமாக; வனையும் - இழைத்துச் செய்யப் பெற்ற; அருள் - கருணை]

என்ற கம்பராமாயணப் பாடல்களும் சிந்தித்து மகிழத் தக்கவை. இங்ஙனம் ஆழ்வார் பாசுரங்களைச் சிந்தித்த வண்ணம் மண்டபத்தில் பொழுது போக்குகின்றோம்.

சரியாக மாலை ஐந்தரை மணிக்குக் கோயில் திருக்காப்பு நீக்கப்பெறுகின்றது. கோயில் சிறிய கோயிலாக இருப்பினும் மதிலுக்குப் புறத்தே விசாலமான இடம் உள்ளது. பெருந்திரளாக மக்கள் வந்து குழுமினாலும் அவர்களையெல்லாம் ஏற்கக் கூடிய இடம் அது. முன்னரே வந்து காத்துக் கிடக்கும் பக்தர்களுடன் நாமும் திருக்கோயிலினுள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் மேற்கு நோக்கிய திருமுக மண்டலங் கொண்டு எழுந்தருளியிருக்கும் **பாம்பணையப்பனையும் கமலவல்லி நாய்ச்சியாரையும்** சேவிக்கின்றோம். நம்மையும் அறியாமல் ஆழ்வாருடைய பாசுரங்கள் மிடற்றொலியாக வெளிவருகின்றன. இத் திருவாய்மொழி கற்பார் எம்பெருமானுக்கும் அவனடியார்

28. ஷ்டி நாடவிட்ட - 73

# 9. திருப்புலியூர் மாயப்பிரான்

வைணவ சமயத்தில் சிறப்பாகக் கொள்ளப்பெறும் மந்திரங்கள் மூன்று. அவை திருமந்திரம், துவயம், சரம சுலோகம் என்பவை. மோட்சத்தை விரும்புகின்றவர்கள் இந்த மூன்று மந்திரங்களையும் தெரிந்து கொள்ளவேண்டும். இம் மூன்று மந்திரங்கள் சகலவேதசாரமான பொருள்களைத் தெரிவிப்பதாலும், இவற்றின் பெருமையை உணராதார் காதில் விழாதவாறு இவற்றை மறைக்க வேண்டியிருத்தலாலும் இவை 'இரகசியங்கள்' (மறைகள்) என்னும் பெயரைப் பெற்றுள்ளன என்பது ஈண்டு அறியத்தகும்.

இம் மூன்று மந்திரங்களுள் முக்கியமானது திருமந்திரம். இதுவே முதலில் அறியத்தக்கது. இம் மந்திரமே ஆன்மாவின் உண்மைச் சொரூபம்[1] இன்னதென்பதையும், அந்நிலைக்கேற்பச் சேதந[2] விடவேண்டுவன இவை என்பதையும் தெரிவிக்கின்றது. இவற்றை நன்கு அறிந்தவர்கட்கே உபாயத்தைக் கூறும் துவயத்திலும், பலனைக் கூறும் சரம சுலோகத்திலும் விருப்பம் ஏற்படும். ஆதலின் ஆன்மாவின் உண்மைத் தன்மையைத் தெரிவிக்கும் இத்திருமந்திரமே முதலில் அறியத் தகுந்த இரகசிய மாகின்றது.

---

1. ஆன்ம சொரூபம் - உடலைக் காட்டிலும் வேறுபட்ட ஆன்மா[1] தனக்கும் பிறருக்கும் உரிமையுடையதாயில்லாமல் ஈசுவரனுக்கே அடிமைப்பட்டதாய் (சேஷபூதனாய்) இருத்தல்,

2. சேதநன் - அறிவுள்ளவன்.

திருமந்திரத்தில் 'ஓம்' 'நம:', 'நாராயணாய' என்றும் மூன்று சொற்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் 'ஓம்' என்ற பிரணவத்தின் பொருளையே மற்ற இருசொற்களும் நன்கு விரிவுபடுத்துகின்றன. இவ்விரு சொற்களின் பொருளையே துவயம் விரிக்கின்றது. துவயத்தின் பொருளையே சரம சுலோகம் விவரிக்கின்றது. இங்ஙனம் மூன்று மந்திரங்களும் ஒன்றையொன்று விரித்துரைக்கும் முறையில் அமைந் துள்ளன. இங்ஙனம் இவை விளக்கமாயிருக்கும் தன்மையை 'முமுட்சுப்படி' என்னும் நூலில் கண்டு தெளியலாம்.

இந்தத் திருமந்திரத்தையே வேதங்களும் விரும்பின. விஷ்ணு காயத்ரி, தைத்தரியோபநிடதம், மகோப நிடதம், சூபாலோப நிடதம் ஆகிய நூல்கள் இதனைச் சிறப்பித்துக் கூறுவதிலிருந்து இவ்வுண்மையை அறியலாம். அஷ்டாட்சர பிரம வித்யை, கருட புராணம், பாரதம் முதலிய நூல்களும் இந்த மந்திரத்தையே போற்றி யுரைப்பதனால் முனிவர் களும் இதனையே ஆதரித்துப் போந்தார்கள் என்று தெரி கின்றது. அருளிச் செயல்களும் நாராயண பதத்தையே பாராட்டிச் சொல்லுகின்றமையின், ஆழ்வார் பெருமக்களும் இதனையே விரும்பினர் என்பது வெள்ளிடை மலை.

எம்பெருமானின் மேன்மையைக் காட்டிலும் அவனைக் குறிக்கும் திருநாமத்தின் மேன்மையே உயர்ந்ததாகும். இந் நாமத்திற்கு உரியவனாகச் சொல்லப்படும் எம்பெருமான் அருகிலின்றித் தொலைவிலிருப்பனும் அவனைப்பற்றியதாக வுள்ள இந்நாமம் தன்னைப் பக்தியுடன் சொன்னவர் களுடைய விருப்பங்களை முற்றுப்பெறச் செய்யும். இதனைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணமின்றியே சொன்னாலும் தம் குழவிகட்கு இப்பெயரிட்டு அழைக்கினும், பரிகாச மாகவோ, இழிவாகவோ, பொருளுணர்ச்சியின்றியோ

சொன்னாலும் அப்படிச் சொன்னவர்களைக் காப்பதினின்றும் தவறாது. சேதநர் நிலைக்குத் தகுந்தவாறு அவரவர் விரும்பியவற்றையும் தருவதாகும்.

"குலம்தரும்; செல்வம் தந்திடும்; அடியார்
படுதுய ராயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும்பு அருளும்;
அருளொடு பெருநிலம் அளிக்கும்;
வலந்தரும்; மற்றும் தந்திடும்; பெற்ற
தாயினும் ஆயின செய்யும்;
நலந்தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாஎன்னும் நாமம்"[3]

[குலம் - உயர்குலம்; நிலம்தரம் - தரைமட்டம்; பெரு நிலம் - பரமபதம்; வலம் - ஆற்றல்.]

என்ற திருமங்கையாழ்வாரின் பாசுரத்தால் இம்மந்திரத்தின் ஆற்றலை அறியலாம்.

இம்மந்திரத்தின் மூன்று சொற்களும் மூன்று பொருள்களைக் குறிக்கின்றன. இவற்றுள் முதற் சொல்லாகிய பிரணவம் சேதனுடைய சேஷத்துவத்தையும் (அடிமை நிலையையும்), இரண்டாவது சொல்லாகிய 'நம:' பாரதந்திரியத்தையும், மூன்றாவது சொல்லாகிய நாராயணாய என்பது சேதநன் ஈசுவரனுக்குப் புரிய வேண்டிய கைங்கரியத்தையும் தெரிவிக்கின்றன.

பிரணவமாகிய 'ஓம்' என்ற சொல்லும் அ, உ, ம என்ற மூன்று எழுத்துகளைக் கொண்டது. இம்மூன்று எழுத்துக்களும் மூன்று பொருள்களைத் தெரிவிக்கும். அகாரம் பகவானையும், அதில் ஏறி மறைந்துள்ள வேற்றுமை சேஷத்துவத்தையும், உகாரம் அந்தச் சேஷத்துவத்தின்

3. பெரி. திரு. 1.1 : 9

அநந்யார்ஹத்துவத்தையும்'[4] மகாரம் ஞானவானாகிய சீவனையும் தெரிவிக்கின்றன. இவற்றின் விரிவுகளை உரிய நூல்களில் கண்டு தெளியலாம்.

பகவானைப்பற்றிக் கூறும் நூல்களில் திருவாய்மொழியும் ஒன்று. இது 'திருமாலவன் கவி' என்றும் சிறப்பிக்கப் பெறும். இந்நூலில் நம்மாழ்வார் பகவானை நூறு பதிகங்களால் அநுபவித்து இனியராகின்றார். இவற்றுள் 73 பதிகங்கள் ஆழ்வார் தாமான தன்மையில் பேசினவை; 27 பதிகங்கள் பெண் பாவனையில் பேசினவை. பெண் நிலையிலிருந்து பேசினவற்றுள்ளும் மூன்று வகுப்புகளுண்டு. மகள் பாவனையில் பேசினவை பதினேழு பதிகங்கள்; தாய் பாவனையில் பேசினவை ஏழு பதிகங்கள்; தோழி பாவனையில் பேசினவை மூன்று பதிகங்கள். இறுதியாகக் குறிப்பிட்ட மூன்று பதிகங்களிலும் பிரணவத்தில் உகாரத்தின் பொருளான அநந்யார்ஹத்துவம் வெளியிடப்படுவதாக ஆன்றோர்கள் குறித்துள்ளனர். இவற்றுள் திருப்புலியூர் எம்பெருமான்மீதுள்ள பாசுரங்கள் 'தோழி அறத்தொடு நிற்றல்' என்ற அகப்பொருள் துறையில் அமைந்துள்ளன.

'அறத்தொடு நிற்றல்' என்பது என்ன? அதாவது, தானும் தலைமகளும் இதுகாறும் அறத்தொடு பொருந்தவே நடந்திருப்பதாகத் தோழி காட்டி நிற்றலே இது. அறம் என்பதை ஈண்டு முறை, தக்கது என்று கொள்ளல் வேண்டும். இறையனார் களவியலுரையாசிரியரும், ''அறம் என்பது தக்கது. தக்கதனைச் சொல்லி நிற்றல் தோழிக்கும் உரித்தென்றவாறு; அல்லதூஉம், பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு, கற்பின் தலை நிற்றல் என்பதூஉமாம்''[5] என்று உரைத்

4. அநந்யார்ஹத்துவம்- வேறொருவருக்கும் அல்லாமல் ஈசுவரன் ஒருவனுக்கே உரித்தாயிருத்தல்.
5. இறை. கள. நூற்பா 23 (உரை காண்க)

துள்ளமை ஈண்டு கருதத்தக்கது. தொல்காப்பியனார் அறத்தொடு நிற்றலைப் 'புரைதீர்கிளவி' என்று குறிப்பிடுவர். இறையனாரோ 'மாறுகோள் இல்லாமொழி' என்பர்.

"தோழிக்குரியவை கோடாய் தேஎத்து
மாறுகோ ளில்லா மொழியுமார் உளவே"[6]

[கோடாய் - செவிலித்தாய்; கொள்+தாய் எனப் பிரித்து தாயாகக் கொள்ளப்படுவோள் எனப் பொருள் படும்.]

என்ற நூற்பாவினால் இதனை அறியலாம். 'மாறுகோளில்லா மொழி' என்பதற்கு உரையாசிரியர் கூறும் விளக்கவுரை : "எற்றினோடு மாறுகொள்ளாமையோ எனின். தாயறிவினொடு மாறுகொள்ளாமையும், தலைமகள் கற்பினொடு மாறுகொள்ளாமையும் தோழி தனது காவலொடு மாறு கொள்ளாமையும், நாணினொடு மாறு கொள்ளாமையும் உலகினொடு மாறுகொள்ளாமையும் எனக் கொள்க" என்பது. தலைவிக்கு வாய்ந்த களவொழுக்க நிகழ்ச்சியினால் தம் மேற்படுவதான குற்றம் ஏதுமில்லை என்று இவ்வாறெல்லாம் இவையனைத்திற்கும் மாறுகோளில்லாத வகையாய்த் (குற்றமில்லாதவகையாய்) தோழி ஆய்ந்து கூறுவாள்.

எவ்வெப்பொழுதெல்லாம் அறத்தொடு நிற்கும் நிலை ஏற்படும் என்பதையும் இறையனார் அகப்பொருள் விரித்துரைக்கின்றது.[7] காவல் மிகுதி காரணமாக தலைமகட்கு வேட்கை பெருகும்பொழுதும், அயலார் வரைந்து புகும் காலம்வரும் பொழுதும், வரைவு ஏற்றுக்கொள்ளாது தமர் அவ்விடத்து மறுக்கும்பொழுதும்,தலைவனுக்கு நிகழும் ஏதம்

6. இறை. கள். நூற்பா - 14.
7. ஷை நூற்பா - 29.

பற்றி அஞ்சும் பொழுதும் தோழி அறத்தொடு நிற்பாள். தொல்காப்பியர் இதனை ஏழுவகையாக நிகழும் என்பர்.[8] பிறிதோரிடத்திலும் தலைவியின் மாறுபாட்டைக் குறித்துச் செவிலி அறிவரை வினாவி குறிபார்க்கும் இடத்திலும், வேலனைக் கொண்டு வெறியாடும் பொழுதும், பிறர் வரைவு வந்துழியும், தலைவனது வரைவு மறுத்த வழியும் அறத்தொடுநிலை வகையால் தலைவற்கும் தலைமகட்கும், தனக்கும், குலத்திற்கும் குற்றம் ஏற்படாதவாறு குற்றம் தீர்ந்த கிளவியைத் தாய்மாட்டு நிரம்பச் சொல்லாது தோற்றுவாய் செய்வாள் என்று குறிப்பிடுவர்.[9]

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் குமிழியிட்ட வண்ணம் பேருந்து மூலம் குட்டநாட்டுத் திருப்புலியூரை அடைகின்றோம். ஊர் இயற்கைச் சூழலில் அழகுற அமைந்துள்ளது. ஊர் சுற்றிலும் வயல் சூழ்ந்துள்ளது. ''செழுநீர் வயல் குட்ட நாட்டுத் திருப்புலியூர்''[10] என்பது நம்மாழ்வார் திருவாக்கு. இந்தத் திருப்பதி எம்பெருமானை நம்மாழ்வார் மட்டிலும் ஒரு திருவாய்மொழியால் மங்களா சாசனம் செய்துள்ளார்.[11] புன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருப்பதை ஆழ்வார் ''புன்னை அம்பொழில் சூழ் திருப்புலியூர்''[12] என்று சிறப்பித்துள்ளார். சோலையும் வயலும் சூழ்ந்துள்ளமையை,

''ஊர்வ ளம்கிளர் சோலையும்
கரும்பும்பெருஞ் செந்நெலும் சூழ்ந்து

8. தொல்-பொருளதி-பொருளியல், 102.
9. ஷை-களவியல், 24.
10. திருவாய். 8.9 : 1.
11. ஷை 8.9.
12. ஷை 8.9 : 2.

ஏர்வ ளம்கிளர் தண்பணைக்
குட்டநாட்டுத் திருப்புலியூர்''[13]

[வளம் கிளர் - வளத்தைத் தெரிவிக்கும்; ஏர்கிளர் - உழுவது நடுவது போன்றவற்றால் அழகு தெரிவிக்கும்; தண்பணை - குளிர்ந்த வயல்களையுடைய பண்ணை; பண்ணை, பணை என்று நிற்கின்றது.]

என்று காட்டுகின்றாள் ஆழ்வார்நாயகி. வயல்களிலும் சோலைகளிலும் உள்ள சுனைகளில் பெரிய தாமரை மலர்கள் மலர்ந்து சூழ்நிலைக்கே ஒரு பொலிவினைத் தந்து நிற்கின்றன. இதனைச் ''சுனையினுள் தடந்தாமரை மலரும் தண் திருப்புலியூர்''[14] என்று பாசுரம் தெரிவிக்கிறது. மேலும், பொய்கைகளிலும் இந்தத் தாமரை மலர்கள் நிலை விளக்குகள் போல நின்று அணிசெய்யும். இந்தப் பொய்கைகளில் முதலைகளும் அதிகமாக வாழுமாம். இதனை,

''கரவார் தடந்தொறும் தாமரைக்
கயந்தீவிகை நின்றலரும்
புரவார் கழனிகள் சூழ்திருப்
புலியூர்''[15]

[கரவு - முதலை; தடம் - பொய்கை; தாமரைக் கயம் - தாமரைத் திரள்கள்; தீவிகை - நிலை விளக்கு; அலர் - மலர்கின்ற.]

என்று பாசுரப் பகுதியால் அறியலாம்.

மலைநாட்டில் வெற்றிலைக் கொடிகட்கும் மிளகு கொடி கட்கும் குறைவே இல்லை. வீட்டைச் சுற்றிலுமுள்ள தோட்டங்களில் இவை மலிந்து காணப்படுவன. இந்த வெற்றிலைக் கொடிகளில் அழகிய மெல்லிய இலைகள்

13. திருவாய் 8. :9 : 4.
14. ஷை 8. : 9 : 5.
15. ஷை 8. : 9 : 9.

நிறைந்திருப்பதைப் பார்க்கலாம். வெற்றிலைபோடும் பழக்கம் உள்ளவர்கட்கு இவற்றைப் பார்க்கும்பொழுதே நாக்கில் நீர் சுரக்கும்; அவற்றைப் பறித்து மெல்ல வேண்டும் என்ற தினவும் நாக்கில் ஏற்படும் என்று கூறுவதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. அந்த வெற்றிலைக் கொடிகள் அருகிலுள்ள அடியுரத்தையுடைய பாக்கு மரத்தைத் தழுவி அணைத்துக் கொண்டிருப்பதை கண்டு களிக்கலாம். மலை நாடு 'நேந்திரம்' என்ற வகை வாழைப்பழத்திற்குப் பெயர் போனது. அதனை மலைநாட்டு மக்கள் முக்கிய உணவாகவும் கொள்கின்றனர். அந்த வகை வாழைமரங்கள் செறிந்த இலைகளையும் மடல்களையும் கொண்டு தோட்டங்களை அணி செய்கின்றன. அந்த வாழைகளில் பழக்குலைகள் தொங்கிக் கொண்டிருப்பதையும், அப்பழங்களின் மணம் எங்கும் வீசிக் கொண்டிருப்பதையும் காண்கின்றோம். சில இடங்களில் செவ்வாழையும் செறிந்து காணப்படும். இந்தச் சோலைகளில் தென்னை மரங்கள் செறிந்து இருப்பதையும் காண்கின்றோம். இந்தத் தென்னை மரங்களின் செறிந்த ஓலைகளினூடே தென்றற் காற்று உலவிச் சூழ்நிலையை இன்பகரமாக்குகின்றது. இதனை ஆழ்வார்நாயகி,

''மெல்லிலைச் செல்வ வண்கொடிப்
புல்க வீங்கிளம் தாழ்கமுகின்
மல்லிலை மடல்வாழை ஈன்கனி
சூழ்ந்து மணங் கமழ்ந்து
புல்லிலைத் தேங்கி னூடு
கால்உலவும் தண் திருப்புலியூர்''[16]

[இலைச் செல்வம் - இலையின் வளப்பம்; வண்கொடி - அழகிய கொடி; புல்க - தழுவ; தாள் - அடி; மல் - பெரிய; புல்இலைத்தேங்கு - ஓலைகளையுடைய புல்லாகிய தென்னை மரம்; கால் - காற்று.]

16. திருவாய். 8.9 : 7

என்று குறிப்பிடுகின்றாள். இந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தவண்ணம் ''தென்றிசைத் திலதம்புரைக் குட்ட நாட்டுத் திருப்புலியூருக்குள்''[17] நுழைகின்றோம்.

நம்மாழ்வார் காலத்தில் இந்த திருப்பதி அழகிய நீண்ட மாடங்கள் உயர்ந்து தோன்றுவதாய் இருந்தது. இதனை ஆழ்வார் ''திகழும் மணி நெடுமாடம் நீடு திருப்புலியூர்''[18] என்று குறிப்பிடுவர். இன்றும் அந்த ஊரில் சிறியனவும் பெரியனவுமாகவுள்ள பல்வேறு மாட மாளிகைகளைக் காணத்தான் செய்கின்றோம். இன்று அந்த ஊரில் அதிகக் கிறித்தவர்கள் வாழ்கின்றனர். ஆனால் அந்தக் காலத்தில் செல்வச் செழிப்புள்ள அந்தணோத்தமர்கள் எண்ணற்றவர் கள் அவ்வூரில் வாழ்ந்து வந்ததாக அறியக் கிடக்கின்றது. அவர்கள் யாகங்கள் செய்யும்போது யாக குண்டங் களினின்றும் புகை சென்று விசும்பிலுள்ள உம்பர் உலகத்தை யும் மறைக்குமாம். இதனை ஆழ்வார்,

''மல்லைச் செல்வம்
வடமொழி மறைவாணர் வேள்வியுள்
நெல்அழல் வான்புகை போய்த்
திடவிசும்பில் அமரர் நாட்டை
மறைக்கும் தண்திருப்புலியூர்''[19]

[மல்லைச் செல்வம் - அதிகச் செல்வம்; நெய்அழல் - நெய்யால் எரியும் நெருப்பு; வான்புகை -மிக்க புகை; விசும்பு- ஆகாயம்; அமரர் - தேவர்.]

என்று குறிப்பிடுவதனால் அறியலாகும். வடமொழி மறைவாணர்களாகிய இந்த அந்தணர்கள் ஓதும் சாம வேத

17. திருவாய். 8.9 : 10
18. ஷெ 8.9 : 3
19. ஷை 8.9 : 8

ஒலி கடல் ஒலிபோல் நிலைபெற்று ஒலித்துக் கொண்டிருக்குமாம். ''விரவார் இசைமறை வேதியர் ஒலி வேலையின் நின்றொலிப்ப''[20] என்ற பாசுரச் சொற்றொடரால் இதனை அறிகின்றோம். இந்த எண்ணங்கள் மனத்தில் அலையிட்ட வண்ணம் திருக்கோயிலுக்கு வருகின்றோம்.

இத்திருப்பதி எம்பெருமான்மீது நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருவாய்மொழியைச் சிந்திக்கின்றோம். இந்தத் திருவாய்மொழி தோழியின் பாசுரமாகச் செல்லுகின்றது. திருவாய் மொழியில் 'தோழிப் பாசுரமாக' வரும் பதிகங்கள் மூன்று.[21]. இம்மூன்று பதிகங்களும் பிரணவத்தில் உள்ள உகாரத்தின் பொருளான அநந்யார்ஹத்துவம் (எம்பெருமானைத் தவிர வேறு ஒருவருக்கும் உரியதல்லாத தன்மை) வெளியிடப்பெறுகின்றது என்பதை நாம் அறிவோம். ஆன்மாக்கள் யாவும் பரமபதநாதனுக்கே அடிமை என்பதையும் உணர்வோம். இந்தத் திருவாய்மொழியில் 'தோழிப் பாசுரம்' செல்லும் முறையை நினைத்துப் பார்க்கின்றோம்.

பராங்குச நாயகி வயது முதிர்ந்து மங்கைப் பருவம் அடைகின்றாள். கணவனை நாடி அடைய வேண்டிய வயதல்லவா இது? திருப்புலியூர் எம்பெருமானுடன் இயற்கைப் புணர்ச்சியும் நடைபெற்று விடுகின்றது. தலைவியின் உயிர்த்தோழியானவள் தலைவியின் உருவ வேறுபாட்டாலும் சொற்களின் வேறுபாட்டாலும் புணர்ச்சி உண்டானமையை ஒருவாறு அறிகின்றாள். தன் மகளின் உண்மைநிலையை அறியாத தாய் தந்தையர் இவளுடைய திருமணத்தை நிச்சயித்து மணமுரசும் அறைவிக்கின்றனர். இதனை அறிந்த தோழி மனங்கவல்கின்றாள். 'பரதனே

20. திருவாய் 8.9 : 9
21. ஷை 4.6; 5.5; 8.9

அரசன்' என்று அறைவித்த முரசொலி செவிப்பட்டபோது பரதாழ்வான் எங்ஙனம் மனக்கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள் இவ்வாறு சிந்திக்கின்றாள், "மானிடவர்க்கென்று பேச்சுப் படில், வாழகில்லேன்"[22] என்று கூறியவள் இவள். "அன்றிப் பின் மற்றொருவர்க்கென்னைப் பேச லொட்டேன் மாலிருஞ் சோலையெம் மாயற் கல்லால்"[23] என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால் இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படியாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனாருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின், அஃது என் காவற் சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும். அறிவியாது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்யவேண்டியது என்ன?" என்பதாக.

தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது தலைவியின் பெற்றோரும் மற்றோரும் தலைவியின் வடிவ வேறுபாட்டிற்குக் காரணம் யாதாக இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்றாள். தானும் அவர்களுடன் ஆராய்வதாகச் சேர்ந்துகொண்டு இதனை விலக்க வேண்டும் என்று உறுதி செய்கின்றாள். அந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே இத்திருவாய்மொழி. இதுவே அகப்பொருள் நூலார் குறிப்பிடும் 'அறத்தொடு நிற்றல்'[24] என்பதாகும். இத்திருப்பதி எம்பெருமான் மீதுள்ள திருவாய்மொழி இதனையே கூறுகின்றது.

---

22. நாச். திரு 1 : 5
23. பெரியாழ் திரு 3.4 : 5
24. அறத்தொடு நிற்றல்-தக்கதனைச் சொல்லி நிற்றல் என்றவாறு-அறம்-தக்கது. அன்றிக்கே, பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு; கற்பின்தலை நிற்றல் என்னலுமாம்.

அரசன்' என்று அறைவித்த முரசொலி செவிப்பட்டபோது பரதாழ்வான் எங்ஙனம் மனக்கிலேசம் அடைந்தானோ அங்ஙனமே தோழி இப்போது துயர் அடைகின்றாள் இவ்வாறு சிந்திக்கின்றாள், "மானிடவர்க்கென்று பேச்சுப் படில், வாழகில்லேன்''[22] என்று கூறியவள் இவள். "அன்றிப் பின் மற்றொருவர்க்கென்னைப் பேச லொட்டேன் மாலிருஞ் சோலையெம் மாயற் கல்லால்''[23] என்ற பிடிவாதத்தைப் பிடிக்கின்றவள். மாறாக ஏதேனும் நடைபெற்றால் இவள் உயிர் தரியாள். அப்படி நடைபெறுவதை எப்படியாயினும் தடுத்தேயாக வேண்டும். அங்ஙனம் செய்ய முயலுங்கால் திருப்புலியூர் நாயனாருடன் புணர்ச்சி உண்டானமையை அறிவிப்பின், அஃது என் காவற் சோர்வாலே நிகழ்ந்தது என்று ஏற்பட்டுவிடும். அறிவியாது ஒழியில் இவள் வாழாள். இந்நிலையில் செய்யவேண்டியது என்ன?'' என்பதாக.

தோழி இங்ஙனம் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது தலைவியின் பெற்றோரும் மற்றோரும் தலைவியின் வடிவ வேறுபாட்டிற்குக் காரணம் யாதாக இருக்குமோ என்று ஆராயும் நிலையைக் காண்கின்றாள். தானும் அவர்களுடன் ஆராய்வதாகச் சேர்ந்துகொண்டு இதனை விலக்க வேண்டும் என்று உறுதி செய்கின்றாள். அந்த முறையைக் கூறுவதாக அமைந்ததே இத்திருவாய்மொழி. இதுவே அகப்பொருள் ...லார் குறிப்பிடும் 'அறத்தொடு நிற்றல்'[24] என்பதாகும். திருப்பதி எம்பெருமான் மீதுள்ள திருவாய்மொழி னையே கூறுகின்றது.

22. நாச். திரு 1 : 5
23. பெரியாழ் திரு 3.4 : 5
24. அறத்தொடு நிற்றல்-தக்கதனைச் சொல்லி நிற்றல் என்றவாறு-அறம்-தக்கது. அன்றிக்கே, பெண்டிர்க்கு அறம் என்பது கற்பு; கற்பின்தலை நிற்றல் என்னலுமாம்.

தோழி முதலில் இவ்வாறு தொடங்குகின்றாள்:

"கருமா ணிக்க மலைமேல் மணித்
தடந்தாமரைக் காடுகள்போல்,
திருமார்வு வாய்கண்கை யுந்தி கா லுடை
யாடைகள் செய்யபிரான்
திருமால் எம்மான் செழுநீர் வயல்
குட்டநாட்டுத் திருபுலியூர்
அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்
அன்னைமீரிதற் கென்செய்கேனோ"[25]

[மணித்தடம்-தெளிந்த தடாகம்; உந்தி-கொப்பூழ்; கால்-திருவடி; ஆடை-தரித்திருக்கும்; செய்ய ஆடைகள் எனக் கூட்டுக; பேர்-திருநாமம்.]

என்பது பாசுரம். எம்பெருமானின் திவ்விய அவயவங்களின் அழகினைக் கண்டு அவ்வடிவழகு அல்லது மற்றொன்று அறியாதபடி ஈடுபட்டாள் என்று தாய்மார்க்கு உரைக்கின்றாள், அநுபவிப்பார் நெஞ்சு குளிரும்படி கருமையுடையதாய், பிரகாசத்தால் மிக்கு இருப்பதாய், தனக்குமேல் ஒன்று இல்லாததான இனிமை யுடையதாய் இருப்பது ஒரு மலை மேலே என்ற கருத்துத் தோன்ற 'கருமாணிக்க மலை மேல்' என்கின்றாள். இத்தகைய ஒரு மலைமீது தெளிந்த ஒரு தடாகம் தாமரைக் காடுகள் பூத்ததுபோல் எம்பெருமான் எழில் நீலமேனியில் திருமார்பு, திருவதரம், திருக்கண்கள், திருக்கைகள், திருஉந்தி, திருவடிகள் முதலிய உறுப்புகள் அமைந்துள்ளன என்பது தோன்ற 'மணித்தடம்..... ஆடைகள் செய்ய பிரான்' என்கிறாள். பக்தர்கட்குப் பற்றுக் கோடாகவுள்ள பெரிய பிராட்டியார் எழுந்தருளியிருக்கும் திருமார்பாதலால் அது சிவந்து காணப்பெறுகின்றது. அப் பிராட்டிவழியால் உறவு செய்தார்க்கு அநுகூலமான சொற்

25 திருவாய்; 8.8 : 1.

களைப் பேசுகின்றது அவனது திருப்பவளம். இன்சொற்கள் சொல்லப்புக்கு இனியனான தன்னைக் கண்ட காட்சியால் தடுமாறினால், குறையும் தலைக்கட்டிக் கொடுப்பது செவ்வரி படர்ந்த திருக்கண். அவனது நோக்கிற்குத் தோற்றாரை அணைப்பது திருக்கை. உத்தேசியமான நிலத்தில் (அதாவது திருவடிகளில்) விழா நின்றால் காற் கட்டவல்லது திருஉந்தி. இது நடுவே அமுக்கும் 'சுழி அன்றோ? இவை எல்லாவற்றிகும் தோற்று விழும் இடம் எம்பெருமானது திருவடிகள். இவை யாவும் காட்டிஎெறிந்த நிலாப்போலாகாமல் பக்தர்கட்கு அநுபவிக்கக் கொடுக்கு மவன் என்பதனைக் குறிப்பிடவே 'பிரான் [26] என்கின்றாள். இங்ஙனம் எம்பெருமானின் திருமேனியழகினை,

> ''என் அரங்கத்து இன்னமுதர்
> குழல்அழகர் வாய்அழகர் கண்அழகர் கொப்பூழில்
> எழுகமலப் பூஅழகர்''[27]

என்று ஆண்டாள் கூறி அநுபவித்ததையும் நினைந்து பார்க் கின்றோம். மேலும், இங்கு பர வியூக விபவம் இவைகளுக் குரிய திருநாமங்களையும் சொல்லாமல், அல்லாத உகந் தருளின திவ்விய தேசங்களில் நிற்கின்றவர்களின் பெயர் களையும் சொல்லாமல் குட்டநாட்டுத் திருப்புலியூர் எம் பெருமானுடைய திருநாமங்களையே வாய்வெருவா நின்கின் றாள் என்பது தோன்ற 'திருப்புலியூர் அருமாயன் பேரன்றிப் பேச்சிலள்' என்கின்றாள். அவள் நிலை தனக்கு அப்போது தான் தெரியும் என்பது தோன்ற 'அன்னைமீர் இதற்கு என் செய்கேன்' என்கின்றாள்.

இந்த எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதியைச் சதா புகழ்ந்து கொண்டிருக்கின்றாள் தலைவி என்பதனை

---

26. பிரான்-உபகாரகன்
27. நாச். திரு - 11:2

யும் குறிப்பிடுகின்றாள். 'புன்னையம் பொழில் சூழ் திருப் புலியூர் புகழும் இவளே''[28] என்பதாக.

''அணிமேருவின் மீதுலவும்
துன்னு சூழ்சுடர் ஞாயிறும்
அன்றியும்பல் சுடர்களும்போல்
மின்னு நீள்முடி யாரம்பல்கலன்
தானுடைஎம் பெருமான்''[29]

[அணிமேரு- அழகிய மேரு; துன்னு-செறிந்து ஞாயிறு- கதிரவன்; பல்சுடர்-கோள்கள், உடுக்கள்; முடி- கிரீடம்; ஆரம்-மாலை.]

என்ற பாசுரப் பகுதியால் அத்திருப்பதி எம்பெருமானது திவ்விய ஆபரண அழகில் தலைவி ஈடுபட்டுப் பேசும் படி களை விரித்துரைக்கின்றாள். ''மேரு மலையின் மீது ஆயிரம் கதிர்கள் விரித்தாற் போன்ற திருவபிடேகமும், விண் மீன் கூட்டங்கள் மின்னினாற் போன்ற பல மாலை வரிசை களும் மற்றும் அணிவகைகளும் ஒளிரும் அழகை என்ன வென்று சொல்வது?'' என்று வாய்வெருவி நிற்கின்றாள் என்று குறிப்பிடுகின்றாள் தோழி. இவற்றாலும் சோலையைப் பற்றிக் குறிப்பிடுவதாலும் இவளுக்கு அத்தலத்து எம்பெரு மானோடு கலவி நேர்ந்ததாகவே நினைக்கத் தோன்றுகிறது என்பது தோழியின் குறிப்பு

ஆழ்வார்நாயகி இரவும் பகலும் திருப்புலியூர் வளத்தையே புகழ்ந்து கொண்டிருக்கின்றாள் என்பதை அடுத்துக் குறிப்பிடுகின்றாள் தோழி.

''புகழும் இவள்நின் றிராப்பகல்
பொருநீர்க்கடல் தீப்பட்டு எங்கும்
திகழும் எரியொடு செல்வதொப்பச்
செழுங்கதிர் ஆழிமுதல்

28. திருவாய். 8. 9: 2
29. ஷை 8, 9: 2

புகழும் பொருபடை ஏந்திப்போர்
புக்கசுரரைப் பொன்றுவித்தான்
திகழும் மணிநெடு மாடம்நீடு
திருப்புலி யூர்வளமே''[30]

[பொருநீர் கடல்-அலை எறியும் கடல்: தீப்பட்டு-நெருப்புக்கொளுத்தி; எரி-தீக்கொழுந்து; ஆழி-சக்கரம்; பொருபடை போர்செய்யும் ஆயுதங்கள்; பொன்று வித்தான்-அழித்தவன்] என்பது பாசுரம். கடல் வண்ணனான எம்பெருமான் திருவாழியாழ்வான் முதலான திவ்வியாயுதங்களை யணிந்து கொண்டு எழுந்தருள்வது 'ஒரு கடல் நெருப்புக் கொளுத்தி நடந்து செல்லுகின்றதோ?' என்று ஐயுறும்படியாகவுள்ள தென்கின்றாள் தலைவி. அன்றியும், இந்த எம்பெருமான் திருவாழி திருச்சங்கு முதலிய திவ்வியாயுதங்களுடன் போர்க்களத்தில் சென்று அரக்கர்களைத் தொலைத்தருளும் பேராற்றலை இரவும் பகலும் இடையீடின்றிப் புகழ்ந்து கூறாநின்றாள். இதனாலும் இத்திருப்பதி எம்பெருமானுடன் இவனுக்கு ஒரு சம்பந்தம் நிகழ்ந்ததாகத் தோன்றுகின்றது. என்று குறிப்பாகப் புலப்படுத்துகின்றாள் தோழி.

மேலும் தோழி கூறுகின்றாள்; ''வண்டினம் முரலும் சோலை, மயில் இனம் ஆலும் சோலை, கொண்டல்மீ தணவும் சோலை, குயிலினம் கூவும் சோலை, அண்டர்கோன் அமரும் சோலை''[31] என்றெல்லாம் சோலைகளின் வளத்தைப் பேசுகின்றாள்; வயலடங்கலும் கரும்பும் செந்நெலுமாய் வளர்திருக்கும் அழகைச் சொல்லுகின்றாள்; அங்கு உழுவதும் நடுவதுமான பண்ணையில் நடை பெறும் செயல்களின் அழகினையும், சுற்றிலும் நீர்நிலைகள் சூழ்ந்திருக்கும் வனப்பையும் வாய்வெருவுகின்றாள். இங்ஙனம்

30. திருவாய். 8. 9:3
31. திருமாலை-14

இப் பெண்பிள்ளை பேசும் அழகுகளை என் சொல்வேன். இத்துடன் நின்றாளா?

''சீர்வ ளம்கிளர் மூவுல
குண்டுமிழ் தேவபிரான்
பேர்வ ளம்கிளர்ந் தன்றிப்பேச்
சிலன்''[32]

அத்தலத்து எம்பெருமானின் 'ஆபத்தில் தோழன்' என்றிருக்கும் திருக்குணத்தில் ஈடுபட்டு அவன் பிரளய காலத்தில் எல்லா உலகங்களையும் தன் திருவயிற்றில் வைத்துப் படைப்புக் காலத்தில் அவற்றை வெளிநாடு காண உமிழ்ந்த அற்புதச் செயலையும் பேசுகின்றாள். இவற்றையெல்லாம் சொல்லும்போது இவளுடைய வடிவு ஆபரணம் பூண்டாற் போன்று விளங்கும் அழகு சொல்லுந்தரமன்று'' என்று குடுப்பிடுகின்றாள். இதனாலும் இத்தலத்து எம்பெருமானுடன் கலவி நேர்ந்திருக்க வேண்டும்போல் தோன்றுவதை ஊகிக்கவேண்டும் என்கின்றாள்.

இன்னும் இத்தலத்து எம்பெருமானுடன் புணர்ச்சி நடைபெற்றிருத்தல் கூடும் என்பதற்குச் சான்றுகளையும் காட்டத் தொடங்குகின்றாள் தோழி.

''புனையிழைகள் அணியும் ஆடையுடையும்
புதுக்க ணிப்பும்
நினையும் நீர்மைய தன்றுஇவட்கிது;
நின்று நினைக்கப்புக்கால்
சுனையினுள் தடந் தாமரை
மலரும்தண் திருப்புலியூர்
முனைவன் மூவுல காளிஅப்பன்
திருவருள் மூழ்கினளே''[33]

---

32. திருவாய். 8. 9: 4
33. ஷை 8.9 :5

[புனை- பூணுதல்; புதுக்கணிப்பு-வடிவில் பிறந்த புதுமை: முனைவன்-முன்னோன்; ஆளி-ஆள்பவன்.]

என்பது பாசுரம். தலைமகளிடத்துக் காணப்பெறும் மூன்று சிறப்புகளை எடுத்துக்காட்டித் தன் ஊகத்தை உறுதிப் படுத்துகின்றாள் தோழி. 'அவள் அணிந்திருக்கும் ஆபரணங் கள் முன்பு நாம் பூட்டினாற்போல் இல்லை; கலைத்துப் பூண்டாற்போல் தோன்றுகின்றதன்றோ?'' என்கின்றாள். "உடுத்தின ஆடையும் நாம் உடுத்தினபடி ,இல்லை; முகத் தலைப்பார்த்து உடுத்தது போலல்லவா உளது? வேறுபாடு தோன்றவில்லையா?'' என்று ஆடை யின்மீது கவனத்தை ஈர்க்கின்றாள். 'இவள் வடிவிலும் பிறந்திருக்கும் புதுமைகள் தோன்றவில்லையா? இதற்கு முன்பு இது கோடையோடின வயல்போலே யன்றோ இருந்தது?. இப்போது நீர்பாய்ந்த வயல் போலே தோன்றும் செவ்வியைப் பாருங்கள்' என் கின்றாள். காலம் என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் நின்று ஆராயப் புகுந்தாலும், இவளிடம் பிறந்துள்ள அழகுகள் நினைத்துக்கூடப் பார்க்க முடியாதவை என்பதை யும் உணர்த்துகின்றாள். எம்பெருமானுடைய படிகளையே நினைக்க முடியாதபோது அவன் திறத்தில் ஈடுபட்டா ருடைய படிகளை நினைக்குந்தரமன்று என்பதனையும் பெற வைக்கின்றாள். இவற்றால், 'முனைவன் மூவுலகாளி அப்பன் திருவருள் மூழ்கினளே' என்று இயற்கைப் புணர்ச்சி நடைபெற்றுவிட்டதை உறுதிப்படுத்துகின்றாள்.

'மேற்கூறிய சான்றுகள் மட்டுமா? வேறு சான்றுகளும் உள்ளன' என்கின்றாள்.

> ''திருவருள் மூழ்கி வைகலும்
> செழுநீர்நிறக் கண்ணபிரான்
> திருவருள் களும்சேர்ந் தமைக்கடை
> யாளம் திருந்தஉள'[34]
> [வைகலும்-நாள்தோறும்.]

34. திருவாய். 8. 9: 6

எப்பொழுதும் அவன் திருவருளிலேயே மூழ்கிக்கிடக்கின்றாள். அவனுடைய திருவருள் இவளிடம் சேர்ந்தமைக்கு மறைக்க முடியாத அடையாளங்கள் பல உள்ளன என்று கூறி ஒன்றினை மட்டிலும் காட்டுகின்றாள்.

> "திருவருள் கமுகு ஒண்பழத்தது
> மெல்லியல் செவ்விதழே."[35]

[கமுகு-பாக்குமரம், இதழ்-உதடு ]

"எம்பெருமான் திருவருளால் இத்திருப்பதியில் வளர்ந்த கமுகு—திருவருள்கமுகு—ஈன்ற செவ்விய பழத்தின் நிறத்தை யல்லவா ஒத்துள்ளது இவளது உதடுகளின் நிறம்? இதனை நீங்களே ஆய்ந்து பார்க்கலாமே?" என்கின்றாள். இவ்விடத்தில் 'திருவருட்கமுகு' என்றதற்கு இன்சுவை மிக்க ஈட்டின் "திருவருட்கமுகென்று சில உண்டு; அதாவது நீரால் வளருகையன்றிக்கே பெரிய பிராட்டியாரும் சர்வேசுவரனும் கடாட்சிக்க, அத்தால் வளருவன சில" என்ற பகுதி எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

இத்திருப்பதியின் இயற்கைச் சூழலைக் கூறுவாள் போல் அங்கு அஃறிணைப் பொருள்களும் கூட ஒன்றோடொன்று கலந்து பரிமாறி வாழா நிற்கும் என்பதனையும் காட்டு கின்றாள். மெல்லிய இலைத்தழைப்பையும் அழகினையும் உடைய வெற்றிலைக் கொடி முதிர்ந்து இளகிப் பருத்த கமுக மரத்தைத் தழுவி நிற்கின்றது. "(வெற்றிலை) தன் கணவனான கமுகுக்குத் தன் உடம்பை முற்றூட்டாகக் கொடுக்கும் போலே காணும்" என்பது ஈடு. இதற்குமேல் தென்றற் காற்று வாழைத்தோப்பில் வீசா நிற்கின்றது. 'இப்படிப்பட்ட வாய்ப்பு அமைந்த தலத்தில் இவளும் தானுகந்த பொருளை அணையப் பெற்றது வியப்பு அன்று, முறையே' என்று குறிப்பிடுகின்றாள். "மல்லல்அம்

35. திருவாய். 8. 9 : 6

செல்வக் கண்ணன் தாள் அடைந்தாள் இம் மட வரலே''[36]. மேலும், ''படம் அரவு அணையான் தன் நாமம் அல்லால் பரவாள் இவளே''[37]. அத்திருப்பதி எம்பெருமானின் திருநாமமே யன்றி வேறொரு பெயரையும் சொல்லுவதில்லை. அங்ஙனமே 'பரவாள் இவள் நின்று இராப்பகல்......திருப்புலியூர் புகழன்றி மற்றே''[38]. 'திருப்புலியூரின் புகழை வாய்விட்டுச் சொல்லுவது தவிர வேறொன்றும் அறியாள் இத்தலைவி' என்கின்றாள். இதனாலும் இத்தலத்து எம்பிரானுடன் இவளுக்குக் கலவி நேர்ந்திருக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றாள்.

இறுதியாக மேற்கூறிய காரணங்கட்கெல்லாம் முத்தாய்ப்பு வைத்தமாதிரி, இதற்கு வேறுவிதமான முடிவும் கூற முடியாதவாறு, பிறிதொரு காரணம் கூறுகின்றாள்.

''அன்றிமற் றோருபாய மென்? இவள்
அம்தண்து ழாய்க்கமழ்தல்
..............................................
நின்ற மாயப்பி ரான்திரு
வருளாமிவள் நேர்பட்டதே.''[39]

[உபாயம்-காரணம்; கமழ்தல்-மணம் வீசுதல்.]

இவளது உடம்பில் அழகிய குளிர்ந்த திருத்துழாயின் மணம் வீசுவதற்கு வேறு என்ன காரணம் இருக்க முடியும்? என் உடம்பிலாவது உங்கள் உடம்பிலாவது திருத்துழாயின் மணம் வீசுகின்றதோ? எம்பெருமான் திருமேனியில் அணைந்தாலல்லது

36. திருவாய் 8. 9 : 7
37. ஷை 8. 9 : 8
38. ஷை 8. 9 : 9
39. ஷை 8. 9 : 10

இம்மணம் வீசுவதற்குக் காரணம் உண்டோ?' என்கின்றாள், ''இராஜ புத்திரனை அணையாதார்க்குக் கோயில் சாந்து நாறுகைக்குவிரகு உண்டோ?'' என்பது ஈடு. இதனால் திருப் புலியூரில் நின்ற மாயப்பிரானுடைய திருவருளுக்கே இவள் இலக்காயினாள் என்று தோழி சொல்லித் தலைக்கட்டு கின்றாள்.

இந்த எண்ணங்கள் நம் சிந்தையில் அலைபாய்ந்த வண்ணம் திருக்கோயிலுக்குள் நுழைகின்றோம். நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலம் கொண்டு எழுந்தருளியிருக்கும் **மாயப்பிரானையும், பொற்கொடி நாய்ச்சி யாரையும்** சேவிக்கின்றோம். நாமும் நம்மாழ்வார்போல் நாயகி நிலையை அடைய முயல்கின்றோம். அந்த நிலையை அடைதல் அவ்வளவு எளிதா என்ன? ஏதோ பாவனை செய்து கொண்டு ஆழ்வார் பாசுரங்களை ஓதி உளங்கரைகின்றோம் அவரோ,

''நேர்பட்ட நிறைமூ வுலகுக்கும்
நாயகன் தன்னடிமை
நேர்பட்ட தொண்டர் தொண்டர்
தொண்டர்தொண்டன் சடகோபன்''[40]

[நேர்பட்ட.வாய்த்த; நேர்பட்ட-சேர்ந்த; தொண்டர். அடியார்கள், பாகவதர்கள்.]

என்று தம்மை ''அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவர்க்கு அடியார்கள், அவர் அடியார்க்கு அடிமைப் பட்டவன்'' என்று சொல்லிக் கொள்ளுகின்றார். அந்த மனநிலை வரவேண்டும், செயற் படவும் வேண்டும் என்று அவாவி நிற்கின்றோம். தன்முனைப்பு கரைந்தால்தானே அது வரும்? இந்தப் பத்துப்பாசுரங்களையும் பக்தியுடன் ஓதினதால் அன்பே வடிவெடுத்தவனான நெடுமாற்கு அடிமை செய்வதற்கு வாய்த்தவர்கள் ஆனோம் என்ற

40. திருவாய் 8. 9 : 11

பெருமித உணர்வினையும் பெறுகின்றோம். இந்நிலையில் திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் இத்திருப்பதி பற்றிய பாசுரமும் நினைவிற்கு வருகின்றது.

> "முதல்வண்ணம் ஆமே
> முலைவண்ணம்; முன்னை
> விதிவண்ணம் நீங்கி
> விடுமே—சதுரத்
> திருப்புலியூர் நின்றான்
> திருத்தண் துழாயின்
> மருப்புலிஊர் தென்றல்
> வரின்."[41]

என்ற பாசுரத்தையும் ஓதி உளங் கரைகின்றோம். இந்தப் பாசுரமும் ஒரு பெண் பேச்சாகவே அமைந்திருக்கும் நேர்த்தியையும் நினைந்துப் பார்க்கின்றோம்.

இந்தத் திருப்பதி எம்பெருமானிடம் விளங்கும் குணத்தைப்பற்றி ஆசாரிய ஹிருதயம்,

> "அவகாஹித்தாரை அநந்யார்ஹம்
> ஆக்கும் நாயக லட்சணம், வளம்புகழும்
> ஊரிலே குட்டமிடும்"[42]

[அவகாஹித்தாரை - மூழ்கினவர்களை; அநந்யார்ஹம் ஆக்கும்-பிறர்க்கு ஆகாமல் அவன் ஒருவனுக்கே உரித்தாக்குதல்; நாயக லட்சணம் - தலைவனுக்கு உரிய இலக்கணங்கள்; வளம் புகழும் ஊர் - திருப்புலியூர்; குட்டமிடும் - நிறைந்திருக்கும்.]

என்று குறிப்பிடுகின்றது. திருப்புலியூரில் தலைவனுக்கு உரிய இலக்கணங்கள் விளங்கும் என்ற அதன் பொருளையும் சிந்திக்கின்றோம். இறையநுபவம் நிறைந்த உள்ளத்துடன் நம் இருப்பிடத்தை நோக்கித் திரும்புகின்றோம்.

---

41. நூற். திருப். அவந். 68.
42. ஆசா. ஹிரு.176.

# 10. திருக்காட்கரை அப்பன்

இறைவனுடைய அடியார்கள் இறைவனை அநுபவித்தல் பல்வேறு வகையாக நிகழும். சிலர் அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அநுபவிப்பர்; "சகஸ்ர நாம அர்ச்சனை" இம் முறையினின்றே எழுந்தது என்று கருதலாம். சிலர் அவனுடைய திருக்கல்யாண குணங்களைச் சொல்லிச் சொல்லி அநுபவிப்பர். எடுத்துக்காட்டாக இறைவனுடைய எளிமைக் . குணத்தில் (சௌலப்யம்) நம்மாழ்வார் "எத்திறம் உரலினோடு இணைந்திருந்து ஏங்கிய எளிவே[1] என்று ஈடுபட்டு அதனால் தன்னையே மறந்து ஆறு மாதம் மோகித்துக் கிடந்தார் என்ற செய்தியை உரையாசிரியர்கள் குறித்துள்ளனர்.[2] இந்தக் குணம் எல்லா ஆழ்வார்களின் நெஞ்சையும் உருக்கியுள்ளது. எம்பெருமானின் எளிமையையும் உயர்வையும் (பரத்துவம்) இரண்டு பெண்கள் எதிரெதிராகக் கூறும் பாவனையில் திருமங்கையாழ்வார் பேசும் பாசுரங்களை[3] இதற்கு எடுத்துக் காட்டுகளாகக் கொள்ளலாம். இன்னும் சிலர் இறைவனுடைய வடிவழகை வருணித்துப் பேரின்பம் கொள்வர்.

"சன்மம் பலபல செய்து
　　வெளிப்பட்டுச் சங்கொடு சக்கரம்வில்
ஒண்மையுடைய உலக்கை ஒள்வாள்
　　தண்டுகொண்டு புள்ளூர்ந்து உலகில்

---

1. திருவாய் 1. 3 : 1
2. ஷை 1. 3 : 1; 5. 10 :1 ("ஈட்டின் தமிழாக்கம்") என்ற நூலில் காண்க)
3. பெரி. திரு, 11.5

வன்மை யுடைய அரக்கர்
அசுரரை மாளப் பொருத
நன்மை யுடைடயவன் சீர்பர
வப்பெற்ற நான்ஓர் குறைவிலனே''[4]

இதில் திருவருள் காரணமாக அடியார் பொருட்டுவந்து பல பிறவி எடுக்கும் சீலகுணம் (சௌசீல்யம்) ஒரு கற்பகத்தரு பணைத்துக் கணுத்தோறும் அரும்பினாற் போலே எம் பெருமான் திவ்யாயுதங்களைத் தரித்திருக்கும் அழகு ஆகியவற்றில் நம்மாழ்வார் ஈடுபட்டு மகிழ்வதைப் பாசுரத்தில் காணலாம். ''நன்மையுடையவன் சீர் பரவப்பெறுவதில்'' ஆனந்தம் அடைகின்றார் ஆழ்வார். மேலும், சிலர் இறைவன் கோயில் கொண்டருளின திவ்விய தேசங்களின் வளங்களைப் பேசியும், அவ்விடங்களில் அபிமானமுள்ள வைணவர்களின் பெருமையைப் பேசியும் அநுபவிப்பர். இன்று **திருக்காட்கரை** என்ற திவ்விய தேசத்திற்குச் சென்று திருக்காட்கரை அப்பனைச் சேவிப்போம். நம்மாழ்வாரின் துணைகொண்டு அந்த அப்பனின் குணங்களில் ஈடுபடுவோம்.

இயற்கை வனப்புகளும் வளங்களும் நிறைந்த கருவூல மாகத் திகழ்வது ''மலைநாடு''; அஃதாவது, இன்று **கேரளநாடு** என்று வழங்கும் பகுதியாகும் இது. மலைத் தொடர்களால் அமைந்த இப்பகுதி மேற்கு முகமாகக்கடல் வரையிலும் சரிந்து கிடக்கின்றது. உயர்ந்த கொடுமுடி ஒன்றிலிருந்துகொண்டு ஒருவர் மேற்குத் திரும்பி நின்று இப்பகுதியை நோக்குவாராயின் ஒருபுறம் அடர்ந்த காடுகளும் குன்றுகளும், தென்னந்தோப்புகளும் கமுகந் தோட்டங் களும், பிறிதொரு புறம் அராபியக் கதைகளில் வரும் அதிசயங்களைப் போன்று அடுக்கடுக்காக வரும் பசுமையான

4. திருவாய் 3. 10 : 1

பள்ளத் நாக்குகள், மைதானங்கள், வயல்கள், சோலைகள் ஆகியவை அடங்கிய பகுதிகளும்; மற்றொரு புறம் முடி மன்னர்போலச் செருக்குடன் நிமிர்ந்துள்ள உன்னதசிகரங்கள், அருவிகள், பீடபூமிகள், காயல்களாக விரியும் ஆறுகள் ஆகியவை அடங்கிய பகுதிகளும் அவர் கண்களுக்குப் புலனாகும். மேலும், ஆங்கே இயற்கை நியதிகட்குக் கட்டுப் பட்டும், இயற்கை நியதிகளைக் கட்டுப்படுத்தியும் ஆடம்பர மற்ற வாழ்க்கை நடத்தும் மக்கள் திரள்களையும் காணலாம்.

கேரளத்தில் தென்னிந்திய இருப்பூர்தி வழியில் அமைந்துள்ள எர்ணாகுளம் என்ற நிலையத்தில் இறங்கு கின்றோம். அவரவர் வசதிப்படி சத்திரம், வாடகை விடுதி ஆகிய இடங்களில் தங்கி நெடுந்தொலைவுப் பயணத்தின் சிரமத்தைப் போக்கிக் கொள்கின்றோம். நீராடித் தூய ஆடையை உடுத்திக்கொண்டு திருக்காட்கரைக்குப் போகச் சித்தமாகின்றோம், எர்ணாகுளத்திலிருந்து சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ளது இந்த திவ்விய தேசம். அங்கு போகப் பேருந்து (Bus) வசதி உண்டு. சாலையின் மேலேயே இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்திற்கு அறுபது காசு தந்து அவ்வூரை அடைகின்றோம்.

பேருந்தில் செல்லும்போதே சாலைக்கு இருமருங்கும் உள்ள தோப்புகள், சோலைகள், வயல்கள் இவற்றைக் கண்டு களித்துக்கொண்டே செல்லுகின்றோம். எங்கெல்லாம் எழில் கொழித்து நிற்கின்றதோ அங்கங்கெல்லாம் தமிழ்க் கடவுள் முருகன் எழுந்தருளியிருப்பான் என்பது தமிழரது சமயக் கொள்கை. திரு. வி.க.வின் "**முருகன் அல்லது அழகு**" என்ற நூலில் இது விளக்கப்பெற்றிருப்பதைப் படித்து மகிழலாம். மாயோனும் (திருமாலும்) தமிழ்க் கடவுள் தானே? "மாயோன் மேய காடுறை உலகமும்"[5] என்று

5. தொல், பொருள் அகத்திணை-5

'தொல்காப்பியம்'' அவனைக் குறிப்பிடுகின்றதன்றோ? முருகனும் திருமால் மருகன் அன்றோ? ஆகவே, திருமாலும் அழகான இடங்களில்தான் கோயில் கொண்டுள்ளார் என்பதைக் காண்கின்றோம். இத்தகைய அழகான இடங்களில் பூவைப்பூ, காயாம்பூ நீலோற்பலம், செங்கழுநீர்ப்பூ இவை மலர்ந்து காட்சி அளிக்கின்றன. இந்தப் பூக்களைக் கண்டதும் நம்மாழ்வாரின் உயிரும் உடம்பும் ஒருங்கே மலர்ச்சி பெற்றுப் பூரித்துப் போகின்றன. அந்த உணர்ச்சி.

''பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற,
காவி மலர்என்றும் காண்தொறும்,—பாவியேன்
மெல்லாவி மெய்மிகவே பூரிக்கும், அவ்வவை
எல்லாம் பிரான்உருவே என்று.''[6]

[பூவை - ஒருவகை மலர்; காவி - செங்கழுநீர்ப்பூ; ஆவி - உயிர்; மெய் - உடல்; பூரிக்கும் - பருத்து வளரும்.]

என்ற பாட்டாக வடிவம் பெறுகின்றது. எம்பெருமானுடைய திவ்வியமங்கள வடிவம்தான் இப்படி வந்து காட்சி தருகின்றது. இது வெறும் பிரமையே என்று தோன்றினாலும் அறிவு எச்சரித்தாலும், ஆழ்வாரது பக்திக் கண்கட்கு அவை அப்படியே தென்படுகின்றன; அறிவின் எச்சரிக்கையையும் புறக்கணித்து பிரமையே மேல் என்று அவரது உணர்ச்சி தூண்டுவதால் அந்தப் பிரமையிலேயே அவரது உள்ளம் தோய்ந்து ஒன்றி நின்று பேரின்பத்தை அடைகின்றார் ஆழ்வார்.

திருக்காட்கரை என்ற திவ்வியதேசமும் இத்தகைய இயற்கையழகு மிக்க சூழலில்தான் அமைந்துள்ளது. இத்திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஒரு திருவாய்மொழியில் மங்களா சாசனம் செய்துள்ளார் நம்மாழ்வார். வேறு எந்த ஆழ்வாரும் இந்த

6. பெரி திருவந்-73

எம்பெருமானைப் பாடவில்லை. திருமங்கையாழ்வாருக்கு அடுத்தபடியாக அதிகமான திருப்பதிகளைப் பாடியவர் நம்மாழ்வாரே யாவர். இவ்விரு ஆழ்வார்களும் சிற்றரசர் களாக இருந்ததால் பயணம் செய்வதில் மிகவும் சிரமமாக இருந்த அந்தக் காலத்தில் யாத்திரை செய்ய வசதி பெற் றிருந்தனர் என்று கருதலாம். ஆனால், நம்மாழ்வாருக்குப் பல தலங்களிலுமுள்ள மூர்த்திகளே அவர் இருக்கும் இடம் தேடிவந்து சேவை சாதித்தனர் என்றும், அவர் திருப்புளி யாழ்வாரின் அடியிலிருந்து கொண்டே பல்வேறு தலங்களை யும் பாடினார் என்றும் குருபரம்பரைக் கதைகள் கூறுகின்றன

ஆழ்வாரும் தாம் சென்று சேவித்த தலங்களை எல்லாம் அங்கங்கே சென்றபோது பாடவில்லை என்பது உண்மை. பெரும்பாலும் இவரது பிரபந்தங்கள் யாவும் அந்தாதி முறை யிலிருப்பதால், இவை ஓரிடத்தில் ஒரே காலத்தில் இயற்றப் பெற்றிருத்தல் வேண்டும் என்று ஊகம் செய்வதில் தவறு ஒன்றும் இல்லை. அங்ஙனம் பாடுங்கால் அந்தப் பாசுரங் களின் போக்கிற்கு இசைந்தவாறு தலங்களை மீண்டும் தம் மனக்கண்ணால் கண்டு ஒரு முறையில்லாமல் குறிப்பிட் டிருத்தல் வேண்டும். இவர் பாடியுள்ள தலங்களைத் தொகுத்துப் பார்த்தால் தம்முடைய நாட்டிலும் (திருநகரியைத் தலைநகராகக் கொண்ட வழுதி நாடு, அஃதாவது இப்போதுள்ள திருநெல்வேலிப் பகுதி) தம் அன்னையார் பிறந்த மலையாள நாட்டிலும் உள்ள தலங் களையே பாடினார் என்பது தெரியவரும். மேலும் மதுரை, திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், கும்பகோணம் வழி யாகத் திருவெங்கடத்திற்குச் சென்றார் என்பதும், அங்ஙனம் சென்றபோது வழியிலுள்ள சில தலங்களையும் பாடினார் என்பதும் ஊகத்தினால் ஒருவாறு விளங்கும். "உலகம் எங்கும் இறைவன் சந்நிதியே" என்றும் தம்முடைய

நெஞ்சமே இறைவனுக்குச் சிறந்த திருப்பதி என்றும் முடிவு செய்து கொண்டவர் எல்லாத் திருப்பதிகளையும், எல்லா மூர்த்திகளையும் ஒரே இடத்தில் கண்டார் என்னும் கதை தோன்றியதில் வியப்பொன்றும் இல்லை.

இந்த ஆழ்வார் திருக்காட்கரைக்கு வந்தபோது ஒரு சமயம் தம் உள்ளத்தில் எம்பெருமான் வீற்றிருந்த பெருமையைக் கூறி மகிழ்ந்தது தம் நினைவிற்கு வருகின்றது.[8]

''சிறியேனுடைச் சிந்தையுள் மூவுலகுந்தன்
நெறியா வயிற்றில்கொண்டு நின்றொழிந்தாரே''[9]

என்றபடி இறைவன் முறைகெடப் பரிமாறின பரிமாற்றம் நினைவின் பொருளானதோடன்றி அப்போதைய அநுபவமே யாகி விடுகின்றது. அந்த நிலையில் இறைவனுடைய சீல குணத்தை (பெரியவன் தாழ்ந்தவர்களுடன் புரையறக் கலக்குந் தன்மை) எடுத்துப் பேசி உள்ளம் கரைகின்றார் ஆழ்வார். பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் ஆகிய நான்கு நிலைகளிலுள்ள எல்லாக் குணங்களையும் அர்ச்சாவதாரத்தில் காணலாம் என்பது தத்துவம்.[10] ஆயினும், ஒவ்வொரு திருப்பதியிலும் ஒல்வொரு குணம் சிறப்பாகப் பொலியும் என்றும் அத்தத்துவம் குறிப்பிடு கின்றது.[11] இக்கருத்துப்படி திருக்காட்கரையில் சீலகுணம் கரை அழியப் பெருகும் என்பது வைணவர்களின் அசைக்க

7. பெரிய திருவந்.—68 (''கல்லும் கனை கடலும்'')
8. திருவாய் 8.7
9. ஷை 8.7 : 8
10. ஆசா. ஹிரு.—158
11. ஷை —159

முடியாத நம்பிக்கை.[12] இங்குத் தானே சேஷ—சேஷி பாவம் (ஆண்டாள் - அடியவன் பாவனை) தட்டு மாறிப் பரிவர்த்தனை செய்து ஆண்டவனின் சீலகுணம் பெருகி வழிந்தது?

ஆழ்வாரின் இந்த அநுபவத்தைத் துணையாகக் கொண்டு திருக்காட்கரைக் கோயிலை நாடிச் செல்லு கின்றோம். எப்பக்கம் நோக்கினும் ஒரே சோலை மயம். ''வெறிகமழ் சோலைத் தென்காட்கரை''[13], ''சீர்மல்கு சோலை தென் காட்கரை''[14] ''திருவளர் சோலை தென் காட்கரை''[15] என்று ஆழ்வார் இவ்வூரைக் குறிப்பிடுவதை யும் நினைக்கின்றோம். வழிநெடுக வாவிகளும் குளங்களும், சிற்றாறுகளும் காணப்பெறுகின்றன. ''சுனைகொள் பூஞ்சோலைத் தென் காட்கரை''[16] என்ற பாசுரக் குறிப்பு நம் நினைவிற்கு வருகின்றது. அத்தடாகங்களிலும் நீர் நிலை களிலும் செங்கழுநீர்ப் பூக்கள் நிறைந்துள்ளதைக் காணும் பொழுது ''தெருவெல்லாம் காவிகமழ் திருக்காட்கரை''[17] என்ற ஆழ்வாரின் பாசுரப் பகுதியை நினைந்து போற்று கின்றோம்.

இந்த மனநிறைவுடன் திருக்கோயிலுக்குள் நுழை கின்றோம். சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் தாழ்ந்த மதில் சுவர்களால் சூழப்பெற்றுள்ள இடத்தில் அமைக்கப் பெற்றுள்ளது அத்திருக்கோயில். மிகவும் சிறிய கோயில் தான். இங்குத்தான் திருக்காட்கரை அப்பன் தெற்கு நோக்கிய

12. ஆசா. ஹிரு—178
13. திருவாய்.9.6 : 4
14. ஷை9.6 : 3
15. ஷை 9.6 : 5
16. ஷை 9.6 : 2
17. ஷை9.6 : 1

திருமுக மண்டலங்கொண்டு பெருஞ்செல்வ நாயகியுடன் நின்ற திருக்கோலத்துடன் காட்சி அளிக்கின்றான். இந்த எம்பெருமானின் ஆச்சரியமான பரிமாற்றங்களை நினைக்கும் பொழுது நெஞ்சு நீர்ப்பண்டமாகின்றது; கட்டுக் குலைந்து உருகுகின்றது. ஆன்மா தாங்கக் கூடிய அளவுக்கு மீறி ஆசையும் கரை புரண்டோடுகின்றது.

''உருகுமால் நெஞ்சம் உயிரின் பரமன்றி
பெருகுமால் வேட்கையும் என்செய்கேன்
தொண்டனேன்''[18]

[பரம் அன்றி—பொறுக்க அரிதாம்படி]

என்ற ஆழ்வார் வாக்கினை நினைந்து நெஞ்சுருகி நிற்கின்றோம். எம்பெருமான் தாழ நின்று ஆழ்வாருடன் பரிமாறின சீலகுணத்தினை நினைந்து கரையழிகின்றோம். ஒரு குணத்தையே ''காலம்'' என்னும் ஒரு பொருள் உள்ள வரையிலும் கால் தாழ்ந்து கணந்தோறும் புதுமை பிறந்து அநுபவிக்கவல்ல ஆழ்வாரின் பக்தியை நினைந்து போற்று கின்றோம். அவருக்கு இறைவன் ''அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதமாக''[19] இனிக்கின்றவனல்லவா?

அந்த மாயனின் அநந்த கல்யாண குணங்களை அவர் நினைக்கத் தொடங்கினால் அந்த நினைவும் நெடுகச் சென்று தலைக்கட்டாது. மீண்டும் அவற்றையே நினைக்கத் தொடங்குவர் ஆழ்வார். இங்ஙனம் காலம் செல்லுகின்றது. இங்ஙனம் நெஞ்சால் நினைக்க முடியாத அந்த அரும்பெருங் குணங்களைத் தம் வாயினால் சொல்லத் தொடங்குகின்றார் ஆழ்வார்; தம்மையும் அறியாமல் அவருடைய வாய் அத்திருக்

18. திருவாய். 9.6 : 1
19. ஷை 2.5 : 4

குணங்களைப் புகழ்ந்த வண்ணம் உள்ளது. அங்ஙனம் பேசுங் கால் அப்பேச்சு செவி வழியாக உள்ளே புகுந்து ஊற்றெடுத்து நெஞ்சினை மேலும் கரையச் செய்கின்றது. இவ்விடத்தில் ஈடு; "பெருக்காற்றின் கரை இடிந்து பின் நீராய்க் கரைந்து போமாறுபோலே ஓர் உருவம் ஆக்கிக் காணவொண்ணதபடி உக்குப் போக நின்றது"[20] என்று குறிப்பது நினைத்து மகிழத் தக்கது. தாழ நின்று பரிமாறின எம்பெருமானுடைய சீல குணத்தைப் பாட்டாகப் பாடிப் பரவினாலும் ஆழ்வாருடைய ஆன்மா வேகத் தொடங்குகின்றது.

"நினைதொறும் சொல்லுந்தொறும்
நெஞ்சிடிந்து உகும்
வினைகொள் சீர்பாடிலும்
வேம்எனது ஆருயிர்"[21]

என்று பேசுகின்றார் ஆழ்வார். "எல்லாவற்றுக்கும் குளிர்ச்சி பண்ணக் கடவதான பனி தாமரை மலரை மட்டிலும் கருகப் பண்ணுமாப் போலே, சகலர்க்கும் துன்பம் நீக்குவனவான குணங்கள். எனக்கு மட்டிலும் துன்பத்தை விளைவிக் கின்றனவே" என்கின்றார்; இந்த நிலையில் எம்பெரு மானுக்கு எங்ஙனம் கைங்கரியம் செய்வது என்று ஏங்கு கின்றார். "நினைகிலேன் நானுனக்கு ஆள் செய்யும் நீர்மையே" என்கின்றார். ஆழ்வார் பெற்ற அநுபவத்தை நினைத்தவண்ணம் நாமும் எம்பெருமானைச் சேவிக் கின்றோம்.

இங்ஙனம் ஆழ்வார் கரைந்து நெஞ்சழிவதற்கு இறைவன் என்னதான் செய்தான்?

"நீர்மையால் நெஞ்சம் வஞ்சித்துப்
புகுந்து, என்னை

---

20. திருவாய் 9. 6 : 2. (ஈடு காண்க)
21. ஷை 9. 6 : 2.

ஈர்மைசெய்து என்உயிராய்
என்உயிர் உண்டான்''[22]

[நீர்மை-சீலகுணம்; ஈர்மை செய்து - இரு பிளவாக்கி]

என்று கூறுகின்றார் ஆழ்வார். ''வஞ்சித்து நெஞ்சம் புகுந்து என்னை நீர்மையால் ஈர்மை செய்து'' என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்வது சுவை மிக்கது. ''தான் ஆண்டானும், நான் அடிமையுமான முறை தவறாது பரிமாறுவதாகவே சொல்லி என் நெஞ்சை இசையப் பண்ணி உள் புகுந்தான்'' என்கின்றார் ஆழ்வார். ''தான் அடிமை, நான் ஆண்டான்'' என்று முறைகேடாகப் பரிமாறப் போவதாக முன்னமே தெரிவித்து விட்டால் ஒருகால் ஆழ்வார் இசைய மாட்டார் என்று கருதியே இங்ஙனம் ''வஞ்சித்து'' (ஒன்றைச் சொல்லி, மற்றொன்றைச் செய்து) உள் புகுந்தான் போலும்! இங்ஙனம் புகுந்த பிறகு நீர்மையைக் காட்டத் தொடங்குகின்றான்; தான் தாழநின்று பரிமாறத் தொடங்கினான். அதனால் நெஞ்சை ஈடுபடுத்தினான்.

நீண்ட நாட்களாகவே இறைவனுக்கு ''ஒழிவுஇல்காலம் எல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்''[23] என்பதையே திருவருள் செய்கையாக திருவுள்ளம் பற்றியிருந்தார் ஆழ்வார். இதையே ஒரு காரண மாகக் கொண்டு ஆழ்வாரை அடிமை கொள்வான் போலே அவருள் புகுந்து அவருடை உடலையும் ஆன்மாவையும் ஒரு சேரப் புசித்துவிட்டான். இதனை ஆழ்வார்.

''திருவருள் செய்பவன்போல
என்னுள் புகுந்து

22. திருவாய். 9: 6. : 3.
23. ஷை 3. 3 ; 1

உருவமும் ஆருயிரும்
உடனே உண்டான்''[24]
[உடனே - ஒருசேர]

''துயர் அறு சுடர் அடி தொழுது எழுகைக்கு மயர்வுஅற மதி நலம் அருளுவாரைப் போலப் புகுந்தான்'' என்பது குறிப்பு. ஆயினும், ஆழ்வார் திறத்தில் ''திரு அருளை'' இறைவனே பெற்றவனாக ஆயினன். இங்கே நம் பிள்ளை ஈடு வியக்கத் தக்கது: ''அவன் அங்கீகாரத்துக்கு முன்பு இவர் தேகத்தையே விரும்பிப் போந்தார்; அவன் இவரை அங்கீகரித்த பிறகு இவர் தம் தேகத்தைவெறுக்க, அவன்இவருடைய தேகத்தை விரும்பிப் புக்கான்; இவருக்கு அவனுடைய சேர்க்கை சொரூப ஞானத்துக்கு உடல் ஆயிற்று; அவனுக்கு இவருடைய சேர்க்கை உடலை உயிராகவிரும்புவதற்கு உடல் ஆயிற்று''.[25] இறைவனுடைய இத்திட்டத்தை ''அறிகிலேன்.............. சிறிய என் ஆருயிர் உண்ட திரு அருளே''[26] என்கின்றார் ஆழ்வார்.

தம் பக்கம் பிச்சேறின எம்பெருமானின் வஞ்சனைக ளனைத்தும் ஆழ்வாருக்குச் செவ்வியனவாகவே தோன்றா நின்றன: இறைவன் உண்டு அநுபவித்து சாரம் அற்றதா யிருக்கும் இவருடைய ஆன்மா சிறிது அறிவை அடைந்து இரவும் பகலும் புலம்பிக் கொண்டு அவன் எழுந்தருளி யிருக்கும் திருக்காட்கரையை ஏத்தத் தொடங்கியது.

''புன் கண்மை எய்திப்
புலம்பி இராப்பகல்

24. திருவாய் 9. 6 : 5
25. ஈட்டின் தமிழாக்கம் - பகுதி 9 (திருவாய் 9. 6 :5.)
26. திருவாய் 9. 6 : 4

என்கண்ணன் என்று அவன்
காட்கரை ஏத்துமே''[27]

[புன்கண்மை - புல்லிதான அறிவு; கண்-அறிவு, ஞானம் என்று குறிப்பிடுவர். இறைவனால் அவர் உயிர் கொள்ளப் பெற்றாலும், கொள்ளப்பெற்றதில் இன்னும் குறை உண்டு என்று கருதி, மேலும் அவ்வுயிர்,

''காட்கரை ஏத்தும்: அதனுள்
கண்ணா! என்னும்;
வேட்கை நோய்கூர
நினைந்து கரைந்து உகும்''[28]

என்று குறையிரப்பதாகப் பேசுகின்றார் ஆழ்வார். அவனைக் காட்டிலும் அவன் இருக்கும் ஊரிலே ஆசைமிகுந்து அவ்வூரையே ஏத்தா நின்றது. பரமபதநாதன் என்றால் ஏற்றமில்லையே. வைகுந்தத்தைக் காட்டிலும் இவ்விடத்தில் வாசத்தாலே ஏற்றம் பெறலாம் என்று இங்கு வந்த ஏற்றம் பெற்றனனாதலால் ''அதனுள் (அவ்வூரினுள்) கண்ணா!'' என்று அவ்வூரையும் சொல்லி அவனையும் சொல்லி அழையா நின்றது.

இவ்விடத்தில் ''போகதசையில் ஈசுவரன் அழிக்கும்போது நோக்க வேணும் என்று அழியா தொழிகை''[29] என்ற **முமுட்சுப்படியின்** சூத்திரம் கருதத் தக்கது. அஃதாவது ஈசுவரன் சீவனாகிய தன்னுடன் கலந்து பரிமாறும் பொழுது, அவன் தன்மாட்டுக் கொண்டுள்ள பிரேமப் பித்தினால் (கழிபெருங் காதலினால்) தாழநின்று பரிமாறி, தன்னுடைய சேஷத்துவத்தை (அடிமைத் தன்மையை) அழிக்குங்கால், ''நம் சேஷத்துவத்தை நாம் நோக்கிக்

27. திருவாய் 9. 6 : 6
28. ஷை 9. 6 : 7
29. முமுட்சுப்படி—92 (திருமலை—திருப்பதி தேவஸ்தான வெளியீடு).

கொள்ள வேண்டும்'' என நினைத்துச் சீவனாகிய தான் பின் வாங்கி அவன் போகத்தைக் கெடுக்காமலிருக்க வேண்டும் என்பதே இதன் பொருளாகும். இதுதான் பகவானுக்கே ஆனந்தம் ஏற்படுமாறு வினியோகப் படுகை என்று சொல்லப் பெறுவதாகும்.

ஈசுவரன் சேதனனை (உயிரை) வினியோகம் கொள்ளல் இரண்டு வகைப்படும்; இவற்றுள் அதன் தலைவனாகவே இருந்து உயிரை அடிமையாக வைத்துப் பரிமாறுதல் ஒரு வகை. சில சமயம் அவன் உயிருடன் கலந்து போகந் துய்க்கக் கருதுவான். அவ்வமயம் ஈசுவரன் உயிரை அடிமை கொள் பவன் போன்று, உயிரை நெருங்கி, அதன்மாட்டுத் தனக் குள்ள வேட்கை மிகுதியால், உயிரைத் தலைமையாக வைத்துத் தான் அடிமையாக இருந்து, இழி தொழில் செய்து அவ்விதத்தில் உயிரை வினியோகம் கொள்ளுதல் மற்றொரு வகை. ஈண்டுக் கூறிய இரண்டாவது வகை அநுபவத்திற்குக் குசேலரின் வாழ்க்கை வரலாற்றின் நிகழ்ச்சி யொன்றை எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பரம பக்தராகிய குசேலர் தன் துணைவியின் தூண்டுதலால் கண்ணனிடம் செல்லு கின்றார். குசேலரின் வருகையைக் காவலரால் அறிந்த துவரை நாதன், தானே அரியணையினின்றும் இறங்கி வந்து,

''திலகமண் தோயஐயன்
திருவடி வணங்கிப் பின்னர்
நிலவுமெய்ப் புளகம் போர்த்து
நிறம்புறத் தழுவிக் கொண்டான்''[30]

என்றுவாறு குசேலர் திருவடிகளில் வணங்குகின்றான். பின்பு அவரைத் தன்னுடன் அழைத்துச் சென்று அவருடைய திருவடிகளைத் தன் மடிமீது வைத்து, ''இத்திருவடிகள்

30. குசேலோபாக்கியானம் - குசேலர் நகர்ப்புறம் அடைந்து—செய், 404.

நீண்ட தொலைவு நடந்து நொந்தனவே'' என்று பகர்ந்து கொண்டே அவற்றை மெல்லெனப் பிடிக்கின்றான். குசேலர் கண்ணன் செய்யும் உபசாரங்களுக்குத் தன் பாரதந்திரத்திற் கேற்ப (தலைவனது வசத்திலிருப்பதற்கேற்ப) இசைந்திருக் கின்றார். இதனைப் பாடலில் காண்க.

> '''வழி நடந் திளைத்த வேஇம்
> மலரடி இரண்டும்?' என்று
> கழிமகிழ் சிறப்ப மெல்ல
> வருடினான் கமலக் கண்ணன்;
> ஒழிவுறு தவக்கு சேலன்
> ஒன்றும்பே சாதிருந்தான்''[31]

தம்மை அடிமை கொள்பவனைப் போன்று, தம்மிடம் கிட்டித் தாழ நின்றுத் தம் ஆன்மாவை முற்றும் கவர்ந்து கொண்ட ஆச்சரியமான சேஷ்டிதங்களை (செயல்களை) யுடையவன் ஈசுவரன் என்பதை ஆழ்வாரும்,

> ''ஆட்கொள்வான் ஒத்து, என்
> உயிர்உண்ட மாயன்''[32]

எனத் தெரிவிக்கின்றார். இதனால் ஈசுவரன் உயிரைத் தனக் கெனவே வினியோகம் கொண்டுள்ளான் என்பதனை அறிகின்றோம்.

எம்பெருமானை அநுபவிக்கும் ஆழ்வாருக்கு ''எப் பொழுதும் நாள் திங்கள் ஆண்டு ஊழிதொறும், அப்பொழுதைக்கு அப்பொழுது என் ஆரா அமுதமே''[33] என்னும்படி நாள்தோறும் அரிதாகத் தோன்றுமாப் போலே,

31. குசேலோபாக்கியானம் — குசேலர் நகர்ப்புறம் அடைந்தது—செய். 410.
32. திருவாய் 9. 6 : 7
33. ஷ 2. 5 ; 4

எம்பெருமானுக்கும் ஆழ்வாருடைய அநுபவம் நாள்தோறும் அரிதாகவே தோன்றுகின்றது. எனவே அவன்,

''கோள்உண்டான் அன்றி, வந்து
என்உயிர்தான் உண்டான்;
நாளும்நாள் வந்து, என்னை
முற்றவும்தான் உண்டான்''[34]

ஒரு நாள் அநுபவித்து ''இனி இது நாம் அநுபவித்தது அன்றோ?'' என்று கைவாங்கியிராமல் நாள்தோறும் வந்து ஆழ்வாரை அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதமாக அநுபவித்தான். இங்கே நம் பிள்ளை, ''அணுப்பிரமாணமான இவ்வஸ்துவை விபுவான தான் விளாக்குலை கொண்டு[35] அநுபவித்தானென்கிற இது தனக்கு ஏற்றமாம்படி கௌரவியா நின்றான்'' என்று அருளிச் செய்திருப்பது சிந்திக்கத் தக்கது. ஆழ்வாருடைய ஆன்மா அணுவளவாக இருப்பினும் அளவு கடந்த பாரிப்புக் கொண்டே எம்பெருமான் அநுபவிக்குமிடத்து அந்த அணு அளவு பொருளையும் பெரிதாக்கிக் கொண்டு அநுபவிப்பதாக ஆழ்வாருடைய திருவுள்ளம் என்பது இதன் கருத்தாகும். இத்தனைக்கும் காரணம்,

''காள நீர்மேகத்
தென்காட்கரை என் அப்பற்கு
ஆள் அன்றே பட்டது?
என் ஆர்உயிர் பட்டதே',[36]

[ஆள்பட்டது—அடிமைப் பட்டது].

---

34. ஷை 1. 6 ; 8
35. விளாக்குலை கொள்ளல்—குலை குலையாகப் பறித்து வாய்க் கொள்ளுதல் (ஓரே கவளமாக உண்ணுதல் என்றபடி).
36. திருவாய் 9. 6 ; 8

என்பதே யாகும். இங்ஙனம் தன் உயிர் பட்ட பாட்டை, வேறு எவரும் பட்டிருக்க முடியாது என்பதை,

> "ஆர்உயிர் பட்டது
> எனதுஉயிர்பட்டது"[37]

என்று குறிப்பிடுகின்றார் ஆழ்வார். பகவானுடைய குணங்களுக்கு நிலம் அல்லாததாக இருக்கும் லீலாவிபூதியில் (இந்த உலகில்) தான் பட்ட பாட்டினை நித்திய விபூதியில் (பரமபதத்தில்) உள்ள நித்திய சூரிகளும் பட்டிருக்க முடியாது என்பது ஆழ்வாருடைய திருவுள்ளம்.

இதுகாறும் இறைவன் தன்னை உண்டபடியைக் கூறினார் ஆழ்வார். உண்டவனுக்குத் தண்ணீரும் வேண்டும் அன்றோ? ஆகையால் இறைவன் தண்ணீர் பருகின படியை அருளிச் செய்கின்றார்:

> "வாரிக்கொண்டு உன்னை
> விழுங்குவன் காணில்என்று
> ஆர்வுஉற்ற என்னைஒழிய
> என்னில் முன்னம்
> பாரித்துத் தான்என்னை
> முற்றப் பருகினான்,
> கார்ஒக்கும் காட்கரை
> அப்பன் கடியனே"[38]

[ஆர்வு—ஆசை; பாரித்து—எண்ணி; கடியவன்—பதற்றமுடையவன்].

இறைவனைக் கண்டால் அப்படியே விழுங்கி விடுவதாக ஆசைப்பட்டிருந்தார் ஆழ்வார்; ஆனால் இப்படிச் செய்ய வேண்டும் என்று தனக்கு முன்பே இறைவன்

37. ஷை 9. 6 : 9
38. ஷை 9. 6 : 10

எண்ணித் தன்னை அடியோடு பருகிவிட்டான். ஆழ்வாருக்கு இறைவன் "உண்ணும் சோறு பருகும்நீர்"[39] என்னாலாம்படி இருந்தான். அங்ஙனமே இறைவனுக்கும் ஆழ்வார் "உண்ணும் சோறு பருகும் நீர்" என்று ஆகிவிட்டார். திருவாய்மொழி ஆயிரத்திலும் இப்பாட்டு உயிரானது என்பது வைணவர்களின் திருவுள்ளம். இந்தப் பாசுரத்தை நினைவில் கொண்டு இத்திருத்தலத்தில் விளங்கும் குணத்தை,

போகத்தில் தட்டுமாறும் சீலம், காட்
கரையிலே கரையழிக்கும்[40]

[தட்டுமாறு—முறை மாறுதல், சீலம்—பெரியவன் தாழ்ந்தவர்களோடே புரையறக் கலக்கை]

என்று பேசும் **ஆசாரிய** ஹிருதயம். 'காட்கரை' என்ற திவ்வியதேசத்தின் பெயருக்கு ஏற்பக் 'கரையழிக்கும்' என்கின்றார்.

ஈசுவர இலாபம் உயிர்கட்குக் குறிக்கோளா? அல்லது உயிர்களின் இலாபம் ஈசுவரனுக்குக் குறிக்கோளா? என்ற ஆராய்ச்சி வைணவ பக்தர்களிடம் நடைபெறுவதுண்டு. உயிர்களின் இலாபம்தான் ஈசுவரனுக்குக் குறிக்கோள் என்பதுவே வைணவ சித்தாந்தம். எம்பெருமான் தன் படைப்பினாலும் அவதாரங்களினாலும் ஆன்மப் பயிர்த் தொழில் செய்வதெல்லாம் ஓர் ஆருயிர் தனக்கு கிடைக்கும் என்ற நப்பாசையினாலன்றோ? "எல்லாம் வாசுதேவன் என்று திருவுள்ளங் கொண்டுள்ள ஒரு மகாத்மா எனக்குக் கிடைக்கவில்லையே"[41] என்றன்றோ சொல்லுகின்றான்

39. திருவாய். 6. 7 ; 1
40. ஆசா. ஹிரு. 178
41. பகவத் கீதை 7 : 9

கண்ணன்? பாடுபட்டுத் தேடிப் பார்த்தும் கிடைக்காததால் வருத்தத்துடன் வெளிப்படும் கூற்றென்று நாம் அறிகின்றோ மன்றோ?

இங்ஙனம் நம்மாழ்வார் பெற்ற அநுபவங்களை யெல்லாம் முறையாக எண்ணிய வண்ணம் திருகாட்கரை அப்பனையும், பெருஞ் செல்வநாயகியையும் சேவிக் கின்றோம். நம்முடைய பிறப்புத் தொடர்கள் முடிவுபெற்று அவற்றிற்கு அடியாகவுள்ள சம்சாரமும் (உலகவாழ்க்கையும்) நசிக்கும் என்ற உணர்வும்[41] நம்மிடையே எழுகின்றது. எழவே, ஆழ்வார் அருளியுள்ள ஒப்புயர்வற்ற திருக்காட்கரை அப்பன் பற்றிய திருவாய்மொழியை அவன் சந்நிதியிலேயே பாடிக் கரைகின்றோம். இங்ஙனம் கரைகின்ற நிலையில்,

''மாற்கவும் தாம்தாம்
    வழிபடும் தெய்வமும்
ஏற்க உரைப்பார்சொல்
    எண்ணாதே, தோல்குரம்பை
நாள் கரையா முன்னமே
    நல்நெஞ்சே! நாரணன்ஆம்
காட்கரையாற்கு ஆள் ஆகாய்
    காண்''[42]

[மாற்கம்—மார்க்கம், வழி; தோல்குரம்பை—தோல் போர்த்த உடல்; ஆள்—அடிமை].

என்ற பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாடலையும் சிந்திக்கின்றோம். எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்ய வேண்டும் என்ற உணர்வுடன் நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

---

41. திருவாய். 9. 6 : 11
42. நூற். திருப். அந்.—61.

## 11. திருமூழிக்களத்து விளக்கு

''பின்னானார் வணங்கும் சோதி திருமூழிக்களத் தானாய்!''[1] என்று திருமங்கையாழ்வாரால் போற்றிப் புகழப்பெற்றவன் திருமூழிக்களத்து எம்பெருமான். பரத்துவம், வியூகம், அவதாரம், அந்தர்யாமித்துவம், அர்ச்சாவதாரம் ஆகிய எம்பெருமானுடைய ஐந்து நிலைகளில் முதல் நான்கிலும் சம்பந்தம் பெறாதவர்கள் (அந்வயிக்கப் பெறாதவர்கள்) 'பின்னானார்' என்று குறிப்பிடப்பெறுபவர்கள். அவர்கட்காகத் திருமூழிக்களம் முதலான அர்ச்சாவதார நிலங்களிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான் எம்பெருமான். திருமூழிக்களம் என்றது எல்லாத் திவ்விய தேசங்கட்கும் உபலட்சணமாய் நிற்பதாகக் கொள்ளல் வேண்டும். ஏனைய நான்கு நிலைகளிலும் அநுபவிக்கக் கூடிய எல்லாத் திருக்குணங்களும் நிறைந் திருப்பது இந்த அர்ச்சாவதாரத்தில்தான்.

இந்த அர்ச்சாவதாரம் என்ற உருவம் எக்காலத் தவர்க்கும் எத்தேயத்தவர்க்கும் காட்சி அளிக்கும்; அவரவர் விரும்பிய நலனையும் ஈந்து நிற்கும். 'மனம் வாக்குக் காயங் கட்கு எட்டாத பரம் பொருளுக்கு ஓர் உருவத்தையும் ஓரிடத்தையும் நிலை நாட்டி வழிபடுதல் யாங்ஙனம் பொருந்தும்? என ஐயுறலாம். ''ஒரு நாமம் ஓருருவம் ஒன்று மிலா''[2] இறைவனுக்கு 'ஆயிரம் திருநாமம் பாடுவது' எதற்காக என்று வினவலாம். அருவாய் நிற்கும் ஆண்டவன்

1. திருநெடுந், -10
2. திருவா - திருத்தெள்ளேணம்-1

உலக உயிர்கள் உய்யும் பொருட்டு அவற்றிதுமீது கொண்டுள்ள தண்ணளியால் உருக் கொண்டு எழுந்தருளி யுள்ளனன் என்பது சமயக் கொள்கை. நம் மனமும், புலன் களும், செயல்களும் ஒரு வரையறைக்குட்பட்டவை. ஆதலின், அதற்கேற்ப எல்லாவற்றையும் கடத்து நிற்கும் கடவுளை வகுத்துக் கொண்டாலன்றி நாம் அக்கடவுளிடம் அன்புசெலுத்தவோ அவனது அருளைப் பெறவோ இயலாது. பரந்து செல்வதும், கட்டுக்கடங்காததும், காற்றிலும் கடுகியோடுவதுமான மனத்தை ஓரிடத்தில் நிறுத்தித் தியானிக்க ஓர் உருவம் இன்றியமையாதது. உருவம் இன்றேல் மனம் ஒன்றுபடுதல் இல்லை. ஊனக்கண் காணாக் கடவுளிடம் மனத்தைக் குவியச் செய்து தியானத்தில் நுழைக்க உருவம் இன்றியமையாது வேண்டப் பெறுவது.

பிற சமயத்தினரைக் காட்டிலும் வைணவர்கட்கு உருவத்தில் ஊற்றம் அதிகம். இதுவே பக்தியைக்காட்டிலும் சிறந்த பிரபத்தியைச் (சரணாகதியை) சேதநன் கடைப் பிடித்தற்குப் பொருத்தமான இடம் என்பதும், இதில் மேற்கொள்ளும் பிரபத்தியே தவறாமல் விரைவில் பயனளிக்கும் என்பதும் அவர்கள் உறுதியாகக் கொண்ட நம்பிக்கை. ஆழ்வார்கள் அனைவருமே அர்ச்சைக்கு மங்களா சாசனம் செய்திருப்பதுவே இதற்குத் தக்க சான்றாகும். அர்ச்சையின் பெருமையைப் பிள்ளை லோகாச்சாரியரும்.

> "பூகத ஜலம்போலே அந்தர்யாமித்துவம்; ஆவர்ண ஜலம்போலே பரத்துவம்; பாற் கடல் போலே வியூகம்; பெருக்காறுபோலே விபவங்கள்; அதிலே தேங்கிய மடுக்கள்போலே அர்ச்சாவ தாரம்"[3]

என்று குறிப்பிட்டிருப்பது ஈண்டுக் கருதத் தக்கது. பூமிக்குள் ஆழத்தில் அடங்கிக் கிடக்கும் நீரைப் போன்றது அந்தர்

3. ஸ்ரீவசன - முதற் பிரகரணம்-39

யாமித்துவ நிலை; அண்டத்திற்குப் புறத்தே பெருகிக் கிடக்கும் ஆவரண நீர் போன்றது பரத்துவ நிலை: அண்டத்திற்கு உட்பட்டிருந்தும் கிட்ட அரிதாகஇருக்கும் பாற்கடல் போன்றது வியூக நிலை; எப்பொழுதோ வெள்ளமிட்டோடின பெருக்காறுகள் போன்றவை விபவ அவதாரங்கள்; பெருக்காறு பெருகி வெள்ளமிட்டோடின போது அதிலே தேங்கி நின்ற நீர் நிலைகள் போன்றவை அர்ச்சாவதாரங்கள். நீர் விடாய்மிக்குத் துடிக்கும் ஒருவனுக்கு முதல் நான்கு நிலைகளிலுமுள்ள நீர் உடனே பயன்படாது; மடுக்களிலுள்ள நீரே உடன் விடாய் தீரப் பயன்படும்; அங்ஙனமே, முதல் நான்கு நிலைகளிலும் உள்ள எம்பெருமான்கள் அப்பொழுதே "கண்டே களிக்கின்றது இங்கு என்று கொல் கண்கள்?"[4] என்று ஆழ்வார் கூறியவாறு கண்டு பற்ற வேண்டுமென்று ஆசைப்படும் முமுட்சுகளுக்குப் பயன்படுத்துவதில்லை; திருக்கோயில்களிலும் அடியார்களின் திருமாளிகைகளிலும் எழுந்தருளியுள்ள அர்ச்சாவதாரமே அவர்கட்குப் பெரிதும் பயன்படக்கூடியது.

திருமூழிக்களம் என்பது மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. ஏனைய மலைநாட்டுத் திருப்பதிகள் போலவே இதுவும் இயற்கை வனப்பு கொஞ்சும் சூழலில் அமைந்துள்ளது. இந்தத் திவ்விய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைத் திருமங்கையாழ்வாரும் நம்மாழ்வாரும் மங்களாசாசனம் செய்துள்ளனர். திருமங்கையாழ்வார் "முனியே! திருமூழிக்களத்து விளக்கே!"[5] என்றும், "மூழிக்களத்து விளக்கினை"[6] என்றும் போற்றுவர்.

4. திருவாய் 9.8.6.
5. பெரி திரு 7.1 : 6
6. பெரி திருமடல் - கண்ணி 129 'வளத்தினை' என்றும் பாடம் உண்டு.

நம்மாழ்வாரும், ''திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடர்க்கு''[7] என்றும், ''திருமூழிக்களத்து உறையும் ஒண்சுடரை''[8] என்றும் கூறியுள்ளார். இரண்டு ஆழ்வார்களுமே இந்தத் தலத்து எம்பெருமானைச் 'சுடர்ப் பொருளாகவே' அருளிச் செய்திருப்பது கருதத்தக்கது. எம்பெருமானுடைய அனந்த கல்யாண குணங்களுள் சௌலப்பியம் என்னும் திருக்குணம் சிறந்தது. அந்தத் திருக்குணம் இருட்டறையில் விளக்குபோல் ஒளிர்வது அர்ச்சாவதாரத்தில்தான். அதுவும் சாதாரண மக்கட்கும் காட்சி தரும் இடமாகிய திருமூழிக்களத்தில் அக்குணம் மிகவும் ஒளிபெற்று விளங்குதலால் ஆழ்வார்கள் இருவரும் 'விளக்கு' என்றும், 'ஒண்சுடர்' என்றும், 'சோதி' என்றும் கூறியுள்ளனர் என்று கருதலாம். ஆசாரிய ஹிருதயம் என்னும் நூல் இத்தலத்து எம்பெருமானிடம் சௌமார்யகுணம் (அழகு) 'கூடு பூரிக்கும்' என்று குறிப்பிடு கின்றது.[9]

எர்ணாகுளத்தில் தங்கி திருக்காட்கரை சென்று திருக்காட்கரை அப்பனைச் சேவித்தோமல்லவா? அங்கிருந்தபடியே 'திருமூழிக்களத்து விளைக்கினையும்' காண ஆசைப்படுகிறோம். சாதாரணமாகத் திருத்தலப் பயணம் செய்பவர்கள் முன்பின் தெரியாத இடங்கட்குச் செல்லுங்கால் கிட்டத்தட்ட அந்தத் திவ்விய தேசம் இருக்கும் இடத்தை குற்றுமதிப்பாகத் தெரிந்து கொண்டுவிட்டாலும் தங்கு மிடத்திலிருந்துகொண்டு ஒருவருக்கு நான்கு பேர்களை விசாரிக்க வேண்டும். சரியாகத் தெரிந்து கொண்ட பிறகு தான் அந்த இடத்திற்குப் புறப்படுதல் வேண்டும். இல்லாவிடில் பல தொல்லைகள் விளையும். சரியான

7. திருவாய் 9.7 :5
8. ஷை 9.7 :11
9. ஆசா. ஹிரு 179.

காலத்தில் பேருந்து வசதிகள் இரா; அந்த இடத்தில் உணவு வசதி, தங்கும் வசதிகள் இருப்பதில்லை. காலமல்லாக் காலத்தில் பேருந்து கிடைத்து ஏறிச்சென்றாலும் திருக்கோயில் திருக்காப்பிடப்பெற்றிருக்கும். திருக்காப்பு நீக்கும் (திறக்கும்) வரையிலும் காத்திருக்க வேண்டியிருக்கும். சேவை முடிந்து திரும்புங்கால் பேருந்து வசதி இருப்பதில்லை. மாலைக் காலமாக நேர்ந்து விட்டாலோ சொல்ல வேண்டியதில்லை; இடவசதி, உணவுவசதி முதலியவையின்றி அவதிப்பட வேண்டிவரும். நன்றாக விசாரித்ததில் எர்ணாகுளம் - ஷோரனூர் இருப்புப்பாதையிலுள்ள ஆல்வே நிலையத்தில் இறங்கி அங்கிருந்து பேருந்து மூலம் செல்ல வேண்டும் என்பதை அறிகின்றோம். ஆல்வே சற்றுப் பெரிய ஊராதலின் அடிக்கடி பேருந்து வசதிகள் கிடைக்கும். எர்ணாகுளத்தினின்றும் சரியாகக் காலை 7½ மணிக்குப் புறப்படுகின்றோம்; ஆல்வேயில் இறங்குகின்றோம். இருப்பூர்திவண்டியில் போகும் போதும் பேருந்தில் செல்லும் போதும் இருபுறமுள்ள சோலைகள், நெல் வயல்கள், கமுகு - தென்னந் தோப்புகள் முதலிய இயற்கை வனப்புகளை எல்லாம் கண்டுகளித்த வண்ணம் செல்லுகின்றோம். அழகு கூடு பூரிக்கும் மூழிக்களத்தின் வழியெல்லாம் அழகின் காட்சிகள்தாம். பாரதிதாசனின் "அழகின் சிரிப்பு" என்ற நூலிலுள்ள கவிதைகளின் காட்சிகள் யாவும் நம் நினைவிற்கு வருகின்றன. இந்தப் பகுதிகட்கு வந்துதான் அவர் அந்தக் கவிதைகளைப் பாடினரோ என்று கூட எண்ணுகின்றோம். எண்ணற்ற உயிர்கட்கு எல்லையற்ற இன்பங்களைப் படைத்துப் புரந்து இன்புறும் 'அலகிலா விளையாட்டுடை' ஆண்டவனின் பெருங் கருணைத் திறத்தினை எண்ணி எண்ணி வியந்து நிற்கின்றோம். இந்நிலையில்,

"எத்தனைகோடி இன்பம்
வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!"[10]

என்ற பாரதியாரின் வாக்கும் நம் நினைவுக்கு வருகின்றது. அதை நினைந்தவுடன் தொடர்ந்து,

"சித்தினை அசித்துடன்
இணைத்தாய்—அங்கு
சேரும்ஐம் பூதத்து
வியன்உலகு அமைத்தாய்
அத்தனை உலகமும்
வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பல நல்
அழகுகள் அமைத்தாய்"[11]

என்ற அடிகளும் தொடர்ந்து நம் மனத்தில் குமிழியிட்டு எழுகின்றன. சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களும் இயைந்து நிற்கும் அதிசயம் நம் கருத்தினைக் கவர்கின்றது. சித்தாகிய உயிரை அசித்தாகிய உடம்புடன் இணையச்செய்து அந்த உயிரை இயக்கும் இறைவனின் செயலையும், அந்த உயிர்கள் கைபுனைந்து இயற்றி அசித்தினைப் பயன்படுத்தி எத்தனையோ கோலங்கள் புனைந்து தமக்கு வேண்டிய விதவிதமான வசதிகளையெல்லாம் அமைத்து இந்த உலகினைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனுக்கும்' ஏற்ற வண்ணக் களஞ்சியமாக ஆக்கிக் கொள்ளும் அற்புதத் திறனையும் வியந்து போற்றுகின்றோம். 'விசிட்டாத்துவைத தத்துவத்தை' விளக்கி நிற்கும் கவிதையை நன்கு சுவைத்து மகிழ்கின்றோம். இம் மனநிலையில் ஆல்வேயை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றோம்.

10. பாரதியார் கவிதைகள் - இறைவா இறைவா
11. பாரதியார் - ஷை

ஆல்வேயிலிருந்து சுமார் பத்துக்கல் தொலைவிலுள்ளது திருமூழிக்களம்; சாலையின்மீதே ஊர் அமைந்துள்ளது. பேருந்தினின்றும் இறங்கினவுடன் கால் ஃபர்லாங்கு தூரம் நடந்து திருக்கோயிலை அடைகின்றோம். நம்மாழ்வாருடன் திருக்காட்கரை அப்பனின் சீலகுணத்தில் ஈடுபட்டு அதில் ஆழங்கால் பட்டோம் அல்லவா? அங்ஙனம் நம்மாழ்வார் ஆழங்கால் பட்டவுடன் அப்பெருமானை நேரில்காண ஆசைப் பட்டுப் பிராட்டியின் நிலையிலிருந்து பராங்குச நாயகியாகத் தூதுவிட்டது நம் நினைவிற்கு வருகின்றது. நாரை, குருகு, கொக்கு ஆகிய பறவை இனங்களையும் வண்டு, தும்பி ஆகிய பூச்சி இனங்களையும் மேகத்தையும் அவர் தூது விட்டதை நினைந்து பார்க்கின்றோம். எம்பெருமானின் அழகையும் குணங்களையும் பற்றாசாகக் கொண்டு அவன்பால் தூது விட்டதையும், அதுவும் தாமான தன்மையைவிட்டுப் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பராங்குச நாயகியாகத் தூது அனுப்பியதையும் சிந்திக்கின்றோம். இந்நிலை அவருக்குத் தானாக வந்து சேர்கின்றது; அதில் அவர் பரவசப்பட்டுக் கிடக்கின்றார். புருடோத்தமனான எம்பெருமானது பேராண்மைக்கு முன் உலகமடங்கலும் பெண்தன்மையாக இருப்பதையும் சீவான்மாவுக்குப் பாரதந்திரியமே (எம்பெருமான் வயத்திலிருத்தலே) வடிவாக இருப்பதையும் எண்ணுகின்றோம். வைணவ சமயப்படி ஆசாரியர்களே பறவைகளாகக் கருதப்படுகின்றனர் என்பது ஈண்டுக் கருதத்தக்கது.[12] இனி ஆழ்வார் தூது விட்டதை நினைவு கூர்வோம்.

தன்னுடைய சோலையில் இரைதேடித் திரியும் நாரையைத் தூது போகுமாறு வேண்டுகின்றாள் பராங்குச நாயகி.

---

12. ஆசா. ஹிரு (150-155)

"செங்கால மடநாராய்!
திருமூழிக் களத்துஉறையும்
கொங்குஆர்பூந் துழாய்முடிஎம்
குடக்கூத்தர்க்கு என்தூதாய்
நும்கால்கள் என்தலைமேல்
கெழுமீரோ நுமரோடே"[13]

[கொங்கு - தேன்; கெழுமீரோ - சேர்க்கிறீர்களா.]

என்று வேண்டுகின்றாள். திருவிருத்தத்தில் தூது அனுப்புவதற்கு வண்டுகளை அழைக்கும்பொழுதே,

"எம்மீசர் விண்ணோர் பிரானார்
மாசில் மலரடிக்கீழ் எம்மைச்
சேர்விக்கும் வண்டுகளே"[14]

என்று கூறினாரல்லவா? எம்பெருமானுடைய திருவடியிணையின்கீழ்த் தம்மைச் சேர்ப்பிக்க வல்ல ஆற்றல் வாய்ந்த ஆசாரியர்களையே தூதர்களாய்க் கொண்டதை அங்கு நன்கு காட்டியருளினார். அப்படிப்பட்ட ஆசாரியர்கள் தம் சுற்றத்துடன் தம் தலையின்மீது திருவடிகளை வைப்பதே பெறற்கரிய பேறு என்பதை தூது பற்றிய இத்திருவாய்மொழியில் அருளிச் செய்கின்றார். 'செங்கால மடநாராய்!' என்று கால்களைச் சிறப்பித்துச் சொல்லுவதால் ஆசாரியன் திருவடிகளே தஞ்சம் என்ற தொனிப் பொருளைப் புலப்படுத்துவதாகக் கொள்ளலாம்.

எம்பெருமான் தனது அடியார் குழாங்களுடன் திருமூழிக்களத்தில் கலந்து பரிமாறிக் கொண்டிருக்கும் நிலையில் ஒருக்கால் தன்னை (பராங்குச நாயகியை) மறந்திருத்தல் கூடும். அஃதன்றித் தன்னைப் புறக்கணிப்பதற்குக் காரணமில்லை. அந்நிலையிலிருக்கும் அவரைப் பார்த்துச் செய்தி

13. திருவாய் 9.7 : 1
14. திருவிருத்தம், 54.

சொல்ல வேண்டும் என்று குறுகினங்களை வேண்டுகின்றாள் ஆழ்வார் நாயகி

"நுமரோடும் பிரியாதே
நீரும்நும் சேவலுமாய்
அமர்காதல் குருகினங்காள்!
அணிமூழிக் களத்துஉறையும்
எமராலும் பழிப்புண்டு
இங்கென்? தம்மால் இழிப்புண்டு
தமரோடு அங்கு உறைவார்க்குத்
தக்கிலமே கேளீரே!"[15]

[நுமர்-உம்சுற்றத்தார்; சேவல்-(ஆண்) குருகு; எமர்-எம் உறவினர்; தமர்-அவருடைய உறவினர்; உறைவார்-வசிப்பார்; தக்கிலம்-தகுதியுடையோம்.]

என்ற பாசுரத்தின் மூலமாக. எம்பெருமான் உகந்த அடியார் குழுக்களுடன் தானும் வந்து அடிமை செய்வதற்குத் தகுதியில்லையா என்று கேட்குமாறு நாரையின் ஒரு பிரிவாகிய குருகினங்களைப் பணிக்கின்றாள். "அவன் தன் அடியார்களுடன் கூடிக் குலவுவது போல் நீங்களும் உங்கள் உறவினருடன் கூடி வாழ்கின்றீர்கள். அவன் இருக்கும் நிலை உங்கள் திறத்தில் பலித்துள்ளது. அங்ஙனமே என்திறத்திலும் பலிக்க வேண்டாவோ?" என்கின்றாள். எம்பெருமான் அடியார்களுடன் கூடி வாழ்வது போலவும், குருகு தன் இனத்துடன் கூடி வாழ்வதுபோலவும், தானும் தன் காதலனாகிய எம்பெருமானுடன் வாழும்படி செய்ய வேண்டாமா என்பது குறிப்பு. "குறைவாளர் காரியம் குறைவற்றார்க்குத் தீர்க்க வேண்டாவோ? உண்டார்க்குப் பட்டினி கிடந்தார் பசி பரிஹக்க பிராப்தமிறே"[16] என்பது ஈடு.

15. திருவாய் 9 : 7 : 2
16. பரிஹரித்தல் - நீக்கல்; பிராப்தமிறே - கடமையல்லவா?

அடுத்து, கொக்கினங்களையும் குருகினங்களையும் வேண்டுகின்றாள் பராங்குச நாயகி; எம்பெருமானிடம் இரண்டில் ஒன்று கேட்டுவந்து சொல்லுமாறு குறிப்பிடு கின்றாள். பாசுரம் இது:

"தக்கிலமே கேளீர்கள்;
தடம்புனல்வாய் இரைதேரும்
கொக்கினங்காள்! குருகினங்காள்!
குளிர்மூழிக் களத்து உறையும்
செக்கமலத்து அலர்போலும்
கண்கைகால் செங்கனிவாய்
அக்கமலத்து இலைபோலும்
திருமேனி அடிகளுக்கே"[17]

[குருகு- கொக்கில் ஒரு பிரிவு (கொய்யடி நாரை); கமலம்-தாமரை; திருமேனி அடிகள்-எம்பெருமான்.]

இந்தப் பதிகத்தின் உயிரான பாட்டு இது. தம்மை அடைந்த அடியார்களுடன் உண்டான சேர்க்கையின் இனிமையால் பிரிந்தார்க்கு உயிர் தரிக்க வொண்ணாத படியிருக்கும் தம் முடைய வடிவழகை மறந்து தன்னை நினையாதிருத்தல் கூடும் என்பது அவளது உட்கிடக்கை. இவ்வடிவழகைப் பிரிந்தார் எங்ஙனம் உயிர்தரிப்பர் என்பதனை அறிவித்து விட்டால் உடனே புறப்பட்டு வந்து விடுவார் என்பதாகக் கருதுகின்றாள். எனவே, அவரது வடிவழகை அப்பறவை கட்குக் குறிப்பிடுகின்றாள். அவருடைய உறுப்புகளெல்லாம செந்தாமரைபோல் இருப்பதால், அவருடைய திருமேனி தாமரையின் இலைபோல் உள்ளது என்கின்றாள். தாமான தன்மையில் எம்பெருமானுககும் தடாகத்திற்கும் ஒற்றுமை காட்டி அவனை 'வாசத்தடம்'[18] என்று கூறினவரன்றோ? ஆழ்வார் எம்பெருமானை முதன் முதலாகக் காண்பவர்க

17. திருவாய் 9 : 7 : 3
18. ஷை 8 : 5 : 1

ளோடு அவருடைய திருக்கண்கள் முதலுறவு பண்ணும்; அத் திருக்கண்ணோக்குக்குத் தோற்றவர்களை அவருடைய திருக்கைகள் சேர்த்து அணைத்துக் கொள்ளும்: கைகள் அணைக்குங்கால் அந்த ஊற்றின்பத்திற்குத் தோற்றார் அவருடைய திருவடிகளில் விழுவர்; திருவடிகளில் விழுந் தாரை நல்ல சொற்களை நல்கி அவர்களைத் தரிப்பிக்கும் அவனுடைய புன்சிரிப்பு இங்ஙனம் உறுப்புகளின் வனப்பையும் வடிவழகைரிம் காட்டி அடிமை கொண்டார் அவர். அவ்வடி வழகிற்குத் தோற்றுப் பசலையைத் தரித்திருப்பார் அவருக்குத் தகாதவரோ என்று கேட்குமாறு பணிக் கின்றாள், ஆழ்வார் நாயகி.

'தக்கிலமே கேளீர்கள்' என்பதற்கு நம்பிள்ளை ஈடு: ''நாம் ஒன்றிலே துணியும்படி கேட்டுப் போருங்கள். அவர் இன்னும் இது வேணு மென்றிருந்தாராகில் பிராணன்களை வருந்தி நோக்கிக் கொண்டு கிடக்கவும், வேண்டா மென்றி ருந்தாராகில் நாமும் ஒன்றிலே துணியும்படி அறுதியாகக் கேட்டு விடுங்கோள்' என்பதாக அவர் இன்னும் 'இவள் வேண்டும்' என்று இருந்தாராகில் பின்னின சடையினாலும் தூக்கிலிட்டுக் கொள்ளத் துணிந்த பிராட்டியைப்போல் ஏதாவதொரு வழியில் துணிவதாக உறுதி கொண்டு 'விருப்பம் உண்டா?' இல்லையா?' இந்த இரண்டில் ஒன்று அறுதியிட்டுக் கேட்டுவரும்படி வேண்டுகின்றாள்.

மேலும் தூது செல்ல ஆயத்தமாக உள்ள குருகுக் கூட்டத்திலுள்ள ஓர்இளங்குருகினை விளித்து இவ்வாறு பேசு கின்றாள்:

''பூந்துழாய் முடியார்க்குப்
பொன்னாழிக் கையார்க்கு
ஏந்துநீர் இளம்குருகே!
திருமூழிக் களத்தார்க்(கு)

ஏந்துபூண் முலைபயந்து
என்இணைமலர்க்கண் நீர்ததும்ப
தாம்தம்மைக் கொண்(டு) அகல்தல்
தகவுஅன்று என்று உரையீரே''[19]

[தகவு-தகுதி ]

எம்பெருமானுடைய வடிவழகு நினைக்கநினைக்க ஆழ்வாரை உருக்கிவிடுகின்றது என்பது இப்பாடலில் தெரிவிக்கப்படுகின்றது. ''அன்னார் திருமுடியிலே திருத்துழாய் மாலை சாத்திக்கொண்டிருக்கும் அழகு ஒன்று மட்டிலும் போதுமே; அதற்குமேல் கையும் திருவாழியும் ஆன அழகு 'சுடராழியும் பல்லாண்டு'[20] என்று ஆலத்தி வழிக்க வேண்டும்படியன்றோ உள்ளது? இவ்வழகுகளை நினைத்ததனாலன்றோ நான் பசலை நிறம் அடைந்தும் கண்ணீர் சோர்ந்தும் நிற்கின்றேன். இந்நிலையை அவருக்குப் புலப்படுத்துங்கள்'' என்று தெரிவிக்கின்றாள் பராங்குசநாயகி ''எம்பெருமான் என்னை விட்டுப் பிரிந்து போகும்பொழுது தன்னுடைய திருமேனியை இங்கு வைத்துவிட்டன்றோ போயிருக்க வேண்டும்? அந்தத் திருமேனியையும் கொண்டு அகன்றாரே. தமக்கு உரிமைப்பட்ட பொருளை விட்டு விட்டுப் பிறர்க்கு உரிமைப்பட்ட பொருளைக் கொண்டுபோவது நியாயமா? பக்தர்கட்கல்லவா அவர் உடம்பு இருப்பது?'' என்று உரைக்குமாறு பணிக்கின்றாள். ''இங்ஙனம் செய்தது தகுதியன்று'' என்று தெரிவிக்குமாறும் வேண்டுகின்றாள். 'தமக்கு உரிமைபட்ட பொருள்' என்பதை ''தனக்கே ஆக எனைக் கொள்ளும் ஈதே''[21] என்று மூதலித்தவரன்றோ[22] இவர்?

---

19. திருவாய் 9. 7 : 9
20. பெரியாழ் - திருப்பல்-1
21. திருவாய் 2. 9 : 4
22. மூதலித்தல்-மெய்ப்பித்தல்

இந்நிலையில் வானத்தில் உலாப் போகும் சில மேகங்களைக் காண்கின்றாள் ஆழ்வார்நாயகி; உடனே அவற்றைத் தூது போகுமாறு வேண்டுகின்றாள்.

"திருமேனி அடிகளுக்குத்
தீவினையேன் விடுதூதாய்
திருமூழிக் களம்என்னும்
செழுநகர்வாய் அளிமுகில்காள்!
திருமேனி அவட்குஅருளீர்
என்றக்கால் உம்மைத்தன்
திருமேனி ஒளிஅகற்றித்
தெளிவிசும்பு கடியுமே?"[23]

[திருமேனி அடிகள் - எம்பெருமான்; கடியுமே-தண்டிப்பரோ.]

வடிவழகையே அடையாளமாகக் கொண்டு விளங்கும் எம்பெருமானுக்குத் 'திருமேனி அடிகள்' என்று ஒரு திருநாமம் சாத்துகின்றாள் பராங்குசநாயகி. வடிவழகினால் ஆன்மாக்களனைத்தையும் தோற்பித்து அடிமை கொள்பவருக்கு இது பொருத்தமான பெயரன்றோ? எதிரிகளையும் அவ்வடிவம் கவரும் அல்லவா? கண்ணன் தூதுபோகுங்கால் அவனுக்கு அவையில் எவரும் மரியாதை செலுத்தலாகாது என்று ஆணையிட்டிருந்தான் துரியோதனன். கண்ணபிரான் ஆங்கு எழுந்தருளுங்கால் அவையிலிருந்த அரசர்களனைவரும் கண்ணனின் சோதி வடிவு தொண்டு பரவசராய் எழுந்து மரியாதை செலுத்தினர். துரியோதனனும் துடை நடுகிங் எழுந்து விட்டு உடனே தன் உறுதி தடுமாறியதற்கு வருந்தி 'என்னே இத்திருமேனி அழகு!' என்று கண்ணனை உற்று நோக்கினனாம். இதனைப் பெரியாழ்வார் குறிப்பிடுகின்றார்.[24] அப்படிப்பட்ட திருமேனியை இழந்து உங்கள் காலில்

23. திருவாய் 9.7 : 4
24. பெரியாழ் திரு 1.8 : 5

விழுப்படியான 'தீவினையேன் ஆயினேனே'' என்கின்றாள். எதிர்மறை இலக்கணையால் 'நல்வினையேன்' என்பது குறிப்பு. பரமன் அடியார்களின் திருவடிகளில் வீழ்தல் நல்வினைப் பயனன்றோ? நான் விடுதூதாய் நீங்கள் திருமூழிக் களத்திற்கேகி அத்திருமேனியடிகளை நோக்கி, 'திருப்புளி யடியிலே கிடக்கின்ற ஒருத்தி உம்முடைய திருமேனியில் ஆசை வைத்து நைகின்றாள்; அவளுக்கு உமது திருமேனியைக் கொடுத்தருளுவீர்' என்று சொல்லுவீர்களாக'' என்று குறையிரக்கின்றாள். இச்சொல்லுதவி புரியின், அவர்கள் புதிய பொலிவினைப் பெற்றுத் தெளி விசும்புப்பேறும் பெறுவர் என்கின்றாள்.

மேலும், மேகத்தை நோக்கி இவ்வாறு பேசிகின்றாள்;

''தெளிவிசும்பு கடிதுஓடித்
 தீவிளைத்து மின் இலகும்
ஒளிமுகில்காள்! திருமூழிக்
 களத்துஉறையும் ஒண்சுடர்க்குத்
தெளிவிசும்பு திருநாடாத்
 தீவினையேன் மனத்துஉறையும்
துளிவார்கள் குழலார்க்குஎன்
 தூதுஉரைத்தல் செப்புமினே''[25]

[தீ-மின்னல்; தெளிவிசும்பு-பரமபதம்; துளிவார்கள் குழல்-துளித்து ஒழுகும் தேனினையுடைய மயிர்முடி.]

இங்கு மேகங்களை ஆசாரியர்களாகக் கொள்ளல் வேண்டும். விண்ணில் விரைவாகச் சஞ்சரித்தலும் கொள்ளி வட்டம்போல் மின்னல் விளங்கப்பெறுதலும் முகில்களின் இயல்பு. ஆசாரியர்கட்கும் லீலா விபூதி நித்திய விபூதி என்ற இடங்களில் சஞ்சரிக்க வல்லமையுண்டாதலால் 'தெளிவிசும்பு கடிதோடுகை' அவர்கட்கும் பொருந்தும். நன்றாக மழை

25. திருவாய் 9. 7 : 5

பொழியும் சமயத்தில் தான் மேகத்தில் மின்னல் தோன்றும். அங்ஙனமே சிறப்புப் பொருள்களை அருளும் நிலையில் ஆசாரியர்களும் இருப்பர், மேலும் மேகத்தை 'ஒளிமுகில்' என்றுவிளித்து, எம்பெருமானையும் 'ஒண்சுடர்' என்று குறிப்பிட்டிருப்பதிலும் ஒருதனிச் சிறப்பு உண்டு. ஆசாரியர்கள் எம்பெருமானினின்று வேறுபட்டவரல்லர் என்றும், இருவரும் எல்லாவற்றிலும் ஒப்புடையவர் என்றும் காட்டற்காகவே இங்ஙனம் கூறப்பெற்றதாகக் கொள்ள வேண்டும்.

பரமபதத்தில் காட்டும் பெருவிருப்பத்தை எம்பெருமான் தன்பக்கல் காட்டுவதாக ஆழ்வார்நாயகி கொள்வதால் 'தெளிவிசும்பு திருநாடாகத் தீவினையேன் மனத்துறையும்' என்று குறிப்பிடுகின்றாள். நெஞ்சில் எழுந்தருளியிருந்தும் அவனைக் கண்ணால் காணமுடிய வில்லையே என்று நைகின்றாள். துன்புறுபவர்களைக் காப்பதற்கென்று திரு முடியில் தனிமாலையிட்டிருக்கும் எம்பெருமானுக்குத் தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்குமாறு வேண்டுகின்றாள். ஈண்டு ஆறாயிரப்படியின் அருளிச்செயல் சுவை மிக்கது: ''அவளுக்கு அருளீர் என்ன அமையுமோ? இன்னாருக்கு அருளீர் என்ன வேண்டாவோ என்னில், யாவள் ஒருத்தியுடைய நெஞ்சை உமக்குத் திருநாடாகக் கொண்டு நீர்உறைகின்றீரோ அவளுக்கு அருளீர் என்று சொல்லிக்கோள் என்கின்றாள்'' என்பதை எண்ணி எண்ணி மகிழ்வோமாக.

சீதாப்பிராட்டியை ஆயிரக்கணக்கான வானரங்கள் தேடுவதைப்போலவே, கண்ணில் கண்டவற்றை எல்லாம் ஏவுகின்றாள் ஆழ்வார்நாயகி. பறவைகளைத் தூதுவிடுத்த ஐதிகத்தைக்குறிப்பிடும் பட்டர், ''சக்கரவர்த்தித் திரு மகனார் திருவவதரித்தபின்பு வானரஜாதிவீறு பெற்றது போல, ஆழ்வார்கள் திருவவதரித்தபின்பு பட்சிஜாதிவீறு பெற்றது'' என்று சுவையுடன் அருளிச் செய்வர். அனுப்பப்

பெற்ற சில பறவைகள் தன் காரியத்தைத் தலைக்கட்டும் என்று பொறுக்கக்கூடிய நிலையிலில்லை அவள். அடுத்து, சில வண்டுகளைப் பார்த்து,

> "தூதுரைத்தல் செப்புமின்கள்
> தூமொழிவாய் வண்டினங்காள்!"[26]

என்று வேண்டுகின்றாள். அவள் விரும்பாராகிலும் வண்டுகளின் பேச்சு இனிமையாக இருப்பதால் வரவேற்கப்பெறும் என்பதாகக் குறுப்பிடுகின்றான். இனிய பேச்சினால் எம்பெருமானையும் வசப்படுத்திக் கொள்ள வல்லவர்கள் ஆசாரியர்கள் என்பது குறிப்பு. வண்டுகள் செல்லக்கூடிய இடமோ 'போது இரைத்து மதுநுகரும் பொழில்' சூழ்ந்துள்ள திருமூழிக்களம் ஆகும். மலர்கள் பூத்து மண்டிக்கிடக்கும் சோலைகளாதலால் வண்டுகள் மகிழ்ச்சி பொங்க மதுபானமும் பண்ணலாம் படியான இடம்என்பதையும் குறிப்பிடுகின்றாள்.

> "மாதரைத்தம் மார்பகத்தே
> வைத்தார்க்கு என்வாய்மாற்றம்
> தூதுஉரைத்தல் செப்புதிரேல்
> சுடர்வளையும் கலையுமே"[27]

வண்டுகள் செய்தியைச் சொல்லுமளவே வேண்டப்படுவது; அவற்றின் சொற்களைக் கேட்டுக்கொண்டிருக்கவும், கேட்டுப் பாராட்டுவதற்கும் அருகே பெரியபிராட்டி இருப்பதால் பரிந்துரைத்தலுக்கும் (புருஷகாரம்) குறைவில்லை என்கின்றாள். உலக அன்னையாகிய பெரியபிராட்டியார் சீவான்மாக்களின் துன்பத்தை எடுத்துரைத்து எம்பெருமானின் கருணை வெள்ளமிட்டோடக் காரணமாக இருப்பாள் என்பது வைணவக் கொள்கை, "என்ன சொல்ல வேண்டும் தெரியுமோ? என்னுடைய கைவளையும் சேலையும்

---

26. திருவாய் 9. 7 ;9
27. ஷை 9. 7 : 6

பற்றிச் சொல்லுவீர்களாக'' என்று பணிக்கின்றாள். அவை இரண்டும் தளர்ச்சியுற்றமையைக் கூற வேண்டும் என்பதாகவும் கொள்ளலாம்; அல்லது, அவை தன்னுடையவை யாகும் என்பதாகவும் கொள்ளலாம். அறிவித்த அளவிலே, அவர் வரவு தப்பாது என்பது குறிப்பு.

அடுத்து, இன்னொலி செய்து கொண்டு பறக்கும் வண்டினங்களையும் தும்பிகளையும் பார்த்துப் பேசுகின்றாள். அவையோ அவள் இருக்கும் சோலையில் வயிறார மது நுகர்ந்து மகிழ்ச்சிபொங்கிய நிலையிலுள்ளவை. அவரோ, தம் அழகுக்கு ஆபத்து நேராத வண்ணம் திண்ணிதான மதில் சூழ்ந்த திருமூழிக்களத்தில் உள்ளார்; காப்பதற்கென்றே தனி மாலையிட்டுக் கொண்டு இருக்கின்றார். அவருடைய காயாம்பூ மேனியின் வடிவழகில் தனக்குள்ள விருப்பத்தைச் சொல்லுமாறு பணிக்கின்றாள்,[28] இவ்விடத்தில் ஆறாயிரப்படி அருளிச் செயல்: ''வண்டினங்காள்! தும்பிகாள்! உன் அழகைக் காணப்பெறாதே அவள் இழந்துபோம். இத்தனை யோவென்று சொல்லிக்கோள் என்கிறாள்'' என்பதாக.

இங்ஙனம் வண்டினங்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்பொழுது குருகினங்கள் அடங்கிய பறவைக் கூட்டம் ஒன்று வருகின்றது. அவற்றைப் பார்த்துப் பேசத் தொடங்குகின்றாள் பராங்குச நாயகி.

> ''ஒருநாள்ஓர் தூயமாற்றம்
> படர்பொழில்வாய்க் குருகினங்காள்!
> எனக்கொன்று பணியீரே''[29]

என்று தனக்காகத் தூது போய் வரும்படி வேண்டுகின்றாள். யாரிடம் போய் வரவேண்டும் என்பதைக் குறிப்பிடுங்கால்,

28. திருவாய் 9. 7 : 8.
29. ஷை 9. 7 : 7.

"சுடர்வளையும் கலையுங்கொண்டு
அருவினையேன் தோள்துறந்த
படர்புகழான்"[30]

என்கின்றாள். தன்னுடைய வளையலையும் சேலையையும் கவர்ந்து கொண்டு சென்றவர் அவர். ஆதரித்து வந்து தன்னைக் கலந்தவர் தன்னைவிட்டுப் போகும்படியான பாபத்தைப் பண்ணினவள் என்பதை 'அருவினையேன்' என்று குறிப்பிடுகின்றாள். அவருடைய புகழோ சொல்லி முடியாது; பரந்த புகழையுடையவர். அங்ஙனம் கவர்ந்து சென்றவர் கண்காணா இடத்திற்கு ஓடிவிடவும் இல்லை.

"திருமூழிக்
களத்துறையும் பங்கயக்கண்
சுடர்பவள வாயன்"[31]

அவர் அண்மையிலேயே, திருமூழிக் களத்தில் நித்திய வாசம் செய்கின்றார் என்பதையும் குறிப்பிடுகின்றாள். அவரது நோக்கையும் முறுவலையும் அநுபவித்தவள் எங்ஙனம் ஆற்றியிருக்க முடியும் என்பதனை எடுத்துக்கூற வேண்டும் என்பது குறிப்பு.

சிறிது நேரத்தில் ஆழ்வார்நாயகி சில அன்னங்களைப் பார்க்க நேரிடுகின்றது, அவற்றைப் பார்த்து வேண்டுகின்றாள். அவருடைய பெருமைக்கு இங்ஙனம் ஒருத்தியைக் கலங்க வைப்பது தகுதியன்று என்பதை உணர்த்துமாறு செப்புகின்றாள்.

"தகவுஅன்று என்றுஉரையீர்கள்
தடம்புனல்வாய் இரைதேர்ந்து
மிகஇன்பம் படமேவும்
மெல்நடைய அன்னங்காள்!

30. திருவாய் 9. 7 : 7.
31. ஷை 9. 7 : 7:

மிகமேனி மெலிவுஎய்தி
மேகலையும் ஈடு அழிந்துஎன்
அகமேனி ஒழியாமே
திருமூழிக் களத்தார்க்கே''[32]

[தகவு - நியாயம்; தடம்-விசாலமான; அகமேனி-அந்தரங்கமான உடல்.]

'தகவு அன்று என்று உரையீர்கள்'—என்பது இதயத்தில் தைக்கும்படியான சொல் என்பது ஆழ்வார் நாயகியின் திருவுள்ளம். எம்பெருமானது பிரிவினால் உடலும் மெலிந்து மேகலையும் தங்காதபடி சீர் குலைந்தது. இனி தன் 'அகமேனி' ஒழிவதற்கு முன் தன் நிலையைத் தெரிவிக்குமாறு அன்னங்களை வேண்டுகின்றாள். எல்லா ஆன்மாக்களும் எம்பெருமானுக்கு உடலாக இருப்பினும் (சரீர—சரீரிபாவனை) தன் ஆன்மாவை 'அகமேனி' என்று சிறப்பிக்கின்றார் ஆழ்வார். இவ்வுலகில் எம்பெருமானுக்குக் கிடைத்தற்கரிய 'மகாத்மா' அன்றோ ஆழ்வார்? ஈண்டு ஆசாரியர்களே அன்னமாக விளிக்கப் பெறுகின்றனர் என்பது அறியத்தக்கது. தங்கட்குப் பேரின்பம் பயக்கும் நுண்பொருள்களைத் தேடுவதில் நோக்குடையவர்களாதலாலும், நல்ல நடத்தையையுடையவர்களாயிருத்தலாலும் அவர்கள் 'மென்னடைய அன்னங்கள்' எனப்பட்டனர்.

இங்ஙனம் ஆழ்வார் பிராட்டியின் தன்மையை ஏறிட்டுக் கொண்டு பேசிய அநுபவத்தை நினைந்த வண்ணம் திருமூழிக்களத்தில் கிழக்கு நோக்கிய வண்ணம் **மதுரவேணி நாச்சியாருடன்** சேவை சாதிக்கும் **திருமூழிக்களத்தானை** வணங்கிக் களிக்கின்றோம்; நம்மாழ்வார் பெற்ற அநுபவத்

32. திருவாய் 9.7 : 10.

தையும் பெற முயலுகின்றோம். நம்மாழ்வார் அநுபவமே சீதாப்பிராட்டியார் பெற்ற அநுபவமாகும். இதை ஆழ்வாரே,

''ஒழிவின்றித் திருமூழிக்
களத்துஉறையும் ஒண்சுடரை
ஒழிவில்லா அணிமழலைக்
கிளிமொழியாள் அலற்றியசொல்''[33]

என்று குறிப்பிடுவதைக் காணலாம். இதனையொட்டியே ஆறாயிரப்படி அருளிச்செயலும் ''எம்பெருமானைப் பிரியில் தரிக்கமாட்டாத ஸ்வபாவையாயிருப் பாளொரு பிராட்டி அவனைப் பிரிந்து அலற்றின பாசுரத்தாலே, தத்ஸத்ருசஸ்வ பாவரான (பிராட்டிக்குச் சமமான இயல்புடைய) வண்குருகூர்ச் சடகோபன் எம்பெருமானைப் பிரிந்தலற்றின இப் பத்து'' என்று குறிப்பிடுகின்றது. இராமகிருஷ்ண முதலாய அவதாரங்கள் எடுத்த பிறகு இறுதியில் தன் சோதிக்கு எழுந்தருளும் நிலை ஏற்படுகின்றது; அர்ச்சாவதாரம் அப்படியின்றி, 'சம்சாரத்தின் கிழங்கு எடுத்தாலல்லது பேரேன்' என்றிருக்கும் இருப்பேயாதலால் 'ஒழிவின்றி உறையும்' என்று சிறப்பிக்கின்றார். இந்தத் திவ்வியதேசத்தில் விளங்கும் குணத்தை,

'மகாத்மாக்கள் விரஹம் சஹியாத மார்த்தவம், வளத்தின்களித்தே கூடு பூரிக்கும்'

[மார்த்தவம் - சௌகுமார்ய குணம்; களம் - திருமூழிக்களம்; வளம் - செல்வம்; கூடுபூரிக்கும் - நிறைந்திருக்கும்.] என்று குறிப்பிடும் **ஆசாரிய ஹிருதயம்**. இத்தலத்திற்குரிய குணம் சௌகுமார்யம் என்பது; இதுதிவ்யாத்ம சொரூபம் பற்றியது. இத்தலத்திற்குரிய பத்துப் பாசுரங்களையும்

33. திருவாய். 9.7 : 11.

எம்பெருமான் சந்நிதியிலேயே ஓதி 'நோயறுக்குமே' என்று கூறியவாறு சம்சாரமாகிய நோயினைத் தீர்க்கும் உணர்வினைப் பெறுகின்றோம். பெறவே.

"காண்கின்ற ஐம்பூதங்
 கட்கும்இரு சுடர்க்கும்
சேண்கலந்த இந்திரற்கும்,
 தேவர்க்கும், மாண்கரிய
பாழிக் களத்தூர்க்கும்
 பங்கயத்து நான்முகற்கும்
மூழிக் களத்தான்
 முதல்"[34]

[பாழிக்களம் - சுடுகாடு.]

என்ற பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாசுரமும் நம் நினைவிற்கு வருகின்றது. அந்த நினைவுடன், 'மூழிக்களத்தானே முதற் கடவுள்' என்ற எண்ணத்துடன், மனநிறைவு பெற்று நம் இருப்பிடத்திற்குத் திரும்புகின்றோம்.

---

34. நூற். திருப். அந்தாதி-62

## 12. திருவித்துவக்கோட்டு அம்மான்

பயிர்த்தொழிலில் ஈடுபடுகின்றவர்கள் பெரும்பாலும் பயிர்த்தலையிலேயே சிறுகுடில் அமைத்து அதில் குடியிருந்து கொண்டு அப்பயிரைத் தம் உயிர் போல் பாதுகாப்பது வழக்கம். இதுதான் உண்மையாக உழவுத் தொழிலில் ஈடுபடுபவர்களின் அறிகுறி. இது கருதிதான் வள்ளுவப் பெருந்தகை.

"செல்லான் கிழவன்
இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்"[1]

என்று சொல்லி வைத்தனர் போலும். உழவுத்தொழிலே பெரும்பான்மையாக நடைபெறும் நம் நாட்டில் பொதுவாக உழவர்கள் நிலத்தின் தலைமாட்டிலேயே குடிலை அமைத்துக்கொண்டு வாழ்வதைக் காணலாமாயினும், மலை நாட்டில் (மலையாளத்தில்) இந்நிலையைச் சிறப்பாகக் காணலாம் நீர்வளம், நிலவளம் மிக்க அந்நாட்டின் மக்கள் தொகைக்கேற்ப நிலப்பரப்பு அமையவில்லை. ஒரு சில பெரு நிலக்கிழார்களைத் தவிர, பெரும்பாலோருக்குச் சிறு சிறு பகுதிகளே சொந்த நிலமாக அமைந்துள்ளன. இந்தச் சிறு பகுதியாக உள்ள 'காணி நிலத்திலே'[2] 'தூணில் அழகிய தாய்-நன்மாடங்கள் துய்ய நிறத்தினதாய் ஓர் மாளிகை',

1. குறள்-1039
2. பாரதியார் கவிதைகள்-காணி நிலம்-1, 2

'பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள்' பாக்கு மரங்கள், பனை மரங்கள் முதலியவையும் பல்வேறு வகை பயிர்த் தொழில்களும் நாம் நாடோறும் காணும் காட்சிகள். பெரும் பாலும் வீடுகள் அமையாத நிலங்களைக் காண்டல் அரிது. அவ்வளவு கண்ணுங் கருத்துமாக அங்கு 'உழவு' நடை பெற்று வருகின்றது.

இங்ஙனமே திருமகள் கேள்வனான பரமபதநாதன் தனக்கு அடிமை செய்து உய்தற்காகவே பிறந்த ஆன்மாக் களை யெல்லாம் ஆட்கொண்டு உய்விக்கும் பொருட்டுப் பெருங்கருணையால் பயிர்த்தலையிலே குடில் அமைத்துக் கொண்டு பயிர்களைப் புரக்கும் உழவனைப் போலவே இந்நில உலகத்தில் 108 திவ்விய தேசங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து ஆன்மாக்களை உய்விக்கின் றான் என்பது வைணவ உலகின் நம்பிக்கை. இங்ஙனம் ஆன்மப் பயிர்களைப் புரக்கும் எம்பெருமானுக்குப் 'பக்தி உழவன்' என்று திருநாமம் இட்டு மகிழ்வர் பக்திசாரர் என்ற திருமழிசைப்பிரான்.

> "வித்தும் இடவேண்டும்
> கொல்லோ விடைஅடர்த்த
> பத்தி உழவன்
> பழம் புனத்து"[3]

[விடை - காளை; அடர்த்த - அடக்கின.]

என்று கூறுவதைக் காண்மின். இந்த 108 திருப்பதிகளும் மலை நாட்டிலுள்ளவை மட்டிலும் பதின்மூன்று. இந்தப் பதின்மூன்று திவ்விய தேசங்களும் நீர்வளம் நிலவளம் நிறைந்த இடங்களில் அமைந்து "மாயோன்மேய காடுறை

3. நான் திருவந் 27

உலகமாகத்"[4] திகழ்கின்றன. திருத்தலலப் பயணம் செய்யும் பக்தர்கள் இந்தத் தனிச் சிறப்பை நன்கு அறிவர்.

இங்ஙனம் 108 திவ்விய தேசங்களிலும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களுள் மூவர் பேரில் மிகவும் ஈடுபட்டு மங்களாசாசனம் செய்துள்ளார் கோழிக்கோன் குலசேகரப் பெருமாள். திருவரங்கம் பெரிய கோயிலில் அரவணையில் பள்ளி கொண்டுள்ள அழகிய மணவாளன் பேரில் மால் கொண்டு பாடியவை முதல் மூன்று திருமொழிகள்; வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்து நெடியோன் பேரில் அருளியது நான்காவது திருமொழி; 'மீன் நோக்கு நீள்வயல் சூழ் வித்துவக்கோட்டு அம்மான்மீது' திருவாய் மலர்ந்தருளியது ஐந்தாவது திருமொழி. மூன்றாவதாக குறிப்பிட்ட 'வித்துவக்கோடு' என்ற திவ்விய தேசம் மலை நாட்டிலுள்ளது. இதனை 'திருமிற்றக்கோடு' என்று வழங்குவர் அப்பகுதி மக்கள். தென்னிந்திய இருப்பூர்தி வழியின் ஷோரனூர் சந்திப்பிலிருந்து இவ்வூருக்கு எளிதாகப் போகலாம். ஷோரனூர்-குருவாயூர் நெடுஞ்சாலையில் ஷோரனூரிலிருந்து இவவூர் பத்துக்கல் தொலைவிலுள்ளது; அடிக்கடி பேருந்து வசதி உண்டு. ஐம்பது காசு தந்து இவ்வூரை அடையலாம். சாலையின் மேலேயே இவ்வூர் அமைந்துள்ளது. பேருந்தில் செல்பவர்கள் திருமலைப் பேருந்துப் பயணிகள் கொண்டை ஊசி வளைவுப்பாதையில் செல்லும் போது மலையின் இயற்கைக் காட்சிகளை நுகர்ந்தவண்ணம் செல்வதைப் போலவே, ஷோரனூருக்கும் வித்துவக் கோட்டிற்கும் இடையிலுள்ள ஒரு 'பெருங்குன்றினை இத்தகைய வளைவுப் பாதையைக் கடந்து செல்லுங்கால் மலையின் இயற்கைக் காட்சியில் தோய்ந்த வண்ணம் செல்லலாம். எங்கோ பிறந்து வளர்ந்த பாரதப் புழா என்ற ஆறு வளைந்து வளைந்து சென்று வித்துவக் கோட்டு அம்மானை நாடி அவன் திருவடிகளை வருடிச் செல்லும் அற்புதக் காட்சியினைக் கண்டு

4. தொல். பொருள் - அகத்-நூற்பா, 5

களிக்கலாம்; நாம் மலைப்பாதையில் வளைந்து வளைந்து செல்லும் போதெல்லாம் வளைந்து வளைந்து செல்லும் ஆற்றையும் பலமுறை கண்டு அநுபவிக்கலாம். இங்ஙனம் போய்க் கொண்டிருக்கும்போது,

"தெளிதுஆக உள்ளத்தைச்
செந்நிறீஇ ஞானத்து
எளிதுஆக நன்கு உணர்வார்
சிந்தை எளிதுஆகத்
தாய்நாடு கன்றேபோல்
தண்துழா யான்அடிக்கே
போய்நாடிக் கொள்ளும்
புரிந்து"[5]

[செந்நிறீஇ-செல்வனே நிறுத்தி; ஞானம்-பகவத் விஷய பக்தி; சிந்தை-மனம்; புரிந்து-விரும்பி.]

என்ற பொய்கை யாழ்வாரின் வாக்கு பண்பட்ட நம் உள்ளத்தில் குமிழியிட்டு எழலாம். பல்லாயிரம் பசுத்திரளினுள் ஒரு சிறிய கன்று தன் தாயைக் கண்டறிந்து ஆவலுடன் அதனை அடைவது போலவே, பரமான்மா-சீவான்மா உறவை நன்கறிந்த நம்மனம் பதறிக்கொண்டு அவ்வெம்பெருமானையே எண்ணிய வண்ணம் மிக்க ஆவலுடன் செல்லும் உணர்ச்சியைப் பெறுவதைக் காணலாம். அல்லது, இன்னொரு வழியாகவும் இவ்வூரை அடையலாம். ஷோரனூர்-கோழிக்கோடு இருப்புப்பாதையிலுள்ள பட்டாம்பி என்ற நிலையத்தில் (ஷோரனூரிலிருந்து மூன்றாவது நிலையம்) இறங்கி, ஆற்றில் வெள்ளம் இருப்பின், படகின்மூலம் அதனைக் கடந்து கோயிலின் அருகிலேயே இறங்கலாம்.

ஷோரனூரிலிருந்து பேருந்தில் செல்லும் நாம் வித்துவக்கோடு என்ற ஊரில் குறிப்பிட்ட இடத்தில் இறங்குகின்றோம். இடப்புறமாக நோக்கினால் (மேல் திசை) கம்பன்

5. முதல் திருவந்-30

வருணிக்கும் தேரை தாலாட்டும் பண்ணைகளையும் தென்னை, கமுகந் தோப்புகளையும் கண்டுகளிக்கலாம் வலப் புறத்திலும் தோப்புக்களே நிரம்பியுள்ளன. ஆனால் தோப்பு களினூடே ஒரு சிறுசாலை வழியாக நான்கு ஃபர்லாங்கு தொலைவு நடந்து வித்துவக் கோட்டு அம்மான் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயிலை அடைகின்றோம். கோயில் மிகப் பெரிய கோயில் அன்று; ஒரே ஒரு திருச்சுற்றைக் (பிரகாரம்) கொண்டது. பெரும்பாலும் மலை நாட்டுக் கோயில்களின் அர்த்த மண்டபத்தோடு கட்டியுள்ள கரு அறையின் அமைப்பு வட்டவடிவமாக இருப்பது போலவே, இக் கோயிலின் அமைப்பும் அவ்வடிவிலேயே இருப்பதைக் காண் கின்றோம்; கோயிலின் மேற் கூரை செப்புத் தகட்டினால் வேயப்பெற்றிருப்பதையும் பார்க்கின்றோம்.

தமிழகத்திலுள்ள திருமால் ஆலயங்களில் மேற் கொள்ளப்பெறும் வைணவ சம்பிரதாய முறையில் (பாஞ்சராத்ரம் நல்லது வைகாநஸ முறையில்) வழிபாட்டு முறை அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. பெரும்பாலும் பக்தர்கட்குத் தீர்த்தம் சாதிப்பதில்லை; ‘சடகோபன்’ சாத்துவதில்லை. சந்தனம், துளபம் இவற்றையே இறைவனு டைய பிரசாதமாக வழங்குகின்றனர். இன்னொரு சிறப்பான கூறு என்னவெனில், கோயிலில் முக்கியமான அர்ச்சகர் போத்தி என வழங்கிம் அந்தணர் ஆவர். தமிழகத்திலுள்ள பெரும்பாலான கோயில்களில் அர்ச்சகர்கட்கு ஆழ்ந்த சாத்திர ஞானம், ஆகமங்களில் நல்ல பயிற்சி இவை இல்லா திருப்பது போலவே, இங்குள்ள போத்திகளிடமும் இவை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அவர்கள் மிகத் தூய்மையாக நீராடி, தூய்மையான ஆடைகளை அணிந்து காணப்பெறுகின்றனர். ஆற்றில் நீராடிய பின்னர் இல்லத் திற்கு ஏகாது ஈர ஆடையுடன் கைங்கரியத்திற்காக நேரே கோயிலுக்கு வருகின்றனர். திருக்கோயில்களில் கைங்கர்யம்

செய்யும் எல்லா நிலையினரிடமுந் தூய்மைசிறந்த கூறாகத் திகழ்கின்றது. எல்லோருமே வழிபாட்டுக்காகப் போகும் பக்தர்களிடம் மிக உயர்ந்த பண்பாட்டுடன், நடந்துகொள் கின்றனர். அருக்கன் உதயத்திலிருந்து அன்றைய பகல் பன்னிரண்டு மணி வரையிலும், மாலை ஐந்தரை மணி முதல் இரவு எட்டு மணி வரையிலும் எல்லாக் கோயில்களிலும் தரிசன காலமாக வழக்கத்திலிருந்து வருகின்றது. வேறு நேரங்களில் கோயில் திறக்கப்பெறுவதில்லை. காரணம்: தலைமை அர்ச்சகராகவுள்ள போத்தி நீராடிய நிலையில் தூய்மையாக இருக்க வேண்டியமையே யாகும் எனக் கருத இடம் உண்டு. நாள் முழுவதும் ஒருவர் இங்ஙனம் இருக்க முடியாதல்லவா?

கேரியிலைப்பற்றிப் பேசிக் கொண்டு எங்கோ போய் விட்டோம். திருக்கோயிலில் கிடந்த கோலத்தில் தெற்கு நோக்கிக் காட்சி அளிக்கும் உய்யவந்த பெருமாளாகிய வித்துவக் கோட்டம்மானைச் சேவிக்கின்றோம். சயனக் கோலத்தில் திகழும் மூர்த்தியுடன் ஆழங்கால் பட்டு விடுகின் றோம். குலசேகரப்பெருமாள் மங்களாசாசனம் செய்த பாசுரங்கள் நம் நினைவிற்கு வருகின்றன. ஸ்ரீமந் நாராயணனையன்றித் தமக்கு வேறு சரணமில்லாமையை ஆழ்வார் ஒரு முறைக்கு ஒன்பது முறையாக வற்புறுத்திக் கூறியுள்ளமையை நினைந்து போற்றுகின்றோம். நம்மையும் அறியாமல் பாசுரங்கள் நம்மிடற்று ஒலியாக வெளி வருகின்றன.

> ''தருதுயரம் தடாயேல் உன்
> சரண்அல்லால் சரண்இல்லை;
> விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ்
> வித்துவக்கோட்டு அம்மானே!''[6]

[தடாயேல்-களைந்திடாவிடில்; விரை - மணம்.]

---

6. பெரு. திரு 5 : 1

என்ற ஆழ்வாரின் வாக்காலேயே இறைவனை நாம் விளிக்கின்றோம். எம்பெருமானைத் தாயாகப்பாவித்து நாம் குழந்தை நிலைக்கு வந்து விடுகின்றோம்.

"அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றவள் தன்
அருள்நினைந்தே அழுங்குழவி;
அதுவேபோன்று இருந்தேனே"[7]

[அரிசினம் - மிக்க சினம்; அகற்றிடினும் - வெறுத்துத் தள்ளினாலும்.]

என்று முறையிடுகின்றோம். கோபத்தினால் ஒரு தாய் தான் பெற்ற குழவியை ஒரு சமயம் வெறுத்துத் தள்ளினாலும், தாயின் கருணையையே கருதி குழந்தை அழுது அழுது அவள் கருணைக்குப் பாத்திரமாகின்றது. "அழுதால் உன்னைப் பெறலாம்"[8] என்றபடி அழுது அடி அடைந்த மணிவாசகரைப் போலவே, கண்ணில் நீர் மல்க அழுகின்றோம். இந்நிலையில் பரமான்வுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள உறவுமுறை தாய்க்கும் சேய்க்கும் உள்ள உறவுமுறை போன்றது என்ற உணர்வில் ஆழ்ந்து நிற்கின்றோம்.

இந்நிலையில் நம் சிந்தையில் குறுந்தொகைப் பாடல் 'பளீச்' என்று ஒளிவிடுகின்றது. தோழியின் கூற்றாக வரும் அப்பாடலின் பகுதி வருமாறு :

"...... . .......................
ஊதை தூற்றும் உறவுநீர்ச் சேர்ப்ப!
தாய்உடன்று அலைக்கும் காலையும் வாய்விட்(டு)
'அன்னாய்!' என்னும் குழவி போல
இன்னா செயினும் இனிதுதலை அளிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி
தன்னுறு விழுமம் களைஞரோ இலளே"[9]

7. பெரு. திரு 5:1
8. திருவா-திருச்சதகம், 90
9. குறுந்-397

[ஊதை - குளிர்காற்று; உறவுநீர் - வன்மையையுடைய; உடன்று - மாறுபட்டு; அலைக்கும் - வருந்தியபொழுது; தலை அளித்தல் - அன்பு செய்தல்; வரைப்பினள் - புரக்கப் படும் எல்லைக்கு உட்பட்டவள்; விழுமம்-துன்பம்; களைஞர் - நீக்குவார்; இலள் - பெற்றிலள்.]

'அன்னை அலைப்பினும், அணைப்பார் பிறரின்றி அவள் மாட்டே செல்லும் குழவி போல, நீ அருளின்றிப் பிரியினும் நின்மாட்டே நின்று நின் தண்ணளியால் வாழும் நிலையினள்' என்று தோழி கூறும் கருத்தினையே ஆழ்வாரும் தன்னைக் குழந்தை நிலையிலும் இறைவனைத் தாய் நிலையிலும் வைத்துப் பேசுகின்றார். குழந்தையைக் காட்டிய குறுந்தொகைப் பாடலைப் படித்துவிட்டு, ஆழ்வார் பாசுரத்தைப் படித்தால் பொருள் மேலும் தெளிவுறுகின்றது. "தாய் உடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு 'அன்னாய்!' என்று அலைக்கும் குழவி போல" என்ற சங்கப் பாடலின் உவமை ஆழ்வாரின் இறைமைப் பாடலில் புது முறையில் அமைந்து புத்தொளி வீசி நின்று நயமுறுகின்றது. பாட்டின்பம் பக்தி உணர்வாக மாறி நம்மை மேலும் நெகிழ்விக்கின்றது.

கணவன் ஒருவன் தான் தீ முன் வலம்வந்து கைபிடித்துத் துணைவியாகக் கொண்ட குலமகளைக் கண்டவர்கள் இகழும் வண்ணம் மிகக் கேவலமாக நடத்துகின்றான். எனினும், அக்குல மகள் கணவனையன்றி வேறு ஒருவரையும் புகலிடமாக நினைப்பதில்லை. இந்த உணர்ச்சியுடன்,

"கண்டார் இகழ்வனவே
காதலன் தான் செய்திடினும்
கொண்டானை அல்லால்
அறியாக் குலமகள்போல்

கொண்டுஆளாய் ஆகிலும்
உன்குரைகழலே கூறுவனே"[10]

[காதலன் - கணவன்; குரைகழல் - ஒலிக்கின்ற வீரக் கழலையுடைய திருவடிகள்.]

என்று பாடுகின்றோம். 'உலகில் எத்தனையோ அல்லல்கள் பட்டாலும் அவற்றைத் தீர்ப்பதற்கு உன்னையின்றி வேறு யாறுளர்?' என்று கூறி அவன் திருவடிகளையே சரணமாகக் கொள்ளுகின்றோம். கணவன் நிலையில் எம்பெருமானையும் மனைவி நிலையில் நம்மையும் வைத்துப் போற்றுகின்றோம். இங்குப் பரமான்மாவின் தலைமை, சீவான்மாவின் அடிமை, சீவான்மா பரமான்மாவுக்கு உரித்தாயிருக்கை, சீவான்மா பரமான்மாவின் கூட்டுறவால் இன்பத்தை அடைதல், பிரிவினால் துன்புறல், சீவான்மா பரமான்மாவைக் கரணங்கள் எல்லாவற்றாலும் அநுபவித்துக் களிப்புறுதல்-போன்ற எண்ண அலைகள் விரைவாக நம் உள்ளத்தில் குமிழியிட்ட வண்ணம் உள்ளதை உணர்கின்றோம்.

நம்மிடையே அடுத்த உணர்ச்சி தலைக்காட்டத் தொடங்குகின்றது. குடிகளைக் காப்பதற்கென்று மாலையணிந்துள்ள மன்னன் ஒருவன் குடிமக்களிடம் அருள்நோக்கம் செய்யாது, அவர்கட்கு எப்படிப்பட்ட துன்பங்களை விளைவித்தாலும், குடிமக்கள் அவனுடைய செங்கோலையே எதிர் பார்த்து நிற்கின்றனர். இந்தக் குடிகளின் நிலையில் நாம் நிற்கின்றோம்.

"தான்நோக்காது எத்துயரம்
செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும்
குடிபோன்று இருந்தேனே"[11]
[தார் - மாலை; கோல் - செங்கோல்.]

10. பெரு. திரு. 5:2
11. ஷை 5:3

என்ற பாசுரத்தின் மூலம் 'நீ அருள் நோக்கம் செய்யாவிடி னும் உன்னையன்றி வேறொருவரைச் சரண் அடையேன்' என்று மனங் கரைகின்றோம். எம்பெருமானை அரசன் நிலை யிலும், நம்மைக் குடிகள் நிலையிலும் வைத்து எண்ணி இரட்சய—இரட்சக பாவத்தினையில்' திளைக்கின்றோம், இதில்,

''வானோக்கி வாழும்
உலகெல்லாம் மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி''[12]

என்ற குறள்மணியின் ஒளி வீசுவதைக்கண்டு மகிழ்கின்றோம்.

நோயாளி ஒருவன் மருத்துவனிடம் வருகின்றான். வாளால் அறுத்தும் சூடு போட்டும் அவனது நோயைப் போக்குகின்றான் மருத்துவன். நோய் நீங்கும் பொருட்டு நோயாளி அச்சிகிச்சைத் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுகின்றான். இத்துன்பங்களை விளைவித்த மருத்து வனிடமும் நீங்காத அன்புடையவனாகவே இருக்கின்றான். இங்ஙனமே, துன்பங்களைக் கொடுத்தும் இறைவன் ஆன் மாக்களை உய்விப்பான் என்பது வைணவ சமயக் கொள்கை. இறைவனது கருணை வெள்ளம் துன்ப வடிவிலும் நம்மை வந்தடையும். இறைவனே அனைத்தையும் அருளிக் காப்ப வன் என்ற துணிவு ஏற்பட்ட பின்னர் எல்லாத்துன்பங்களை யும் பொறுத்துக் கொள்வதைத் தவிர நமக்கு வேறு வழி இல்லை. இந்த நினைவுடன்,

''வாளால் அறுத்துச்
சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ
யாளன்போல் மாயத்தால்

12. குறள் - 542

மீளாத் துயர்தரினும்
வித்துவக்கோட்டு அம்மா! நீ
ஆள்ஆ உனதுஅருளே
பார்ப்பன் அடியேனே"[13]

[மாளாத - நீங்காத; காதல் - அன்பு; ஆள் ஆ(க) - அடிமை உண்டாக; பார்ப்பன் - நோக்கியிரா நின்றேன்.]

என்ற ஆழ்வார் பாசுரத்தை வாய் விட்டுப் பாடுகின்றோம். இதனால் பரமான்மா சீவான்மாவுக்கு நன்மை செய்வதிலேயே ஊன்றியிருப்பதும், சீவான்மா பரமான்மாவிடம் நம்பிக்கை கொள்ள வேண்டியிருப்பதும் தெளிவாகின்றன.

மாக்கடலில் ஒரு கப்பல் புறப்படுகின்றது. அக்கப்பலின் பாய்மரத்தின்மீது ஒரு பறவை உள்ளது. கப்பல் நடுக்கடலுக்குச் சென்றவுடன் பறவை பறக்கத்தொடங்குகின்றது. நிலத்தினின்றும் கப்பல் மிகச் சேய்மையில் வந்து விட்டதால் பறவையால் மீண்டும் நிலத்திற்குச் செல்ல முடியவில்லை. கடலிலோ பறவை சென்று தங்குவதற்கு ஏற்ற இடமும் இல்லை. ஆகவே, பறவை மீண்டும் கப்பலின் பாம்மரத்திற்கே வந்து சேர்கின்றது. வாழ்க்கைக் கடலில் உள்ள நாமும் இறைவனாகிய கப்பலின் பாய்மரத்திலுள்ள பறவையின் நிலையில்தானே உள்ளோம்? எப்படி எப்படிப் பறந்தாலும் இறுதியில் இறைவனைத் தானே வந்தடைதல் வேண்டும்?

"எங்குப்போய் உய்கேன்உன்
இணையடியே அடையல்அல்லால்
எங்கும்போய் கரைகாணாது
எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும்
மாப்பறவை போன்றேனே[14]

13. பெரு. திரு 5 : 4
14. ஷை 5 : 5

[எறி-(அலை) எறியும்; வங்கம் - மரக்கலம்; கூம்பு - பாய் மரம்.]

என்ற பாசுரத்தைப் பக்தியுடன் பாடுகின்றோம். மரக்கலத்தின் நிலையில் எம்பெருமானும் பறவையின் நிலையில் நாமும் இருக்கின்றோம். சீவான்மா பரமான்மாவை விட்டு விலகிப் போக முடியாத நிலையையும், பின்னது முன்னதற்கு ஆதாரமாயிருக்கும் நிலையையும் உணர்கின்றோம்.

கதிரவனைக் கண்டு தாமரை மொட்டுகள் மலர்கின்றன என்பதை நாம் அறிவோம். செந்நிறமுடைய நெருப்பு, தாமரை மொட்டுக்களின் அருகில் வந்து வெப்பத்தைத் தந்தாலும் அந்த வெப்பத்தினால் தாமரை மலர்வதில்லை. நெருப்பின் வெப்பம் தாமரைக்கு ஒத்து வருவதில்லை. கதிரவனின் வெப்பமன்றிப் பிறிதொன்று அது மலர்வதற்குக் காரணமாகாது. அங்ஙனமே, தாம் அநுபவித்தே தீர வேண்டிய கொடிய பாவங்களை இறைவன் தீர்த்தருளாதொழியினும் அவனுடைய எல்லையில்லாத உத்தம குணங்களுக்கேயன்றி வேறொன்றுக்கும் தாம் நெஞ்சுருக முடியாத நிலையைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். இந்த உணர்வுடன் நாம்,

"செந்தழலே வந்துஅழலைச்
செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெய்கதிரோற்(கு)
அல்லால் அலராவால்
வெந்துயர்வீட் டாவிடினும்
வித்துவக்கோட்(டு) அம்மா! உன்
அந்தமில்சீர்க்(கு) அல்லால்
அகங்குழைய மாட்டேனே"[15]

15. பெரு. திரு 5 : 6

[அழல் - நெருப்பு; கமலம் - தாமரை; அந்தரம்-வானம்; கதிரவன் - சூரியன்; அலர்தல் - மலர்தல்; துயர் - பாவம்; வீட்டாவிடினும் - தீர்த்தருளாதொழியினும்; அந்தம்இல்சீர்-எல்லையில்லாத உத்தம குணங்கள்; அகம் - நெஞ்சம்; குழைதல் - உருகுதல்.]

என்ற பாசுரத்தை நெஞ்சு நெக்குருகப் பாடிப் பரவச மடைகின்றோம். கதிரவன் நிலையில் எம்பெருமானையும் தாமரையின் நிலையில் தம்மையும் வைத்துக் கூறியதன் கருத்தினைச் சிந்திக்கின்றோம். பரமான்மா இன்பந் தருபவன் என்பதையும் சீவான்மா இன்பந் துய்ப்பவன் என்பதையும் அறிகின்றோம். இதில் நாயக-நாயகி பாவனை தொனிப்பதையும் கண்டு இன்புறுகின்றோம்.

எவ்வளவோ காலம் முகிற் கூட்டங்கள் மழை பொழியத் தவறினாலும் நிலத்திலுள்ள பைங்கூழ்கள் கருநிறங் கொண்ட அம் மேகங்களையே எதிர் நோக்கியிருக்கும். அப் பயிர்களைப் போலவே நாம் அநுபவிக்கும் துன்பங்களை இறைவன் போக்காவிடினும் அவனது அடிமைகளாகிய நாம் அந்த இறைவனிடத்திலேயே நம் மனத்தைச் செலுத்துகின்றோம்.

"எத்தனையும் வான்வறந்த
  காலத்தும் பைங்கூழ்கள்
மைத்துஎழுந்த மாமுகிலே
  பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும்
  வித்துவக்கோட் டம்மா! என்
சித்தம்மிக உன்பாலே
  வைப்பன் அடியேனே"[16]

[பைங்கூழ்கள் - பயிர்கள்; மைத்து - கருநிறங் கொண்டு; மெய்த்துயர் - தவறாது அநுபவிக்கும் துன்பம்; சித்தம் - மனம்.]

---

16. பெரு திரு 5 : 7

என்ற ஆழ்வார் பாசுரத்தை வாய் விட்டுப் பாடுகின்றோம். உலகத்து உயிர்கட்கெல்லாம் பரமான்மாவே வாழ்வின் அடிப் படை என்பதனை அறிந்து கொள்ளுகின்றோம்.

கோயிலின் அருகில் ஓடும் ஆற்றின் காட்சி நம் மனத்தை விட்டு மறையவில்லை. இந்த ஆறும் இதனைப் போன்ற பல ஆறுகளும் பல இடங்களிலும் பரந்து ஓடி ஆழ்கடலில் சேருமேயன்றி வேறிடத்தே புகுந்து நில்லா. இந்த ஆறுகள் போலவே இறைவனுடைய அநந்த கல்யாண குணங்கள் தவிர மற்றொன்றை நம் மனம் அநுமதியாத நிலையை வேண்டி நிற்கின்றோம். இந்த உணர்வுடன்,

"தொக்கிலங்கி யாறெல்லாம்
 பரந்தோடித் தொடுகடலே
புக்கன்றிப் புலம்நிற்க
 மாட்டாத மற்றவைபோல்
 * * * உன்
புக்கிலங்கு சீரல்லால்
 புக்கிலன்காண் புண்ணியனே[17]

[தொக்கு-திரண்டு; தொடுகடல்-ஆழ்கடல்; சீர்-கல் யாண குணங்கள்.]

என்ற பாசுரம் நம் வாயினின்றும் வெளிப்படுகின்றது. இதில் பரமான்மாவின் பெருமையும் சீவான்மாவின் சிறுமையும், இறுதியில் சீவான்மா பரமான்மாவை அடைதலும் புலனாகின்றமையை அறிகின்றோம்.

எம்பெருமானிடத்தில் அன்பைச் செலுத்தி அதனால் செல்வத்தை வெறுக்கின்றவர்களிடம், அவர்களின் நல் வினைப் பயனால் அச்செல்வம் அவர்களை விடாது

17. பெரு. திரு 5 : 8

விரும்பி வலியத் தொடர்ந்து சேர்தல் இயல்பு. இதனை நாம் அறிந்தாலும் இஃது இறைவனது திருவுள்ளப்படி அமை கின்றது என்பதை நாம் உணராமல் இல்லை. ஆன்மாக்கள் இறைவனுடைய உடைமை என்பதை நாம் அறிவோம். இந்த உடைமையை இறைவன் வெறுத்தொதுக்கினாலும் ஆன் மாக்கள் இறைவனையே பற்றி நிற்கும். இந்த உணர்வு எழும் நிலையில்,

''நின்னையே தான்வேண்டி
நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே தான்வேண்டும்
செல்வம்போல் மாயத்தால்
மின்னையே சேர்திகிரி
வித்துவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி
நிற்பன் அடியேனே''[18]

[நீள் செல்வம் - அதிக செல்வம்; திகிரி - சக்கராயுதம்.] என்ற பாசுரத்தை வாய்விட்டுப் பாடி உணர்ச்சிப் பெருக்கில் திளைக்கின்றோம். இதில் 'சீவான்மா பரமான்மாவின் உடைமை' (ஸ்வஸ்வாமி பாவ சம்பந்தம்) என்ற உண்மை வெளிப்படுவதை அறிகின்றோம்.

இந்த உணர்ச்சிப் பெருக்கில் மீண்டும் கோயிலை வலம் வந்து வித்துவக் கோட்டம்மானிடம் பிரியா விடை பெற்று நம் இருப்பிடம் திரும்புகின்றோம். இந்த அரிய பாசுரங்கள் பெருமாள் திருமொழியில் ஐந்தாம் பதிகம் ஆகும். குலசேகர ஆழ்வாருக்குப் 'பெருமாள்' என்ற மற்றொரு திருநாமம் உண்டு என்பதைச் சொல்ல மறந்துவிட்டேன். இவர் இராமாயணத்தில் மிகவும் ஈடுபாடுடையவர்.

18. பெரு. திரு 5 : 9

"தில்லைநகர்த் திருச்சித்ர
கூடந் தன்னுள்
அரசுஅமர்ந்தான் அடிசூடும்
அரசை அல்லால்
அரசுஆக எண்ணேன்மற்(று)
அரசு தானே"[19]

என்று கோவிந்த பாதார விந்தத்தைச் சிரமேற்கொள்ளு தலையே கிரீடாபிஷேகமாகப் பாவிக்கின்ற இவர், இராம பிரானது இன்பதுன்பங்களைத் தம் சுகதுக்கங்களாகக் கருதி யதனால் இவருக்குப் 'பெருமாள்' என்ற பெயர் வழங்கிவரு கின்றது.[20] அதனால் இவர் திருமொழி 'பெருமாள் திரு மொழி' என்றே வழங்குகின்றது. சீவான்மா பரமான்மாவின் தொடர்பினைக் கூறும் வித்துவக் கோட்டம்மான் பதிகம் போன்ற ஒரு பதிகத்தை நாலாயிரம் எங்கும் தேடிக் காண்டல் அரிது. இதில் வரும் உவமைகள் பெரும்பாலும் சேர நாட்டு வாழ்க்கையையொட்டியே அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது.

இந்த ஒப்புயர்வற்ற திருமொழியை அவர் பாடிய சந்நி தியிலேயே நாமும் பாடி நன்கு அநுபவித்த நிலையில்,

"வாய்த்த கருமம்இனி
மற்றுஇல்லை நெஞ்சமே!
தோய்த்த தயிர்வெண்ணெய்
தொட்டுஉண்ட கூத்தன்

19. பெரு. திரு 10 : 7
20. இராமபிரான் திருவரங்கத்தில் நிறுவிய அரங்க நாதன் 'பெரிய பெருமாள்' என்று வழங்கப் பெறு கின்றான். இலக்குவனுக்கு 'இளைய பெருமாள்' என்ற திருநாமம் உண்டு.

திருவிற்று வக்கோடு
சேர்ந்தால் பிறவிக்
கருவின் துவக்குஓடும்
காண்''[21]

[துவக்கு - கட்டு, பந்தம்.]

என்ற திவ்விய கவி பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் பாடல் நம் நினைவுக்கு வருகின்றது. நம்முடைய பிறவித் தளையே அறுபட்டுப்போன உணர்வினைப் பெறுகின்றோம். ''கன்றுக்கு இரங்கிய தாய்ப்பசு தோற்கன்றுக்கும் இரங்குமாப் போலே'' ஆழ்வார்கட்கு அருள் பாலித்த எம்பெருமான் நம் போலியர்களிடமும் கருணை காட்டுவான் என்ற நம்பிக்கை உணர்வுடன் திரும்பி நம் இருப்பிடத்தை அடைகின்றோம்.

21. நூற். திருப். அந். 69

# 13. நாவாய் உறையும் நாரணநம்பி

வைணவ சமயத்தின் முடிவான குறிக்கோள் எம்பெருமானுக்கு அடிமை செய்வதேயாகும். அதுவும் எம்பெருமானின் உகப்புக்காகவே செய்வது மிகவும் சிறந்தது என்பது அச்சமயத்தின் சிறந்த கொள்கையாகும். அங்ஙனம் அடிமை செய்யுங்கால் தான் செய்வதாக எண்ணும் தன் முனைப்பே (Egotism) தலைகாட்டலாகாது:

''ஒழிவில் காலம்எல்லாம் உடனாய் மன்னி
வழுவிலா அடிமைசெய்ய வேண்டும்நாம்''[1]
[ஒழிவுஇல் - ஓய்வில்லாத; உடனாய் - கூடவே இருந்து:
வழுவிலா - குற்றமற்ற.]

என்று நம்மாழ்வார் கூறுவது காண்க. திருவரங்கப் பெருமாளரையர் இத்திருவாய் மொழியைப் பாடப்புக்கால் ஒழிவில் காலமெல்லாம், காலமெல்லாம்...என்று இங்ஙனே நெடும் போதெல்லாம் பாடி மேல் போகமாட்டாதே தலைக்கட்டிப் போவாராம்'' என்பதாக ஒரு ஐதிகம் கூறப் பெறுகின்றது. இதனால், அரையர் ஆழ்வாருடைய நிலைமையை அப்படியே அடைந்து (Make-belice) கைங்கரியத்தில் தமக்குள்ள ஈடுபாட்டைக்காட்டினார் என்பது அறியத்தக்கது.

ஒரு சமயம் எம்பெருமானார் இந் திருவாய்மொழியை அருளிச் செய்தபோது தம் முன்னிலையில் நூற்றுக்கணக்காக

1. திருவாய் 3. 3: 1

எழுந்தருளியிருந்த சீடர்களை நோக்கி 'ஆழ்வார் பாரித்த கோயில் குறைதீரத் திருவேங்கடமுடையான் கோயில் கொண்டிருக்கும் இடத்திலிருந்து கொண்டு நித்திய கைங் கரியம் செய்ய விருப்பமுடையார் ஆரேனும் உண்டோ?' என்று வினவியருள, 'குளிர் அருவி வேங்கடம்' ஆகையால் எல்லோரும் அங்கு நிலவும் குளிருக்கு அஞ்சி விடை கூறா திருக்க, உடனே அனந்தாழ்வான் என்ற சீடர் எழுந்து 'அடியேனுக்கு நியமித்து அருளவேண்டும்' என்று பணிவாகக் கேட்டராம். அதனைக் கேட்டு உகந்த எம்பெருமானார் 'நீர் ஒருவரே ஆண் பிள்ளை' என்று அவரைப் பாராட்டி அவரைத் தழுவியருளி விடை கொடுத்தனுப்பினார். அது முதலாக அவருக்கு **அனந்ததாண்பிள்ளை** என்ற மற்றொரு திரு நாமமும் வழங்கலாயிற்று. அந்த ஆழ்வான் அன்று அமைத்த குளம், நந்தவனம் முதலியவற்றை இன்னும் நாம் திருமலை யில் காணலாம். A, T. C. (Anantalvan Tank Cottages) என்ற திருக்கோயிலுக்குப் பின்புறம் உள்ள பகுதி அனந்தாழ் வான் பெயராலேயே வழங்கி வருமாறு செய்த கோயில் ஆட்சி யாளரின் நன்றியுணர்வு பாராட்டத்தக்கது. நிற்க.

''வழுவிலா அடிமை செய்ய வேண்டும்'' என்று பாரித்து நிற்கும் நம்மாழ்வார் திருநாவாய் சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானுக்கு அடிமை செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். நம்மாழ்வார் பிராட்டியின் நிலை யிலிருந்து கொண்டு திருமூழிக்களத்து எம்பெருமானுக்குத் தூது அனுப்பியதாக நாம் அறிந்தோமல்லவா? தூது சென்ற வர்கள் மீண்டு வந்து செய்தி சொல்லும் வரையில் பொறுத் திருக்க வேண்டும். ஆழ்வாரால் பொறுத்திருக்க முடிய வில்லை. அவர்கள் திரும்பும் வரையில் நாவாயில் உறையும் நாரண நம்பியைக் கிட்டுவோம் என்று பார்க்கின்றார். ஆனால் அவனது அழகில் நெஞ்சைப் பறிகொடுத்து ''காலாழும்; நெஞ்சழியும்; கண்சுழலும்''[2] என்ற நிலை

2. பெரி திருவந்-34

யிலிருக்கும்போது அவர் எங்ஙனே திருநாவாய்க்குச் செல்ல முடியும்? எனவே, இருந்த இடத்திலிருந்து கொண்டே மனோரதிக்கின்றார். அந்த மனோரதமே நாவாய் உறையும் நாரண நம்பி மேல் திருவாய்மொழியாகப் பரிண மிக்கின்றது. ''திருவடி சென்று பிராட்டியைத் திருவடி தொழுது மீண்டவுடன் பெருமானைக் கிட்டுவதற்கு முன்பு பிராட்டிக்குப் பிறந்த மனோரதம் போலே, கீழ்விட்ட தூதர் அவ்விடத்தை யடைந்து அவனைக் கொண்டு வருவதற்கு முன்னே இடையில் இவர்க்குப் பிறந்த மனோரத்தைச் சொல்லுகிறது''[3] என்பது ஈடு. இதனையும் நினைத்து இப் பதிகத்திலே ஆழங்கால் பட்ட நாம் அந்த பெருமானைச் சேவிக்க ஆசைப்படுகின்றோம்.

திருநாவாய் என்ற திவ்விய தேசம் தென்னிந்தி இருப்புப் பாதையில் ஷோரனூர்—மங்களூர் வழியில் ஷோரனூரிலிருந்து சுமார் இருபத்தைந்து கல் தொலைவி லுள்ள ஓர் ஊர். அதிகாலையில் நீராடி, தூய ஆடையை உடுத்திக் கொண்டு திருநாவாய்க்குப் போகத் தயாராகின் றோம். சுமார் ஏழரை மணிக்கு ஷோரனூர் நிலையத்திற்கு வந்து வண்டி ஏறுகின்றோம், விரைவு வண்டி இல்லை யாதலின் ஒவ்வொரு நிலையத்திலும் நின்றுநின்று செல்லு கின்றது வண்டி. இயற்கை வனப்புகளும் வளங்களும் நிறைந்த மலைநாடாதலின் இருப்புப் பாதையின் இருபுறமு முள்ள தோப்புக்கள், சோலைகள், வயல்கள் இவற்றைக் கண்டுகளித்துக் கொண்டே செல்லுகின்றோம். திருவித்துவக் கோடு செல்லும்போது பாரதப் புழா என்ற ஆற்றைப் பற்றிக் குறிப்பிட்டோமல்லவா? அப்போது அந்தஆறு நம் முடனேயே தொடர்ந்து வந்து கொண்டிருந்தது. இந்த

3. திருவாய் 9. 8 (உரை அவதாரிகை 'ஈடு' காண்க)

ஆற்றையே இப்போதும் சந்திக்கின்றோம். ஆனால் ஆறு இப்போது நாம் செல்லும் திசையிலிருந்து வந்து கொண்டிருப்பதைக் காண்கின்றோம். பட்டாம்பி என்ற நிலையத்திற்கு அருகே வண்டி வருங்கால், பாரத புழா என்ற ஆறும், அதன் அக்கரையிலுள்ள திருவித்துவக் கோட்டம்மான் திருக்கோயிலும் தென்படுகின்றன. வண்டியிலிருந்த வண்ணம் அந்த அம்மானுக்கு ஒரு 'கும்பிடு' போடுகின்றோம். சுமார் ஒன்றரை மணிநேரத்தில் திருநாவாய் என்ற நிலையத்திற்கு வந்து சேர்கின்றோம்.

நிலையத்திலிருந்து திருநாவாய் என்ற ஊர் ஒன்றரைக் கல் தொலைவிலுள்ளது .வண்டியொன்றும் கிடைப்பதில்லை. சில சமயம் பேருந்து கிடைக்கும். நாம் அதனை எதிர்பார்க்கத் தேவையில்லை 'நடராஜா சர்வீஸில்' ஆனந்தமாக நடந்து செல்லலாம். சிறு சாலையின் வழியே நடந்து செல்லும் போதே இருபுறமும் பச்சைப் பட்டு விரித்தாற் போன்ற நெல் வயல் காட்சிகளைக் கண்டுகளித்துக் கொண்டே நடந்து போகின்றோம். சுமார் முக்கால் மணி நேரத்திற்குள் நாரண நம்பி எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை நண்ணுகின்றோம். சாலையிலிருந்து சாலைக்கு உட்புறமாகச் சுமார் நூறு கெஜ தூரத்தில் திருக்கோயில் அமைந்துள்ளது. சாலையிலிருந்து கோயிலுக்கு இட்டுச்செல்லும் குறுக்குப் பாதையின் இருபுறமும் சோலைகளையும் நந்தவனங்களையும் நாம் காணும்போது 'அடிமைசெய்ய வேண்டும்' என்று பாரித்த ஆழ்வாரின் நினைவு வருகின்றது' அவருடைய உணர்ச்சி நம் மையும் பற்றுகின்றது இதனால், தான் ''வெறிந்தண்மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்''[4], 'சோலைகள் சூழ் திருநாவாய்'[5] ''நீள் ஆர் மலைச் சோலைகள் சூழ் திருநாவாய்''[6], ''வண்டு ஆர்

4. திருவாய் 9.8 : 1
5. ஷை 9. 8. 2
6. ஷை 9. 8:

மலைச் சோலைகள் சூழ் திருநாவாய்''[7], ''கொந்து ஆர் மலர்ச் சோலைகள் சூழ் திருநாவாய்''[8] என்று நம்மாழ்வார் இவ்வூரைச் சுட்டியுரைத்தனரோ என்று எண்ணுகின்றோம். 'எம்பெருமானுக்கு அடிமை செய்வதற்குப் பூக்கள் முதலிய துணைப் பொருள்கட்குத் தட்டுப்பாடில்லாத திவ்விய தேசம் அன்றோ இது!'' என்று எண்ணவும் செய்கின்றோம். திருக் கோயில் பாரதப்புழா என்ற ஆற்றங்கரையின் மேல் அமைந் துள்ளது. இவ்வூர் வழியே வரும் ஆறுதான் திருவித்துவக் கோட்டை நோக்கிச் செல்லுகின்றது.

இந்தத் திருக்கோயில் எம்பெருமானை நம்மாழ்வாரும் திருமங்கை யாழ்வாரும் மங்களா சாசனம் செய்துள்ளனர். என்றாலும், நம்மாழ்வார் ஒரு பதிகத்தால் இத்திருக் கோயில் எம்பெருமானைப் பாடி அநுபவிக்கின்றார்; அதுவும் தலைவியாக இருந்து அநுபவிக்கின்றார்[9]. திருமங்கையாழ் வார் நறையூர் நம்பியைப் பாடி அநுபவிக்கும் போது இந்தத் திவ்விய தேச எம்பெருமானையும் நினைவு கொள்ளுகின்றார்; நாவாய் உறையும் நம்பியையே நறையூர் நம்பியாகக் கண்டு களிக்கின்றார். அவர் கண்ட காட்சியை,

தூவாய புள்ளூர்ந்து வந்து, துறைவேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானை,
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணானை[10]
நாவாய் உள்ளானை நறையூரில் கண்டேனே''

[புள்-கருடன்; வேழம்-யானை: மூவாமை-துன்புறாமை; துணித்தானை -இரு துண்டாக்கியவனை.]

7. திருவாய் 9. 8: 6
8. ஷை 9.8: 10
9. ஷை 9. 8.
10. பெரி திரு 6. 8: 3.

என்ற பாசுரத்தில் காணலாம். பரமபததாதன் திருநாவாயில் வந்து குடி கொண்டிருந்தான்! அவனே திருநறையூரில் வந்து சேவை சாதிக்கின்றான் என்கின்றார் ஆழ்வார். பிறிதோரிடத்தில் பதினெண் திருப்பதிகளை மங்களாசாசனம் செய்யும்போது நாவாய் நம்பியை நினைவு கூர்கின்றார்.

"கம்ப மாகளிறு அஞ்சிக் கலங்க, ஓர்
கொம்பு கொண்ட குரைகழல் கூத்தனை
கொம்பு லாம்பொழில் கோட்டியூர்க் கண்டுபோய்
நம்பனைச் சென்று காண்டும் நாவாயுளே"[11]

என்பது பாசுரம். குவலயாபீடம் என்ற மதயானையின் கொம்பைப் பறித்த பெருமான் ஆழ்வாருக்குத் திருக்கோட்டியூரில் சேவை சாதித்தார்; அவரைத் திருநாவாயில் காண ஆசைப் படுகின்றார் ஆழ்வார். இந்த இரண்டு பாசுரங்களாலும் திருமங்கையாழ்வார் இத் திருப்பதிக்கு நேரில் வந்து சேவித்தாகப் புலப்பட வில்லை. நம்மாழ்வார் தலைவி பாசுரமாகப் பாடியிருப்பதால் அவர் இத்திருக் கோவிலுக்கு வரவில்லை என்று உறுதியாகச் சொல்ல முடியாது. திருவாய்மொழி அந்தாதி முறையில் அமைந்திருப்பதால் எல்லாம் பாடல்களையும் ஓரிடத்திலிருந்து கொண்டு பாடியிருத்தல் வேண்டும் என்று பிறிதோரிடத்தில் குறிப்பிட்டுள்ளோம். அப்படிப் பாடும்பொழுது இத்திருக்கோயில் எம்பெருமானைப் பாடுங்கால் 'தலைவிப் பாசுரமாக' திருவாய்மொழியை அமைத்து மகிழ்ந்தார் என்று கொள்ளலே ஏற்புடைத்தாகும்.

இந்த எண்ணங்களுடன் திருக்கோயிலின் சந்நிதியை அடைகின்றோம். நம்மாழ்வார் பெற்ற அநுபவத்தை

11. பெரி திரு 10. 1: 9

நாமும் பெற்று நாவாய் அப்பனைச் சேவிக்கின்றோம். அந்த எம்பெருமானின் பேரருளுக்கு நாம் பாத்திரமாக வேண்டும் என்று துடித்து நிற்கின்றோம். திருநாவாய் என்னும் திவ்விய தேசத்தில் எம்பெருமானின் பேரருள் விளங்கும் என்று ஆசாரிய ஹிருதயம் குறிப்பிடுகின்றதன்றோ?

''பிரிந்த துன்பக்கடல் கடத்தும் விஷ்ணு
போத ஆந்ரு சம்ஸ்யம், நாவாயிலே நிழல்எழும்''[12]

என்பது ஆசாரிய ஹிருதய சூத்திரம். விஷ்ணு போதம், விஷ்ணுவாகிய ஓடம்; ஆந்ரு சம்ஸ்யம் - அடியார்கட்குச் செய்யும் அருள். அவன் நித்திய வாசம் செய்கின்ற 'திருநா வாயிலே', உள்ளே உறைகின்ற அவனது தன்மையும் இதுவோ என்று அறியலாம்படி அவ்வூரின் பெயராலே நிழல் என்று குறிப்பிடப்படலாயிற்று. நம்மாழ்வார்,

''நாவாய் உறைகின்ற என்நாரண நம்பீ!
ஆஆ அடியேன் இவன் என்று அருளாயே''[13]

[ஆஆ - ஐயோ; அடியான்-அடிமை; அருளாய் - கருணை காட்டுவாய்.]

என்று வேண்டுகின்றனரன்றோ? இதனை நினைந்தே ஆசாரிய ஹிருதயம் அவ்வூர் எம்பெருமானின் தன்மையைக் குறிப்பிட்டது என்பது அறியத்தக்கது. கடப்பதற்கு உறுப்பாக இருப்பது கப்பல்; நாவாய். அங்ஙனமே பிரிந்த துன்பக் கடலைக் கடப்பதற்கு இத்தலத்து எம்பெருமானும் நாவாய் போன்று இருப்பதால், அவன் எழுந்தருளியுள்ள தலமும் 'நாவாய்' என்ற பெயரால் வழங்கலாயிற்று. 'திரு' என்ற

12. ஆசா. ஹிரு 180
13. திருவாய் 9.8 : 7

அடை மொழியுடன் அத்தலம் 'திருநாவாய்' என்று வழக்கி லிருந்து வருகின்றது.

"துன்பக் கடல்புக்கு வைகுந்தன் என்பதுஓர்
தோணி பெறாது உழல்கின்றேன்"[14]

என்ற ஆண்டாளின் திருப்பாசுரத்திலும் இறைவன் துன்பக் கடல் கடத்தும் தோணியாக அருளிச் செய்யப் பெற் றுள்ளமை காண்க. பிரிவுத் துன்பத்தைத் திருமூழிக் களத்துத் திருவாய்மொழியிலே கண்டோம். அதனை ஈண்டு நினைவு கூர்க.[15]

பராங்குச நாயகி (நம்மாழ்வார்) இருந்த இடத்திலி ருந்து கொண்டே எம்பெருமானை அநுபவிக்க எண்ணு கின்றாள்.

"வெறித்தண் மலர்ச்சோலைகள்
சூழ்திரு நாவாய்
குறுக்கும் வகையுண்டுகொலோ
கொடியேற்கே"[16]

[வெறி - நறுமணம்; குறுக்கும்-குறுகும் மலையாள மொழி வழக்கு.]

என்று மநோரதங்களைப் பண்ணுகின்றாள். அந்தத் திவ்விய தேசத்துக்கு அண்மையில் வாழும்படியான உபாயம் உண்டோ என்று எண்ணுகின்றார். 'குறுகும் வகை' என்பது மலையாள மொழி வழக்காகப் பாட்டில் அமைந்து கிடக் கின்றது. இதுபற்றி ஓர் ஐதிகம் சொல்லுவதுண்டு. ஒரு சமயம் இராமாநுசர் மலைநாட்டுத் திருப்பதியாத்திரை யாகச் சென்றிருந்தார். திருநாவாய்க்கு அணித்தாகப் போய்க் கொண்டிருக்கும் பொழுது எதிரிலே வந்து கொண்

14. நாச். திரு 5 : 4
15. '**மூழிக்களத்து விளக்கு**' என்ற கட்டுரை காண்க.
16. திருவாய் 9,8 : 1

டிருந்த மலையாளர்களை நோக்கி 'திருநாவாய் எவ்வளவு தூரமுண்டு?' என்று வினவினார். அவர்கள் 'குறுச்கும்' என்றார்கள்; அண்மையில் உள்ளது என்பது இதன் பொருள். எம்பெருமானார் அதனைக் கேட்டு 'இப்பகுதி மொழியாலே யன்றோ அருளிச் செய்துள்ளார் ஆழ்வார்!' என்று பாசுரத் தில் மிகவும் ஈடுபட்டதாக வரலாறு ஒன்று உண்டு. அதனை ஈண்டு நினைவு கூர்ந்து நாமும் பாடலில் தோய்ந்து அநுபவவிக்கின்றோம்.

> ''அறுக்கும் வினையாயின
> ஆகத்து அவனை
> நிறுத்தும் மனத்தொன்றிய
> சிந்தையினார்க்கு''[17]

[அறுக்கும்-போக்கும்; ஆகத்து-உள்ளத்தில்; ஒன்றிய-ஒருமைப்பாடுடைய.]

என்பது பாசுரத்தின் முதலிரண்டு அடிகள். ''அப்பொழு தைக்கு அப்பொழுது ஆராவமுதாக இருக்கும் எம்பெருமா னைத் தங்கள் உள்ளத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை உடையவர்கட்கு'' திருநாவாய் அண்மைக்கு வரும்படியான உபாய முண்டோ என்பது பராங்குச நாயகியின் எண்ணம். 'வினையாயின' என்பத னால் விரோதிகளைக் குறிப்பிடுகின்றார் ஆழ்வார். அந்த விரோதிகள் சொரூப விரோதி, உபாய விரோதி பிராப்பிய விரோதி என்று திருமந்திரப் பொருளில் கூறப்பெறும் மூன்று விரோதிகளாகும்.[18] இவற்றைத் தவிர சஞ்சிதம், பிராரப்தம் போன்ற வினைத் தொகுதிகளும் உள்ளன. இவை யனைத்தும் அடங்கியவையே 'வினையாயின' வாகும். எம் பெருமானை உள்ளத்தில் நிலைநிறுத்தி வைத்துக் கொள்ள

17. திருவாய் 9,8 :1
18. முமுட்சுப்படி-83, 84,85

வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்களிடம் இவ்விரோதிகள் யாவும் அணுகா என்பது கருத்து.

இத்தகைய எம்பெருமான் பெரிய பிராட்டியாரோடும், பூமிப் பிராட்டியாரோடும் நப்பின்னைப் பிராட்டியாரோடும் திருநாவாயில் எழுந்தருளியுள்ளான். இதனை ஆழ்வார்,

''கொடியேரிடைக் கோகனகத்
தவள்கேள்வன்
வடிவேல் தடங்கண்
மடப்பின்னை மணாளன் சூழ்
நெடியான்உறை சோலைகள்
திருநாவாய்''[19]

[கொடியேர் - கொடியைப் போன்ற; கோகனகம்- தாமரை; கேள்வன் - தலைவன்; அணுகப்பெறும் - கிட்டப்பெறும்.]

என்றும்,

''மணாளன் மலர்மங்கைக்கும்
மண்மடந்தைக்கும்;
கண்ணாளன் உலகத்துயிர்
தேவர்கட்கெல்லாம்;
விண்ணாளன் விரும்பிஉறையும்
திருநாவாய்''[20]

[மணாளன் - கணவன்; மலர்மங்கை - பெரிய பிராட்டி: மண்மடந்தை-பூமிப் பிராட்டி; கண் ஆளன்-தலைவன்; விண் ஆளன்-பரமபதநாதன்.]

என்றும் கூறுகின்றார். மண்ணுலகத்தையும், விண்ணுலகத்தையும், பரமபதத்தையும், ஆட்சிபுரியும் எம்பெருமான் திருநாவாயில் விரும்பியுறைகின்றான். பெரிய பிராட்டியோ பரிந்துரைப்பதில் (புருஷ காரத்தில்) ஊன்றியிருப்பவள்;

19. திருவாய் 9,8 : 2
20. ஷை 9,8 : 5

பூமிப்பிராட்டியோ பொறுமையே வடிவெடுத்தவளாயிருப்பவள், நப்பின்னைப்பிராட்டியோ தன் அழகால் எம்பெருமானை வசீகரித்து நிற்பவள். இம்மூன்று அன்னைமார்களும் அருகிலிருக்கவும் தாம் எம்பெருமானுக்குக் கைங்கரியம் செய்யும் வாய்ப்பினை இழக்கலாமோ என்று ஏங்குகின்றார் ஆழ்வார்.

இங்ஙனம் மூன்று அன்னைமார்களுடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருநாவாயை,

''அடியேன் அணுகப்பெறும்நாள்
எவைகொலோ?''[21]

[அணுகப்பெறும் - கிட்டப்பெறும்.]

என்றும், அந்தத் திருப்பதியில் எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் திருவோலக்கத்தில்,

''புகலாவதோர் நாளறியேனே''[22]

என்றும், அந்தத் திவ்விய தேசத்தைக்,

கண்ணாரக் களிக்கின்றது
இங்கென்றுகொல் கண்டே?''[23]

என்றும் துடித்து நிற்கின்றார் ஆழ்வார். அடைவது அரியதாக இருக்கும் இடத்திலன்றி எல்லோரும் எளிதில் சென்றடையும் இடத்தில் எழுந்தருளியிருந்தும் அந்த வாய்ப்பினை இழக்கலாகாது என்பது ஆழ்வாரின் குறிப்பு. தவிர, மண்ணுலகிலுள்ள மனிதர்கள், விண்ணுலகிலுள்ள தேவர்கள். வைகுந்தத்திலுள்ள நித்திய சூரிகள் இவர்கட்குத் தலைவனாக இருக்கும் எம்பெருமானுக்குத் தாம் ஒருவன் மட்டிலும் புறம்புபட்டு நிற்பது தகுதியோ என்ற தொனிப் பொருளையும் இதில் காணலாம்.

21. திருவாய் 9.8 : 2
22. ஷை 9.8 : 3
23. ஷை 9.8 : 5

இத்தகைய இறைவனுக்கு இடையறாது கைங்கரியம் செய்ய வேண்டும் என்று எண்ணுகின்றவர் ஆழ்வார். அதற்கு எம்பெருமான் எந்த நாளை எண்ணி வைத்திருக்கின்றனனோ என்று கலங்குகின்றார்.

"நாளேல் அறியேன்
எனக்குள்ளன; நானும்
மீளாஅடிமைப் பணிசெய்யப்
புகுந்தேன்;"[24]
[மீளா - இடையறா.]

என்பது ஆழ்வாரின் திருவாக்கு. மேலும் அவர்,

"தொண்டே உனக்கால்
ஒழிந்தேன் துரிசின்றி"[25]

[துரிசு - உள்ளே ஓர் எண்ணம், வெளியே ஓர் எண்ணமுமாக இருப்பது.]

என்று தமது கைங்கரிய உறைப்பினை வெளியிடுகின்றார்.

எம்பெருமானுக்கு அடிமை செய்ய வேண்டும் என்று என்னதான் பாரித்து நின்றாலும், அவ்வாய்ப்பு அவனது அருளின்றி நிறைவேறப்பெறாது. அந்த அருளை வேண்டுகின்றார் ஆழ்வார்.

"அருளாது ஒழிவாய்;
அருள்செய்து அடியேனைப்
பொருளாக்கி உன்பொன்னடிக்கீழ்ப்
புக வைப்பாய்;
மருளேயின்றி உன்னைஎன்
நெஞ்சத்(து) இருத்தும்
தெருளே தரு,தென்திரு
நாவாய் என்தேவே!"[26]

[அருள் - கருணை; மருள் - மயக்கம் (அஞ்ஞானம்); தெருள் - தெளிவான அறிவு.]

24. திருவாய் 9.8 : 4
25. ஷை 9.8 : 6
26. ஷை 9.8 : 8

இப்பாசுரத்தின் ஈற்றடியிலுள்ள 'தெருளே தரு' என்பதைத் திருநாவாய்த் தேவனுக்கு அடைமொழியாக்குவர் பிள்ளான் (ஆறாயிரப்படியில்); 'தரு—தந்தருள்க' என்று வினைமுற்றாகக் கொண்டு உரைத்தனர் மற்றையுரையாசிரியர்கள். 'தரு' என்பதற்கு 'தா' என்ற பொருளைக் கொள்ளுமிடத்து 'தருக' என்பதன் கடைக் குறையாகக் கொள்ளுதல் வேண்டும். எனவே, அஞ்ஞான வாசனை இல்லாத தொருபடி உன்னுடைய சொருப ரூப குண விபூதி விஷய திவ்விய ஞானத்தை உன் கிருபையாலே எனக்குத் தந்தருளின நீ, இன்னமும் உன் கிருபையாலே 'நம் அடியான் இவன்' என்று ஆட்கொண்டு அடியேனை உன் பொன்னடிக் கீழ்ப் புகவைத் தருள்வாய், வைத்தருளா தொழிவாய்; திருவுள்ளமான படி செய்தருள்'' என்பது பிள்ளானின் ஆறாயிரப்படி அருளிச் செயல். மற்றுமுள்ள ஆசிரியர்கள், ''அருளவுமாம், தவிரவுமாம்; அஞ்ஞானமில்லாதபடி உன்னை என் நெஞ்சிலே நிறுத்தும்படி தெளிவைத் தரவேண்டும்'' என்பதாகப் பணிப்பர். தெருளைப் பெற்றவரான ஆழ்வார் அதனைத் தந்தருள வேண்டும் என்று மீண்டும் பிரார்த்திப்பது ஏன் என்ற வினா எழுகின்றது. பெற்றவனுக்கு யாதொரு இடைவெளியில்லாதபடி மேலும் மேலும் அபிவிருத்தியைச் செய்ய வேண்டும் என்பதே இதன் கருத்தாகும். ''தனக்கேயாக எனைக் கொள்ளும் ஈதே''[27] என்ற தெளிவினைத் தரவேண்டும் என்றவரன்றோ இவர்?

ஆழ்வார் இப்படிப் பலபடியாக வேண்டியும் எம்பெருமான் சிறப்பான திருவருள் ஒன்றும் பாலிக்கவில்லை. அடியார்களைப் பாதுகாப்பதற்காகவே தேவர்களாலும் முனிவர்களாலும் காண்டற்கு அரியனாயும், மும்மூர்த்திகளிலும் முதல்வனாகவும், மூவுலகங்களையும் தன் சங்கல்பத்தாலேயே ஆட்சி புரியக் கூடியவனான எம்பெருமான் விரும்பியுறையும் இடம் திருநாவாய் என்ற அண்மையிலுள்ள திவ்விய தேசமாக இருந்தும் அதனைக் காண

27. திருவாய் 2.9 : 4

முடியாமலே தான் முடியப் போவதாகக் கூறுகின்றார் ஆழ்வார். இனி அதனைப் பெற இருக்கின்றவர் யாரோ? என்கிறார்.[28] திருநாவாய்க்குப் போவதில் யாதொரு தடங்கலும் இல்லையே; நேராகப் போய்ச் சேவிக்கலாமே என்று சிலர் ஐயுறலாம். திருநாவாய்க்குச் செல்லுதல் ஆழ்வாரின் நோக்கமன்று; அவ்விடத்து உறையும் எம் பெருமானின் நித்திய விபூதியாகிய திருநாடுதான் ஆழ்வார் நோக்கும் நாடாகும்.

திருநாட்டில காணக்கடவதான வடிவை எம்பெருமான் இங்கே காட்டுவதாகக் கொண்டு திருநாவாயில் வந்து குடியேறியுள்ளான். அப்படியிருந்தும் அவனைக் காணப் பெறாமையினால் நெஞ்சழிந்து கூப்பிடுகின்றார் ஆழ்வார்.

"அந்தோ அணுகப்பெறும்
நாள்என்று எப்போதும்
சிந்தை கலங்கித்
திருமால்! என்(று) அழைப்பன்;
கொந்தார் மலர்ச்சோலைகள்
சூழ்திரு நாவாய்
வந்தே உறைகின்ற
எம்மாமணி வண்ணா!"[29]

[அணுகப்பெறும் - கிட்டப் பெறும்; கொந்துஆர் - கொத்துக்கள் நிறைந்துள்ள].

என்ற பாசுரத்தில் இதனைக் காணலாம். ஒருகால் சொல்லப்புக்கு இதனால் இளைத்தாலும் கைவிடாமல் மேலும் மேலும் எல்லாக் காலத்திலும் துயர் உற்ற பிள்ளை தாய் தந்தையர்களை 'அம்மா, அம்மா', 'அப்பா, அப்பா' என்று சொல்லிக் கதறி அழுது கூப்பிடுமாப் போலே

28. திருவாய் 9.8 : 9
29. ஷெ 9.8 : 10

ஆழ்வாரும் சிந்தை கலங்கித் 'திருமாலே, திருமாலே' என்று கூப்பிடுவதாக உரைக்கின்றார். இங்ஙனம் கதறிக் கதறிக் கூப்பிடும் ஆழ்வாரின் உணர்ச்சியுடன் 'திருநாவாய் வந்தே உறைகின்ற மாமணி வண்ணனைச்' சேவிக்கின்றோம்.[30]

திருநாவாய் எம்பெருமான்மீது பாடப்பெற்ற திருவாய்மொழியில் "கொடியேரிடைக் கோகனத்தவள் கேள்வன், வடிவேல் தடங்கண் மடப்பின்னை மணாளன்"[31] என்றும், "மடப்பின்னை மணாளா"[32] என்றும், "மணாளன் மலர் மங்கைக்கும் மண்மடந்தைக்கும்"[33] என்றும் பிராட்டியின் சம்பந்தம் அடிக்கடி அநுசந்திக்கப்பெறுகின்றதைக் காண்கின்றோம். அதற்கு நம்பிள்ளை காரணம் அருளிச் செய்கின்றனர்: 'வேறு தேசத்திற்குச் சென்றிருந்த குழந்தை, ஊர் அணித்தானவாறே தாய்மாரைப் பலகால் நினைக்குமாறு போன்று, அடையத்தக்க தெளிவிசும்பு அணித்தானவாறே, திரளவும் தனித்தனியும் பிராட்டிமாரை அநுசந்திக்கின்றார்" என்று.[34] பத்தாம் பத்தில் முதல் திருவாய்மொழியில் திருமோகூர்க் காளமேகத்தைச் சரணம் அடைந்து ஆழ்வார் பரமபதம் (தெளிவிசும்பு) அடையக் கருதியது ஈண்டு சிந்திக்கத் தக்கது.

இங்ஙனம் பராங்குச நாயகி பெற்ற அநுபவங்களையெல்லாம் முறையாக எண்ணிய வண்ணம் வீற்றிருந்த திருக்கோலத்தில் தெற்கே திருமுக மண்டலம் கொண்டு **மலர்மங்கைத் தாயாருடன்** சேவை சாதிக்கும் நாவாய்

---

30. திருவாய் 9.8 : 10 ('ஈடு' காண்க).
31. ஷை 9.8 : 2
32. ஷை 9.8 : 4
33. ஷை 9.8 : 5
34. ஷை 9.8 : 4 (ஈடு காண்க)

உறையும் நாராணநம்பியை வணங்குகின்றோம். நம்மனம் உலகெங்கும் பறந்து திரிந்தாலும், திருநாவாய்த் தேவனை யன்றி வேறொன்றையும் எண்ணாது; நம் வாயோ அவனை யன்றி வாழ்த்தாது என்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம். இந் நிலையில் திருநாவாய்த் திருவாய்மொழியை அவன் சந்நிதியிலேயே ஓதி ஆழ்வார் பெற்ற அநுபவத்தைப் பெற முயல்கின்றோம். இந் நிலையில்,

''பறந்து திரிதரினும்
பாவியேன் உள்ளம்
மறந்தும் பிறிதுஅறிய
மாட்டா; சிறந்த
திருநாவாய் வாழ்கின்ற
தேவனை அல்லால்,என்
ஒருநாவாய் வாழ்த்தாது
உகந்து''[35]

என்ற திவ்வியகவி பிள்ளைப் பெருமாள் அய்யங்கார் அவர்களின் பாடலையும் சிந்திக்கின்றோம். இத்திருவாய் மொழியைப் பாடியதன் பயனாக,

''மண்ணாண்டு மணம்கமழ்வர்
மல்லிகையே''[36]

என்று ஆழ்வார் கூறியதுபோல் இகபர இன்பங்களைப் பெற்றது போன்ற உணர்ச்சியால் பூரித்து நிற்கின்றோம். அந்தப் பரவச நிலையில் நம் இருப்பிடத்திற்குத் திரும்பு கின்றோம்.

---

35. நூற். திருப். அந்தாதி-65
36. திருவாய் 9.8 : 11

## பின்னிணைப்பு—1

### நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் குலசேகராழ்வாரும் மங்களாசனம் செய்த மலை நாட்டுத்திருத்தலங்கள்

| | திருப்பதி | பதிகம், பாசுரம் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திருக்கடித்தானம் | திருவாய், 8.6. | 89 |
| 2. | திருக்காட்கரை | திருவாய், 9.6 | 162 |
| 3. | திருச்செங்குன்றூர் | திருவாய், 8.3 | 72 |
| 4. | திருநாவாய் | திருவாய், 9.8 | 221 |
| | | பெ.திரு. 6.8 :3; 10.1 : 6 | 219 |
| 5. | திருப்புலியூர் | திருவாய் 8.9 | 149 |
| 6. | திருமூழிக்களம் | திருவாய் 9.7 | 184 |
| | | பெரி.திரு. 7.1 : 6 | 179 |
| | | நெடுந் 10, பெ.மடல். 65 | 182 |
| 7. | திருவண்பரிசாரம் | திருவாய் 8.3 : 7 | 9 |
| 8. | திருவண்வண்டூர் | திருவாய் 6.1 | 124 |
| 9. | திருவல்லவாழ் | திருவாய். 5.9 | 110 |
| | | பெரி.திரு. 9.7, | 108 |
| | | பெ.மடல் 58 | 105 |
| 10. | திருவனந்தபுரம் | திருவாய் 10.2 | 35 |
| 11. | திருவாட்டாறு | திருவாய் 10.6 | 17 |
| 12. | திருவாறன்விளை | திருவாய் 7.10 | 55 |
| 13. | திருவித்துக்கோடு | பெரு.திரு. 5 : 10 | 20 |

பின்னிணைப்பு—2

## 108—வைணவ திவ்விய தேசங்கள்

ஈரிருப தாம்சோழம்;
ஈரெரன்ப தாம்பாண்டி;
ஓர்பதின்மூன் றாம்மலைநாடு;
ஓரிரண்டாம்—சீர்நடுநா(டு)
ஆறோ(டு) ஈரெட்டுத்தொண்டை
அவ்வடநா(டு) ஆறிரண்டு
கூறுதிரு நாடாகக்
கொள்.[1]

—பிள்ளைப் பெருமாள் அய்யங்கார்

## சோழநாட்டுத் திருப்பதிகள்—40

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையி
லேணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல்.[2]

1. திருவரங்கம் பெரிய கோயில்
2. திருவுறையூர்
3. திருத்தஞ்சை
4. திருவன்பில்
5. திருக்கரம்பனூர்
6. திருவெள்ளறை
7. திருப்புள்ளம்பூதங்குடி
8. திருப்பேர் நகர்
9. திருஆதனூர்
10. திருவழுந்தூர்
11. திருச்சிறுபுலியூர்
12. திருச்சேறை
13. திருத்தலைச்சங்க நாண்மதியம்
14. திருக்குடந்தை

1. நூற். திருப். அந். 6.
2. ஒரு பழம் பாடல்

15. திருக்கண்டியூர்
16. திருவிண்ணகர்
17. திருக்கண்ணபுரம்
18. திருவாலி
19. திருநாகை
20. திருநறையூர்
21. திருநந்திபுர விண்ணகரம்
22. திருவிந்தளூர்
23. திருச்சித்திரகூடம்
24. திருக்காழிச்சீராம விண்ணகரம்
25. திருக்கூடலூரார்
26. திருக்கண்ணமங்கை
27. திருக்கண்ணங்குடி
28. திருக்கவித்தலம்
29. திருவெள்ளியங்குடி
30. திருமணிமாடக் கோயில்
31. திருவைகுந்த விண்ணகரம்
32. திருஅரிமேய விண்ணகரம்
33. திருத்தேவனார் தொகை
34. திருவண் புருடோத்தமம்
35. திருச்செம்பொன்செய் கோயில்
36. திருத்தெற்றியம்பலம்
37. திருமணிக்கூடம்
38. திருக்காவளம்பாடி
39. திருவெள்ளக்குளம்
40. திருப்பார்த்தன்பள்ளி

## பாண்டி நாட்டுத் திருப்பதிகள்—18

**வெள்ளா றதுவடக்கா மேற்குப் பெருவழியாம்**
**தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளாரா**
**வாண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்**
**பாண்டிநாட் டெல்லைப் பதி.[3]**

1. திருமாலிருஞ்சோலை மலை
2. திருக்கோட்டியூர்
3. திருமெய்யம்
4. திருப்புல்லாணி
5. திருத்தண்காலூரர்
6. திருமோகூர்
7. திருக்கூடல்
8. ஸ்ரீவில்லிபுத்தூர்
9. திருக்குருகூர்
10. திருத்தொலைவிலி மங்கலம்
11. ஸ்ரீவரமங்கை
12. திருத்தென் திருப்பேரை
13. ஸ்ரீவைகுண்டம்
14. திருப்புளியங்குடி
15. திருவரகுணமங்கை
16. திருக்குளந்தை
17. திருக்குறுங்குடி
18. திருக்கோளூர்

3. ஒரு பழம் பாடல்

## மலை நாட்டுத் திருப்பதிகள்—13

வடக்குத் திசைப்பழநி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கூடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண் பதின்காதம்
சேரநாட்டிற் கெல்லையெனச் செப்பு.[4]

1. திருவனந்தபுரம்
2. திருவண்பரிசாரம்
3. திருக்காட்கரை
4. திருமூழிக்களம்
5. குட்டநாட்டுத்திருப்புலியூர்
6. திருச்செங்குன்றூர்
7. திருநாவாய்
8. திருவல்லவாழ்
9. திருவண்வண்டூர்
10. திருவாட்டாறு
11. திருவித்துவக்கோடு
12. திருக்கடித்தானம்
13. திருவாறன்விளை

## நடுநாட்டுத் திருப்பதிகள்—2

1. திருவயிந்திபுரம்
2. திருக்கோவலூர்

## தொண்டைநாட்டுத் திருப்பதிகள்—22

மேற்குப் பவளமலை வேங்கட நேர் வேடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்குப்—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிரு பதின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு.[5]

1. திருக்கச்சி-அத்திகிரி
2. திருஅட்டபுயகரம்
3. திருத்தண்கா
4. திருவேளுக்கை
5. திருப்பாடகம்
6. திருநீரகம்
7. திருநிலாத்துண்டம்
8. திருஊரகம்
9. திருவெஃகா
10. திருக்காரகம்
11. திருக்கார்வானம்
12. திருக்கள்வனூர்
13. திருப்பவளவண்ணம்
14. திருபரமேச்சுர விண்ணகரம்
15. திருப்புட்குழி
16. திருநின்றவூர்
17. திருஎவ்வுளூர்
18. திருநீர்மலை
19. திருஇடஎந்தை
20. திருக்கடல்மல்லை
21. திருவல்லிக்கேணி
22. திருக்கடிகை

---

4. ஒரு பழம் பாடல்
5. ஒரு பழம் பாடல்

## வடநாட்டுத் திருப்பதிகள்—12

1. திருவேங்கடம்
2. திருச்சிங்கவேள்குன்றம்
3. திருஅயோத்தி
4. திருநைமிசாரணியம்
5. திருச்சாளக்கிராமம்
6. திருவதரியாச்சிரமம்
7. திருகங்கைக்கரைக் கண்டம்
8. திருப்பிரிதி
9. திருவடமதுரை
10. திருத்துவாரகை
11. திருவாய்ப்பாடி
12. திருப்பாற்கடல்

## திருநாட்டுத்திருப்பதி—1

1. **திருநாடு**

இதுவே வைகுந்தம்; பரமபதம். திருமாலின் ஐவகை நிலைகளுள் பரத்துவம் விளங்கும் தானம்.

**குறிப்பு :** இந்த 108 திருப்பதிகளைப் பேராசிரியர் டாக்டர் ரெட்டியார் சேவித்து மலை நாட்டுத்திருப்பதிகள், தொண்டைநாட்டுத் திருப்பதிபள், பாண்டிநாட்டித்திருப்பதி கள், வடநாட்டுத் திருப்பதிகள், சோழநாட்டுத் திருப் பகுதிகள்—பகுதி 1, சோழநாட்டுத் திருப்பதிகள்—பகுதி 2. என்ற 6 நூல்களை வெளியிட்டுள்ளார். இதில் திருப்பதி கட்குச் செல்லும் வழி, திருப்பதிகளில் தங்கும் வசதிகள், ஆழ்வார் பாசுரங்களின் அநுபவம் முதலியவை விளக்கப் பெற்றுள்ளன. திருத்தலப்பயணிகட்கும் ஆழ்வார் பாசுரங் களை அநுபவிக்க விரும்புபவர்கட்கும் பயன்படும் நூல்கள் இவை.

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்
12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியங்களில் (அறம்-நீதி-முறைமை)

**சமயம் தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

18. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
19. சிலநோக்கில் நாலாயிரம்
20. வைணவமும் தமிழும்
21. சைவசமய விளக்கு
22. ஆன்மிகமும் அறிவியலும்
23. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
24. கலியன் குரல்
25. கீதைக் குறள் (பதிப்பு)
26. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் பதிப்பு)
27. கீதைப் பொழிவுகள்
28. கண்ணன் துதி

**(ஆ) திருத்தலப் பயண நூல்கள் :**

29. மலைநாட்டுத் திருப்பதிகள்
30. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
31. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
32. வடநாட்டுத் திருப்பதிகள்
33. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த.அ.ப. பெற்றது)
34. சோழநாட்டுத் திருப்பதிகள்-இரண்டாம் பகுதி (ஷை)
35. தம்பிரான் தோழர்
36. நாவுக்கரசர்
37. ஞானசம்பந்தர்
38. மாணிக்கவாசகர்

**திறனாய்வு :**

39. பாட்டுத் திறன்
40. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
41. அகத்திணைக் கொள்கைகள்
42. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
43. கண்ணன்பாட்டுத் திறன்
44. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
45. பாரதீயம் (த.அ.ப. பெற்றது)
46. குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு
47. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)
48. ஆழ்வார்கள் ஆரா அமுது
49. விட்டு சித்தன் விரித்த தமிழ்

**வரலாறு தன் வரலாறு :**

50. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
51. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
52. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
53. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
54. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
55. வேமனர்
56. குரஜாட
57. மேகாணி
58. சி.ஆர். ரெட்டி
59. தாயுமான அடிகள்
60. பட்டினத்தடிகள்
61. வடலூர் வள்ளல்
62. பிரதிவாதி பயங்கரம்
63. மலரும் நினைவுகள்

**அறிவியல் :**

64. மானிட உடல்
65. அணுவின் ஆக்கம்
66. இளைஞர் வானொலி
57, இளைஞர் தொலைக்காட்சி
68. அதிசய மின்னணு
69. தமது உடல் (த.அ.ப. பெற்றது)
70. இராக்கெட்டுகள் (த.அ.ப. பெற்றது)
71. அம்புலிப் பயணம்
72. தொலை உலகச் செலவு
73. அணுக்கரு பௌதிகம் (செ. ப க. பரிசு பெற்றது)
74. இல்லற நெறி
75. வாழையடி வாழை
76. அறிவியல் விருந்து (த. வ. க. பரிசு பெற்றது)
77. வானமண்டலக் காட்சி

**ஆராய்ச்சி :**

78. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
79. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
80. Siudies in Arts and Sciences : (61st Birth Day Commemoration Volume)
81. Collected Papers.

## பிழை — திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 40 | 2 | அரச்சாவத்தில் | அர்ச்சாவதாரத்தில் |
| 61 | 21 | பேராவாக் | பேரவாக் |
| 64 | 17 | நிருநாளில் | திருநாளில் |
| 65 | 3 | கேட்டள | கேட்டருள |
| 67 | 15 | சிந்தாந்தம் | சித்தாந்தம் |
| 69 | 9 | நினைவில்தம் | தம்நினைவில் |
| | 11 | தீரித்தனுக்கு | தீர்த்தனுக்கு |
| | 14 | சிந்தையினைால் | சிந்தையினால் |
| 138 | 13 | சேதந | சேதநன் |
| 161 | 3 | மன்ன்ர் | மன்னர் |
| 184 | 25 | ஒருக்கால் | ஒருகால் |
| 187 | 6 | தரிப்பிகசும் | தரிப்பிக்கும் |
| | 8 | வடிவழகைரிம் | வடிவழகையும் |
| 189 | 23 | நடுகிங் | நடுங்கி |
| 200 | 18 | இவவூர் | இவ்வூர் |
| 202 | 3 | தோப்புக்களே | தோப்புகளே |
| 215 | 17 | Make—belice | Make—believe |

**குறிப்பு :** நிறுத்தல் குறிகள், மேற்கோள் குறிகள் ஆகியவற்றில் நேரிட்ட பிழைகள் திருத்தப் பெறவில்லை.

# இந்நூலாசிரியரைப் பற்றி...



பிறப்பு : 27 - 8 - 1916

72-அகவையைக் கடக்கும் இந்த நூலாசிரியர் பி.எஸ்சி., எல்.டி., வித்துவான், பி.ஏ., எம்.ஏ., பிஎச்.டி., பட்டங்கள் பெற்றவர். ஒன்பதாண்டுகள் துறையூர் உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகவும், (1941-1950), பத்து ஆண்டுகள் காரைக்குடி அழகப்பர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகவும் (1950-60), பதினேழு ஆண்டுகள் திருவேங்கடவன் பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் (1960-77) பணியாற்றி ஓய்வு பெற்றவர். 1978-இல் சென்னையில் குடியேறி பதினைந்து மாதங்கள் (1978 பிப்பிரவரி-1979 ஜூன்) கலைக் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகப் பணியாற்றியவர். நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் நம்மாழ்வார் தத்துவத்தை ஆராய்ந்து டாக்டர் (பிஎச்.டி.) பட்டம் பெற்றவர். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டவர். பெரும்பாலும் இவை நூல் வடிவம் பெற்றன; பெற்றும் வருகின்றன தவிர ஆசிரியம் (5), இலக்கியம் (12), சமயம் (21), திறனாய்வு (11), அறிவியல் (14), ஆராய்ச்சி (4), வாழ்க்கை வரலாறு, தன் வரலாறு (14) — என்று 81 நூல்களின் ஆசிரியர். இவர்தம் அறிவியல் நூல்களில் இரண்டும், சமய நூல்களில் மூன்றும், திறனாய்வு நூல்களில் ஒன்றும் தமிழக அரசு பரிசுகளும் அறிவியல் நூல்களில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகப் பரிசும், ஒன்று தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசும்-ஆக எட்டு நூல்கள் பரிசுகள் பெற்றவை. இவர்தம் அறிவியல் பணியைப் பாராட்டி குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் 'அருங்கலைக்கோன்' என்ற விருதையும் பண்ணுருட்டி வைணவ சபை இவரது சமயப் பணியைப் பாராட்டி 'ஸ்ரீசடகோபன் பொன்னடி' என்ற விருதையும் வழங்கிச் சிறப்பித்தன. இனிமை, எளிமை தெளிவு இவர்தம் நூல்களின் தனிச் சிறப்புகளாகும்.